Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 129 | சர்வதேச மின் செய்தித்தாள் | செப்ரெம்பர் 15 2026


## 39ஆம் ஆண்டு

# வீரவணக்கம்

## 39 Veeravanakkam

SEPT
26
2026







"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"

## கேணல் சங்கர்

வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

**26.09.2001**
அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான்
வீதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும்
படையினரால் நடாத்தப்பட்ட
கிளைமோர் தாக்குதலில்
வீரச்சாவடைந்தார்.
இம் மாவீரருக்கு எமது
25 ஆம் ஆண்டு வீரவணக்கம்

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்

இராசையா பார்த்தீபன் [ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963–26.09.1987]
Lt. Col. Thileepan

இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு [15.09.1987–26.09.1987] இருந்து ஈகைச் சாவடைந்தார்.

Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Tamil people.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்





































## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203




**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


**ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்**

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது **https://Thuyarpakirvu.com** இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு

**437 345 4203**

thuyarariviththal@gmail.com

**Thuyarpakirvu.com**

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**திலீபனின் தியாகம், காந்தியின் அறக்கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செற்பாட்டு வடிவம் கொடுத்தது.**







## சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.com

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# சுதந்திரத்தைத்தேடி

## வீரவேங்கை

# சுதா

நானும் சுதாவும் ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்றாகவே, ஒரே வகுப்பிலேயே படித்தோம். இரண்டு பேரும் இணைபிரிவதே யில்லை. அவளுக்குக் காய்ச்சல் வந்தால் எனக்கும் காய்ச்சல் காயும். எனக்குத் தலையிடி வந்தால், அவளுக்கும் தலை - யிடிக்கும்.

எங்கே போவதென்றாலும் இரண்டு பேரும் ஒன்றாகத்தான் போவோம். போகும் வழியெல்லாம் அவள் பல கதைகளும் சொல்லிச் சிரித்துக் கொண்டே வருவாள். மிக மோசமான பகிடிகள் கூட விடுவாள். அப்படியான நேரங்களில் எல்லாம் நான் மௌனமாக நிற்பதுதான் வழக்கம். ஏனென்றால் அது வரை காலமும் இப்படியான பகிடிகளை நான் கேள்விப்பட்டதும் இல்லை; இப்படியான பகிடிகள் விடும் பிள்ளைகளைக் கண்ட தும் இல்லை; என் வீட்டில் கூட இப்படி யாரும் கதைப்பதை நான் கேட்டிருக்கவில்லை.

மௌனமாக நிற்கும் என்னைப் பார்த்து அவள்,

“நீ என்னடி பேசாமல் நிற்கிறாய்?” என்று கேட்பாள். எனக்கு இவளது கதைகளைக் கேட்க அதிசயமாகவும் இருக்கும்; கவலையாகவும் இருக்கும்.

‘இவள் சரியான குளப்படியாக இருக்கிறாளே, என்னண்டுதான் நாளைக்கு நல்ல மாக்ஸ் எடுக்கப் போகிறாள்?”

என்று என் மனதுக்குள் அடிக்கடி கேள்விகள் எழும். ஒருநாள் நாங்கள் கல்வி கற்ற தனியார் கல்வி நிறுவனத்தில் ஒரு பரீட்சை நடாத்தப்பட்டது. அந்தப் பரீட்சையில் சுதாதான் ஆகக் கூடுத லான புள்ளிகளைப் பெற்றாள். நான் அவளைப் பற்றி தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன் எனப்து எனக்கு அப்போதுதான் புரிந்தது. அவளுக்கு விளையாட்டும் விளையாட்டுத்தான்; படிப் பும் படிப்புத்தான்.

இவளது கலகலப்பான சுபாவத்தால் கவரப்பட்ட இளம் வாலி பர்கள் இவளுக்கு முன்னும் பின்னும் வருவார்கள். இவளைக் கேலி செய்து வம்புக்கு இழுப்பார்கள். நாங்கள் அவளை,

“என்னடி, உனக்கு முன்னுக்கும் பின்னுக்கும் ஒரே ஆட்களாக இருக்குது. ஏதோ, எல்லாம் நல்லபடியாக நடந்தால் சரிதான்.”

என்று எங்கள் பங்குக்கு கேலி செய்வோம். அதற்கு அவள்,

“நானா வரச்சொன்னேன்? எனக்கு வேற வேலை இல்லையா? உனக்கு வேணுமெண்டால் அதில ஒரு ஆளைப்பாரன், அதில என்னடி வந்தது?”

என்று சொல்லிவிட்டு, நல்ல பிள்ளைபோல் இருந்துவிடுவாள். ஆனால் அந்த இளைஞர்கள் ஒவ்வொருவரின் செயலையும் பார்த்து ஒவ்வொரு மாதிரிக் கேலி செய்வாள். நான் இவளது குறும்பைப் பார்த்து பல தடவைகள் தேவையில்லாமலேயே சிறு சிறு சண்டைகள் பிடிப்போம். ஆகக் கூடியது மூன்று நாட்கள் வரையில் கதைக்காமல் இருப்போம். அதன் பின்னர் கதைத்து விடுவோம்.




***

ஒரு முறை தனியார் கல்வி நிறுவனத்தில் விஞ்ஞானி ஆசிரியர், மூலகங்களைப் பற்றிப் படிப்பித்தபோது, எங்களுக்கு அது விளங்கவில்லை. இவள், எங்களுக்கு விளங்கக் கூடியமாதிரிச் சொல்லித் தருமாறு ஆசிரியரைக் கேட்டாள்.

சில மூலகங்களின் பெயர்களையும் சூத்திரங்களையும் நினை வில் வைத்திருப்பதற்காகச் சில நகைச்சுவையான வசனங் களைச் சொல்லித் தருவது ஆசிரியர்களது வழக்கம். இந்த மூலங்களைப் பற்றி எங்களுக்கு விளக்கிவிட்டு, அதை நினை வில் வைத்திருப்பதற்காக ஆசிரியர் சொல்லித் தந்த வசனம் இதுதான்.

‘சரோஜாதேவி குளிக்கும்போது யார் கண்டது? கமல்காசன் கண்டவர்’.

அவ்வளவுதான்! அன்றோடு நான் தொலைந்தேன் எனது பெயரும் சரோஜாதேவிதான். அவள் என்னை, ஆட்கள் நிற் கிறார்கள் என்றும் பாராது, கண்ட கண்ட இடங்களிலெல்லாம், கண்ட கண்ட நேரங்களிலெல்லாம்.

“சரோஜாதேவி குளிக்கேக்கை யார் கண்டது? கமல்காசன் கண்டது” என்று கேலி செய்வாள்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் இருக்கும். நாம் போராளிகள் ஆனபின்னர் தான், அவள் இவ்வாறு கேலி செய்வதை நிறுத்தினாள்.

***

பெரும் வயல் காணிகளும் தோட்ட நிலங்களும் தென்னந்தோட் டங்களும் நிறைந்த முல்லை - மணலாறு மாவட்டத்தில் அமைந்துள்ள ‘மாமூலை’ என்ற கிராமத்தில் செல்வரெத்தினம், பத்மாவதி என்ற விவசாயத் தம்பதிகளுக்குக் கடைக்குட்டி மக ளாகப் பிறந்தவள் தான் வீரவேங்கை சுதா எனப்படுகின்ற சுதர்மினா. இவளுக்கு நான் அண்ணாமார்களும் ஒரு அக்கா வும் உண்டு. இவரது அண்ணாமாரில் ஒருவர் 1985ஆம் ஆண்டில் காணாமல் போய்விட்டார்.

ஒரு அண்ணா 1986 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திவாகர் என்ற பெயருடன் தன்னைப் போராளியாக்கிக் கொண்டார். இவ ருக்குப் பிறகு இன்னுமொரு அண்ணாவும் அலெக்ஸ் என்ற பெயருடன் தன்னைப் போராளியாக்கிக் கொண்டார். இவர் சில காலத்தின் பின் போராட்டத்தில் இருந்து விலகி, குடும்பத்துக்கு உழைப்பதற்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போய்விட்டார். அப்பொழுது ஈரானுக்கும் ஈராக்குக்கும் கடுமையான மோதல் நடந்து கொண்டிருந்தது. அங்குபோய், நில நாட்களுக்குப் பின் அவரது கடிதங்கள் வருவது நின்றவிட்டது. நான் இயக்கத்துக்கு வரும்வரையில் அவரது கடிதம் எதுவும் வீட்டுக்கு வரவில்லை.

இன்னுமொரு அண்ணன் எங்கள் போராளிகளுக்கு உதவி செய்து கொண்டிருந்தார். 1990 ஆம் ஆண்டில் இவர் துரோகி ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு, தேச விரோதிகளால் கொல் லப்பட்டார். நடந்த விடயம் தெரியாத சுதாவின் தாய் இவர் வரு வார் எனப் பார்த்துக்கொண்ட இருந்தார்.

மறுநாள் ஒரு உடல் கர்ப்பூரப்புல் வெளியில் கிடப்பதாகக் கேள்வி யுற்ற சுதாகவும், அம்மாவும், அப்பாவும் ஓடிப்போய்ப் பார்த் தார்கள். உடல் முழுவதும் வெட்டுக் காயங்களுடனும், உப்பி யும் கிடந்த அந்த உடலின் காலில் இருந்த ஒரு வடுவைப் பார்த்தே, அது சுதாவின் அண்ணனின் உடல்தான் என இனம் காணப்பட்டது.

இந்த இழப்பு சுதாவின் அம்மாவுக்குப் பெரிய மனத் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. சுதாவுக்கும் அண்ணனின் மரணம் பெரி தாகத் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. முன்னரும் போராளிக ளுக்கு பல உதவிகளைச் செய்து வந்தவன். இப்போது ஒரு வேகத்துடன் வேலை செய்யலானாள். அவள் இயக்கத்துக்கு வருவதற்கு அண்ணனின் மரணமும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

***

ஒரு நாள் முலைல்லைத்தீவில் நடந்த எம்மவரின் பிரச்சாரக் கூட்டமொன்றுக்கு நானும் சுதாவும் போயிருந்தோம். அங்கே சுதாவின் போராளி அண்ணா திவாகரைக் கண்டோம். அவரிடம் அவள்,

“அண்ணா, நானும் இவளும் (என்னைத் தான் அவள் என்று குறிப்பிட்டாள்) நந்தினியும் இயக்கத்துக்கு வரப்போறம். நீ கூட்டிக் கொண்டு போறியா?”

என்றாள், அதற்கு அவர்,

“நீ இப்ப ஐம்பது பேரைக் கூட்டிக் கொண்டு வா. நான் உட னேயே உன்னையும் உன்னோட வாறவையையும் கூட்டிக் கொண்டு போகிறேன்” என்றார்.

ஐம்பது பேரை உடனேயே எப்படித் திரட்ட முடியும்? அந்த நிமிடத்தில் ஐம்பது புதிய போராளிகளுக்காக எங்கே போக முடியும்? எனக்கும் அவளுக்கும் மனம் சோர்ந்துவிட்டது. கூட்டம் முடிந்ததும் பேசாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்.

இது நடந்து சில நாட்களின் பின், எனக்கு இயக்கத்தில் இணை வதற்கு தொடர்பு கிடைத்து விட்டது. காலையில் தனியார் கல்வி நிலையத்தில் வகுப்பு இருப்பதாக அம்மாவுக்குச் சொல்லிவிட்டு புறப்பட்டுவிட்டேன். போகும் வழியில் சுதாவைப் பார்ப்பதற்காக அவளின் வீட்டுக்குச் சென்றேன்.

எனக்கு முதலில் இயக்கத் தொடர்பு கிடைத்தால் அவளையும் கூட்டிக் கொண்டு போவதாகவும், அவளுக்கு முதலில் இயக்கத் தொடர்பு கிடைத்தால் என்னையும் கூட்டிக் கொண்டு போவ தாகவும்தான் எமது நீண்ட காலத் திட்டம் அமைந்திருந்தது. அதனால் அவள், நான் தன்னை விட்டு விட்டு இயக்கத்திற்கு வருவேன் என்பதைக் கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்க வில்லை. ஆனால், நானோ மூன்று மகன்களை இழந்த தாயை யும், அவர் சுதா மீது வைத்திருந்த அளவில்லா அன்பையும் எண்ணி, சுதாவை என்னுடன் இயக்கத்திற்கு அழைத்து போகும் எண்ணத்தைக் கைவிட்ட விடயம் அவளுக்குத் தெரியாது.

***

நான் பயிற்சி எடுத்த பின்னர் பயிற்சி முகாமிலேயே கடமையில் ஈடுபட்டிருந்தேன். ஏறத்தாழ நான் இயக்கத்திற்கு வந்து நாலைந்து மாதங்களின் பின், ஒரு நாள் பயிற்சி எடுப்பதற்காகப் புதியவர்கள் வந்திருப்பதாக என் தோழியொருத்தி சொன்னாள். நான் அவர்களைப் பார்ப்போம் என்று போனேன். அங்கே போன பின்னர்தான் சுதாவும் வந்திருந்தது தெரிந்தது.

ஆவலுடன் அவளிடம் கதைக்க முனைந்தேன். அவளோ என்னை முன்பின் அறியாதவள் போல் முகத்தை மறுபுறம் திருப்பிவிட்டாள்.

‘கோபம் இறங்கட்டும். ஆறதலாகக் கதைப்பம்!’

என்று எனக்குள் நினைத்துக் கொண்டு நான் திரும்பிவிட்டேன். இரண்டு நாட்களின் பின், நான் அவள் இருந்த இடத்திற்கு அரு காமையால் போய்க் கொண்டிருந்தபொழுது என்னைக் கூப் பிட்டாள்.

“நான் ஏன் உன்னோட கதைக்கேல்லையெண்டு சொல்லித் தான் தெரியவேணும் எண்டில்லை. நீ வந்த நேரம் என்னை யும் கூட்டி வந்திருந்தால் இப்ப நானும் நெயினிங் எடுத் திருப்பன்” என்றாள்.

மீண்டும் என் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

‘வீட்டில் எப்படியெல்லாம் செல்லமாக வளர்ந்தவள். யாரும் ஏசி னால் அதைத் தாங்கும் சக்தி இவளிடம் இல்லை. கோபம் வந் தால், கோபம் முறியும் மட்டும் முகத்தைத் தூக்கிப் பிடித்து கொண்டு திரிவாள். சொகுசாக வாழ்ந்து பழகிய இவள், எப்படிப் பயிற்சியை நல்லபடி எடுத்து முடிக்கப் போகிறாள்? வீட்டில் ஒரு துரும்பைக் கூட கையால் எடுக்காதவளாச்சே?”

மணலாறுக்காட்டில் நடாத்தப்பட்ட, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் பத்தாவது பயிற்சி முகாமில் சுதா பயிற்சி எடுத் தாள். ஞாயிற்றுக் கிழமைகளில் ஓய்வாக இருக்கும்போது காட் டைப் பற்றி தன் தோழிகளிடம் வர்ணிப்பதுதான் அவளது பொழுது போக்கு.

வேலைகள் செய்யும்போது அந்த வேலைகளை விரைவாகவும் திறமையாகவும் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணமே அவள் மனதில் மேலோங்கி நிற்கும். அவளது கேலியும் கும் மாளமும் என்றைக்குமே வற்றாதவை. இவள் பயிற்சி முடிந்தும் மணலாற்றுக் காட்டில் உள்ள வேறொரு முகாமுக்கு மாற்றப் பட்டு, ஏழு பேர் கொண்ட குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப் பட்டாள். சில நாட்களிலேயே நானும் அந்த முகாமுக்கு மாற்றப் பட்டு விட்டேன். எங்கள் இருவரது குழுக்களும் அம் முகாமின் வெவ்வேறு எல்லைக் காவலரண்களில் நின்றிருந்தன. ஆனா லும் அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்களும் இருந்தன.

சில நாட்களின் பின் நாம் இந்த முகாமைக் கைவிட்டு, மீண்டும் பழைய முகாமுக்கே திரும்பினோம். அங்கே குழுக்கள் மீண் டும் பிரிக்கப்பட்டன. நானும் சுதாவும் ஒரே குழுவுக்கே மாற் றப்பட்டோம்.

சுதாவுக்கு தேநீர் குடிப்பதில் சரியான விருப்பம். அடிக்கடி அவ ளைச் சமையலறையில் காணலாம். தேநீர் குடிப்பதும் சீனியை அள்ளிச் சாப்பிடுவதுமாக தன் வயிற்றை நிரப்பிக் கொண்டிருப் பாள். அவளுக்கு எப்போதுமே ஒரு கோப்பை தேநீர் போதுமான தாக இருந்ததில்லை. ஒரு முறை எமக்கு வந்த தேநீரின் அளவு குறைவாக இருந்தது. எல்லோருக்கும் ஒரு கோப்பை தேநீர் தான் கிடைத்தது. சுதாவுக்குத்தான் ஒரு கோப்பை தேநீர் போதாதே. அவள் என்னிடம் எனது தேநீரில் அரைவாசியைத் தனக்குத் தரும்படி கேட்டாள். நான் அதற்குச் சம்மதித்தேன். ஆனால் மறந்துபோய் முழுவதையும் குடித்துவிட்டேன். அவ் வளவுதான்!

“என்னடி, நீ இப்படிச் செய்து விட்டாய்?”

என்று என்னை ஏசிவிட்டு, கோபித்துக் கொண்டு போய்விட்டாள். ஏறத்தாழ ஒரு மாதம் வரையில் என்னுடன் கதைக்காமல் இருந் தாள்.

ஒரு நாள் மிகவும் சந்தோசமாகத் துள்ளிக் குதித்தபடி என்னிடம் ஓடிவந்தாள்.

“என்னடி, இப்படிச் சந்தோசத்தோடை ஓடி வாறாய்?” என்று நான் கேட்டேன். அதற்கு அவள்,

“ஒண்டுமில்லையடி”

என்று முதலில் சொன்னாலும், “இண்டைக்கு நான் சண்டைக் குப் போறன்” என்று உண்மையைச் சொல்லிவிட்டாள்.

‘அப்ப நான்…?’

மனதுக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன்.

சண்டைக்குப் போவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒரு விதமான கலகலப்புடனும், அவசரத்துடனும், புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

‘என்னையும் கூப்பிடுவார்கள் தானே’

என்ற நம்பிக்கையுடன் அவர்களுக்கு உதவிகள் செய்து கொண் டிருந்தேன்.

“எடியேய், நாங்கள் போட்டுவாறம். கட்டாயமாய் அவன்ரை காம் பைப் பிடிச்சு, புலிக்கொண்டி ஏத்தாமல் வரமாட்டன். எங்கட உயிர் போனாலும் பரவாயில்லை.”

என்று சுதா என்னிடம் விடைபெற்றுச் சென்றாள்.

1990 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தின் இருபத்திரண்டாம் நாள். மாங்குளத்திலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் தங் ககம் எம்மவர்களால் சுற்றி வளைப்புக்கு உள்ளாக்கப்பட்டது. அந்தச் சுற்றிவளைப்பில் சுதாவும் பங்கெடுத்தாள். மாங்குளம் நோக்கி பயணத்தின்போது, சுதா தனது அண்ணன் திவாகரும் வந்துகொண்டிருந்ததை வழியில்தான் அறிந்தாள். சுதா தாக் குதற் குழுவில் இருந்தாள். அண்ணன் திவாகர் மருத்துவக் குழுவில் இருந்தார். மாங்குளத்துகு எல்லோரும் வந்து சேர்ந்த




பின்னர். இராணுவத்தினரின் தங்ககத்தை முற்றுகையிடுவதற் கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தபோது, அண்ணன் திவாகர் தன் தங்கையை ஒரு முறை கண்டார்.

‘சண்டை முடிந்தபின்னர் கதைக்கலாந்தானே’ என்று எண்ணிக் கொண்டு தன் வேலைகளைத் தொடர்ந்தார்.

இராணுவத் தங்ககம் எம்மவர்களால் முற்றாகத் தகர்க்கப்பட்டு விட்டது. மோதலின்போது காயமடைந்த போராளிகள், எமது மருத்துவக் குழுவினரால் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டு இருந்தனர். வீரச்சாவடைந்த போராளிகளின் உடல்- கள் வேறொரு புறத்தில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. வீரச் சாவடைந்தவர்கள் ஒவ்வொருவரையும் யார் என்று அறிவதற் காக அவர்கள் முகங்களை திவாகர் பார்த்துக் கொண்டு வந்தார். ஒரு உடலுக்கருகில் திவாகரின் கால்கள் அசையாது தரித்து நின்று விட்டன. அது… சுதாவின் உடல்… கண்கள் இருண்டு அந்த இடமே ஒரு முறை சுற்றுவதுபோல் இருந்தது திவாக ருக்கு. ஆனாலும் சமாளித்துக் கொண்டார்.

தங்கையின் வீரச்சாவால் அண்ணனின் மனம் தளரவில்லை. அவர் ஒரு போராளியாக… காயமடைந்து வருகிற எல்லாப் போராளிகளுக்குமே அண்ணாவாக… எமது இயக்கத்தின் மருத்துவப் பிரிவில் தனது கடமையைத் தொடர்ந்து கொண் டிருக்கிறார்.

சுதாவின் இழப்பு என்னையும் பலமாகப் பாதித்தது. ஆனால் ஆறாத காயத்தை ஏற்படுத்தவில்லை மாறாக, தளராத துணி வோடு போராடுகின்ற உத்வேகத்தினை என்னுள், சக தோழிகளுக்குள் ஏற்படுத்திவிட்டது.

அமுதநிலா -களத்தில் இதழ் (28.01.1994).



# தமிழீழச் செய்திகள்




## நாட்டுப்பற்றாளர் ரவிராஜ் அவர்களின் படுகொலை விசாரணை மீண்டும் ஆரம்பம்!

01.09.2026

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்ட வழக்கை மீண்டும் முதலிலிருந்து விசாரிக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடராஜா ரவிராஜ் கடந்த 2006ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார். தனியார் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு வெளியேறியபோது இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில், அவருடன் இருந்த மெய்க்காப் பாளரும் உயிரிழந்தார்.

கொலை தொடர்பில் சிறீலங்கா கடற்படைச் சிப்பாய்கள் உள் ளிட்ட ஐந்து பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. 2016ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் சிறப்பு ஜூரி சபை அவர்களை விடுவித்து தீர்ப்பளித்திருந்தது.

தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்த மேல்முறையீட்டை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்றம், முன்னைய விடுதலைத் தீர்ப்பை ரத்து செய்து, வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் புதிதாக விசாரிக்குமாறு உத்தர விட்டுள்ளது.

நீதிபதிகள் பி. சசி மகேந்திரன் மற்றும் அமல் ரனராஜா ஆகி யோர் அடங்கிய அமர்வே தீர்ப்பை வழங்கியுள்ளது.

வழக்கில் முக்கியமான அரசு தரப்பு சாட்சியாக சம்பத் மனம்பேரி என்பவர் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார். அவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவில் பணி யாற்றிய முன்னாள் காவல்துறையை சேர்ந்தவர் என குறிப் பிடப்பட்டுள்ளது.

ரவிராஜ் கொலை தொடர்பில் தாம் பைக் ஓட்டுநராகச் செயல்பட்ட தாக அவர் வாக்குமூலம் வழங்கியிருந்ததுடன், வழக்கில் குற் றஞ்சாட்டப்பட்ட சிலருடனான தொடர்புகள் குறித்தும் தக வல்களை வழங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்சியின் வாக்குமூலத்தை மதிப்பீடு செய்யும் போது, ஜூரி சபைக்கு உரிய சட்ட வழிகாட்டுதல்கள் வழங்கப்படவில்லை என மேல்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

அரசு தரப்பு சாட்சியங்களின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு எதிரான விசாரணையைத் தொடர்வதற்கு போதுமான ஆதா



ரங்கள் இருப்பதாக மேல்முறையீட்டு நீதிமன்றம் கருதியுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கு மீண்டும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் புதிதாக விசாரணைக்கு வர வுள்ளது.

## சிறீலங்கா வன இலாகா ஆக்கிரமித்துள்ள விவசாய நிலங்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள மாறாயிலுப்பை விவசாயிகள் ரவிகரன் எம்.பியிடம் கோரிக்கை!

02.09.2026

வவுனியா வடக்கு, நெடுங்கேணி கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள, மாறயிலுப்பை கமக்கார அமைப்பு பிரிவில் சிறீலங்கா வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள புதக் குளத்தையும், அதன்கீழான தமது பூர்வீக விவசாயக் காணி களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, காணிகளுக் குரிய விவசாயிகள் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் கதறி அழுது கோரிக்கை விடுத் துள்ளனர்.





அப்பகுதி விவசாயிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த பகுதிக்கு கடந்த 01.09.2026 நேற்று முன்தினம் நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், விவசாயிகளின் கோரிக்கையினைக் கேட்டறிந்ததுடன் வனவளத் திணைக் களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் விவசாயக் காணிகளையும் பார்வையிட்டார்.

குறிப்பாக மாறாயிலுப்பை கமக்கார அமைப்புபிரிவில் புதக் குளத்தின் கீழுள்ள விவசாய நிலங்களில் அப்பகுதி விவசாயிகள் நீண்டகாலங்களுக்கு முன்பிருந்தே நெற்செய்கை மேற் கொண்டு வந்துள்ளனர்.

இத்தகையசூழலில் கடந்தகால யுத்த நிலமைகள் காரணமாக அப்பகுயில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாதநிலை ஏற் பட்டுள்ளது.







இந்நிலையில் தற்போது சிறுபற்றைக் காடுகளாகவுள்ள தமது நெற்செய்கைக்காணிகளை விவசாயிகள் துப்பரவுசெய்யும் போது அதற்கு தடைகளை ஏற்படுத்தியுள்ள வனவளத் திணைக் களம், மக்களின் காணிகளுக்கு எல்லைக்கற்களையிட்டு ஆக்கிரமிப்புச் செய்துள்ளது.

அந்தவகையில் நிலமைகளை நேரில் பார்வையிட்டதுடன், விவசாயிகளின் கோரிக்கைகளையும் கேட்டறிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், குறித்த வயல்காணி களையும், புதுக்குளத்தையும் விடுவிப்பதுதொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# யாழ். தெல்லிப்பழையில் தந்தை செல்வாவின் நினைவுத் தூபி உடைப்பு!

02.09.2026

தந்தை செல்வாவின் நினைவாக, அவரது சமாதி அமைந்துள்ள இடுகாட்டில் கட்டப்பட்டிருந்த நினைவுத் தூபி இனம் தெரியாதோரால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.







வல்லை-அராலி வீதியில் அமைந்துள்ள தென் இந்தியத் திருச்சபை இடுகாட்டில், தெல்லிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

போருக்கு முன்னர் அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியை ஒத்த வடிவில், போர் முடிவடைந்த பின்னர் தெல்லிப்பளை பிரதேசம் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2012ஆம் ஆண்டு மீண்டும் புனரமைக்கப்பட்டிருந்தது.

தந்தை செல்வாவின் சமாதியில் அவரது நினைவாக அமைக்கப்பட்டு, பல ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்த அந்த நினைவுத் தூபியே மர்ம நபர்களால் திட்டமிட்டு இடித்து சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# போர் முடிந்து 17 ஆண்டுகளாகியும் தமிழ் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் தொடர்கின்றன!

## யாழ். ஊடக அமையத்தின் தலைவரும் முத்த ஊடகியலாளருமான கு. செல்வகுமார்

03.09.2026

போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த போதும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கான பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே உள்ளன என யாழ். ஊடக அமையத்தின் தலைவரும் முத்த ஊடகவியலாளருமான கு.செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

மறைந்த இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாசின் நினைவு தினமானது யாழ். ஊடக அமையத்தில் நேற்று (02.09.2026) இடம்பெற்ற நிலையில், அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் பகுதிகளில் இடம்பெறும் மக்களின் பிரச்சினைகளைத் தமிழ் ஊடகவியலாளர்களே தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். தென்னிலங்கை ஊடகங்கள் அதனை வெளிப்படுத்தத் தவறிவிட்டன.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் பெற்றிருந்தால், இந்த அரசைத் தமிழ் மக்கள் தங்களது அரசாகக் கருதியிருப்பார்கள். அரச ஊடகங்களில் நேர்மையாகப் பணியாற்றுபவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழி, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டங்கள் மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரும் போராட்டங்களில் செய்தி சேகரித்தமை போன்ற காரணங்களைக் காட்டி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் பிரபாகரன் டிலக்சன் அரச ஊடகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளமை இதற்குச் சான்றாகும்.




நடைபெறும் உண்மையான சம்பவங்களை மறைக்காமல் வெளிப்படுத்துவதே ஊடகவியலாளர்களின் கடமை. தங்களுக்கு எதிரான விடயங்களை மறைக்கும் விதமாகச் செய்தி-களைத் தணிக்கை செய்வதில் அரச ஊடகங்கள் செயற்படுகின்றன.

சுதந்திரமாகச் செய்தி அறிக்கையிடுவதற்குத் தடை விதித்து ஊடகவியலாளர்களை மன உளைச்சலுக்குள்ளாக்கும் போக்கு ஜனநாயக நாட்டுக்கு முரணானது என குறிப்பிட்டுள்ளார்.

**இன அழிவில் இருந்து எமது மக்களைப் பாதுகாத்து தேசிய சுதந்திரத்தை முன்னெடுப்பதாயின், எமது தாய்ப்பூமியை ஆக்கிரமித்திருக்கும் எதிரிப் படைகளை விரட்டியடிக்க வேண்டும். இந்தக் கைங்கரியமானது தீர்க்கமான, திட்டமிடப்பட்ட ஆயுதப் போராட்டத்திலும் எமது மக்களின் ஏகோபித்த பங்களிப்பிலும் தங்கியிருக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.com**

# யாழ். மயிலிட்டியில் மக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி 20ஆவது வாரமாகத் தொடரும் போராட்டம்!

04.09.2026



யாழ். வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்கள் சிறீலங்கா இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களா முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 20ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலிகாமம் வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில் , அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 20ஆவது வாரமாக போராட்டத்தை முன்னடுத்தனர்

# யாழ். வலிகாமம் வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிப்பு வர்த்தமானியை மீளப் பெறுங்கள்!

### காணியை இழந்த மக்கள் கூட்டமைப்பின் செயற்பாட்டாளர் ஜான்சன் பிரிடோரா

04.09.2026

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியில் உள்ள காணிகளை சுவீகரிப்பதாக கடந்த 2013 ஆம் ஆண்டு மஹிந்த அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை நீக்குவதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்க வேண்டும் என காணியை இழந்த மக்கள் கூட்டமைப்பின் செயற்பாட்டாளர் ஜான்சன் பிரிடாரோ கோரியுள்ளார்.

யாழ் வலி வடக்கு மயிலிட்டி பகுதியில் 20 ஆவது வெள்ளிக்கிழமையான இன்றைய நாள் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நில மீட்பு போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில்,

வலி. வடக்கு மக்களின் சுமார் 6317 ஏக்கர் காணிகளை மஹிந்த அரசாங்கம் கையகப்படுத்தி வர்த்தமானி வெளியிட்டது.

இந்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும், மக்களின் காணிகளை விடுவிப்பதாகவும் கூறி ஆட்சிக்கு வந்துள்ள தற்போதைய அரசாங்கம் குறித்த வர்த்தமானியை நீக்காமல் கடந்த கால அரசாங்கங்கள் போல மக்களின் காணிகளை கையகப்படுத்தி வைத்துள்ளது.



அவ்வாறான நிலையிலையே வலி. வடக்கு பகுதியில் தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறு கோரி மயிலிட்டி, பலாலி மற்றும் வசாவிளான் ஆகிய மூன்று இடங்களில் போராட்டங்கள் இடம் பெற்று வருகிறது.

இந்த அரசாங்கம் மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்கு வோம் என ஆட்சிக்கு வந்து எதிர்வரும் வாரத்துடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றது.

புதிய அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் குறிப்பாக காணி இழந்த மக்கள் நம்பிக்கை வைத்த போதும் தற்போது நம்பிக்கை இழந்தவர்களாக காணப்படுகின்றனர்.

எனவே இந்த அரசாங்கமாவது, வர்த்தமானியை மீள பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார்.




www.sangathamil.com

# வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக இனப்படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல்!

05.09.2026

கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலைகள் அல்லது வந்தாறு மூலை வளாகப் படுகொலைகள்என்பது 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தில்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்த தமிழ் மக்கள் 158 பேர் சிறீலங்கா சிங்கள இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப் பட்டுக் கைது செய்யப்பட்டு அவர்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று பின்னர் படுகொலை செய்யப்பட்ட கொடூரம் ஜனாதிபதி ஆர் பிரமதாசா ஆட்சிக்காலம் நடந்தது.

அதே மாதம் 23 ஆம் நாள் மேலும் 16 பேர் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர். சிறீலங்கா இராணுவத்தினரே இவர் களைக் கைது செய்ததாக நேரில் கண்டசாட்சியங்கள் தெரி விக்கின்றன. இப்படுகொலைகள் குறித்து விசாரணை செய்ய சிறீலங்கா அரசு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித் திருந்தது. விசாரணை முடிவுகள் சட்டவிரோதக் கைது மற்றும் படுகொலைகள் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்தியது. அத் துடன் இதில் சம்பந்தப்பட் டோரையும் அது இனங்கண்டிருந்தது. ஆனாலும் இது குறித்து மேலதிக விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை.

1990இல் நடந்த தமிழினப்படுகொலைகள சிறீலங்கா இராணுவத்துடன் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் சம்மந்தப்பட டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று 05.09.2026, 36ஆம் ஆண்டுகள் இந்த இனப்படு கொலை நடந்தும் இதுவரை அந்த கொலையாளிகள் தண்டிக் கப்படவில்லை, அந்த 158, தமிழர்களும் எங்கு புதைக்கப்பட் டார்கள் என்பது கூட




இதுவரை தெரியாத நிலையில் அந்த நினைவு நாள் மட்டும் நினைவு கூரப்படுகிறது.

# வவுனியாவில் வனவளத் திணைக்களப் பிடியிலுள்ள பூர்வீக வயல் காணிகளை விடுவியுங்கள்!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

05.09.2026



சிறீலங்கா வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள வவுனியா, புதுக்குளம் மற்றும் அதன்கீழான தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளும் உடனடியாக விடு விக்கப்படவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

மாறாயிலுப்பை கமக்கார அமைப்பு பிரிவிலுள்ள புதுக்குளமும் அதன்கீழான 14 விவசாயிகளுக்குரிய 52 ஏக்கர் பூர்வீக வயல் காணிகளும் வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட் டுள்ள அந்த வயல் பகுதியானது சிறு பற்றைக் காடாகவே காணப்படுகின்றது. தேவையெனில் குறித்த பகுதிக்கு உரிய வர்களை நேரடியாக அழைத்துச் சென்று காண்பிக்க முடியும்.

இந்நிலையில் வனவளத் திணைக்களத்தின் பிடியிலுள்ள தமது வயல்காணிகளை விடுவிக்குமாறு அந்தக் காணிகளுக்குரிய விவசாயிகள் கதறி அழுகின்றனர்.

இந்நிலையில் வனவளத் திணைக்களத்தின் அபகரிப்பிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு காணிகளுக்குரிய விவசா யிகள் கோரும்போது, அவர்களிடம் காணிகளுக்குரிய ஆவ ணங்களைக் காண்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தநிலைமை காரணமாக மக்கள் கோவணத் துடன் ஓடினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். முன னைய அரசாங்கங்களால் எமது மக்களுக்கு அத்தகைய நிலையே ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறிருக்கையில் அந்த மக் களிடம் ஆவணங்களைக் கோருவது முறையல்ல.

வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது மக்கள் தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்ளும் வயல் காணிக ளாகும்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டு அக் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொண்டாலே மக்களால் அவர்களது குடும்ப பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும். அவர்களது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளையும் பார்த் துக்கொள்ளமுடியும்.

அந்த மக்களிடம் வேறு காணிகளும் கிடையாது. எனவே அந்த மக்களுடைய வயல்காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிலையில் அந்தக்காணிகளுக்குப் பதிலாக விவசாயிக ளுக்கு வேறு இடத்தில் மாற்றுக்காணிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக வனவளத் திணைக்களத்தால் தமக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வவுனியா வடக்கு உதவிப் பிரதேசசெயலாளரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதன்போது வவுனியா வடக்கு உதவிப் பிரதேசசெயலாளரின் இத்தகைய கருத்திற்கு கடுமையாக எதிர்ப்பு வெளியிட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரன், மக்களுடைய பூர்வீகக் காணி- களை அபகரித்துவைத்துக்கொண்டு அதற்குப்பதிலாக வேறு இடத்தில் காணிவழங்குவதாக எவ்வாறு வனவளத்திணைக் களத்தால் முடிவெடுக்கமுடியுமெனக் கேள்வி எழுப்பினார்.

அத்தோடு மக்களுடைய பூர்வீக வயல்களிகளை விடுவிக்கத் தவறினால், அந்த காணிகளுக்குரிய மக்கள் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக தன்னிடம் தெரிவித்ததாகவும் நாடாளு மன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

எனவே அந்த மக்களுடைய பூர்வீக வயல்கணிகளை அந்த மக் களுக்கு விடுவித்த வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் விடுவிக் குமாறு கோருகின்ற பகுதியானது அடர்ந்த வனப்பகுதியாகக் காணப்படுவதனால் விடுவிக்க முடியாதென வனவளத் திணைக்கள உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது.

வனவளத் திணைக்கள உத்தியோகத்தரது இத்தகைய கருத்தை ஏற்கமுடியாதென தெரிவித்த நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரன், குறித்த பகுதிக்குத் தாம் கடந்த 01.09.2026 அன்று நேரடியாகச் சென்று பார்வையிட்டதாகவும் அப்பகுதி சிறு பற்றைக்காடாகவே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். எனவே அந்த மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டு மென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தொடர்ந்தும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனது தொடர்ச் சியான வலியுறுத்தலையடுத்து வனவளத்திணைக்களத்தின் கையகப்படுத்தலிலுள்ள குறித்த மாறாயிலுப்பை, புதுக்குளம் வயல் காணிகளை நேரடியாகச் சென்று பார்வையிடுவதென வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட் டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அந்தவகையில் தனது தலைமையில் நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரன், வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர், வன வளத்திணைக்களம், காணிகளுக்குரிய மக்கள் என அனை வரும் இணைந்து அந்தப்பகுதியை நேரடியாகப் பார்வையிட்ட பின்னர் குறித்த விடயம் தொடர்பில் நல்லதொரு முடிவெடுக்கப் படுமென வவுனியா மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

**நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கானபெரும் புரட்சிக்குத் தயாரகவேண்டும்.**

–ஈகைச்சுடர் லெப். வேணல் திலீபன் அவர்கள்–

www.sangathamil.com

# வாகரையில் சிறீலங்கா வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பெண்களை அச்சுறுத்தி வீடுகளுக்குள் அத்துமீறிச் சோதனை!

06.09.2026

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட தோணிதாண்டமடு கிராமத்திற்குள் இன்று (06.09.2026) நுழைந்த பொலன்னறுவை மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர், பொதுமக்களின் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அராஜகமான முறையில் சோதனையில் ஈடுபட்டதுடன், பெண்களைத் தகாத வார்த்தைகளால் பேசி அச்சுறுத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

இன்று தோணிதாண்டமடு கிராமத்திற்குள் அத்துமீறி நுழைந்த குறித்த அதிகாரிகள், அங்குள்ள இருவரின் வீடுகளுக்குள் சோதனை என்ற பெயரில் பலவந்தமாக புகுந்து வீட்டைச் சூறையாடும் வகையில் செயற்பட்டுள்ளனர். இதன்போது வீட்டில் இருந்த பெண்களை மிகவும் கீழ்த்தரமான முறையில் தகாத வார்த்தைகளால் திட்டி, கடுமையான பயமுறுத்தல்களையும் விடுத்துள்ளனர்.

அதிகாரிகளின் இந்த அராஜகச் செயல்பாடுகளைக் கண்ட கிராமவாசிகள், அதனைத் தமது தொலைபேசிகளில் புகைப்படம் மற்றும் காணொளி (ஏனைநழ) எடுக்க முற்பட்டபோது, அவர்களையும் அதிகாரிகள் கடுமையாக அச்சுறுத்தித் தடுத்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்துத் தகவலறிந்த எமது சமூகச் செயற்பாட்டாளர்கள் இருவர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் விரைந்து வந்தபோதிலும், அதற்குள்ளாகவே குறித்த அதிகாரிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இவர்கள் பொலன்னறுவை மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் என பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இப்பகுதி மக்கள் வாழ்வாதாரத்திற்காகச் சேகரித்து வைக்கும் தேன் போத்தல்களைப் பறிமுதல் செய்வதும், வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அநாகரிகமாக நடந்து கொள்வதும் இவர்களது வழக்கமான செயல் என்றும், இதற்கு முன்பும் பல தடவைகள் இவர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் கவலையுடன் குறிப்பிடுகின்றனர்.

அரச அதிகாரிகள் என்ற அதிகார போர்வையில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும், மிகவும் கீழ்த்தரமாகவும் செயற்படும் இத்தகைய நபர்களுக்கு எதிராகத் தக்க சட்ட நடவடிக்கை எடுத்துத் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் வலியுறுத்துகின்றனர்.

இன்றைய இச்சம்பவம் தொடர்பில் நாளை காலை வாகரைப் பொலிஸ் நிலையத்தில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்ய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

# யாழ். பலாலியில் 12ஆவது வராமாகத் தொடரும் மக்களின் காணி விடுவிப்புப் போராட்டம்!

06.09.2026

யாழ். வலிகாமம் வடக்கு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி பலாலி சந்தியில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை 12ஆவது வாரமாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 36 வருடங்களாக காணிகளை இழந்த மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

தமது காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வரும் நிலையில் தாம் நீண்ட காலமாக நிலங்கள், வீடுகள் அற்று வாழ்ந்து வரும் நிலையில் தமது வீடுகள் காணிகளை விடுவிக்க வேண்டும் என கோரி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் யாழில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், அமைச்சர்களான, பிமல் ரத்னாயக்க மற்றும் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர், பலாலி கிழக்கு உள்ளிட்ட பகுதிகளை செப்டெம்பர் மாதமளவில் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து; அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்தபோதுதான்; வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயங்கம் பிறப்பெடுத்தது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

# 1990 செப்டம்பர் 07ஆம் திகதி, சரியாக 30 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் தான் யாழ்ப்பாணத்தின் அமைதியை ஒரு கொடூரமான பேரதிர்ச்சி உலுக்கியது!

07.09.2026




சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி கிருஷாந்தி குமாரசாமி - கபொத சாதாரண தரத்தில் 7 Distinctions (அப்போது 8 பாடங்கள்) பெற்று, உயர்தர Chemistry பரீட்சையை எழுதிவிட்டு மிதிவண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

ஆனால், அன்று மதியம் கைதடியில் உள்ள அவளது வீடு அவருக்காக காத்திருந்தது மட்டுமே மிச்சம். கிருஷாந்தி வீடு திரும்பவில்லை. செம்மணியில் கைது செய்யப்பட்ட அவர் கைகளும் கால்களும் வாயும் கட்டப்பட்ட நிலையில் பங்கர் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்.

மகள் வராத பதற்றத்தில், தாய் இராசம்மா, கிருஷாந்தியின் தம்பி பிரணவன் மற்றும் அயல் வீட்டு நண்பர் கிருபாமூர்த்தி மூவரும் மிதிவண்டியில் செம்மணி பாதுகாப்புச் சோதனைச் சாவடிக்கு சென்றார்கள்.

அங்கு நின்றுகொண்டிருந்த சோமரத்ன ராஜபக்சவிடம், "எங்கள் மகளை இங்கே பார்த்ததாகச் சொல்கிறார்களே, எங்கே அவள்?" என்று கதறினர். விசாரணை என்ற போர்வையில் அவர்கள் மூவரையும் சோதனைச் சாவடிக்குள்ளேயே இழுத்துப் போட்டுப் பூட்டி வைத்தார்கள்.

அன்று இரவு செம்மணி சோதனைச் சாவடியில் மனித குலமே வெட்கித் தலைகுனிய வேண்டிய கொடூரம் நடந்தேறியது. தங்கள் மகளை தேடி வந்த தாய் இராசம்மா, தம்பி பிரணவன், நண்பர் கிருபாமூர்த்தி மூவரையும் கயிறுகளால் இருபுறமும் இழுத்து மூச்சுத்திழுணறடித்துக் கொழூன்றனர்.

18 வயதுப் பெண் கிருஷாந்தியை இரவு முழுவதும் பல சிறீலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியாகக் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். ஆரம்பத்தில் கிருஷாந்தி கொடூரமாகப் போராடி எதிர்த்துள்ளார். ஆனால், போராடப் போராட வலிதான் மிஞ்சியது. நான்காவது அல்லது ஐந்தாவது நபர் அவளைச் சீண்ட வந்தபோது, அந்தப் பிஞ்சுப் பெண் தனது போராட்டத்தைக் கைவிட்டார்.






"எனக்குக் கொஞ்சம் நேரம் கொடுங்கள்... தயவுசெய்து குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தாருங்கள்..." என்று கெஞ்சினார் .

ஒரு வாளியில் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்ததும், தன் விதியை நொந்தபடி அமைதியாகப் படுத்துக்கொண்டார். இரவு முடிந்ததும் கிருஷாந்தியையும் கழுத்தை நெரித்துக் கொன்று, நான்கு உடல்களையும் செம்மணியில் உள்ள சதுப்புநிலக் குழியில் புதைத்தனர்.

யாழ்ப்பாணத்தில் 2 பாடசாலை மாணவர்கள் உட்பட 4 பேர் காணாமல் போனது சர்ச்சையானது. பாராளமன்றத்தில் அப்போதைய பாராளமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோஸப் பரராஜசிங்கம் குரல் எழுப்பினார். சட்டத்தரணிகள் மாமனிதர் குமார் பொன்னம்பலம், பூபாலன் உட்பட்டோர் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் உட்பட பல்வேறு தளங்களுக்கும் நெருக்கடியை எடுத்து சென்றனர்.

இறுதியில் சம்பவம் நடந்து 45 நாட்களுக்குப் பிறகு, 1996 அக்டோபர் இறுதியில் உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டு தோண்டி எடுக்கப்பட்டன. உடல்கள் மிகவும் அழுகிய நிலையில் இருந்தன. 1996 இல் இலங்கையில் DNA பரிசோதனை வசதி கிடையாது. புதைகுழியில் வீசப்பட்டிருந்த ஆடைகளில் Dhobi Mark இருந்தது. கைதடி பகுதியில் துணி துவைக்கும் சலவை தொழிலாளியை சாட்சியத்திற்கு அழைத்தனர். அந்த ஆடைகள், தான் குமாரசாமி குடும்பத்திற்குத் துவைத்துக் கொடுத்த ஆடைகள்தான் என்பதை அவர் உறுதி செய்தார்.

கிருஷாந்தியின் வெள்ளை நிறப் பள்ளிச் சீருடை, சிவப்பு Tie, காலுறைகள் மற்றும் தாய் இராசம்மாவின் குடலிறக்க (Hernia) அறுவை சிகிச்சை மருத்துவப் பதிவுகளை வைத்து உடல்கள் அதிகாரப்பூர்வமாக உறுதிசெய்யப்பட்டன.

1998 ஆம் ஆண்டு நீதிமன்றம் சோமரத்ன ராஜபக்சே உள்ளிட்ட இராணுவ வீரர்களுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

தீர்ப்பு வெளியான அந்த நிமிடத்தில், கூண்டில் நின்ற சோமரத்ன ராஜபக்சே நீதிமன்றத்தை அதிரவைத்தார். "எனக்கு மரண தண்டனை விதிக்காதீர்கள்... செம்மணியில் புதைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் மக்களின் உடல்களை என்னால் காட்ட முடியும்!

அந்த ஒற்றை வாக்குமூலம்தான், சிறீலங்கா அரசாங்கமும் இராணுவமும் மூடி மறைத்த "செம்மணி மனிதப் புதைழூகுழி" என்ற கொடூரமான உண்மையை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியது.

500 க்கு மேற்பட்ட உடலங்கள் மீட்கப்பட்டு விட்டன International Truth and Justice Project (ITJP) மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர, மேஜர் ஜெனரல் அமல் கருணசேகர, மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிவலன்ன, பிரிகேடியர் லலித் ஹேவா, பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன, மேஜர் ஜெனரல் சசிக பெரேரா உட்பட பிரதான சூத்திரதாரிகளை அடையாளம் காட்டியிருக்கின்றது .

சம நேரத்தில் உண்மைகளை மேலும் தெளிவாக அடையாளப் படுத்தவதாக சோமரத்தின ராஜபக்சே திரு அனுரகுமார திஸாநாயகவிற்கு கடிதம் எழுதி ஒரு வருடம் கடந்து விட்டது.

ஆனால், "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்று மேடைகளில் பேசும் ஜேவிபி பொய்யர்களுக்கு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற அரசியல் விருப்பம் எள்ளளவும் இல்லை என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

உண்மைகளை வெளிக்கொணர நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம் என கதை சொல்லும் ஜேவிபி , மறுபுறம் அடையாளம் காட்டப்பட்ட பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன மற்றும் மேஜர் ஜெனரல் சசிக பெரேரா ஆகியோருக்கு உயர்பதவிகளை வழங்கி கௌரவித்துக் கொண்டிருக்கிறது.

நீதியை நீர்த்துப்போகச் செய்யும் இந்த அதிகாரத்தின் முன் ... கிருஷாந்தி, தாய் இராசம்மா, பிரணவன், கிருபாமூர்த்தி ஆகியோரின் குருதி சிந்திய நிலமும், செம்மணி மண்ணும் இன்றளவும் நீதிக்காகக் கதறிக்கொண்டே இருக்கிறது. - இனமொன்றின் குரல் முகநூல்

## தமிழரின் தேசியப் பிரச்சினையை நீதியான முறையிற் சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதிப்பாடும் தென்னிலங்கையில் எந்த அரசியற் கட்சியிடமுமில்லையென்பது கடந்த அறுபது ஆண்டுகளில் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.com

# யாழ். செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசாமி உள்ளிட்டோரின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல்

07.09.2026

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி பாடசாலை மாணவியான குமாரசாமி கிருஷாந்தி உள்ளிட்டவர்களின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றைய நாள் திங்கட்கிழமை மாலை செம்மணிப் பகுதியில் இடம்பெற்றது.






இதன்போது செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட, அங்கு புதைக்கப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டு, அவர்களுக்கும் வணக்கம் செலுத்தப்பட்டது.

1996 ஆம் ஆண்டு செம்டம்பர் மாதம் 7ஆம் திகதி 18 வயதுடைய யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி வீதியால் சென்று கொண்டிருந்த போது, செம்மணி பகுதியில் சிறீலங்கா சிங்கள இராணுவத்தினரால் வழிமறித்து பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

தொடர்ந்து இவரைத் தேடிச் சென்ற குடும்ப உறுப்பினர்களும் உறவினரும் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.













# சத்துருக்கொண்டான் படுகொலை குறித்த இராணுவ முகாமில் அகழ்வாய்வு நடத்த மட்டக்களப்பு மாநகரசபையில் தீர்மானம்!

11.09.2026

சத்துருக்கொண்டான் படுகொலை தொடர்பில் குறித்த பகுதியில் இருந்த இராணுவம் முகாம் அகழ்வாய்வு செய்யப்படவேண்டும் என்பதுடன் சர்வதேசத்தின் கண்காணிப்பில் அதனை முன்னெடுக்க நடவடிக்கையெடுக்கப்படவேண்டும் என மட்டக்களப்பு மாநகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் அமர்வு இன்று (11) வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகரசபையின் வளமையான சம்பிரதாயங்களுக்கு அமைவாக சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன்போது சத்துருக்கொண்டான் படுகொலையில் உயிர் நீர்த்தவர்களுக்காக மாநகரசபை உறுப்பினர்களினால் சுடர் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது. மாநகரசபை உறுப்பினர் தயாளகௌரியினால் இந்த சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநகரசபை முதல்வரின் தலைமையுரையினை தொடர்ந்து மாநகரசபையின் கடந்த கூட்டறிக்கை வாசிக்கப்பட்டு சபையின் அனுமதிபெறப்பட்டது.

அதனை தொடர்ந்து மாநகரசபையி முன்மொழிவுகள் வாசிக்கப்பட்டு சபையின் அனுமதிபெறப்பட்டதுடன் மாநகரசபையின் நிலையில் கட்டளைக்குழுக்களின் முன்மொழிவுகளும் வாசிக்கப்பட்டு வாதப்பிரதிவாதங்களுடன் அனுமதிகள் வழங்கப்பட்டன.



இதன்போது பல்வேறு விவாதங்கள் நடைபெற்றதுடன் மாநகர சபையின் செயற்பாடுகள் குறித்தும் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இன்றைய அமர்வின்போது சத்துருக்கொண்டான் படுகொலையின் பிரதான பங்கினைக்கொண்ட சத்துருக்கொண்டான் பொய்ஸ் கார்டன் படைமுகாமில் அகழ்வுப்பணிகளை முன்னெடுக்கவும் குறித்த படுகொலையின் பிரதான சூத்திரதாரிகளான படை பொறுப்பதிகாரி உட்பட இனங்காணப்பட்ட படையினர் மீது நடவடிக்கையெடுக்குமாறு வலியுறுத்தும் விசேட பிரேரணையொன்று மாநகரசபை உறுப்பினர் தயாளகௌரியினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதன்போது குறித்த பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்கிய நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் பிரேரணை கொண்டுவந்தவர் முன்னர் சிறீலங்கா சுதந்திர கட்சியில் இருந்ததாகவும் ஏன் அக்காலப்பகுதியில் இந்த பிரேரணை கொண்டுவரப்படவில்லையென தெரிவித்தபோது அதற்கு எதிரான பல்வேறு கருத்துகள் இதன்போது தெரிவிக்கப்பட்ட நிலையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

# மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் தமிழினப் படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல்

09.09.2026

மட்டக்களப்பு - சத்துருக்கொண்டானில் 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி படுகொலை செய்யப்பட்டவர்களின் 36வது ஆண்டு நினைவு தினம் புதன்கிழமை (09) மாலை உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பனிச்சையடியில் உள்ள உயிரிழந்தவர்களின் நினைவுத்தூபி அருகில் இந்த நிகழ்வு நடைபெற்றது.





1990 ஆம் ஆண்டு செட்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 85 பெண்கள், 10 வயதுக்கு உட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உட்பட 186 அப்பாவி சிறீலங்கா இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவற்படையினராலும், ஒட்டுக்குழுவினராலும் இந்தப் படுகொலை அரங்கேற்றப்பட்டிருந்தது. இந்தப் படுகொலையின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று நடைபெற்றது.

சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழவினரால் குறித்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழுவின் தலைவர் குழந்தைவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன், பிரதி முதல்வர் வை.தினேஸ்குமார்,மாநகரசபை உறுப்பினர் ரகுநாதன், சிவில் சமூக செயற்பாட்டாளர்களான அருட்தந்தை க.ஜெகதாஸ்,கண்டுமணி லவகுகராசா, எஸ்.சிவயோநாதன், மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி உட்பட பலர் கலந்துகொண்டனர்.



இதன்போது பிரதான ஈகச்சுடர் கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் கிராமங்களை சேர்ந்த உறவுகளை இழந்தவர்களினால் ஏற்றப்பட்டதை தொடர்ந்து நினைவுத்தூபியில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.





சத்துருக்கொண்டான் படுகொலைக்கு சர்வதேச பொறிமுறையின் கீழ் நீதிகோரியும் சத்துருக்கொண்டானில் இருந்த சிறீலங்கா இராணுவமுகாம் பகுதியில் அகழ்வாய்வு முன்னெடுக்குமாறு கோரியும் மகஜர் ஒன்றும் இதன்போது வாசிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது பெருமளவான பொதுமக்களும் உயிரிழந்தவர்களின் உறவினர்களும் கலந்துகொண்டனர்.













**எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அந்நாட்டின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# சிறீலங்கா அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கக் கோரி யாழ். பருத்தித்துறையில் போராட்டம்!

11.09.2026

யாழ்ப்பாணம் - வடமராட்சி, பருத்துத்துறை பகுதியில சிறீலங்கா இராணுவம் மற்றும் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி இன்று வெள்ளிக்கிழமை (11) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





தபாலகத்திற்கு சொந்தமான காணி, நீதிமன்றத்திற்கு சொந்த மான காணி, பருத்தித்துறை நகர சபைக்கு சொந்தமான காணி மற்றும் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை வெளிச்ச வீட்டு பகுதியை விடுவிக்குமாறுகோரி இந்த போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இராணுவம் மற்றும் கடற்கரை வெளியேற வேண்டும் என்று கோரி நகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட் டம் பருத்தித்துறை துறைமுக பகுதியில் இருந்து ஆரம்பமாகி வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் வரை சென்றது.

அங்கு, மேற்குறித்த காணிகளை விடுவிக்குமாறு பிரதேச செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், நகர சபையை தவிசாளர் வின்சன் டி போல் டக்லஸ் போல், பருத்துத்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஷ், அரசியல், செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் பருத்தித்துறை வர்த்தகர்கள், பிரதேச மக்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருக் கின்றனர்.




















**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.com**

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நடுநிலையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

11.09.2026



யாழ்ப்பாணத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நடுநிலையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமாகும். நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் முழுமையடைய வேண்டும். செம்மணி மனிதப் புதைகுழியுடன் சம்பந்தப்பட்டவை என்ற அடிப்படையில் முன்வைக்கப்படும் குற்றங்கள் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு இச்செயன்முறை அவசியமாகும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

கடந்த மாதம் 18 - 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்ற இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் பூரண அமர்வின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் இப்பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

எமது நாட்டின் நீதி, அமைதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில முக்கிய விடயங்கள் குறித்து கடந்த ஆகஸ்ட் மாதம் 18 - 20ஆம் திகதி வரை நடைபெற்ற இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் பூரண அமர்வின்போது கவனம் செலுத்தப்பட்டது.

சமூகத்தில் சமத்துவம் மற்றும் நீதியை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் ஆயர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. அவ்வாறான நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் அரசாங்கத்தினால் மன்னாரில் முன்மொழியப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் குறித்து இந்த அமர்வின்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

அதேபோன்று பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அரசாங்கத்துக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதுகுறித்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் கத்தோலிக்க ஆயர் பேரவை ஜனாதிபதியிடம் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது. இது மிக நீண்டகாலத் தேவையாக இருந்துவந்த நிலையில், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்யும் இச்சமூகத்துக்கான சம்பள உயர்வு பாராட்டத்தக்கதாகும்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நடுநிலையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றோம். நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் முழுமையடைய வேண்டும். செம்மணி மனிதப் புதைகுழியுடன் சம்பந்தப்பட்டவை என்ற அடிப்படையில் முன்வைக்கப்படும் குற்றங்கள் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு இச்செயன்முறை இன்றியமையாததாகும்.

அதேபோன்று சுமார் மூன்று தசாப்தகாலமாக நீடித்த உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற மிக மோசமான மீறல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பான கதைகளும், அதற்கு முன்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான கதைகளும் கூறப்படுகின்றன.

மறுபுறம் மணல் அகழ்வு நடவடிக்கைகளினால் மன்னாரில் ஏற்படக்கூடிய மிகத் தீவிரமான சூழலியல் பாதிப்புக்கள் குறித்தும் கத்தோலிக்க ஆயர் பேரவை கவனம் செலுத்தியது.

சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இவ்வாறான செயற்பாடுகளினால் மக்கள் வெகுவாகக் கவலையடைந்திருப்பதுடன், எரிபொருள் மற்றும் எரிவாயு சார்ந்த ஆய்வுகளுக்காக மன்னாரைச் சூழவுள்ள நிலப்பகுதிகள் அகழப்படுவது குறித்தும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்ட நேர்மறை முயற்சிகளாக இருக்கலாம். எனினும் முறையான சுற்றாடல் மதிப்பீடுகளை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வதும், இவை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் பொறுப்பில் இருப்பவர்களின் கடமையாகும். அதுமாத்திரமன்றி இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பதாக அப்பகுதி மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கான முறையான கருத்துக்கணிப்பு நடாத்தப்படவேண்டும்.

மக்களின் உரிமைகளும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் அதேவேளை, இத்தகைய செயற்பாடுகளால் மன்னார் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கும் நீர் வளத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# யாழ். மயிலிட்டியில் 21ஆவது வாரமாகத் தொடரும் போராட்டம்!

11.09.2026

யாழ். வலிகாகம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி , காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமாண்டோ " பங்களா முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 21ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.





வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு யூலை மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 21ஆவது வாரமாக போராட்டத்தை முன்னடுத்தனர்

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# வெடுக்குநாறிமலையில் 11 அடியில் புத்தர் இருந்ததாம் [?]

13.09.2026

வெடுக்குநாறிமலை பௌத்த வழிபாட்டு தலம். அங்கு 11 அடி புத்தர் சிலை இருந்தது என சந்தபோதி தேரர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள பகுதிக்கு சிறீலங்காப் பொலிசார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் ஒன்றரை மணிநேரம் பிரித்து ஓதி பூஜை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அதுவரை சைவ மக்களை மலை உச்சிக்கு செல்ல வேண்டாம் என்று பொலிசார் கூறியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சந்தபோதி தேரர், வெடுக்குநாறி மலை ஒரு பௌத்த வழிபாட்டு ஸ்தானம். 2012 ற்கு முன்னர் அங்கு 11அடி புத்தர் சிலை இருந்தது. அது எங்களிடம் உள்ளது. மீண்டும் அதனை இங்கு நிறுவப் போகின்றோம்.





சைவ வழிபாடு 2013 இற்கு பின்னரே வந்தது. தமிழர்கள் போலி நம்பிக்கையில் வழிபடுகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.












# யாழ். பலாலியில் காணிகளை விடுவிக்கக் கோரித் தொடர் போராட்டம்

13.09.2026

யாழ். வலிகாமம் வடக்கு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி பலாலி சந்தியில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை 13ஆவது வாரமாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 36 வருடங்களாக காணிகளை இழந்த மக்கள் இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

தமது காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வரும் நிலையில் தாம் நீண்ட காலமாக நிலங்கள், வீடுகள் அற்று வாழ்ந்து வரும் நிலையில் தமது வீடுகள் காணிகளை விடுவிக்க வேண்டும் என கோரி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை காணி விடுவிப்பு தொடர்பில் நாடாளுமன்றில் உயர்மட்ட கலந்துரையாடல் நடைபெற்றுள்ள நிலையில், பலாலி கிழக்கு உள்ளிட்ட பகுதிகளை இந்த மாதத்திற்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை கோரி யாழில் போராட்டமும்; பிரகடனமும்

13.09.2026

யாழ். செம்மணி சித்துப்பாத்தியில் சுமார் 600 மனித எலும்புக் கூடுகள் இனப்படுகொலைக்கான சான்றுப்பொருட்களாக காணப்படுகின்ற நிலையில் தமிழனப்படுகொலைகளுக்கு எதிராக சர்வதேச நீதி விசாரணைப்பொறிமுறையொன்று தாமதமின்றி உருவாக்கப்பட வேண்டும் என்று கேணல் கிட்டு பூங்காவில் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.




தமிழ்த் தேசியப் பேரவையின் அழைப்பில் ஈழத்தமிழ் குடிசார் அமைப்புக்களும் பொதுமக்களும் செம்மணி உள்ளிட்ட தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தி இன்று ஞாயிற்றுக்கிழமை (13) முற்பகல் கைலாசபதி ஆலயத்துக்கு முன்பாக ஒன்று கூடினர்.

அதனைத்தொடர்ந்து, செம்மணியில் வெளிவந்துள்ள எலும்புக் கூடுகளை அடைளாயப்படுத்தும் வகையில் கறுப்புடையுடனும் மண்டையோட்டு அடையாளத்துடனும் இளையோர் முன்னகர, செம்மணி படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும், மக்கள் காணிகளில் படையினர், மக்களோ தெருக்களில், தமிழர் அடையாளங்களை ஆக்கிரமிக்கும் பௌத்தம், தமிழினப் படுகொலைக்கு நீதி வேண்டும், ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே, காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே, அநுர அரசே உங்களின் வாக்குறுதிகள் பொய்யா, எமது கடல் எமக்கு வேண்டும், உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு ஆயிரக்கணக்கானவர்கள் கோவில் வீதி ஊடாக கேணல் கிட்டு பூங்காவை நோக்கி பேரணியாக நகர்ந்தனர்.

இதில், தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திர குமார், மற்றும் ஏனைய தலைவர்களான செல்வராசா கஜேந்திரன், கனரத்தினம் சுகாஷ், நடராஜர் காண்டீபன், மதத் தலைவர்கள், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், தையிட்டி, பலாலி, மயிலிட்டி, கேப்பாபிலவு உள்ளிட்ட பகுதிகளில் நிலத்தை இழந்துள்ளவர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகள், மற்றும் பொதுமக்கள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

அதனையடுத்து, நல்லூர் கிட்டுபூங்காவினை பேரணி வந்தடைந்து அங்கு தமிழ் மக்களின் நீதிக்கான குரல் எனும் தொனிப்பொருளில் உள்ளகப் பொறிமுறைகளை முற்றாக நிராகரிக்கின்றோம், சர்வதேச விசாரணையை ஐ.நா.பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலான பிரகடனக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரி அக வணக்கம் இடம்பெற்றதை அடுத்து, சர்வதேச நீதிவிசாரணை உள்ளிட்ட பிரகனடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சுரேஷால் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஐங்கரநேசன், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் வட,கிழக்கு அமைப்பின் தலைவி கனகரஞ்சினி, ஐ.பி.சி.நிறுவனத்தின் தலைவரும் வர்த்தகருமான கந்தையா பாஸ்கரன், வலி.வடக்கில் காணிகளை இழந்துள்ளவர்களின் சார்பிலும், கேப்பாபிலவில் காணிகளை இழந்துள்ள மக்களின் சார்பிலும் மூன்று பிரதிநிதிகளும் உரையாற்றியதோடு நன்றி உரையை தவபாலசிங்கம் வழங்கினார்.

இந்நிலையில் வெளியிடப்பட்டுள்ள பிரகடனத்தில் குறிப்பிடப் பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு"

- செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளுக்கான சர்வதேச நீதி விசாரணை பொறிமுறை வேண்டும்.
- தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு உள்ளக விசாரணைப் பொறிமுறையை முற்றாக நிராகரிப்பதுடன், சுயாதீனமான, பாரபட்சமற்ற சர்வதேச குற்றவியல் விசாரணை உடனடியாக ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நீதிகோரும் உள்ளகப் பொறிமுறைகளை நாம் முற்றாக நிராகரிப்பதுடன், அதற்கான சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்.
- அரசியல் கைதிகளின் உடனடியான விடுதலை.
- வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் வகையிலான இராணுவமயமாக்கல் அகற்றப்படல் வேண்டும்.
- தமிழினப் படுகொலை மீள நிகழாமல் இருப்பதனை உறுதிப் படுத்தவும், தொடரும் கட்டமைப்புசார் இன வழிப்பை நிரந்தர மாகத்தடுத்து நிறுத்தவும், நிலையான இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் - இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பு முற்றாக நீக்கப்பட்டு, தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப் படையிலான தீர்வு எட்டப்படுவதனை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என்பன வாகும்.



























www.thuyarpakirvu.com



# கனடியச் செய்திகள்

## தெற்கு ஒன்ராரியோவில் சக்திவாய்ந்த புயல் : பல்லாயிரம் வீடுகள் இருளில் மூழ்கியது!

02.09.2026

கனடாவின் ரொரான்ரோ பெரும் பாகத்தை ஒரு சக்திவாய்ந்த இடியுடன் கூடிய புயல் தாக்கியுள்ளது. இதனால் கட்டிடங்கள் சேதமடைந்தன, சாலைகள் மூடப்பட்டன, மேலும் பல்லாயிரக் கணக்கான குடியிருப்பாளர்களுக்கு மின்சாரம் துண்டிக் கப்பட்டது.

புதன்கிழமை ஏற்பட்ட இந்தப் புயல், கனமழை, பலத்த காற்று மற்றும் பெரிய ஆலங்கட்டி மழையைக் கொண்டுவந்தது. இத னால் சில பகுதிகளில் சூறாவளி எச்சரிக்கைகளும் முன்னறி விப்புகளும் விடுக்கப்பட்டன.

மின்சார வழங்குநரான ரொரான்ரோ ஹைட்ரோவின் தகவல் படி, புதன்கிழமை இரவு 8 மணி நிலவரப்படி (வியாழக் கிழமை) குறைந்தது 45,000 வாடிக்கையாளர்கள் மின்சாரம் இல்லாமல் இருந்தனர்.

இந்தப் புயல் மரங்களைச் சாய்த்து வெள்ளப்பெருக்கை ஏற்படுத் தியதால், டான் வேலி பார்க்வே உட்பட நகரில் சாலைகள் மூடப் பட்டதாக சிபிசி செய்தி வெளியிட்டுள்ளது. ரொரான்ரோவின் ஈஸ்ட் யார்க் பகுதியில் அமைந்துள்ள மைக்கேல் கேரன் மருத் துவமனை, அதன் அவசர சிகிச்சைப் பிரிவு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ரொரான்ரோவிற்கு வடக்கே உள்ள வான் நகரில் கார்கள் கிட்டத்தட்ட நீரில் மூழ்கியிருந்ததை சிபிசி வெளியிட்ட படங்கள் காட்டின. புதன்கிழமை காலை முதல் நகரின் அவசரகால செயல்பாட்டு மையம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக ரொரான்ரோ மேயர் ஒலிவியா செள எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

“அறுந்து விழுந்த மின்கம்பிகள், விழுந்த மரங்கள், வெள்ளம் மற்றும் பலவற்றிற்கு பதிலளிக்கும் வகையில் நகர ஊழியர்கள் ஏற்கனவே களத்தில் இறங்கியுள்ளனர்,” என்று அவர் கூறினார்.

சுரங்கப்பாதைகள் மற்றும் பேருந்துகளை இயக்கும் ரொரான்ரோ போக்குவரத்து ஆணையம், ”வெள்ளம் மற்றும் பலத்த காற்றினால் பரவிய குப்பைகளால் பாதிக்கப்பட்ட இடங் களில் சேவையை மீட்டெடுக்க பணியாற்றி வருகிறது,” என்றும் அவர் மேலும் கூறினார்.

புதன்கிழமை மாலை ரொரான்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்படவிருந்த பல விமானங்கள் தாமதப் படுத்தப்பட்டன அல்லது ரத்து செய்யப்பட்டன.

கனடாவின் வானிலை ஆய்வு நிறுவனமான, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற கனடா, பெருநகர ரொரான்ரோ பகுதியில் கடுமையான இடியுடன் கூடிய மழைக்கான ஆரஞ்சு



எச்சரிக்கையை நீக்கியது.

## கனடிய இறக்குமதிகளுக்கு அமெரிக்கா 50 வீதம் வரி!

09.09.2026

கனடிய பால் பொருட்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மது பானங்களை அமெரிக்காவில் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்படுவதுடன், எல்லை தாண்டி வரும் பிற கனடியப் பொருட்களுக்கு 50% வரி விதிக்கப்படும் என வெள்ளை மாளிகை செவ்வாயன்று தெரிவித்துள்ளது. இதன் மூலம், கனடாவுடனான வர்த்தகப் போரை அதிபர் டொனால்ட் டிரம்ப் மேலும் தீவிரப்படுத்தியுள்ளார்.

இந்த இறக்குமதித் தடை செப்டம்பர் 29ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், செப்டம்பர் 15ஆம் திகதி முதல் மெத்தைகள், மோட்டார் படகுகள் மற்றும் கோல்ஃப் வண்டிகள் உள்ளிட்ட கூடுதல் கனடியப் பொருட்களுக்கு 50% வரி விதிக்கவும் டிரம்ப் உத்தர விட்டுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கனடிய இறக்குமதிகளுக்கு 50% வரி விதிக்க வாஷிங்டன் கடந்த மாதம் எடுத்த முடிவுக்கு பதிலடியாக, கனடா திங்களன்று சுமார் 20 பில்லியன் டாலர் (17.2 பில்லியன்




யூரோ) மதிப்பிலான அமெரிக்கப் பொருட்களுக்கு 50% வரை பதிலடி வரிகளை விதித்தது. இதைத் தொடர்ந்து அமெரிக் காவின் இந்த சமீபத்திய நடவடிக்கைகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# ஒன்ராரியோவின் முதலாவது செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டுத் துறைக்கான இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் அவர்கள் நியமனம்

10.09.2026

சமீபத்திய அமைச்சரவை மாற்றத்தில், ஒன்ராரியோ முதல்வர் மாண்புமிகு டக் ஃபோர்டு அவர்கள், மாண்புமிகு அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்களை முதன்முறையாக செயற்கை நுண்ணறிவும் அதனை ஏற்றுக்கொள்ளுதலுக்குமான இணை அமைச்சராக நியமித்துள்ளார். இது பொது சேவைக்கான அவரது அர்ப்பணிப்புக்கும் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான அவரது பங்களிப்க்கும் கொடுக்கப்பட்ட அங்கீகரமாகும். இந்தப் புதிய அமைச்சகம், தொழில்நுட்பமும் செயற்கை நுண்ணறிவும் எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகின்றன என்பதையும், நமது பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், எதிர்கால சிறந்த வாய்ப்புகளுக்குத் தயாராகவும் ஒன்ராரியோவுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைவர்கள் தேவை என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் 2018ஆம் ஆண்டில் இருந்து மூன்றாவது முறையாக ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் தொகுதியின் ஒன்ராரியோ சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி வருவதுடன், மேலும் 2023ஆம் ஆண்டில் ஒன்ராரியோவில் அமைச்சரவைப் பதவியை வகித்த முதல் தமிழ் அரசியல்வாதி என்ற வரலாற்றையும் படைத்தார். உலகப் பொது மறை தந்த திருவள்ளுவரின் வான்புகழ் திருக்குறளின் மீது மீண்டும் ஒருமுறை பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் மூலம் அவர், தனது தமிழ் மரபுடனான அவரின் ஆழமான தொடர்பையும் வெளிப்படுத்தியிருந்தார்.

அவர் முன்னதாக 2023ஆம் ஆண்டில் போக்குவரத்துக்கான இணை அமைச்சராகவும், 2024ஆம் ஆண்டில் வீட்டுவசதிக்கான இணை அமைச்சராகவும், சமீபத்தில் சுகதாரா இணை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது குறிப்பிடத்தக்க சாதனைகளில், 2023-இல் போக்குவரத்துத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட “ஒற்றைக் கட்டண“ (One Fare) திட்டம், ஸ்காபரோவில் முதன்முதலாக அமைக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி, வீடின்மை, போதைப் பயன்பாடு அல்லது உளநல சவால்களை எதிர்கொள்பவர்களுக்கு ஆதரவும் சிகிச்சையும் அளிக்கும் வகையில் “வீடின்மை மற்றும் போதை பயன்பாட்டில் சிக்கியோருக்கான மீட்பு சிகிச்சை மையங்களை” (HART Hubs) அமைத்தது போன்றன குறிப்பிட்டதக்கன.



செயற்கை நுண்ணறிவு தொடர்ந்து நவீனமடைந்து பல ஒன்ராரியோவாசிகளின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதால், செயற்கை நுண்ணறிவுத் துறையில் புதிய வாய்ப்புகளைப் பெறவும், பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கவும், மாறிவரும் உலகளாவிய சூழலில் போட்டித்தன்மையுடன் இருக்கவும், உரிய கட்டுப்பாட்டு வழிமுறைகளை வகுப்பதிலும், ஒன்ராரியோவின் வளர்ச்சிக்கு உதவுவதில் விஜய் தணிகாசலம் அவர்கள் தலைமைத்துவம் இன்றியமையாததாக அமையும்.

# கனடா குடியுரிமைச் சான்றிதழ் விண்ணப்பங்கள் தேக்க நிலை!

12.09.2026

கனடாவில் புதிய சி-3 சட்டத் திருத்தம் அமலுக்கு வந்ததைத் தொடர்ந்து, பரம்பரை வழியிலான குடியுரிமைச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கையும், அவற்றுக்கான காத்திருப்பு காலமும் மிகக் கடுமையாக அதிகரித்துள்ளன.

கனடா குடியேற்ற, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சு வெளியிட்டுள்ள புதிய தரவுகளின்படி இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

தற்போது 1,36,000க்கும் அதிகமானோர் குடியுரிமைச் சான்றிதழ் முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றனர்.

ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 14,000 விண்ணப்பங்கள் அதிகம் ஆகும். விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான காலம் 33 மாதங்களுக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

ஆகஸ்ட் மாத நிலவரப்படி 25 மாதங்களாக இருந்த இக்காலம், ஒரே மாதத்தில் மேலும் 8 மாதங்கள் உயர்ந்துள்ளது. பிற நாடுகளிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு மேலதிகமாக 3 முதல் 4 மாதங்கள் வரை தேவைப்படும்.



மே 31 நிலவரப்படி, புதிய விதிகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 51 சதவீதம் அமெரிக்காவில் பிறந்தவர்களுடையதாகும்.

அமெரிக்காவின் தற்போதைய அரசியல் சூழலே இந்த திடீர் அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் எனப்படுகிறது.

அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக மெக்சிகோ, பொலிவியா, ஐக்கிய ராஜ்யம், சீனா, இந்தியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

சிக்கலான விண்ணப்பங்களுக்கு மேலதிக ஆவணப் பரிசீலனைகளும் தீவிர சரிபார்ப்புகளும் தேவைப்படுவதாலேயே கால தாமதம் ஏற்படுவதாகவும், இதர பல காரணிகளும் இந்த அதிகரிப்புக்குக் காரணம் எனவும் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழ் நாட்டுச் செய்திகள்



## கடைகளுக்கு நவம்பர் 1ஆம் திகதிக்குள் தமிழில் பெயர் பலகை
### சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு



05.09.2026

கடைகளுக்கு தமிழில் பெயர் பலகை வைக்க வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில், நவம்பர் 1 ஆம் திகதிக்குள் பெயர் பலகைகளை மாற்ற வேண்டும் என சென்னை உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள கடைகளுக்கும் தமிழில் பெயர் பலகைகள் வைக்க வேண்டும் என 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவில், பெயர் பலகைகளில், தமிழ் பெயருக்கு கீழ் ஆங்கிலத்தில் பெயர் வைத்துக் கொள்ளலாம் என்றும், தவறினால் 2000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த உத்தரவை அமல்படுத்த எதிர்ப்பு தெரிவித்து, மும்பையில் உள்ள இந்திய சில்லறை வர்த்தகர்கள் சங்கத்தின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கே.சுரேந்தர் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசின் உத்தரவை அமல்படுத்த தயாராக இருப்பதாகவும், அதற்கு மூன்று மாத கால அவகாசம் வேண்டும் எனவும் மனுதாரர் சங்கம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் கோரிக்கை விடுத்தார்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, கடைசி வாய்ப்பாக நவம்பர் 1 ஆம் தேதிக்குள், கடைகளின் பெயர் பலகைகளை தமிழில் மாற்ற வேண்டும் எனவும், தவறினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கலாம் எனவும் உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

## கடலூர் திட்டக்குடி அருகே வயல்வெளியில் முதுமக்கள் தாழி கண்டுபிடிப்பு!

10.09.2026

கடலூர் மாவட்டம், திட்டக்குடி அடுத்த வடகராம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த அருண் என்பவருக்கு மேலக்கல்பூண்டி கிராமத்தில் வயல் உள்ளது.

இவர் நேற்று முன்தினம் காலை உர மூட்டைகளை எடுத்துச் சென்று அவரது வயலில் இறக்கினார். அப்போது வயலின் ஒரு பகுதியில் பள்ளமாக இருந்தது. அதைத்தோண்டிய போது வட்ட வடிவ மண் தாழி வெளிப்பட்டது. அதன் உட்பகுதியில் சிறிய குடுவை வடிவ மண்பானைகள், எலும்புத் துண்டுகள் காணப்பட்டன.

இதையடுத்து அவர் அளித்த தகவலின்பேரில், நேற்று காலை திட்டக்குடி வட்டாட்சியர் மஞ்சுளா மற்றும் அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர். அதில் பெரிய தாழிக்குள் சிறிய மண் பானைகள் இருப்பது தெரிந்தது. உள்ளே எலும்புத் துண்டுகள் தெரிவதாக பொதுமக்கள் தகவல் அளித்தனர். இதன்பேரில் அது முதுமக்கள் தாழியாக இருக்கலாம் எனத்கணிக்கப்பட்டது.

மேலும் பெரிய தாழிக்குள் காணப்பட்ட சிறிய தாழிகள், ஈமப் புதைவுடன் தொடர்புடைய தொல்லியல் அமைப்பாக இருக்கலாம் எனத்தெரிகிறது. எனவே, அந்த இடத்தை அப்படியே பாதுகாத்து தமிழ்நாடு தொல்லியல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறையினர் தாழியினை முழுமையாக ஆய்வுசெய்த பின்பே அது எத்தனை ஆண்டுகள் பழமையானது எனத் தெரியவரும்.

தொல்லியல் துறையினர் விரைந்து அப்பகுதியை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என வரலாற்று ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# RECOGNISE LIBERATION TIGERS OF THAMIL EELAM AS A LIBERATION ORGANISATION

**ஒரு பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்ப்பு வழங்குவதற்கும் பிரத்தியேகமான மனப்பக்குவம் அவசியம். சுயநலமற்ற, சொந்த விருப்பு – வெறுப்புக்களற்ற, உணர்வுகளுக்கும் பந்த பாசங்களுக்கும் இடமளிக்காத, ஒரு நேர்மையான பார்வை அவசியம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.com**

# தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழரைக் காலணியால் தாக்க முயன்ற துணை ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை!

11.09.2026



மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ள இலங்கை தமிழர் ஒருவர் தனித்துணை ஆட்சியரிடம் மருத்துவ விடுப்பு கேட்க சென்ற போது அவரை காலணியால் தாக்க முயன்றதை கண்டித்து 9ஆம் திகதி வியாழன் மாலை இலங்கை தமிழர்கள் தனித்துணை ஆட்சியர் அலுவலகத்தை ஐந்து மணி நேரத்துக்கு மேலாக முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு போர் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ வழியின்றி இலங்கைத் தமிழர்கள் கடல் வழியாக தனுஷ்கோடிக்கு வந்திறங்கிய இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரம் அடுத்த மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் சுமார் 1500 க்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இலங்கை தமிழர்களை கண்காணிப்பதற்காக மண்டபத்தில் தனித்துணை ஆட்சியர் அலுவலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

இலங்கை தமிழர்கள் வெளியூர் மற்றும் வெளி மாவட்டங்களில் தங்கி உள்ள தங்கள் உறவினர்கள் வீட்டுக்கு செல்வதற்கும், மருத்துவம் சிகிச்சை மற்றும் கல்வி பயில வெளியூர் சென்றாலும் தனித்து தனித்துணை ஆட்சியரிடம் விடுப்பு பெற்று செல்ல வேண்டும்.

இந்நிலையில் உள்நாட்டு போர் காரணமாக இலங்கையில் இருந்து அகதியாக தனுஷ்கோடி வந்திறங்கி 2007 ஆம் ஆண்டு முதல் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜெகன் (50) என்பவர் மருத்துவ சிகிச்சைக்காகவும், உடல் நலம் சரியில்லாததால் மருத்துவ உதவிக்காக தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சரை நேரில் சந்தித்து மனு அளிப்பதற்காக சென்னை செல்ல மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் தனித்துணை ஆட்சியரிடம் மனு அளித்திருந்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட ஆட்சியர் விடுப்பு வழங்குவதற்கு தனித்துணை ஆட்சியர் லஞ்சம் கேட்டதாக சொல்லப்படுகிறது. ஜெகன் பணம் கொடுக்காததால் தொடர்ந்து அவருடைய விடுப்பு மனு நிராகரிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று வியாழன் மதியம் இலங்கை தமிழர் ஜெகன் தனித்துறை ஆட்சியரை சந்தித்து விடுப்பு விண்ணப்பம் தொடர்பாக கேட்க சென்றபோது தனி துணை ஆட்சியர் கலை மன்னன் இலங்கைத் தமிழர் ஜெகனை காலணியை கழற்றி அடிக்க முயன்றுள்ளார்.

இதனை வீடியோவாக பதிவு செய்த இலங்கை தமிழர் ஜெகன் இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதனிடையே இலங்கை தமிழரை தனி துணை ஆட்சியர் காலணியால் தாக்க முயன்றதை கண்டித்து தனித்துணை ஆட்சியர் அலுவலகத்தை இலங்கை தமிழர்கள் சுமார் ஐந்து மணி நேரத்திற்கு மேலாக முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவலறிந்த இராமநாதபுரம் வட்டாட்சியர் காளீஸ்வரர் ஜெகன் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை தமிழரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் தனித்துறை ஆட்சியர் கலை மன்னன் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும், அவரை உடனடியாக பணியில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும் மற்றும் இலங்கை தமிழர்கள் விடுப்பு எடுப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர். தமிழர்களின் கோரிக்கைகளை கேட்டுக்கொண்ட இராமநாதபுரம் வட்டாட்சியர் இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சிவகுரு பிரபாகரனிடம் தகவல் தெரிவிப்பதாகவும் வரும் திங்கட்கிழமை தனித்துணை ஆட்சியர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்றும் உத்தரவாதம் அளித்ததை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை தமிழர்கள் தங்களது போராட்டத்தை கைவிட்டனர்.







# தமிழர்களின் வாய்ப்புகளை பிறருக்கு தாரைவார்ப்பதை தடுக்க வேண்டும்!

### பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

14.09.2026



பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்ட அறிக்கை: தெற்கு ரயில்வேயின் தமிழக எல்லைக்குட்பட்ட பணிமனைகளில் தொழில் பழகுநர் பயிற்சிக்காக 6,171 பேரை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 27-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில் பழகுநர் நியமன அறிவிக்கையில், தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்க வேண்டும் என்ற பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, தட்சிண கன்னடா பகுதி, ஆந்திராவின் நெல்லூர், சித்தூர் பகுதி மற்றும் கேரளாவில் இருப்பவர்களும், அந்தமான் நிக்கோபார், லட்சத்தீவு போன்ற பிற மாநிலங்களில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழக இளைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய தொழில் பழகுநர் பணி பிற மாநிலத்தவருக்கு தாரைவார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இதை அனுமதிக்க முடியாது.

வழக்கமான விதிகளை புறந்தள்ளிவிட்டு, வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிக்கையின் மூலம் தமிழகத்தில் உள்ள தொழில் பழகுநர் பயிற்சி இடங்களை பிற மாநிலத்தவருக்கு தாரை வார்க்க தெற்கு ரயில்வே முயற்சி செய்வது கண்டிக்கத்தக்கது.

கால் நூற்றாண்டுக்கும் மேலாக தெற்கு ரயில்வே துறையில் உள்ள பணிகளை பிற மாநிலத்தவர் பறித்துக்கொள்கின்றனர். தொழில் பழகுநர் வாய்ப்புகளும் அதே போல் பறிக்கப்பட்டு வந்த நிலையில் தான், நீண்ட போராட்டத்தின் மூலம் 2019ஆம் ஆண்டில் தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்பு உரிமை மீட்டெடுக்கப்பட்டது.

அந்த உரிமைக்கு தான் இப்போது மீண்டும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தமிழக இளைஞர்களின் தொழில் பழகுநர் வாய்ப்புகளை பறிக்கும் நோக்கம் கொண்ட அறிவிக்கையை தெற்கு ரயில்வே உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்கள் மட்டும் தான் இந்த பணிக்கு விண்ணப்பிக்க முடியும் என்ற விதியை சேர்த்து புதிய ஆள்தேர்வு அறிவிக்கையை தெற்கு ரயில்வே புதிதாக வெளியிட வேண்டும். இதற்காக ரயில்வே வாரியத்துக்கு தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.




# ஆப்பிள் தனது வரைபடச் செயலியில் ஒன்ராரியோ ஏரியின் பெயரை 'அமெரிக்கா ஏரி' என மாற்றியுள்ளது

02.09.2026

அதிபர் டொனால்ட் டிரம்பின் நேரடி வலியுறுத்தலைத் தொடர்ந்து, ஆப்பிள் தொழில்நுட்ப நிறுவனம், அமெரிக்காவில் உள்ள தனது வரைபடச் செயலியின் பயனர்களுக்காக, ஒன்ராரியோ ஏரியின் பெயரை அமெரிக்கா ஏரி எனப் புதுப்பித்துள்ளது.



நிர்வாகி ஜான் டெர்னஸ் ஆப்பிள் நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்ற அதே நாளில், செவ்வாய்க்கிழமை இந்த மாற்றம் நிகழ்ந்தது.

டிரம்பின் சர்ச்சைக்குரிய நிர்வாக உத்தரவுக்கு இணங்கிய இரண்டாவது அமெரிக்காவைச் சேர்ந்த தொழில்நுட்ப நிறுவனம் ஆப்பிள் ஆகும். சனிக்கிழமையன்று, கூகுள் நிறுவனமும் தனது மிகவும் பிரபலமான கூகுள் மேப்ஸில் அமெரிக்கப் பயனர்களுக்கான பெயரை மாற்றியதாக அறிவித்தது.

கூகிள் போன்ற நிறுவனங்கள் தங்களின் சொந்த வரைபடங்களுக்காக இந்தத் தகவல் அமைப்பைப் பயன்படுத்துகின்றன.

மெக்சிகோ வளைகுடாவை "கல்ஃப் ஆஃப் அமெரிக்கா" எனப் பெயர் மாற்றுவது மற்றும் அலாஸ்காவில் உள்ள டெனாலி மலையின் பெயரை "மவுண்ட் மெக்கின்லி" என மாற்றுவது உட்பட, டிரம்ப் உத்தரவிட்ட பெயர் மாற்றங்களை ஆப்பிள் நிறுவனம் இதற்கு முன்னர் கடைப்பிடித்துள்ளது.

சனிக்கிழமையன்று வெளியிட்ட ஓர் அறிக்கையில், கூகுள் தனது வரைபடங்கள் அதிகாரப்பூர்வ அரசாங்க ஆதாரங்களில் பட்டியலிடப்பட்டுள்ள பெயர்களையே பின்பற்றுவதாக மீண்டும் வலியுறுத்தியது. இதன் விளைவாக, அமெரிக்கப் பயனர்கள் "லேக் அமெரிக்கா" என்பதையும், கனடியப் பயனர்கள் "லேக் ஒன்ராரியோ" என்பதையும் காண்கின்றனர், மேலும் பிற நாடுகளில் உள்ள பார்வையாளர்கள் இரண்டு பெயர்களையும் காண்கின்றனர்.




ஒன்ராரியோ ஏரி இரு நாடுகளுக்கும் இடையில் அமைந்துள்ளது, மேலும் இது வெண்டாட் பழங்குடி மொழியிலிருந்து தனது பெயரைப் பெற்றது. இருப்பினும், டிரம்ப், பெயரிடும் மரபுகளை மாற்றுவது மற்றும் ஆங்கிலத்தை அமெரிக்காவின் அதிகாரப்பூர்வ மொழியாக அறிவிப்பது உள்ளிட்டவற்றின் மூலம், மேற்கு அரைக்கோளம் முழுவதும் அமெரிக்காவின் செல்வாக்கை அதிகரிக்க முயன்றுள்ளார்.

# உலக வரைபடத்தை மாற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானம்!

05.09.2026

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 164 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட விசேட தீர்மானத்திற்கு அமைவாக, இது வரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த உலக வரைபடம் மாற்றமடையவுள்ளது.

ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளால் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானத்துக்கு 164 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ள அதேவேளை, 6 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கனித்த நிலையில் அமெரிக்கா இதற்கு எதிராக வாக்களித்துள்ளது.

1569 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 'மெர்கேட்டர் வரைபடம்' முறையின் கீழ், நாடுகளின் நிலப்பரப்பு தவறான அளவுகளில் காட்டப்பட்டு வந்தமையே இந்நடவடிக்கைக்கு முக்கிய காரணமாகும். பழைய வரைபடத்தில் கிரீன்லாந்தின் நிலப்பரப்பும் ஆபிரிக்கக் கண்டத்தின் நிலப்பரப்பும் சம அளவிலேயே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், உண்மையான நிலப்பரப்பளவின் அடிப்படையில் ஆபிரிக்கக் கண்டமானது கிரீன்லாந்தை விட 14 மடங்கு பெரியதாகும். பூமத்திய ரேகையிலிருந்து தொலைவில் அமைந்துள்ள நாடுகள், இந்தத் தவறான வரைபட முறையினால் பிழையான அளவுகளிலேயே காட்டப்படுகின்றன.

பழைய வரைபடத்தில் மேலைத்தேய நாடுகளின் நிலப்பரப்பு மிகப்பெரியதாகக் காட்டப்பட்டதால், அது தவறானதாக இருந்த போதிலும் அந்த நாடுகளுக்கு அதனை மாற்ற வேண்டிய தேவை ஏற்படவில்லை என விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்நிலையில், நாடுகளின் நிலப்பரப்பைச் சரியாகக் காட்டும் 'சம பூமி வரைபடம்' முறைமை முதன்முதலில் 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தவறான மெர்கேட்டர் வரைபடத்தைப் பயன்படுத்துவதைக் கைவிட்டு, புதிய வரைபட முறைமையைப் பயன்படுத்தவுள்ளதாக பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

கூகுள் மேப்ஸ் உள்ளிட்ட ஏனைய டிஜிட்டல் வரைபடச் சேவை வழங்கும் நிறுவனங்களையும் இந்தப் புதிய 'சம பூமி வரைபட' முறையைப் பயன்படுத்துமாறு ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த வரைபட மாற்றத்தினால் விமானப் போக்குவரத்துத் துறையில் குறிப்பிடத்தக்க பாதிப்புகள் எதுவும் ஏற்படாது என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், விமானச் சேவை நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவை நெட்வொர்க் வரைபடங்களுக்குப் புதிய வரைபடத்தையே இனிப் பயன்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளன.



# நேபாளத்தில் 1,340 பேரை பலிகொண்ட வெள்ளப் பேரழிவு

08.09.2026

நேபாளத்தின் ரசுவா மாவட்டத்தில் கடந்த மாதம் ஆகஸ்ட் 26 ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவு மற்றும் பேரழிவு தரும் திடீர் வெள்ளப்பெருக்கில் உயிரிழந்த 1,340-க்கும் மேற்பட்டோருக்கு வணக்கம் செலுத்தும் வகையில், அந்நாட்டு அரசாங்கம் இன்று (07) திங்கட்கிழமை தேசிய துயர் நாளாக அறிவித்து நினைவுகூரப்பட்டுள்ளது.

இமயமலையில் ஏற்பட்ட பனிப் பாறை சரிவைத் தொடர்ந்து பொங்கி வழிந்த போட்டேகோஷி மற்றும் திரிசூலி நதிகளின் வெள்ளப்பெருக்கில் சிக்கி 589 வெளிநாட்டவர்கள் உட்பட சுமார் 5,000 பேர் இன்னமும் காணாமல் போயுள்ளனர்.

இந்து பாரம்பரிய வழக்கப்படி, ஒருவர் மறைந்து 13 ஆம் நாளில் நடைபெறும் இறுதிச் சடங்குகளை ஒட்டி, இந்தத் தேசிய துயர் நாளாக அறிவித்து நினைவுகூரப்பட்டுள்ளது.

நேபாளம் முழுவதிலும் உள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள நேபாள தூதரகங்களில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

இந்த வெள்ளத்தில் 7,500-க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளதுடன், 32,000-க்கும் அதிகமான குடம்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

நீர்மின் திட்டங்களின் சுரங்கப் பாதைகளில் சிக்கியுள்ளவர்களை மீட்க இந்திய சிறப்பு மீட்புக் குழுவினர் உட்படச் சர்வதேச மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



**RECOGNISE LIBERATION TIGERS OF**

**THAMIL EELAM**

**AS A LIBERATION ORGANISATION**

# ரட்கோ மிலாடிக்கின் இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கானோர் இறுதி வணக்கம் செலுத்தினர்!

07.09.2026

பெல்கிரேட் முன்னாள் போஸ்னிய செர்பிய இராணுவத் தளபதி ரட்கோ மிலாடிக்கின் இறுதிச் சடங்கு, செர்பிய தலைநகர் பெல்கிரேடில் நடைபெற்றது. இதையொட்டி, ஆயிரக்கணக்கான மக்கள் தேவாலயத்தின் முன்பாகக் கூடி அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தினர்.

'போஸ்னியாவின் கசாப்புக் காரர்' என அழைக்கப்பட்ட 84 வயதான ரட்கோ மிலாடிக், இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த நிலையில், கடந்த வாரம் நெதர்லாந்தின் ஹேக் நகரில் உயிரிழந்தார்.

1995ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்ரெப்ரெனிகா படுகொலை மற்றும் சரயேவோ முற்றுகையில் அவரது பங்கு தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், செர்பியாவிலும் போஸ்னியாவின் செர்பியர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும் மிலாடிக் இன்னும் சிலரால் தேசிய வீரராகக் கருதப்படுகிறார்.

அவரது அடக்கத்திற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, செர்பியக் கொடிகளையும் மிலாடிக்கின் படங்களையும் ஏந்திய நூற்றுக்கணக்கானோர், புனித லூக்காவின் சிறிய செர்பிய மரபுவழி தேவாலயத்தின் முன்பாகக் கூடி மெழுகுவர்த்திகளை ஏற்றி வணக்கம் செலுத்தினர். மிலாடிக்கிற்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக போஸ்னியா மற்றும் செர்பியாவின் பல நகரங்களில் இருந்து இலவசப் பேருந்து சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தேவாலயத்திற்குள் வைக்கப்பட்டிருந்த அவரது சவப்பெட்டியின் மீது இராணுவ அதிகாரியின் தொப்பியும் வாளும் வைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் செர்பியா மற்றும் போஸ்னியாவைச் சேர்ந்த முன்னாள் போர் வீரர்கள் ஆறு பேர் சவப்பெட்டிக்கு காவலாக நின்றனர். மிலாடிக்கின் மனைவி, மகன் மற்றும் பேரக் குழந்தைகள் அங்கு வந்திருந்தவர்களிடமிருந்து இரங்கல்களைப் பெற்றுக்கொண்டனர்.

செர்பிய ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் தலைவரான திருத் தந்தை போர்ஃபிரிஜே தலைமையில் இறுதிச் சடங்கு ஆராதனை நடைபெற்றது. பின்னர், செர்பிய இராணுவ வீரர்கள் மிலாடிக்கின் கொடியால் போர்த்தப்பட்ட சவப்பெட்டியைச் சுமந்து சென்றனர். அரசு ஆதரவு ஊடகங்கள் இந்த நிகழ்வை நேரலையாக ஒளிபரப்பின. நிகழ்வின்போது துக்கத்தில் பங்கேற்றவர்கள் கைதட்டி வணக்கம் செலுத்தியதுடன், இராணுவ இசைக்குழுவும் இசை நிகழ்த்தியது.



இறுதிச் சடங்கில் போஸ்னிய செர்பிய தேசியவாதத் தலைவர் மிலோராட் டோடிக் மற்றும் செர்பியாவுக்கான ரஷ்யத் தூதர் அலெக்சாண்டர் போட்சன்-கார்சென்கோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதனிடையே, மிலாடிக்கின் இறுதிச் சடங்கிற்கு செர்பியாவில் வழங்கப்பட்ட மரியாதை தொடர்பாக அந்நாடு கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராவதற்கான வேட்பாளர் நாடாக உள்ள செர்பியாவின் இந்த நடவடிக்கைக்கு பிராந்தியத் தலைவர்கள், போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் ஐரோப்பிய அதிகாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான ஐக்கிய நாடுகள் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம், 1995ஆம் ஆண்டு ஸ்ரெப்ரெனிகாவில் நடைபெற்ற படுகொலையில் மிலாடிக்கின் பங்கிற்காக அவரை இனப்படுகொலைக் குற்றவாளியாகத் தீர்ப்பளித்தது. போஸ்னிய செர்பியப் படைகள் அந்தப் பாதுகாப்புப் பகுதிக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து, சுமார் 8,000 போஸ்னிய முஸ்லிம் ஆண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டனர்.

மேலும், சுமார் 10,000 பேர் உயிரிழந்ததாகக் கூறப்படும் 43 மாத கால சரயேவோ முற்றுகை தொடர்பான குற்றங்களிலும் மிலாடிக் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார்.

அவரது மறைவுக்குப் பின்னர், தேசியவாத ஆதரவாளர்கள் பெல்கிரேடில் மெழுகுவர்த்தி ஏற்றி வணக்கம் செலுத்துவதுடன், அவரது உருவம் கொண்ட சுவரோவியங்களை வரைந்து, தீப்பந்தங்களை ஏந்தி வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற கால்பந்து போட்டியொன்றிலும் ரசிகர்கள் மிலாடிக்கின் பிரம்மாண்டமான உருவப்படத்தை காட்சிப்படுத்தி, அவரது பெயரை முழக்கமிட்டனர்.

# மேற்குக் கரை இஸ்ரேலியக் குடியேற்றங்களுக்காக வர்த்தகத் தடை விதித்ததாக பிரித்தானியா அறிவிப்பு!

08.09.2026

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலியக் குடியேற்றங்களில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதிக்கப் போவதாக ஐக்கிய இராச்சியம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

மேற்குக் கரையில் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதுடன், சர்வதேச சட்டத்திற்கு முரணானதாகக் கருதப்படும் குடியேற்ற விரிவாக்க நடவடிக்கைகளும் தொடர்வதாகக் கூறப்படும் நிலையில், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இஸ்ரேலிய குடியேற்றவாசிகளால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் மற்றும் சட்டவிரோத குடியேற்றத் திட்டங்களுக்கு எதிராக, பிரிட்டன் ஏற்கனவே சில இஸ்ரேலிய குடியேற்றவாசிகள் மற்றும் தொடர்புடைய அமைப்புகள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

இந்நிலையில், பிரிட்டனுடன் இணைந்து மேலும் 11 நாடுகளும் இஸ்ரேலிய குடியேற்றங்களுடனான வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன.

கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஐஸ்லாந்து, அயர்லாந்து, நார்வே, போலந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் இதுதொடர்பாக கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றங்கள் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது, பாலஸ்தீனியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கும் நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், ஐரோப்பிய ஒன்றியமும் தீவிர குடியேற்றவாசிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கு எதிராக தடைகளை விதித்துள்ளதாக அதன் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை இத்தகைய குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக மூன்று வகையான தடைகளை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



மேற்குக் கரையில் இஸ்ரேலிய குடியேற்றங்களின் விரிவாக்கம் மற்றும் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக சர்வதேச அளவில் கவலை அதிகரித்து வரும் நிலையில், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் புதிய வர்த்தகக் கட்டுப்பாடுகள் இஸ்ரேல் மீதான தூதரக மற்றும் பொருளாதார அழுத்தத்தை மேலும் அதிகரிக்கக்கூடும்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# உயிரிலும் உன்னதமானது எமது உரிமை எமது சுதந்திரம் எமது கௌரவம்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



“எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீர காவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவையெல்லாம் எமது ஆயதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்ததை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழப் போராட்ட வராற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியைத் தீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச்செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் மண்ணுக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமுது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்து கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால், நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்து கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன்; அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை; காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்”.

(தமிழீழத் தேசியத் தலைவரின் “எனது மக்களின் விடுதலைக்காக” என்ற நூலிலிருந்து)


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


13TH
GLOBAL
BUSINESS MEET
13வது
குளோபல்
வர்த்தக மாநாடு
3 - 4, DEC 2026
ஒசாகா - ஜப்பான்
உலகத் தமிழர்களுடன் ஒன்றிணையும்
ஜப்பானிய தொழில் முனைவோர்
தொடர்புக்கு + 91 72999 92999 | + 60 166167708
presidentwtcc@gmail.com
www.wtcc.co.in | www.worldtamilchamberofcommerce.com
Supported by
O.B.D.A. OSAKA BUSINESS DEVELOPMENT AGENCY
FaMe TN
Organiser
WTCC
GOTO


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# எங்கள் தாயகம் எத்தனை அழகு!



தாயின் மடிச்சுகத்தையும்
தாயகமண்ணின் தனிச்சுகத்தையும்
எழுதத் தொடங்கினால்...
ஏன் பேனா வற்றுவதில்லை?
"அமுதசுரபி" போலவும்
"அட்சயபாத்திரம்" போலவும்
ஏன் அள்ள அள்ளக் குறைவதில்லை?
எந்தையர் பூமி எத்தனை அழகு!
கள்ளிச்செடி படர்ந்த கலட்டுத் தரையானாலும்
பச்சை போர்த்த படுக்கைபோல
பார்க்கும் போது கண்ணில் காதல் வழிகிறதே!
ஒழுங்கில்லாத ஒற்றையடிப் பாதைகள் கூட
உச்சி வகிடெடுத்த பேரழகியின் தலையைப்போல
உன்னத அழகோடு ஓடிவருகின்றனவே
ஏன்?
தொட்டளைந்த பூமியின் சுகமும், மணமும்
எட்ட இருக்கும் நிலத்தில் ஏற்படாது,
எங்கள் அன்னைமண் எத்தனை எழில்
பிஞ்சுப் பிள்ளைகளின் பூவிரல்கள்போல...
வைகாசி மாதத்து மாமரங்கள்போல...
துள்ளிக் குதிக்கும் பிள்ளைக் கன்றுகள்போல...
வெள்ளலைகள் கரையொதுக்கும்
நுரைப்பூக்களைப் போல...
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தமிழீழம் சந்தனக்காடு
இதிகாசத்தில் படித்த இந்திரன் பூமி.
"தால் ஏரி" காலெடுத்து நடக்கும் "காஷ்மீரை"
காணக் கண்கோடி வேண்டுமாமே.
"ஹவாய்" தீவின் கடற்கரையில்
ஒருநாள் நடந்துவிட்டு இறந்தாலே
பிறந்தபலன் பூரணப்படுமாமே!
யார் சொன்னது?
தென்தமிழீழத்தைத் தெரியாத ஒருவன்
சொல்லியிருக்கலாம்.
மஞ்சள் வெயில் மேனிதழுவும் மாலைநேரம்
கோணமலையில் நின்று கீழே பாருங்கள்;
கோட்டை வாசலில் நிமிர்ந்து நின்று
பாதாளமலையின் பக்கமாக விழிகளை வீசுங்கள்.
உவமையற்ற அழகை உணர்வீர்கள்.
வார்த்தைகள் தோற்றுபோகும்.
பேற்றுக்கால தாய்மை அழகோடு
நெற்பயிர்கள்
பால்மணிக் கதிர்கள் தள்ளும் பருவத்தில்
தம்பலகாமத்து வயல் வரம்புகளில்
காலாற நடந்து பாருங்கள்
காலைமழை பொய்க்காத காலத்தில்
கந்தளாய்க் குளம் நிறைந்திருக்கும் நேரத்தில்
உயர்ந்த அணைக்கட்டில் உட்கார்ந்து கொண்டு
தாள அசைவுக்குச் சதிராடும் பெண்களைப் போல
நீளப்பறக்கும் வெண் கொக்குகளை நிமிர்ந்து பாருங்கள்
கந்தளாயின் காலடியில்
காஷ்மீர் கைகட்டி நிற்கும்.
நிலம் வெளிக்காத புலரிப் பொழுதில்
"வெருகல்" வேலன் திருவிழாக் கால்த்தில்
மாவலி கங்கையின் மடியிலே விழுங்கள்.
கொட்டியாரக் குடாக்கடல் தேடி
கைநீட்டி வந்து கட்டித் தழுவும்
ஆற்றின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள்
எங்கள் தாயகம் எத்தனை அழகு!
தென் தமிழீழம் சுந்தரப் பூமி,
கன்னங்குடா,
பட்டித்திடல்

இன்னும் இன்னும் எத்தனை ஊர்கள்
அத்தனையும் அழகு.
வெள்ளிநிலா விளக்கேற்றிக் கொள்ளும்
நள்ளிரவில்
புளியந்தீவில் பொன்னாவரசு பூத்திருக்குழ் காலத்தில்
மட்டுநகர் வாவிக்கு வாருங்கள்
மேலே பெண்ணுருவும், கீழே மீனுருவும் கொண்ட
"நீரரமகளிர்"
குரலெடுத்துப் பாடிக் குளிப்பார்கள்.
படகெடுத்து பக்கத்தில் போனால்
முகம் மறைத்து முக்குளித்து விடுவார்கள்.
கற்பனை யென்றாலும் எத்தனை சுகம்!
மட்டக்களப்பு புல்வெளிகளில்
மேய்ச்சல் முடிந்து வீடு திரும்பும் பசுக்களின்
மடிசுரந்து வீதியெங்கும் பெள்ளமாகும்;
கன்றை நினைத்து கால்களை நனைக்கும்,
வண்டு துளைபோட்ட மூங்கில் காடுகள்
வாத்தியம் இசைக்கும்.
வாழைச்சேனை கரும்புக் காட்டில்
நிலத்துநீரைத் தண்டுகள் உறிஞ்சுவதில்லை
கரும்புச் சாறை நிலம்தான் குடித்து கொள்கிறது.
இலங்கை இந்து சமுத்திரத்தில் மிதக்கும்
ஒரு தீவு;
ஆனால் இரண்டு நாடுகள்.
தமிழீழம் பருவநிலை மாறுபடும் பகுதிகள் அடங்கிய
பரந்த தேசமல்ல...
ஒரேநாளில்
உதயத்தை காங்கேசன்துறையிலும்
அஸ்தமனத்தை அக்கரைப்பற்றிலும்
பார்த்துவிட்டு படுக்கைக்குப் போகலாம்.
மட்டக்களப்பின் முட்டித்தயிர்
புளிக்க முன்னர்
புங்குடுதீவுத் திருமணமொன்றின்
பந்தியிலே பரிமாறப்படும்.
யாழ்ப்பாணத்து "கறுத்தக் கொழும்பான்"
அழுக முன்னர்
திருக்கோவில் தெருக்களில் விற்பனைக்கிருக்கும்.
வடதமிழீழம் செழிப்பானது.
செழிப்பானதே தவிர செருக்கானதல்ல...
திருமலை தமிழீழத்தின் தலைநகர்.
எங்கள் வானத்துகு நிலவு ஒன்றுதான்;
தலைவனும் ஒருவன்தான்.
இன்று,
மனங்களை அடைத்து நின்ற மலைகளெல்லாம்
விடுதலை அதிர்வால்
வெடித்து சிதறுகின்றன.
பிரதேசப் பிரிவுகள்
போராட்டத் தீயால் பொசுங்கி எரிகின்றன.
தென் தமிழீழம்
எங்கள் தாயகத்தின் தலைவாசல்;
தானியக் களஞ்சியம்;
பாலும் தயிரும் பயிருக்குப் பாய்ச்சும் நிலம்.
இன்று–
தமிழரின் குரதி பாயும் நிலம்,
அவர்களின் கண்ணீரைத் துடைக்க
கைகளை நீட்டுவோம்;
எதிரியைக் கலைத்து எல்லையைப் பூட்டுவோம்!

உலைக்களம் –புதவை இரத்தினதுரை
[புரட்டாதி – ஐப்பசி 1993. விடுதலைப்புலிகள்]



# ஈகைச்சுடர்
# லெப். கேணல் திலீபனின் உண்ணா நோன்புப் போராட்டம்
## 15.09.1987 – 26.09.1987



## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் முதலாம் நாள்

### ஈகைப் பயணம் தொடர்வதற்கான ஆரம்பம்...

காலை ஒன்பது மணியிருக்கும் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வந்து திலீபனை சந்தித்து விடைபெறுகிறார்கள். எல்லோருட னும் அவர் அன்பாக பேசுகிறார். வோக்கி டோக்கியில் தலைவருடன் சில நிமிடங்கள் பேசுகிறார். பேசிவிட்டு அந்த மண்ணிற வாகனத்தை நோக்கி நடக்கிறார். எல்லோரும் பின் தொடர்ந்தோம். ஆம் அவரது ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. மிக மிடுக்காக நடந்து முன் ஆசனத்தில் போய் ஏறினார்.

வரது பக்கத்தில் சொர்ணம், அன்ரன் மாஸ்ரர், முரளி. பின் ஆசனத்தில் காசி ஆனந்தன், ராஜன், நான் வேறும் சிலர். வாகனம் நல்லூர் கந்தசாமி கோவிலை நோக்கி ஒடுகிறது. பாதையின் இரு பக்கத் திலும் மாணவர்களும், பொதுமக்களும் கையசைத்து வழியனுப் புகிறார்கள். நல்லூர் கந்தசாமி கோவிலை சென்றடைந்தோம். வாகனம் நின்றது. திலீபன் உண்ணாவிரத மேடை நோக்கிச் செல்கிறார். நாங்களும் பின்னால் போய்க் கொண்டிருக்கிறோம்.

மேடையிலே நாற்காலியிலே திலீபனை அமர வைத்தோம். திலீபனின் அருகே நான், ராஜன், பிரசாத், சிறி ஆகியோர் அமர்ந் திருந்தோம். திலீபனின் ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. அன்று பக்கத்திலிருந்த மேடையில் பிரசாத்தின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. நடேசன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் திலீபனின் உண்ணா விரதம் எதற்காக ஆரம்பிக்கப்படுகிறது என் பதனைபற்றி விளக்கம் அளித்தார்கள். தமிழ் மக்களினதும், தமிழர் தாயகத்தினதும் உரி மைகளை பேணும் நோக்கமாக இந்தியமக் களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளும் விளக்கப்பட்டன.

### ஐந்து அம்ச கோரிக்கை

1) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன் னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத் தில் நாடாத்தப்படும் சிங்கள குடி யேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர் வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலை களும் நிறுத்தப்படல் வேண்டும்.

4) வடகிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப்படையின் மேற் பார்வை யில் ஊர்காவல் படை என அழைக்கப்படு வோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும் பப்பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக் கூடங்களில் குடி கொண்டுள்ள இராணுவ , பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

### தமிழீழ தாயின் எதிர்பாராத ஆசியினை பெறுகின்றார்



எதிர்பாராத விதமாக அந்த நிகழ்ச்சி நடந்தது. வயதான ஓர் அம்மா. தள்ளாத சிவந்த நிற மேனி. பழுத்த தலை. ஆனால் ஒளிதவளும் கண்களில் கண்ணீர் மல்க திலீபனை மறித்து தன் கையில் சுமந்து வந்த அர்ச்சனை சரை யில் இருந்து நடுங்கும் விரல்களால் திரு நீற்றை எடுத்து திலீபனின் நெற்றியில் பூசு கிறார். சுற்றியிருந்த கமராக்கள் எல்லாம் அந்த காட்சியை கிளிக் செய்தது. வீரத்திலக மிடு கிறார் அந்தத் தாய். தாயற்ற திலீபன் அந்த தாயின் பாச உணர்வில் மூழ்கிப்போனார்.

### போராளி பிரசாத் இன் ஆரம்ப உரை (மேஜர் பிரசாத்)



காலை மணி 9.45 உண்ணாநோன்பு

பிரசாத் அவர்களால் மேற்படி ஐந்து கோரிக்கை களும் வாசிக்கப்பட்டன. இதே கோரிக்கையை இரண்டு நாட்ளுக்கு முன்பு இந்திய உயர்ஸ் தானிகரின் கையில் நேரடியாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி 24 மணித்தியால அவகாச மும் விடுதலைப்புலிகளால் வழங் கப்பட்டி ருந்தது. ஆனால் 15 திகதி வரையும் தூதுவரிட மிருந்து எந்த பதில்களும் கிடைக் காத காரணத்தினால் சாகும் வரை உண்ணா நோன்பும் மறியல் போராட்டமும் நடத்துவது என தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

### வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்ட திலீபன்

அதன்படிதான் இந்த ஈகைச்செம்மலின் ஈகைப்பயணம் ஆரம்பித்தது. பிற்பகல் 2.00 மணி இருக்கும் திலீபன் கம்பீரமாக வீற்றிருந் தார். உண்ணாநோன்ப்பு ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இரண்டாவதுமேடையிலே நடைபெற்றுக் கொண்டிருந்த உண்ணாநோன்பு விளக்கக் கூட்டம் முடிவடைந்து விட்டது. படிப்பதற்கு புத்தகம் வேண்டும் என என்காதில் குசுகுசுத் தார் திலீபன். நான் ராஜனிடம் சொன்னேன்.

15 நிமிடங்களில் பல அரிய நூல்கள் மேடைக்கு வந்தன. விடுதலைப் போராட் டங்கள் பற்றி அறிவதற்கு திலீபனுக்கு ஆர் வங்கள் எப்போதும் உண்டு. பிடல் காஸ்ரோ, சேகுவரோ, கொஜீமின். யசிர் அரபாத் போன்ற வர்களின் வாழ்க்கையை பற்றிய நூல்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பார். பலஸ்தீன மக்களின் வாழ்க்கையை பற்றி படிப்பதென்றால் அவருக்கு பலாச்சுளை மாதிரி பிடிக்கும். பலஸ்தீன கவிதை என்ற நூலை அவரிடம் கொடுத்தேன்.

### மாணவர்கள் இளையோர்களின் உணர்ச்சி கவிதைகள்

அதை மிகவும் ஆர்வத்துடன் படிக்கத் தொடங் கினார். மாலை ஐந்து மணிக்கு பக்கத்து மேடையில் மீண்டும் நிகழ்ச்சிகள் ஆரம்ப மாயிற்று. பாடசாலை மாணவிகள் போட்டி போட்டுக்கொண்டு கவிதைகளை வாசிக்கத் தொடங்கினர். சுசிலா என்ற மாணவி மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தனது கவி தையை வாசித்துக் கொண்டிருந்தார். அப் போது ஒரு கட்டத்தில் அவர் அழுதேவிட்டார். “அண்ணா திலீபா இளம் வயதில் உண் ணாமல் தமிழினத்திற் காக நீ தவமிருக்கும் கோலத்தைக் காணும் தாய்க்குலத்தின் கண் களில் வடிவது செந்நீர்.” சுசிலாவின் விம்மல் திலீபனின் கவனத்தை திருப்பியது.

கவிதைத்தொகுப்பை மூடிவைத்து விட்டு கவிதை மழையில் நனைய தொடங்கினார். அவர் விழிகளில் முட்டிய நீர் தேக்கத்தை ஒரு கணம் என் கண்கள் காணத்தவற வில்லை. எத்தகைய இளகிய மனம் அவருக்கு இந்த இளம் குருத்து இன்னும் எத்தனை நாட் களுக்கு ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் வாடி வதங்க போகிறது. அகிம்சை போராட்டத் திற்கே ஆணி வேராக திகழ்ந்த அண்ணல் காந்தியடிகள் கூட தன்னுடைய உண்ணா விரத போராட்டங்களை நீராகாரம் அருந்தித் தானே நடத்தினார்.

### திலீபனின் ஈகைப்பயணம் ஓர்...

ஐரிஸ் போராட்ட வீரர் பொபிஸ் ஆன்ஸ் என்ன செய்தார்? சிறைக்குள் நீராகாரம் அருந்தித் தான் உண்ணாநோன்பு போராட்டத்தை ஆரம்பித்து உயிர் நீத்தார். இந்த உண்ணா நோன்பு அரசின் தலையீட்டினால் வெற்றி பெறுமானால் அந்த வெற்றி திலீபனையே சாரும். அதுபோல் இந்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் இறுதி உண்ணாநோன்ப் இருந்தே திலீபன் இறக்க நேரிட்டால் அதில் கிடைக்கும் தோல்வியும் திலீபனுக்கு கிடைக் கும் மாபெரும் வெற்றிதான்.

### நல்லூர் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்

உலகின் புதிய அத்தியாயம் ஒன்றின் சிருஸ்டி கர்த்தா என்ற பெருமை அவனையே சாரும். ஆனால் அதற்காக எங்கள் குல விளக்கை நாமே அணைக்க வேண்டுமா? இறைவா திலீபனை காப்பாற்றிவிடு. கூடியிருந்த மக்கள் நல்லூர் கந்தனிடம் அடிக்கடி இப்படி வேண்டிக் கொள்கிறார்கள். இதை நான் அவ தானித்தேன். பழம் தமிழ் மன்னனாகிய சங் கிலியன் அரசாண்ட நல்லூர் அரச தானியிலே, தமிழ்க் கடவுள் ஆகிய குமரனின் சந்நிதியில் ஓர் இளம் புலி உண்ணாமல் துவண்டு கிடந் தது. ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இல்லையேல் உலகில் நீதி செத்து விடும். எனக்குள் இப்படி எண்ணிக்கொண்டேன்.

அப்போது ஓர் மேடையில் முழங்கிக் கொண் டிருக்கிறான். திலீபன் அண்ணாவின் கோரிக் கைகள் மட்டுமல்ல, தமிழ் மக்களின் கோரிக் கைகளும் இதுதான் இதை நிறை வேற்ற வேண்டியது இந்திய அரசின் கடமையாகும். அவர் தமிழீழம் தாருங்கள் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்க வில்லையே. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஐந்தே ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றும்படி வற்புறுத்தித்தான் சாகும் உண்ணா நோன்பை ஆரம்பித்திருக்கிறார்.

### தமிழீழ தேசிய தலைவர் திலீபனை பார்க்க வருகின்றார்



இந்தக்காரணத்தாலாவது இந்திய அரசு இதை நிறைவேற்ற தவறுமானால் திலீபன் அண்ணா இறப்பது நிச்சயம். திலீபன் அண்ணா இறந்தால் ஒரு பூகம்பம் இங்கே வெடிக்கும். ஒரு புரட்சி இங்கே வெடிக்கும். இதுதான் என்னால் கூற முடியும். அவரின் பேச்சு முடிந்ததும் அங்கு கூடியிருந்த மக்கள் அப்பேச்சை வரவேற்பதுபோல் கைகளை தட்டி ஆரவாரித்தனர். அந்த ஒலி அடங்க வெகு நேரம் பிடித்தது. அன்று இரவு 11.00 மணியளவில் தலைவர் பிரபாகரன் திலீபனை பார்ப்பதற்காக மேடைக்கு வருகிறார்.

அவருடன் சொர்ணம், இம்ரான், அஜித், சங்கர், ஜொனி இப்படி பலரும் வருகின்றனர். வெகுநேரம் வரை தலைவருடன் உரையாடிக் கொண்டிருந்தார் திலீபன். யாரையும் அதிக நேரம் பேச அனுமதிக்க வேண்டாம் என்று போகும் போது என்னிடம் கூறிவிட்டுச் சென்றார் தலைவர். நீர், உணவு உட் கொள்ளாத ஒருவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால் விரைவில் களைப்படைந்து விடுவார். இதனால்தான் தலைவர் அப்படி கூறிவிட்டுச் சென்றார்.

### பத்திரிகையாளர் வருகை

அன்றிரவு பத்திரிகை நிருபர்களும் பத்திரிகை துறையை சார்ந்தவர்களும் திலீபனை பார்க்க மேடைக்கு வந்திருந்தனர். முரசொலி ஆசிரியர் திருச்செல்வம், ஈழமுரசை சேர்ந்த பசீர் போன்றோருடன் திலீபன் மனம் திறந்து பேசினார். அவரை கட்டுப்படுத்த எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதிகம் பேசி உடம்பை கெடுத்துக்கொள்ள போகிறாரே என்பதால் அவரை அன்பாக கடிந்து கொண்டேன். இரவு 11.30 மணியளவில் கஸ்டப்பட்டு சிறுநீர் கழித்து விட்டு 12.00 மணியளவில் படுக்கைக்குச் சென்றார்.

முதல் நாள் முடிவு, அதிகாலை 1.30 இற்கு உறங்கினார்.

அவர் ஆழ்ந்து உறங்கத்தொடங்கியபோது நேரம் 1.30 மணி. அவரின் நாடித்துடிப்பை பிடித்து அவதானித்தேன். நாடித்துடிப்பு 88. சுவாசத்துடிப்பு 20. அவர் சுய நினைவோடு இருக்கும் போது வைத்திய பரிசோதனைக்கு அனுமதிக்க மாட்டார். தனக்கு உயிர் மீது ஆசை இல்லை என்பதால் பரிசோதனை தேவை இல்லை என்று கூறுவார். அவர் விருப்பத்திற்கு மாறாக உணவோ, நீரோ, மருத்துவமோ இறுதிவரை அளிக்கக்கூடாது என்று முதல் நாளே என்னிடம் சத்தியம் வாங்கிவிட்டார். மேடைக்கு முன்பாக மகளிர் அமைப்பு உறுப்பினர்களும், பொதுமக்களும் கொட்டக் கொட்ட கண்விழித்துக் கொண்டிருந்தனர்.

இந்த ஈகைச்சுடரின் உண்ணாநோன்பு போராட்டத்தின் முதல்நாள் முடிவு பெற்றது.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் இரண்டாம் நாள்

இந்த நாளில் ஈகைச்சுடர் அவர்கள் எந்த நோக்கங்களிற்காக தனது உயிரை உருக்கி யாழ் நல்லூர் கோவில் முன்பாக தனது உயிரை ஆகுதியாக்கினாரோ அந்த நோக்கங்கள் தற்போதய நிலையிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

அன்று சிங்கள அரசாங்கம் பாரத தேசத்தினை வைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை ஓர் சூழ்ச்சிபொறிக்குள் தள்ளியதோ அவ்வாறுதான் இந்த ஆண்டிலும் சிங்கள அரசு, இந்திய அரசினை மட்டுமன்றி சர்வதேச நாடுகளையும் தனது பயங்கரவாதம் என்ற சூழ்ச்சி திட்டத்தில் சிக்குற செய்து எமது விடுதலை போராட்டத்தினை இக்கட்டான சிக்கலிற்குள் தள்ளி விட்டிருக்கின்றது சிங்கள பௌத்த பேரினவாதம்.

இந்த நிலையில் ஈகைச்சுடரின் முதல் நாள் பயணத்தில் (1987 செப்டெம்பர் 15) முக்கியமான விடயங்கள் இங்கு தரப்படுகின்றன. 1987 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 16ம் திகதி. இது திலீபனுடன் இரண்டாம் நாள். அன்று அதிகாலை 5.00 மணிக்கே திலீபன் உறக்கத்தைவிட்டு எழுந்து விட்டார். முகம் கழுவி தலைவாரிக்கொண்டார். சிறுநீர் கழித்தார் ஆனால் மலம் இன்னும் போக வில்லை. அவர் முகம் சோகமாக காணப்பட்டாலும் அதைக்காட்டிக்கொள்ளாமல் எல்லோருடனும் சிரித்து பேசிக்கொண்டிருந்தார்.

சகல தினசரி பத்திரிகைகளையும் ஒன்று விடாமல் படித்து முடித்தார். பத்து மணியளவிலே பக்கத்து மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. நிகழ்ச்சிகளுக்கு தேவர் தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். கவிதைகளை படிப்பதற்காக இளம் சந்ததியினர் முண்டியடித்து தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டிருந்தனர். நிதர்சனம் ஒளி பரப்பாளர்களின் ஒளிப்பதிவுக் கருவிகள் நாலா பக்கமும் சுழன்று படம்பிடித்துக் கொண்டிருந்தன.

மேடைகளில் கவிதைகள் முழங்கிக் கொண்டிருந்போது திலீபன் என் காதுக்குள் குசுகுசுத்தார். “நான் பேசப்போகிறேன் மைக்கை வேண்டி தாங்கோ வாஞ்சி அண்ண.” சாப்பிடாமல் குடிக்காமல் இருக்கிறிங்கள் களைத்து விடுவீர்கள்... என்று அவரை தடுக்க முயன்றேன். “இரண்டு நிமிடம் மட்டும்... நிப்பாட்டி விடுவன். ப்ளீஸ் மைக்கை வாங்கித்தாங்கோ” என்று குரல் தளதளக்க கூறினார். அவரை பார்க்க பரிதாபமாக இருந்தது. கண்கள் குழி விழுந்து, முகம் சோர்ந்து காணப்பட்டாலும் அந்த பசுமையான சிரிப்பு மட்டும் இன்னும் மாறா மல் அப்படியே இருந்தது.

இரண்டு நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் மேடையில் நின்ற தேவரிடம் மைக்கை பெற்றுக் கொடுத்தேன். திலீபன் பேசப்போவதை தேவர் ஒலி பெருக்கியில் அறிவித்ததும் மக்கள் கூட்டம் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. திலீபன் பேசுகிறார். “எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மக்கள் அனைவருக்கும் வணக்கம். நின்று கொண்டு பேச முடியாத நிலையில் இருப்பதால் இருந்து பேசுகிறேன். நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ என்று தெரியாது அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நான் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம். 650 பேர் வரையில் இன்று வரை சாவடைந்துள்ளோம்.

மில்லர் இறுதியாகப்போகும் போது என்னிடம் ஒரு வரி கூறினான். நான் அவனுடன் இறுதி வரை இருந்தேன். “நான் எனது தாய் நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும் போது மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்களால் காண முடியாது என்பதே ஒரே ஏக்கம்” என்று கூறிவிட்டு வெடி மருந்து நிரப்பிய பார ஊர்தியை எடுத்துச்சென்றான். இறந்த 650 பேரும் அனேகமாக எனக்கு தெரிந்துதான் சாவடைந்தார்கள். அதனை நான் மறக்க மாட்டேன். உண்ணாநோம்பு போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தலைவரின் அனுமதியை கேட்டபோது அவர் கூறிய வரிகள் என் நினைவில் உள்ளன.

திலீபா நீ முன்னால் போ...நான் பின்னால் வருகிறேன் என்ற அவர் கூறினார். இத்தகைய ஒரு தெளிவான தலைவனை தனது உயிரை சிறிதும் மதிக்காத தலைவனை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழீழத்தினை தமிழர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தரும். இதனை வானத்தில் இருந்து இறந்த மற்ற போராளிகளுடன் சேர்ந்திருந்து நானும் பார்த்து மகிழ்வேன்.

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். விடுதலைப்புலிகள் உயிரினும் மேலான சிறுவர்களை, சகோதரிகளை, தாய்மார்களை, தந்தையர்களை நினைக்கிறார்கள். உண்மையான உறுதியான இலட்சியம். அந்த இலட்சியத்தினை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள் எனது இறுதி விருப்பமும் இதுதான்.”

மிகவும் ஆறுதலாக சோர்வுடன் ஆனால் திடமுடன் பேசிய அவரின் பேச்சைக்கேட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர். அன்றிரவு தலைவர் வந்து திலீபனை பார்த்தார். சோர்வுடன் படுத்திருந்த திலீபனின் தலையை தனது கரங்களால் வருடினார். ஒரு தகப்பனின் அன்பையும் தாயின் பாசத்தையும் ஒன்றாக குழைத்தது போலிருந்தது அந்த வருடல். இரண்டு இமய மலைகளையும் என் கண்கள் விழுங்கிக்கொண்டிருந்தன. இரவு பனிரெண்டு மணிக்கு திலீபன் உறங்கத் தொடங்கினார். நானும் அவர் அருகிலேயே படுத்து விட்டேன்.

திலீபனின் வீட்டில் குணபாலன் என்ற சிறுவன் வேலை செய்வதற்காக இருந்தான். அவனது வறுமை நிலையைக் கண்ட திலீபன் தன் கையில் கிடைக்கும் பணத்தை அவனிடம் அடிக்கடி கொடுப்பார். யாழ். இந்துவில் அவர் படிக்கும்போது, வீட்டுக்கு வரும்போதெல்லாம் குணபாலனுக்காக கைநிறைய “டொபி” களுடன் வருவார். குணபாலனுக்கு ரீ.வி. பார்க்கும் பழக்கம் இருந்தது. தன் வேலைகளை முடித்துவிட்டு இரவு எட்டு மணிக்குப்பின், பக்கத்துவீட்டிற்குச் சென்று அவன் ரீ.வி. பார்ப்பது வழக்கம். குணபாலனுக்காகத் திலீபன் தன் தந்தையிடம் ஒரு ரீ.வி. வாங்கி வைக்குமாறு பலமுறை கெஞ்சிக் கேட்டார்.

இவரது தொல்லை தாங்கமுடியாமல் இராசையா ஆசிரியர் ஒருநாள் ரீ.வி. யை வாங்கி வந்துவிட்டார். குணபாலனும் அன்றிலிருந்து எதுவித சிரமமுமின்றி ரீ.வி. பார்த்து வரத் தொடங்கினான். யார் மீதும் எளிதில் அன்பு வைப்பதிலும், இரக்கம் காட்டுவதிலும் திலீபனுக்கு நிகர் அவரேதான். அதற்கு இது ஒரு நல்ல உதாரணம். திலீபன் யாழ். இந்துவில் படிக்கும் போது அவரது நெருங்கிய நண்பனாக இருந்தவர்களில் கணேசன் என்பவரும் ஒருவர்: இவர் இப்போது ஒரு வைத்தியராக இருக்கின்றார். ஒருநாள் திலீபன், கணேசன் மற்றும் சிலர் ஊரெழு விலுள்ள திலீபனின் வீட்டுக்கு வந்தனர்.

அப்போது யாழ். இந்துவில் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. திலீபனின் வீட்டிலே சில மாதங்களுக்கு முன் ஒரு நாய் செத்து விட்டதால், அதை ஒரு மரத்தின் கீழ் கிடங்கு வெட்டித் தாட்டிருந்தார்கள். திலீபனும் நண்பர்களும் அந்தக்கிடங்கைக் கிண்டி நாயின் எலும்புக் கூட்டை வெளியில் எடுத்துத் துப்புரவு செய்தார்கள். அப்போது ஏற்பட்ட துர் நாற்றம் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் வெளியே போனாலும், திலீபனும் நண்பர்களும் அதைப் பொருட்படுத்தாமல் தமது வேலையை முடித்துவிட்டு, அந்த எழும்புக் கூட்டை அன்றே எடுத்துச்சென்று பொருட் காட்சியில் வைத்தனர். எதையும் ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் திலீபனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதனால்தான் தான் இந்த உண்ணா நோன்புப் பாராட்டத்தில் இறக்க நேரிட்டால் தனது உடலை யாழ். வைத்திய பீடத்துக்கு ஆராய்ச்சிப் படிப்புக்காக அனுப்பிவைக்கும்படி அவர் கூறினார் போலும்?

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் மூன்றாம் நாள்

காலை ஆறு மணிக்குத் துயில் எழும்பிய திலீபனின் முகத்தைப் பார்த்த எனக்கு, ஒரு கணம் அதிர்ச்சியாயிருந்தது. காரணம் அவரின் உதடுகள் இரண்டும் பாளம்பாளமாக வெடித்து வெளிறிப்போயிருந்தன. கண்கள் நேற்றைக்கு இருந்ததைவிட இன்னும் சற்று உள்ளேபோயிருப்பது போல் தோன்றியது... முகம் வரண்டு, காய்ந்து கிடந்தது, தலை குழம்பியிருந்தது

“பல் விளக்கி முகம் கழுவவில்லையோ?”

“இல்லை வாஞ்சியண்ணை... வேண்டாம்.”

கலைந்திருந்த தலைமயிரை நானே அவரருகில் சென்று வாரி விடுகிறேன். அவர் இன்னும் சிறுநீர் கழிக்கவில்லை. “வெளிக்குப் போகேல்லையோ?” என்று மெதுவாகக் கேட்கிறேன்.

“போகவேணும் போலதான் இருக்கு.”

“சரி கீழே இறங்கி வாருங்கோ” என்று கூறிவிட்டு, மேடையை விட்டு நானே முதலில் இறங்கி, கீழே இறங்குவதற்கு உதவி செய்ய முயன்றேன்.

“வேண்டாம் விடுங்கோ... நானே வருகின்றேன்” என்று என் கையை விலக்கிவிட்டு தானே கீழே குதிக்கின்றார்...

மனதை எவ்வளவு திடமாக வைத்திருக்கின்றார் என்று எனக்குள்ளேயே ஆச்சரியப் பட்டேன்.

மறைவிடத்துக்குச் சென்ற அவர், சிறுநீர் கழிக்க முடியாமல் சிரமப்பட்டார்.



5 நிமிடம்...

10 நிமிடம்…
15 நிமிடம்…
20 நிமிடம்…

நிமிடங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எதுவித பயனும் ஏற்படவில்லை. அவரைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருந்தது. என் கண்கள் என்னையறியாமலே கலங்குகின்றன. மேடையின் வலப் புறத்தில் ஏறி அமர்ந்த திலீபன், தூரத்தில் தெரியும் வழக்கமான ஆட்களை அழைத்து உரையாடத் தொடங்கினார். “கண்டபடி பேசினால் களைப்பு வரும்… கொஞ்சம் பேச்சைக் குறையுங்கோ…” என்று அவரைத் தடுக்க முயல்கிறேன். ஆனால், என்னால் முடிய வில்லை. தனக்கே உரிய சிரிப்பை என் வார்த்தைகளுக்குப் பதிலாக்கிவிட்டுத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

கடைசியாக அவர் நீர் அருந்தி 45 மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் அவர் இப்படி தன்னைத்தானே வருத்தப்போகிறார்?

இப்போதே சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்படத் தொடங்கிவிட்டார். இன்னும் இரண்டு நாட்கள் போனால் என்னென்ன நடக்குமோ? என்று எண்ணிய நான், அவரின் காதுக்குள் குசு குசுக்கிறேன்.

“என்ன பகிடியா பண்ணுறீங்க?… ஒரு சொட்டுத் தண்ணீரும் குடிக்கமாட்டேன் என்ற நிபந்தனையுடன்தானே இந்த உண்ணா நோம்பைத் தொடங்கினனான்… பிறகு எப்படி நான் தண்ணீர் குடிக்க வேண்டுமென்ற கேட்டீங்க?”…

என்று ஆவசத்துடன் என்மீது பாய்கிறார்.

“இல்லை…… இப்பவே உங்களுக்குச் சலம் போறது நின்று போச்சு…… இனியும் நீங்கள் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் மேலும் மேலும் கஷ்டமாக இருக்குமே… அதுக்காகத் தான் கேட்டனான்…” என்று அசடு வழியக் கூறிவிட்டு, வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

“இனிமேல் என்னைத் தண்ணி குடிக்கச் சொல்லிக் கேட்கவேண்டாம்… சரியோ?… உண்ணாநோன்பு என்றால் என்ன?… தண்ணீர், குளுக்கோஸ், இளநீர் எல்லாமே உணவுதான்… இந்த உணவுகளை எடுத்துக் கொண்டு எவ்வளவு நாளும் உயிர் வாழலாம். ஆனால், அது உண்ணாநோன்பு இல்லை. உண்ணாநோன்பு எண்டால் அதுக்கு அர்த்தம் வேணும்… ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேணுமெண்டதுக்காகத்தான் எங்களை நாங்கள் வருத்திக்கொண்டு உண்ணா நோன்பு இருக்கிறது… இது வெறும் அரசியல் லாபத்துக்காக தொடங்கப்பட்டதல்ல… வயிறு முட்டக் குடித்துவிட்டு மக்களையும் ஏமாற்ற என்னால் முடியாது.”

அவரின் பேச்சில் இருந்த உண்மைகள் எனக்கும் தெரியும். ஆனால், திலீபனின் உயிர் மிகவும் பெறுமதி மிக்கது… அதை இப்படி வருந்த விடுவதா? என்ற ஏக்கத்தில்தான் அப்படிக் கேட்டேன். ஆனால் அவர் தன் உயர்ந்த சிந்தனையால் என் பேச்சுக்கு ஆப்பு வைத்துவிட்டார்.

நேரம் செல்ல செல்ல நல்லூர் ஆலய மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கடந்த இரு நாட்களாக ஆயிரக்கணக்காக வந்திருந்த சனக்கூட்டம், இன்று இலட்சத்தைத் தாண்டியிருந்தது. யாழ்ப்பாண நகரத்தில் உள்ள கல்லூரிகளிலிருந்து மாணவ - மாணவிகள் காலை 9 மணி முதல் வரிசை வரிசையாக, வெள்ளைச் சீருடையில் அணிவகுத்து வந்து மைதானத்தை நிறைக்கத் தொடங்கினர்.

திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒர் அங்கத்தவர் என்ற நினைப்பு விடுபட்டு, “தமிழ் இனத்தின் பிரதிநிதி” என்ற எண்ணம்தான் அந்தச் சனக்கூட்டத்தினர் மத்தியில் நிறைந்திருந்தது. தாய்க்குலம் - திலீபன் வாடி வதங்கியிருந்த கோலத்தைக் கண்டு கண்ணீர் சிந்தியது. அந்தக் கண்ணீர் மழையில் இதயம் கனிந்து விட்ட வருண பகவான் கூடத் தீடீரென்று பலமாகக் கண்ணீர் சொரியத் தொடங்கிவிட்டான்.

ஆம்!

அனலாகக் கொதித்துக்கொண்டிருந்த சூரியன், ஒரு பிள்ளையின் உடலை வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகத், தன்னைத் தானே கருமேகத்தின் போர்வைக்குள் மூடிக் கொண்டான் மழைநீர் கோவில் மைதானத்தில் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், பொதுமக்களில் ஒருவர்கூட எழும் பால் அப்படியே இருந்தனர். அப்பப்பா! மக்களின் உணர்வு மழைக்கு முன்னிலையில் அந்த வருணனின் மழைநீர் வெகு சாதாரணமானது என்ற எண்ணம் நிதர்சனமாகத் தெரிந்தது.

வாடிய நிலையிலும், சோர்ந்த நிலையிலும் தன் உயிரினும் மேலான மக்கள் மழையில் நனைவதைக் கண்ட திலீபன், அவர்களை நனைய வேண்டாம் என்று கைகளை அசைத்துச் சைகை காட்டினார். ஆனால், அவர்களோ அசைவதாக இல்லை. “உன்னால் மட்டும் தானா தமிழினத்துக்காக மெழுகாக உருக முடியும்?… உன் உயர்ந்த இலட்சியத்துக்கு முன் இந்த மழை வெகு சாதாரணமானது!” என்று கூறுவதுபோல், அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

முரளியும் - நிரஞ்சனும், வேறு சிலரும் படங்குகளை விரித்துக் கட்டிக் கொண்டிருந்தனர்.

ஒலிபெருக்கியில் காசி ஆனந்தனின் கவிதையொன்று முழக்கமிட்டுக்கொண் டிருந்தது.

“திலீபன் அழைப்பது சாவையா? - இந்த

சின்ன வயதில் இது தேவையா?” …

மூன்றாம் நாளான இன்று இராண்டாவது மேடையில் சூடான பேச்சுக்களும், கண்ணீர்க் கவிதைகளும் முழங்கிக்கொண்டிருந்தன. பேச்சாளர்களில் ஒருவரும், எமது தீவிர ஆதரவாளருமான காங்கேசன்துறை கருணானந்தசிவம் ஆசிரியர் அவர்கள் இப்படிப் பேசினார்:

“தியாகி திலீபனின் உயிர் விலைமதிப்பற்றது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் உரியவர் அல்ல… அவர… தமிழ் இனத்துக்கே சொந்தமானவர்… அப்படிப்பட்ட திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீராவது அருந்தி தன் உடலைக் காப்பாற்ற வேண்டும். ஆவர் தன் பிடிவாதத்திலிருந்து இறங்கி நீர் உணவு அருந்தி எம் கவலையைப் போக்க வேண்டும்… இது எனது வேண்டுகோள் மட்டுமல்ல: இங்கே வந்திருக்கும் இலட்சக் கணக்கான மக்களின் வேண்டுகோளும் இதுதான்.”

அந்தப் பேச்சைக் கேட்ட திலீபனின் முகம் வாடியதை நான் அவதானித்தேன்… தான் பேசப்போவதாகக் கூறினார். அவரிடம் ஒலிவாங்கியைக் கொடுத்தேன்.

“இந்த மேடையில் பேசிய ஒர் அன்பர் என்னை நீர் உணவு அருந்தும்படி கூறியது என்னை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது… நான் இந்த மேடையிலே நீராகாரம் எதுவும் எடுக்காமல் தான் உண்ணாநோன்பை ஆரம்பித்தேன்… இறுதிவரை இந்த இலட்சியத்தில் இருந்து மாறமாட்டேன். நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால், தயவு செய்து இனிமேல் என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்த வேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைந்த மனக்கட்டுப்பாடும் தன்னம்பிக்கையும் உண்டு… என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றா விட்டால் நீரே எடுக்காமல் இறப்பேனே தவிர, இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்திலிருந்து ஒரு போதும் பின்வாங்க மாட்டேன்.” அவர் பேசி முடித்ததும், மழை ஓய்ந்துவிட்டது.

திலீபனுடன் சேர்ந்து அவன் கோரிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தினமும் நல்லூர்க் கோவில் மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் இருப்போர் தொகை அதிகாரித்துக் கொண்டே வந்தது.

பலர் தாமும் சாகும் வரை திலீபனைப்போல் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உண்ணா நோன்பு இருக்க விரும்புவதாக, எம்மிடம் வந்து கூறினர். அவர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் திணறினோம்.

செல்வி. சிவா துரையப்பா என்ற பெண் அச்சுவேலியைச் சேர்ந்தவர்… 17.09.1987 இல் திலீபனுக்கு ஆதரவாக மூன்றாவது (சிறிய) மேடை ஒன்றில் தனது உண்ணா நோன்பு போராட்டத்தை ஆரம்பித்தார்…



அன்றிரவு திலீபன் சிறுநீர் கழிக்க முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டார். வைத்தியர் ஒருவரை அழைத்துவந்து அவரைப் பிரிசோதிக்க ஏற்பாடு செய்தோம் ஆனால், திலீபன் அதை மறுத்துவிட்டார். எந்தவித பரிசோதனையும், சிகிச்சையும் தான் இறக்கும் வரை தனக்கு அளிக்கக்கூடாதென்று உறுதியாகக் கூறி விட்டார்.

அன்று அவர் கஷ்டப்பட்டு உறங்கும்போது நேரம் நள்ளிரவு 1.00 மணி.
அவரின் நாடித்துடிப்பு :- 11, சுவாசம் — 24.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நான்காம் நாள்

கடந்த மூன்று நாட்களாக மேடையில் திலீபனுடன் சேர்ந்து ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது இருந்தேன். மானசீகமாகத் திலீபனின் நட்புக்கு உயரிய மதிப்பளிப்பவன் நான். அதனால் தான் என்னால் எதுவும் அருந்த முடியவில்லை. திலீபன் ஒன்றும் அருந்தவில்லையே, உணவில்லையே, என்ற வேதனைதான் என்வாய்க்கு பூட்டுப் போட்டதே தவிர வேறு ஒன்றுமே இல்லை.

கடந்த மூன்று நாள்களாக ஒன்றுமே நான் உண்ணாமல் அருந்தாமால் இருந்தது சிறிது களைப்பை ஏற்படுத்தி இருந்தாலும் திட மனத்துடன் அதைச்சமாளித்துக் கொண்டேன். நான்காம நாளான இன்றுதான் எனக்குச் சற்று நாவறர்ச்சியாக இருந்தது. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் யாரிடமும் என் நோன்பைப்பற்றிக் கூறாமல் இருந்தேன். இரண்டு மூன்று முறை ராஜனும், நவீனும் என்னைச் சாப்பிட அழைத்த போது நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன்.

திலீபன் இருக்கும் நிலையைப் பார்க்கும் போது என்னால் எதுவும் அருந்த முடியவில்லை. இது என்னால் தாங்க முடியவில்லை. விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டேன். என் வாழ்க்கையில் எத்தனையோ சோகச் சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன. ஒன்றுக்குமே நான் அழுததில்லை. இன்று?…

ஆனால் இன்று காலை 10 மணியளவில் தலைவர் பிரபாகரன் என்னை அழைத்துவரச் சொன்னதை அறிந்து, என் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தலைவர் மிகவும் கண்டிப்பானவர். ஏன்ன சொல்லப் போகிறாரோ என்ற கேள்வியை எனக்குள் பலமுறை கேட்டுக் கொண்டேன்.

தலைவரின் அறைக்குள் பயத்துடன் சென்றேன்.

“இருங்க வாஞ்சி அண்ணா” என்ற அன்பான குரல் என்னை வரவேற்றது. ஆச்சரியத்தால் என் கண்கள் அகன்றுவிட்டன. சாப்பிடாத மயக்கத்தில் என் கண்களும் மயங்கி விட்டனவா என்று, ஒரு கணம் சிந்தித்தேன்.

இல்லை! என் முன் இருப்பவர், தலைவர் பிரபாகரன் தான்! துறு, துறுவென்று பார்க்கும் அதே கண்கள். வட்ட முகம், கூரிய அழகான பெரிய மூக்கு, அளவாக அழகாக நறுக்கி விடப்பட்ட நீண்ட மீசை.

“நீங்க படிச்சவர். வயதில் மூத்தவர். நான் சொல்ல வேண்டியதில்லை. திலீபனில் அன்பு இருக்கவேண்டியது தான். அதற்காக இப்படியா சொல்லாமல் கொள்ளாமல் எதுவும் குடிக்காமல், சாப்பிடாமல் இருப்பது? நீங்கள் அவரைப் பார்க்க வேண்டியவர். உங்கள் உடம்பில் சக்தி இருந்தால்தான் அதற்கு உங்களால் முடியும். நான் திலீபனில் அன்பில்லாதவன் என்றா நினைத்திருக்கிறீர்கள்? திலீபன் என் பிள்ளையைப் போன்றவன். நானே அவனை இந்த உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு அனுமதித்திருக்கிறேனென்றால் என் மனத்தைக் கல்லாக்கித்தான் அதைச் செய்திருக்கிறேன்.

இந்த உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு தேவையான மனோதிடம் திலீபனிடம் இருப்பதனால்தான், உண்ணாநோன்பை அவன் நடத்த விரும்பியபோது நான் அதற்குச் சம்மதித்தேன். ஒவ்வொருவராக இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதுதான் நல்லது. திலீபனுக்கு அடுத்த சந்தர்ப்பம் உங்களுக் குத்தர முயற்சிக்கிறேன். அதுமட்டும் நீங்கள் வழக்கம்போல் சாப்பிட்டு, குடித்து இருக்க வேண்டும். திலீபனை வடிவாகக் கவனித்துக் கொள்ளுங்கள். இப்போது எதையாவது குடித்து உங்கள் பிடிவாதத்தை விட்டு விடுங்கள்.”

என்று கூறிய தலைவர், சொர்ணனை அழைத்து குளுக்கோசும் எலுமிச்சம் பழமும் வரவழைத்து, தானே தன் கைப்படக் கரைத்து, அந்தக் கிளாசை என்னிடம் நீட்டினார். ஆவ்வளவு கூறியபின் என்னால் எதுவும் திருப்பிக் கூற முடிய வில்லை. மடமடவென்று வாங்கிக் குடித்தேன்.

தலைவர் பிரபாகரன் கண்டிப்பானவர் என்பது தெரியும். ஆனால் அவரின் அன்பான வார்த்தைகள் எமது வாயைத் தானாகவே அடைக்கச் செய்துவிடும் என்பது எனக்கு இன்றுதான் புரிந்தது.

திலீபனின் உண்ணாநோன்புச் செய்தி இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. பிரித்தானியா, பிரான்ஸ்,

ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்தும், அரபு நாடுகளிலிருந்தும் தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டேயிருந்தன.

ஏன்? இந்தியாவின் தமிழகத்திலும் இந்தச் செய்தி, உணர்வு அலைகளைக் கொந்தளிக்கச் செய்து கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகம் உட்பட பல நாட்டுப் பத்திரிகைகள் திலீபனின் உண்ணா நோனபிற்கு ஆதரவாகத் தலைப்புச் செய்திகளைப் போட்டிருப்பதாக, எமது தகவல் தொடர்பு அறிக்கைகள் கூறுகின்றன.

இன்று திலீபன் உண்ணாநோன்பு ஆரம்பித்து நான்காவது நாள், அவரது உடல் மிகவும் அசதியாகக் காணப்பட்டது... பயற்றங் காயைப் போல் வாடி வதங்கி, கட்டிலின்மேல் அவர் சுருண்டு கிடந்த தோற்றம், பார்ப்பவர் நெஞ்சங்களைப் பதை பதைக்க வைத்தது. அப்படியிருந்தும் அவர் இன்று மக்கள் முன் உரையாற்றினார். அவரின் உரை பின் வருமாறு:



“அன்பார்ந்த தமிழீழ மக்களே !

விளக்கு அணையுமுன்பு பிரகாசமாக எரியுமாம். அதுபோல இன்று நானும் உற்சாகத்துடன் இருக்கிறேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாகப் பேசமுடிகிறது. போராடத் தயாராகுங்கள்! எனக்கு விடை தாருங்கள்! ஒருவரும் என்னை இந்தப் போராட்டத்தைக் கைவிடுமா கேட்க வேண்டாம். நானும் எனது தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது. மறைந்த போராளிகள் 650 பேருடன் சேர்ந்து 651 ஆவது ஆளாகி மேலிருந்து பார்ப்பேன். எங்கள் உயிர் உங்களுடன் ஒட்டிவிடும். என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எனது அவயவங்கள் செயலிழப்பதனால், இனிமேல் மனிதனாக வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும்.

எமது வீரர்கள் கொள்கைக்காக உயிரைக் கொடுப்பவர்கள். கொள்கைக்காக என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் ஐந்து ஆறு பேர் சாவதால் எவ்வித தீங்கும் வந்துவிடாது. மக்கள் புரட்சி வெடிக்கட்டும். நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவைகளும் ஒரே கருத்தைத்தான் பேசியுள்ளேன்”.

நேற்று இரவு முழுவதும் அவர் ஆழ்ந்து தூங்கினார். இன்று காலை ஒன்பது மணி ஆகியும் தூக்கத்தைவிட்டு அவர் எழுந்திருக்கவில்லை.

இளைஞர்களான “நவீனன்கள்” இருவரும், அவரின் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலுமாக அமர்ந்திருந்து விசிறியால் ஆள்மாறி ஆள் வீசிக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று இரவு வழக்கத்தைவிட நாடித்துடிப்பு 110 ஆக அதிகரித்திருந்ததில் இருந்து அவர் உடல் நிலை பாதிப்படையத் தொடங்கிவிட்டது என்பதை நான் அறிந்து கொண்டேன். சூரியனின் கதிர்கள் பூமியெங்கும் வியாபித்திருந்தன.

அவரருகே சென்று அவரின் நாடித்துடிப்பை மெதுவாகப் பரிசோதித்துக் கொண்டு சுவாசத்தையும் எண்ணுகின்றேன்.
நாடித்துடிப்பு -120
சுவாசத்துடிப்பு - 24

ஆம். சாதாரண நிலையிலிருந்து மிகவும் அசாதாரணமாகக் கூடிக்கொண்டிருக்கிறது நாடித்துடிப்பு. (நாடித்துடிப்பு - சாதாரணம் 72-80), (சுவாசம் - 16-22)

நான்கு நாட்களாக நீராகாரம் உட்கொள்ளாத காரணத்தினால் உடலில் திரவநிலை குறையத் தொடங்கிவிட்டதால், இருதயத்திற்கும் நுரையீரல்களுக்கும் செல்லும் இரத்தத்தின் அளவும், கனமும் குறையத் தொடங்கி விட்டது. அதனால்தான் இருதயமும், சுவாசமும் பலமாக வேலை செய்யத்தொடங்கியிருந் தன. இதைவிட இரண்டு நாட்களாகச் சிறுநீர் கழியவில்லை.

தொடர்ந்து இன்னும் இரண்டு நாட்களுக்குச் சிறுநீர் கழியாமல் இருக்குமானால் சிறுநீரகத் தளர்ச்சி (Kidney Failiure) ஏற்படலாம். “கிட்னி பெயிலியர்” ஏற்படுமானால் அது இருதயத்தில் தாக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இறப்பை உண்டுபண்ணலாம்.

எனக்கு தெரிந்தவரை வழக்கமான நடைபெறக்கூடி இந்த நிகழ்சிகளினால் திலீபனின் உயிர் பறிக்கப்பட்டக்கூடிய வாய்ப்பு எந்த நேரத்திலும் ஏற்படலாம்.

நல்லூர்க் கந்தனிடம் முறையிட்ட மக்கள் நாச்சிமார் கோயில் அம்மனிடமும் மனமார வேண்டுவதைக் காதல் கேட்கிறேன்.

“தாயே உன் பிள்ளையொன்று உண வில்லாமல் செத்துக் கொண்டிருக்கிறது. அதை நீதானம்மா கடைசிவரையும் காப்பாற்ற வேண்டும்...” நீண்ட, நாட்களுக்குப் பின், திலீபனுக்காக மக்களுடன் சேர்ந்து நானும் இப்படி வேண்டிக் கொள்கின்றேன். வெகு நேரத்தின்பின் கண் விழித்த திலீபன், எழும்புவதற்குச் சத்தியின்றி படுக்கையிலேயே கிடக்கிறார்.

மைதானம் சனக்கூட்டத்தினால் நிரம்பிக் கொண்டிருக்கிறது. திலீனைப் பார்ப்பதற்குகாக அணியணியாக மேடைக்கு முன் புறம் மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர்... ஒருவர் முகத்திலாவது மகிழ்ச்சி இல்லை. சில தாய்மார்கள் திலீபன் படுத்திருக்கும் பரிதாப நிலை கண்டு பொறுக்க முடியாடல் விம்மி விம்மி அழுகின்றனர்.

கிறிஸ்தவ பாதிரியாரும், பல வருடங்காய் சிறையில் அடைபட்டுத் தாங்க முடியாத சித்திர வதைகளை அனுபவித்தவரும், 1983 யூலையில் வெளிக்கடைச் சிறைச்சாலையில் 52 தமிழ்க் கைதினள் சிங்கள இனவாதப் பூதங்கால் கொல்லப்பட்ட சமயம் எதிர்பாராத விதமாகத் தம்பியவரும் ஆகிய, வண, பிதா சிங்கராயர் அவர்கள், திலீபனை பார்ப்பதற் காக மேடைக்கு வந்தார்.

ஒரு துறவியாக இருந்தாலும் திலீபனின் கோலத்தைக் கண்டதும் அவர் அழுதே விட்டார். திலீபனின் கரங்ளைப் பற்றி அவர் அன்போடு வருடினார். உடல் சோர்வுற்று இருந்த போதிலும் திலீபன் அவருடன் மனம் திறந்து வெகுநேரம்வரை பேசிக்கொண்டிருந்தார்.

திலீபனின் பிடிவாதத்தையும், திடமனத்தையும் நன்கு அறிந்தவர் துறவி அப்படிருந்தும் திலீபன் படுத்திருக்கும் கோலத்தைக் கண்டு பொறுக்க முடியாடல் விசும்பினார். கொஞ்சமாவது தண்ணீர் அருந்திவிட்டு உண்ணா நோன்பைத் தொடருமாறு அவர் வற்புறுத்தினார்.

பாதர் சிங்கராயர் மீது திலீபனுக்கு எப்போதும் மிகுந்த மதிப்பும் பாசமும் உண்டு. அப் படியிருந்தும் தனக்கே உரிய புன்முறுவலைக் காட்டி, அதையே அவரின் வேண்டு கோளுக்குப் பதிலாக்கிவிட்டு மௌன மாகினார் திலீபன்.

பாதர் சிங்கராயர் சென்ற பின் ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமாரும், இயக்க யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப் பாளரும் “பரா” வும் வந்தனர்.

எந்த இயக்கத்தவர்களானாலும் அவர்களுடன் சகஜமாகப் பேசுவதில் திலீபனுக்கு நிகர் திலீபன்தான்.

அவர்களும் திலீபனைத் தண்ணீராவது அருந்தும் படிவற்புறுத்தினார். அனால், அவர்களுக்குக் கிடைத்த பதிலும் மௌனம் தான்.

செல்வி குகசாந்தினி, திருமதி நல்லையா ஆகிய இரு பெண்கள் திலீபனுக்கு ஆதரவாக, சாகும் வரையிலான உண்ணா நோன்பினை ஆரம்பித்தனர். ஆத்துடன், வல்வெட்டித் துறையில் 05 தமிழர்கள் ஏற்கெனவே உண்ணா நோன்பை ஆரம்பித்துவிட்டதாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

இன்று மாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், திலீபனை வந்து சந்தித்தார். இந்திய அரசிடமிருந்தோ, இந்தியத் தூதுவரிடமிருந்தோ இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று. அவர் திலீபனிடம் கூறினார். அவருடன் திரு யோகியும் வந்திருந்தார்.

திலீபனின் பொறுப்புக்களையெல்லாம் தன் தலைமீது சுமந்து கொண்டிருப்பவர் யோகி. சில நாட்களுக்குமுன் இந்திய அமைதிகாக்கும் படையின் பாரபட்சமான நடவடிக் கைகளையும் சிங்கள இராணுவத்துக்கு ஆதரவான நடவடிக்கைளையும் கண்டித்து, ஒரு நாள் அடையாள மறியற் போராட்டம், சகல இராணுவ முகாம்களிலும் பொது மக்களால் நடத்தப்பட்டபோது, யாழ் கோட்டையின் முன்பாக அன்றைய மறியல் போராட்டத்தை முடித்துவைத்து திலீபன் பேசிய பேச்சு என் நினைவுக்கு வருகின்றது.

“இந்த யாழ்ப்பாணக் கோட்டையியே சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழனின் கொடி பறந்த அந்த கொடியை போர்த்துக்கேயர் பறித்தெடுத்தனர்... போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரும் ஒல்லாந்தரிடமிருந்தும் ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர் கடைசியில் கைப்பற்றினர். அதாவது புலிக்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அந்த தமிழ்க் கொடியைப் பறக்க விடுவதற்காக, ஒவ் வொருவரும் எமது உயிரை அர்பணித்துக் கொண்டு வருகிறோம். அதில் என் பங்கு எப்போது...? என்பது தான் எமது கேள்வியாக இருக்க வேண்டும் தவிர, பதவிகள் எமக்கு பெரியதல்ல... பதவிகளைத்தேடிச் செய்பவர்கள் புலிகள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் இங்கே இருக்கிறார்கள்!”

அந்த தீர்க்கரிசனப் உயிர்வடிவம் கொடுப்பதற்குக்காகத்தான், திலீபன் சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தான்.

திலீபன் ஒரு சிறப்பான சதுரங்க வீரன். தனது பள்ளிப் பருவத்தில் பல பரிசுகளை இதற்காக அவர் பெற்றுள்ளார். ஆரசியலில் எந்த காயை எப்படி, எந்த நேரத்தில், நகர்த்த வேண்டும் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்துருக்க வேண்டும்.

அகிம்சைப் போராட்டத்துக்கு மதிப்பளிக்கும் இந்திய நாட்டின் சமாதான படையினரின் கண்களைத் திறப்பதற்கு, இந்த சாகும் வரையிலான உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தது முற்றிலும் பொருத்த மானதே. இந்தியா உள்ப்பூர்வமாக அண் ணல் காந்தியைப் பின்பற்றும் நாடாக இருந்தால், நிச்சயம் பதில் சொல்லியே ஆகவேண்டும். இல்லையேல் உலகத்தின் பார்வையில் இருந்து அது தப்பவே முடியாது.

அன்றிரவு திலீபனுக்குத் தெரியாமல் அவரது இரத்த அழுத்தத்தைப் பதிவு செய்து விட்டடேன்.
அது 100/65
நாடித்துடிப்பு - 114சுவாசம் - 25

இந்தியா என்ன செய்யப்போகிறது? ஏனக்கு ஒன்றும் புரியவில்லை. “வெள்ளையனே வெளியேறு” என்று ஆங்கிலேயரை வெளியேற்றுவதற்கதாகப் போராட்டம் நடாத்திய காந்தி இன்று இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? ஆனால் திலீபனோ இந்தியப் படையை வெளியேறு என்று கூடக் கேட்க வில்லையே! இவர்கள் திலீபனின் சாதாரண கோரிக்கைகளுக்கு ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? எனக்கு எதுவும் புரியவில்லை.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் நாள்

“ஈகையர் லெப்.கேணல் திலீபன் பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது பன்னிரண்டு நாட்கள் உண்ணாநோன் பிருந்து வீரச்சாவடைந்தவர். அவருக்கு உதவியாளராக இருந்த முன்னாள் போராளி கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன் அவர்கள் அந்தப் பன்னிரண்டு நாட்களையும் தொகுத்து “திலீபனுடன் பன்னிரண்டு நாட்கள்” என்ற புத்தகமாக வெளியிட்டிருந்தார். அத்தொடரை, திலீபனின் உண்ணாநோன்புக் காலமாகிய இக் காலத்தில் தருகிறோம்.”

வழக்கம்போல் காலையில் சகல பத்திரிகைகளையும் வாசிக்கும் திலீபனால் இன்று எதுவுமே செய்யமுடியவில்லை. யாழ்ப்பாண குடாநாடு முழுவதும் இருந்து தனியார் பஸ் வண்டிகளில் மக்கள் வெள்ளம் போல் வந்து நிறைய தொடங்கிவிட்டனர்.

இன்னும் திலீபன் போர்வைக்குள்ளேயே புதைந்து கிடக்கிறான். அவனால் எழும்ப முடியவில்லை. உடல் பயங்கரமாக வியர்த்து கொட்டியது. மின்விசிறி அவர் பக்கத்தில் வேகமாக சுழன்று கொண்டிருந்தது. ஒரு மனித இயந்திரம் தன் முழுச்சக்தியையும் பிரயோகித்து இயங்கிக் கொண்டிருக்கிறது. அன்றைய பத்திரிகைகளில் முக்கிய செய்திகளாக வழக்கம்போல் திலீபனைபற்றிய செய்திகளே இடம் பெற்றிருந்தன. திலீபன் சோர்ந்து வருகிறார். மெழுவர்த்தியைப் போல அவர் சிறிது சிறிதாக உருகிக்கொண்டிருக்கிறார். அவரது சிறுநீரகம் பாதிப்படையத் தொடங்கிவிட்டது. இருதயம் பலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது.

சங்கத்தமிழ்

தொடர்ந்து அவர் நீராகாரம் எடுக்காவிட்டால் நிலமை மேலும் மோசமாகி எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம்.

பத்திரிகைகளைப் படிக்கும்போது என் கைகளுடன் உள்ளமும் சேர்ந்து நடுங்கியது. திலீபன் என்ற ஒரு இனிய காவியத்தின் கடைசி அத்தியாயத்திற்கு வந்து விட்டதுபோல் பிரமை எனக்கு ஏற்பட்டது. அதற்கிடையில் ஓர் செய்தி காற்றோடு காற்றாக கலந்து வந்து என் செவியில் விழுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச்சேர்ந்த திலகர் அவர்கள் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார் என்பதுதான் அது. புலிகளின் சார்பாக திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்களில் திலகரும் ஒருவர். அப்படியானால் பிரதமர் ராஜீவ்காந்தியிடமிருந்து ஏதாவது அழைப்பு வந்திருக்குமா என்ற நப்பாசை என் மனதில். விசாரித்தபோது எந்த விதமான அழைப்பும் வரவில்லை வழமைபோல சாதாரண விசயங்களை கவனிப்பதற் காகத்தான் திலகர் போய் இருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் ஏன் கேட்டோம் என்றிருந்தது.

திலகரின் இந்தியப்பயணம் பற்றி கேட்டு அறியாமல் விட்டிருந்தால் ஓரளவு மன நிம்மதியாவது கிடைத்திருக்கும். ஆனால் விதியே உன் கரங்கள் இத்தனை கொடியதா ? பம்பரம் போல் கள்ளமில்லாத வெள்ளையுள்ளத்துடன் கலகலவென்று சிரித்துக் கொண்டு எம்மையே சுற்றி வரும் திலீபனை சித்திரவதை பள்ளத்தில் தள்ளுவதுதான் உன் கோர முடிவா? அப்படி அவர் என்ன குற்றம் செய்து விட்டார். தமிழினத்திற்காக தனது தந்தை சகோதரங்களை பிரிந்து வந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தன் வைத்திய படிப்பையே உதறி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இரவும் பகலும் மாடாக உழைத்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தனது வயிற்றிலுள்ள குடலின் 14 அங்கலத்தை வெட்டி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இன்று தன்னையே சிறிது சிறிதாக அழித்துக் கொண்டு உண்ணாநோன்பு இருக்கிறாரே அது குற்றமா? எது குற்றம்?

வானத்தைப்பார்த்து வாய்விட்டு கத்த வேண்டும் போல் இருக்கிறது. கதறித்தான் என்ன பயன் ஏற்படப்போகிறது. இலட்சக் கணக்கான மக்கள் கடந்த ஐந்து நாட்களாக கண்ணீர் சிந்திக்கொண்டு இருக்கிறார்களே. யாருக்காக? திலீபனுக்காக, தமிழினத்திற்காக அப்படி இருக்க அந்த கண்ணீரை ஏக்கத்தை இன்னும் யாருமே புரிந்து கொள்ள வில்லையே. ஏன்? உலகில் மனித தர்மமே செத்துவிட்டதா? காந்தி இறந்ததற்காக கண்ணீர் வடிக்கும் உலகம் காந்தியத்தின் காலடியில் சிறிது சிறிதாக எரிந்து கொண்டிருக்கும் திலீபன் என்னும் மெழுகுவர்த்தியைக் காணவில்லையா? அல்லது கண்டும் காணாது போய்விட்டதா? எத்தனையோ முறை திலீபன் சாவின் விளிம்பில் இருந்து தப்பியிருக்கிறார்.

1983ம் ஆண்டு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நவாலிப்பிரதேச பொறுப்பாளராக இருந்தபோது ஓர் நாள் நவாலி கத்தோலிக்க தேவாலயத்தின் அருகே நின்று பொது மக்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று இரண்டு ஜீப் வண்டிகள் அவரருகே முன்னும் பின்னுமாக வந்து நின்றன. சிறீலங்கா இராணுவத்தினர் கண்சிமிட்டும் நேரத்தில் சுற்றி வளைத்து விட்டதை உணர்ந்த திலீபன் எதுவித பதற்றமும் அடையாமல் நிதானமாக நின்றார். அவரின் மதி நுட்பம் மிகவும் தீவிரமாக வேலைசெய்யத்தொடங்கியது. யாரோ ஒரு தமிழ்த்துரோகியால் வழங்கப்பட்ட தகவலை வைத்துக்கொண்டு திலீபனை அடையாளம் கண்டு கொண்ட சிங்கள இராணுவத்தினர் ஜீப் வண்டியில் ஏறுமாறு உத்தரவிட்டனர். அவரது கையிலே ஆயுதம் அடங்கிய சிறிய சூட்கேஸ் ஒன்று இருந்தது. அவரருகே இரு இராணுவத்தினர் சேர்ந்து வந்தனர்.

ஜீப் வண்டியில் ஏறும்போது எதிர்பாராத விதமாக பக்கத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் மீது பாய்ந்து சூட்கேஸினால் மின்னல் வேகத்தில் தாக்கிவிட்டு பக்கத்திலிருந்த பனந்தோப்பை நோக்கி ஓடத் தொடங்கினார் திலீபன். எதிர்பாராத தாக்குதலினால் நிலை குலைந்து விட்ட இராணுவத்தினர் என்ன செய்வது என்று திகைத்து நின்றனர். மறுகணம் அவர்களின் கைகளிலிருந்த துப்பாக்கிகள் பயங்கரமாக திலீபனை நோக்கி உறுமத் தொடங்கின.

அவரது கை ஒன்றை துளைத்துக்கொண்டு சென்றது துப்பாக்கிகுண்டு. இரத்தம் சிந்த மனதை திடமாக்கிக்கொண்டு வெகுநேரமாக ஓடிக்கொண்டிருந்தார் திலீபன். இராணுவத்தினரால் அவரை பிடிக்கமுடியவில்லை. இந்த ஏமாற்றத்தினால் பல பொதுமக்களை அவர்கள் அன்று கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளிவிட்டுச்சென்றனர். யாழ் பெரியாஸ்பத்திரியில் 1986ம் ஆண்டின் இறுதியில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இராணுவத்தினருடனான மோதலின்போது திலீபன் தன் துப்பாக்கியால் பலரை சுட்டுத் தள்ளினார்.



ஆனால் எதிரிகளின் ஓர் குண்டு அவர் குடலை சிதைத்துவிட்டிருந்தது. யாழ் பெரியாஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டபோது அவர் குடலின் 14 அங்குலத்துண்டை சத்திரசிகிச்சை நிபுணர்கள் அகற்றிவிட்டனர். சுமார் மூன்று மாதங்களாக வைத்தியசாலையிலேயே வாழ்ந்தபின்தான் அவர் பூரண குணமடைந்தார். இப்படி எத்தனையோ துன்பங்களை தமிழினத்திற்காக அனுபவித்தவர்தான் திலீபன். ஆயுதப்போராட்டத்தினால் மாத்திரமன்றி அகிம்சையாலும் தன்னால் சாதனை புரிய முடியும் என திலீபனுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

அதனால் இந்தப்போராட்டத்தில் அவர் தானாகவே முன்வந்த எத்தனையோ பேர் தடுத்தும் கேளாமல் குதித்தார். இன்று மாலை இந்திய சமாதானப்படையினரின் யாழ் கோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளர் கேணல் தரார் அவர்கள் திலீபனை பார்க்க வந்தார். அவர் சனங்களிடையே நடந்து வரும்போது பலதாய்மார்கள் அவர் மீது கல்களை வீச தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்களை தடுத்து அவருக்கு தகுந்த பாதுகாப்புக்கொடுத்து மேடைக்கு அருகே அழைத்துச்சென்றனர் விடுதலைப் புலிகள். திலீபனின் உடல் மோசமாகி வருவதால் பொதுமக்களும், இயக்க உறுப்பினர்களும் மிகுந்த உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை யோகியும் வேறு சிலரும் எடுத்துக் கூறினர்.

தான் சென்று தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறிவிட்டுச் சென்றார். அவர் மூலமாவது திலீபனின் உயிர் காப்பாற்றப்படாதா என்று எங்களில் சிலர் நிம்மதியாக இருந்தோம். களைப்புடன் திலீபன் உறங்கிவிட்டார்.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஆறாம் நாள்

அதிகாலையில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருந்தது. ஆம் ! இன்று திலீபன் காலை 5 மணிக்கே படுக்கையை விட்டு எழுந்து விட்டார். அதுமட்டுமன்றி தான் சிறுநீர் கழிக்கப்போவதாகக் கூறினார். அவர் இருக்கும் நிலையிலே படுக்கையை விட்டு எழுந்து செல்வது என்பது முடியாமல் இருந்ததால் படுக்கையிலேயே சலப்போத்தலைக் கொடுத்தேன்.

ஆனால் சலம் போகவில்லை. வயிற்றை வலிப்பதாகவும் சலம் போவதற்குக் கஷ்டமாக இருப்பதாகவும் கூறினார். சுகிச்சையின் மூலம் கொஞ்சமாவது சிறுநீர் கழிக்க முடியும். ஆனால் அதைப்பற்றி பேசினாலே எரிந்து விழுவார் என்பதற்காக ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

நாளைந்து நாட்களாகப் படுக்கையிலே கிடப்பதாலும் நீர் அருந்தாமல் இருப்பதாலும் அவரது சலப்பை பாதிக்கப்பட்டிருக்கலாம்... இதை அவரிடம் எப்படிக் கூறுவது? தூன் மறைவிடம் சென்று சிறுநீர் கழிக்கப் போவதாகக் கூறினார். ஆவரின் விருப்பத்துடன், அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து இறக்கி மேடையின் பின்பக்கம் கொண்டு சென்றோம் பதினைந்து நிமிடங்களாக வயிற்றைப் பொத்திக் கொண்டு மிகுந்த கஷ்டப்பட்டார்.

அதன்பின் ஆச்சரியப்படுமளவிற்கு சுமார் அரை லீற்றர் அளவு சலம் போனது. ஏனக்கு அது மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. ஐந்து நாட்களாக எதுவும் குடிக்காமல் இருக்கும் ஒருவரால் இது எப்படிச் சாத்தியமாக முடியும்? அன்று வைத்திய நிபுணர் சிவகுமார் அவர்களிடம் இதுபற்றி மறக்காமல் கேட்டேன். அவர் எந்தப் பதிலுமே கூறாமல் மௌனமாக சிரிப்பை உதிர்த்துவிட்டுச் சென்றார்.

அன்று மத்தியானம் எமது இதயத்துக்கு மகிழ்ச்சியைத்தரும் ஓர் இனிய செய்தி எனது செவிகளில் விழுந்தபோது இனந்தெரியாத நிம்மதி என்னிடம் குடிவந்தது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரகத்திலிருந்து ஓர் முக்கிய நபர் இன்று வரப்போகிறாராம். ஆவர் நமது அரசியல் பிரிவினருடன் திலீபனைப் பற்றிப் பேசப் போகிறாராம்...

என் பிரார்த்தனை வீண்போகாது திலீபனின் உயிர் காப்பாற்றப்படப் போகின்றது...

இந்தியத் தூதுவரகத்திலிருந்து யாராவது வருவதானால் நிச்சயமாக பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆலோசனைப்படிதான் வருவார்கள்... அப்படி வருபவர்கள் உணர்ச்சி பொங்கும் தாய்க்குலத்தின் கண்ணீரைக் கண்டாவது இரங்கமாட்டார்களா?

திலீபனை எண்ணித் துடிதுடித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் மனங்களிற்கு அந்த ஆறுதல் செய்தி நிச்சயம் சாந்தியளிக்கத்தான் செய்யும்.

திலீபா ! நீ ஆரம்பித்து வைத்த அகிம்சைப் போர் எங்களது ஆயுதங்களுக்கு மதிப்பில்லாமல் செய்யப்போகிறது. போலும்? உன் அகிம்சைப் போரினால் அப்படி ஒரு நிலை எமக்கு வருமானால் அதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

ஏமக்கு மட்டும் ஆயுதங்களை தூக்கி கண்டபடி சுட்டுத்தள்ள வேண்டும் என்று ஆசையா என்ன? முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை “செல்வா” தலைமையில் முயன்று முடியாத நிலை யில்... எமது தமிழ்ச் சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றத்தானே வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம்.

நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் நம் எதிரி அகிம்சையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன்... அவனுக்கு அது புரியாதது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான்...

ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தன் பலமாக எண்ணும்போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும். நீண்ட கசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த தாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமை எப்பொழுது முடியும்? தங்கத் தமிழர்கள் வாழ்வில் பொங்கும் மகிழ்வும், பூரிப்பும் எப்பொழுது மலரும்?

அண்ணல் காந்தி அகிம்சைப் போரிலே வெற்றி கண்டார் என்றால் அதற்கு அவர் கையாண்ட அகிம்சைப் போராட்டங்கள் மட்டும் காரணமல்ல. காந்தியின் போராட்டத் தளம் இந்திய மண்ணிலே இருந்தது... காந்தியின் போராட்டத் தளத்திலே மனித நேயம் மிக்க ஆங்கிலேயர்கள் இருந்தார்கள்... ஆகவே அகிம்சையைப் புரிந்து கொள்வதற்கு அந்த வெள்ளைக்காரர்களால் முடிந்தது.

ஆனால் நமது மண்ணில் அப்படியா?

எத்தனை சந்தர்ப்பங்களில் நமது தலைவர்கள் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டிருப்பார்கள்? எத்தனை இனக்கலவரங்களில் நமது இனத்தவர்களின் தலைகள் வெட்டப்பட்டு தாாப் பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக்கும்? எத்தனை பெண்கள் தம் உயிரினும் மேலான கற்பை இழந்திருப்பர்?

அப்போதெல்லாம் நாம் ஆயுதங்களையா தூக்கினோம்?

அகிம்சை ! அகிம்சை ! அகிம்சை !

இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தது. இந்தக் தாரக மந்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டு எமது கைகளிலே ஆயுதங்களைத் தந்தவர்கள் யார்? நாமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்டகளாகத் தான் தந்தார்கள்... மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் தந்தன... தலைவர் பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங்கைகள் அணிதிரண்டு நிற்பதற்குக் காரணம் யதார்? சிங்களப் பேரினவாதம்தான் !

இன்று காலையிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலில் திலீபன் பெயரில் நூற்றுக் கணக்கான அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை பொதுமக்கள் மூலம் மேடைக்கு வந்தவண்ணமிருந்தன. பிற்பகல் மூன்று மணியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியிலிருந்து சனங்கள் பஸ்களில் வந்து குவியத் தொடங்கினர். எங்கே பார்த்தாலும் மக்கள் அலைகள் தான் !

தளபதி கிட்டு அண்ணாவின் தாய், திலீபனை வாரி அணைத்து உச்சி முகர்ந்து அழுத காட்சி என் நெஞ்சை தொட்டது. துரோகிகளினால் வீசப்பட்ட வெடிகுண்டினால் தன் மகன் ஒரு காலை இழந்த போது அந்தத் தாய் கூறிய வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"ஒரு கால் போனால் என்ன? இன்னும் ஒரு கால் இருக்கு... இரண்டு கையிருக்கு... அவன் கடைசி சரையும் போராடுவான்..."

போர் முனையில் தன் மகனின் மார்பில் வேல் பாய்ந்திருப்பதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்ட வீரத் தமிழ்த்தாயின் கதையை இது எனக்கு நினைவூட்டியது.

உதவி இந்தியத் தூதுவர் திரு.கென் அவர்கள் விமான மூலம் பலாலிக்கு வந்து விட்டா ராம்... அவருடன் பேச்சு வார்த்தை நடத்து வதற்காக திரு அன்ரன் பாலசிங்கம், போயிருக்கின் றனர்... ஏன்ற செய்தியை "சிறி" வந்து சொன் னபோது மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தேன். திலீபனுக்கும் அதைத் தெரிவித் தேன்.

காலையில் சிறுநீர் கழித்ததால் திலீபன் சற்றுத் தெம்பாக இருந்தார். பேச்சுவார்த்தை முழுந்து அதில் சாதகமாக முடிவு கிடைக் குமானால்... உண்ணாநோன்பை நிறுத்திவிட்டு திலீபனை யாழ். பேரியாஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும்... அங்கே அவசர சிகிச்சைப் பிரி வில் அவருக்குவேண்டிய சிகிச்சைகளை உடனடியாக அளிக்கத் தொடங்கினால்... இரண்டு மூன்று நாள்களில் திலீபன் வழக்கம் போல் எழும்பி நடக்கத் தொடங்கி விடுவார்.

இப்படி எனக்குள்ளேயே கணக்குப் போட்டுக் கொண்டேன்.

இயக்க உறுப்பினர்கள் திலீபனுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவரை சந்திக்க வந்த மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல் விம்மி விம்மி அழுத என் நெஞ்சைத் தொட்டது.

தளபதி சூசை, பிரபா, ரகு அப்பா, தளபதி புலேந் திரன், தளபதி ஜொனி போன்றோர் கண் கலங்கி திலீபனின் தலையை வருடி... பேசி விட்டுச் சென்றனர்.

அவர்கள் போனதும் திலீபன் என்னை அழைத்தார்.

"கிட்டண்ணையைப் பார்க்க வேணும்போல இருக்கு..." என்று மெதுவாகக் கூறும்போது அவர் முகத்திலே "ஏக்கம் படர்திருந்தது. ஒரு கணம் எனக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.

கிட்டண்ணா, குட்டிசிறி, ஜயர்... இவர்கள் எல்லாரும் இந்தியாவில் இருக்கின்றனர்.

திலீபனுக்கு என்ன பதில் சொல்லதென்று தெரி யாமல் தவித்தேன்... கிட்டு அண்ணர் இந்தி யாவில் தெரியும்... ஆனால் இந்த நிலையில், அவர் கிட்டு அண்ணாவைக் காண விரும் பியது நியாயம்தான்.

இரவு வெகுநேரம்வரை போச்சுவார்த்தை யின் முடிவு வரும் வருமென்று பார்த்துக் கொண்டிருந்தோம்... ஆனால், அது வரவே யில்லை.

இன்று மாலை சிறீலங்கா நவ சமமாசக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார, மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து திலீபனைப் பார்த்துவிட்டுச் சென்றனர். இரவு வெகுநேரம் வரை எனக்குத் தூக்கமே வரவில்லை.. ஆனால், திலீபன் தன்னை மறந்து நன்றாக உறங்கினார்.

அவரின் இரத்த அழுத்தம் 85 . 60
நாடித்துடிப்பு- 120
சுவாசம் -22

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஏழாம் நாள்

இன்று காலையில் எழுந்ததும் முதல் வேலை யாக யோகியை என் கண்கள் தேடின...

நேற்றைய பேச்சுவார்த்தையின் முடிவு என் னவாக இருக்கும்...? இந்தக் கேள்விதான் இதயத்தின் பெரும் பாகத்தை அரித்துக் கொண்டிருந்தது. காலை 10 மணிவரை எவ்வளவோ முயன்றும் அவர்கள் இருவரும் என் கண்களில் படவேயில்லை. ஆனால், திடீரென்று "இந்தியா ருடே" (India Today) பத்திரிகை நிருபரும் இந்திய துரதஷனின் (இந்தியத் தொலைக்காட்சி ஸ்தாகனம்) வீடியோப் படப்பிடிப்பாளரும், யோகியுடன் வந்து திலீபனைப் படம்பிடிக்கத் தொடங்கினர். "இந்தியா ருடே" நிருபர் என்னிடம் திலீபனின் உடல் நிலையைப்பற்றித் துருவித் துருவித் கேட்டுத் தெரிந்துகொண்டார். என்னால் முடிந் தவரை முதல் நாள் உண்ணா நோன்பிருந்து இன்றுவரை அவரின் உடலின் நிகழ்ந்த மாற் றங்கள் அனைத்தையும் விரிவாக எடுத்துக் கூறினேன்.



அவர்கள் சென்ற பின் யோகியை அழைத்து, என் மனதுக்குள் குடைந்துகொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேவிட்டேன். அதற்கு யோகி கூறிய பதில் எனக்கு அதிர்ச் சியைத் தந்தது.

"இந்திய அமைதி காக்கும் படையின் மூத்த தளபதி ஒருவரும் பிரிகேடியர் ராகவன், எயர் கொமாண்டர் ஜெயக்ககுமார், கடற்படைத் தள பதி அபயசுந்தர் ஆகியோரும் வந்து பேசிய தாகவும், உதவித்தூதுவர் வரவில்லை என் றும், திலீபனின் பிரச்சினையில் அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவை இதுவரை எடுக்க வில்லை" என்றும் யோகி கூறினார்.

அந்தப் பதிலைக் கேட்டால் அதை ஜீரணிக்க என் மனத்துக்கு வெகுநேரம் பிடித்தது. அந்தப் பேச்சுவார்த்தை பற்றிய முழு விபரத்தைம் யோகியும் யோகி திலீபனிடம் விளக்கிக் கூறி, என்ன செய்யலாம்...? என்று கேட்டார்.

பேசச் சத்தியற்று, நடக்கச் சத்தியற்று துவண்டு கிடந்த அந்தக் கொடி, தன் விழிகளைத் திறந்து பார்த்துவிட்டு வழக்கம் போன்றுதன் புன் னகையை உதிர்த்தது.

"எந்த முடிவும்... நல்ல முடிவாக இருக்க வேணும். ஐந்து கோரிக்கைகளையும் நிறை வேற்றுவதாக அவர்கள் எழுத்தில் தர வேணும்... இல்லையெண்டால்... நான் உண்ணாநோன்பைக் கடைசி வரைக்கும் ... கைவிடமாட்டன்."

ஒவ்வொரு வார்த்தையாக கரகரத்த குரலில் வெளிவந்தது திலீபனின் பதில்.

படபடவென்று நடுங்கிய நடுங்கிய குரலில் மெதுவாகத் திடமாகத் திலீபன் கூறிமுடித்த போது யோகி மேடையில் இருக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் 1985 ஆம் ஆண் டின் இறுதிப்பகுதியில் வந்த பின்னர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக திலீபன் இருந்து மிகச் சிக்கலான பிரச்சனைகளை யெல்லாம் பொது மக்கள் மத்தியில் தீர்த்து வைத்திருக்கின்றார்.

1986 ஆம் ஆண்டு அச்சுவேலியில் ஏற்பட்ட ஒருசிறு பூசல் காரணமாக மினிபஸ்களின் சொந்தக்காரர்கள் ஒருவாரகாலமாக பஸ் களை ஓடவிடாமல் வழிமறிப்புப் போராட்டம் நடத்தியதால் மக்கள் மிகுந்த துன்பப்பட்டனர்.

திலீபன் தனக்கேயுரிய புன்முறுவலுடன் அவர்களை அணுகி மிகவும் எளிமையாக அவர்களுடன் பேசி இரண்டு மணித் தியாலத் தில் பஸ்களை ஓடச்செய்தனர். யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு இடையே நடை பெறும் பூசல்கள் கடல் எல்லையிலே ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே ஏற்படும் சில சிக்கலான பிரச் சினைகள்

பல்கலைக்கழகத்தில் ஏற்படும் சிக்களான பிரச்சினைகள், கடை முதலாளிகள் - தொழி லாளர்களின் பிரச்சினைகள், மூட்டை தூக்கு வோர், வண்டி ஓட்டுவோர் - ரச்சிக்கரர்கள், மாநகரசபை ஊழியர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், டாக்ரர்கள், தாதிமார், வைத்தியசாலை சிற்றூழியர்கள், வழக் கறிஞர்கள், லொறிச் சொந்தக்காரர்கள் இப்படிப் பலரகமானவர்களின் பிரச்சினைகளை யெல் லாம் உடனுக்குடன் பேசிச் சமரசமாகத் தீர்த்து வைத்தவர் திலீபன்.

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமமான நாவாந்துறையில் தமிழர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையில் பலமான இனக்கலவரம் ஏற்பட்டது. கத்தகள், பொல்லுகள் கைக் குண் டுகள், துப்பாக்கிகள் எல்லாம் தாராளமாகப் பாவிக்கப்பட்டன. ஒரே நாளில் பலர் இருபக்கத் திலும் மாண்டனர். பலர் படுகாய முற்றனர்.

திலீபன் தன்னந்தனியாக இரு சமூகத்தவர் களையும் இரவிரவாகச் சென்று சந்தித்தார். முடிவு? அடுத்த நாள் பெருமழை பெய்து ஓய்ந் தது போல் கலவரம் நின்றுவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழீழ மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்கு இருப் பதற்குக் காரணம் இவர்கள் சிங்கள இரா ணுவத்தின் அட்டூலியங்களிலிருந்து தம் உயி ரையே அர்ப்பணித்து மக்களைக் காப்பாற் றுவது மட்டுமல்ல எந்தச் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலி களின் அரசியல்ப் பிரிவுத் தலைவர் திலீபனால் அவை நிச்சியமாகத் தீர்க்கப்படும். என்ற உயர்ந்த நம்பிக்கையாலும் ஏற்பட்ட செல்வாக் குத்தான். அது.

மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரவு பகலாக உறங்காது வேளாவேளைக்கு உணவின்றி அயராது உழைப்பதில் திலீ பனுக்கு நிகர் திலீபன் தான். அவர் சுயமாக எப்போதாவது மினுக்கிய மடிப்புக் கலையாத ஆடைகள் அணிந்ததையும் நான் பார்த்த தில்லை.

அவரிடம் இருப்பதெல்லாம் ஒரேயொரு நீளக் காற்சட்டை (ட்ரவுசர்) ஒரேயொரு சேர்ட் தான். அரசியல் விசயமாக ஊரெல்லாம் சுற்றி பல பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு காய்ந்த வயிற் றுடன் இரவு 12.00, 1.00 மணிக்கு தலைமை அலுவலகத்திற்கு வருவார். அந்த நள்ளிரவில் அழுக்கேறிய தன் உடைகளைக்களைந்து தோய்த்து காயப்போட்டுவிட்ட படுக்கச் செல் வார். பின்னர் அந்த இயந்திரம் அதிகாலையி லேயே தன் இயக்கத்தை மீண்டும் ஆரம்பித்து விடும்.

இப்படிப்பட்ட திலீபன் இன்று வாடி, வதங்கி தமிழினத்துக்காக தன்னையே அழித்துக் கொண்டிருக்கின்றாரே? ஏத்தனையே பேரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த இவரின் பிரச்சினையை, தமிழினத்தின் பிரச் சினையை யார் தீர்க்கப் போகின்றார்கள்.

சீலமுறு தமிழன் சிறப்பினை இழப்பதோ?
சிங்கள இனத்தவர் நம்மை மிதிப்பதோ?
கோலமுறு திரு நாடினைக் கொள்ளையர்...
விரித்த வலையினில் வீழ்ந்து அழிவதோ?
காலனெனும் கொடும் கயவனின் கையி னால்...
கண்ணை இழந்து நாம் கவலையில் நலிவதோ?
நீலமணிக்கடல் நித்தமும் அழுவதோ..?
நாடு பெறும்வரை நம்மினம் தூங்குமோ...?

"ஈழமுரசு" பத்திரிகையில் வெளிவந்த இந்தக் கவிதையை ஒருநாள் திலீபன் வாசித்துவிட்டு என் தோள்களைத் தட்டிப் பாராட்டியதை இன்று எண்ணிப்பார்க்கின்றேன்.

வாரா வாரம் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் எனது கவிதைகளை ஒரு தொகுப்பாக்கி வெளிவிட வேண்டும். என்ற திலீபனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக சென்ற வாரம் தான் அவைகளை ஒன்று சேர்த்து பிரதிகள் எடுத்து ஒருபிரதியை ராஜ னிடமும் மறு பிரதியை யோகியிடமும் கொடுத் திருந்தேன்.

தலைவர் பிரபாகரன் "முன்னுரை" எழுத வேண்டும் என்ற என் விருப்பத்தை திலீ பனிடம் வெளியிட்ட போது அவரும் அதற்குச் சம்மதித்தார். உண்ணாவிரதம் முடிந்த பின் முதல் வேலையாகத் தலைவரிடம் சகல கவிதைகளையும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

தலைவர் பிரபா ஓர் "இலக்கிய ரசிகன்" என்பது பலருக்குத் தெரியாது.

அந்த நெஞ்சுக் கூட்டிற்குள் நிறைந்து கிடக்கும் இராணுவத் திட்டங்களும், அரசியல் புரட்சிக் கருத்துக்களும், இலக்கியக் குவியல்களும் மலை போன்ற தமிழுணர்வும்... அப்பப்பா! ஏராளம் ஏராளம்.! அப்படிப்பட்ட ஒரு தலை வனின் வழிவந்த திலீபனின் ஏழாம் நாள் தியாகப் பயணம் தொடர்கின்றது.
இன்று அதிகாலையிலே நிரஞ்சன் குழுவின்

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் எட்டாம் நாள்

கொட்டகை போடும் வேலையை ஆரம்பித்து விட்டனர். முதல் நாள் இலட்சக்கணக்கான மக்கள் வந்திருந்ததால் போடப்பட்டிருந்த கொட்டகைகள் எல்லாம் சனக்கூட்டத்தினால் நிரம்பி வழிந்தன. ஏராளமானோர் சுடு வெயி லில் காலக்கடுக்க நிற்கவேண்டி ஏற்பட்டதால் நல்லூர் கோவில் மைதானம் முழுவதிலும் படங்குகளினால் கொட்டகை போடத் தொடங் கியிருந்தார்கள்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கும்போது இத் தனை சனக்கூட்டம் இருக்குமென யாருமே எதிர் பார்க்கவில்லை. இலங்கையில் மட்டு மன்றி, இந்தியா மற்றும் பல வெளிநாடுகளில் கூட திலீபனின் தியாகப் பயணம் பற்றியே மக்கயில் பெரும்பாலானோர் பேசிக் கொண்டிருப்ப தாகப், பத்திரிகைகளில் போட்டிருந்தார்கள்.

அத்துடன் தமிழீழத்தின் பல பாகங்களிலும் பரவலாக மக்கள் அடையாள உண்ணா நோன்புகளை மேற்கொண்டு தம் எழுச்சி யைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரில் "மதன்" என்ற இளம் தளபதி ஒருவர், மக்களின் ஆதரவுடன் தன் போராட்டத்தைத் திலீபனின் வழியில் இன் னும் இரண்டு நாட்களில் ஆரம்பிக்க விரும் பதாக என்னிடம் மாத்தா கூறினார். இந்த மதனைத் தெரியாதவர்களே மட்டக்களப்பில் இல்லை. 1985ம் ஆண்டு நான் இந்தியாவில் இருந்தபோது மதன் தமிழீழத்துக்குச் சென் றார். பல போர்க்களங்களைத் தன் இளம் வயதில் சந்தித்தார்.

திருகோணமலையிலுள்ள குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தைத் தகர்த்தவர்களுள், இந்த மதனும் ஒருவர். இதே குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் முக்கிய பங்கெடுத்தவர்கள் என் மனதில் மட்டுமன்றி தமிழ் மக்களின் மனங்களிலும் நீங்காத இடம் பிடித்திருக்கின்றார்கள். அவர்கள் வேறு யாரமல்ல...

லெப்டினன்ட் கேர்ணல் சந்தோஷம், லெப் டினன்ட் கேர்ணல் குமரப்பா, லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன் ஆகியோர்தான்.

தமிழீழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலே திருச்செல்வம், என்ற போராளியும், அவருடன் சேர்ந்து பல பொது மக்களும், உண்ணா நோன்புப் போராட்டத்தினை நாளை தொடங்க விருப்பதாகச் செய்திகள் வெளி வந்தன.

தமிழீழம் எங்குமே அஹிம்சைப் போர் தீப் பிளம்பாக எரிந்து கொண்டிருக்கிறது.

திலீபன் ஓர் மகத்தான மனிதன் தான். இல்லையென்றால் அவன் வழியிலே இத்தனை மக்கள் சக்தியா...?

வல்வெட்டித்துறையிலே திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருக்கும் ஐந்து தமிழர்களைத், தலைவர் பிரபாகரன் நேரில் சென்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படத்தையும், திலீபனின் படத்தையும், பத்திரிகைகளில் அருகருகே பிரசுரித்திருந்தார்கள்.

“ஈழமுரசு” பத்திரிகையில் திலீபனுக்கு அடுத்த மேடையிலே சாகும் வரை (நீராகாரம் அருந்தாமல்) உண்ணாநோன்பு இருந்து கொண்டிருக்கும் திருமதி நல்லையா, செல்வி. குகசாந்தினி, செல்வி. சிவா துரையப்பா ஆகியோரின் படங்களைப் போட்டிருந்தார்கள். மொத்தத்தில் எல்லாமே திலீபனின் அகிம்சைப் போருக்கு வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருந்தன. பத்திரிகைகளில் வெளி வரும் செய்திகள் மட்டுமன்றி ஒவ்வொரு ஊரிலிருந்தும் பல பொதுசன அமைப்புக்கள் அணியாக வந்து உண்ணாநோன்புப் போராட்டத்தில் பங்குபற்றுவதோடு திலீபனுக் காக கவிதை வடிவில் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும் அச்சடித்து விநியோகித்து வந்தன.

இந்த எழுச்சியை, மக்களின் வெள்ளத்தைப் பார்ப்பதற்கு என்றே தினமும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றி சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இந்திய சமாதானப் படையின் ஹெலிகொப்டர்கள்.

புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல. அஹிம்சைப் போராட்டத்திலும் சாதனை படைக்கும் திறன் பெற்றவர்கள் என்ற பேருண்மை, உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது.

திலீபனின் சாதனை உலக அரங்கிலே ஓர் சரித்திரமாகிக் கொண்டிருக்கிறது. உலகிலே முதன் முதலாக ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து ஏழு நாட்களை வெற்றிகரமாக முடித்தவர். என்ற பெருமையுடன் அதோ கட்டிலில் துவண்டு வதங்கி, உறங்கிக் கொண்டிருக்கிறார் திலீபன்.

அவரது கண்கள் இரண்டிலும் குழிகள் விழுந்து விட்டன. முகம் சருகைப்போல் காய்ந்து கிடக்கிறது. தலைமயிர்கள் குழம்பிக் கிடக்கின்றன... வயிறு ஒட்டிவிட்டது. நீரின்றி வாடிக்கிடக்கும் ஓர் கொடியினைப் போல் வதங்கிக் கிடக்கின்றார். அவரால் விழிகளைத் திறக்க முடியவில்லை. பார்க்க முடியவில்லை...
பேச முடியவில்லை...
சிரிக்க முடியவில்லை...

ஆம் ! தூங்க மட்டும்தான் முடிகிறது. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கோல நிலவு தன் எழிலை இழந்து வாடி வதங்கப் போகிறது?

முரளியின் பொறுப்பிலுள்ள மாணவர் அமைப்பைச் (S.O.L.T) சேர்ந்த மாணவ-மாணவிகள் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், சனங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றனர். பக்கத்து மேடையிலே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட்டன. பெரும்பாலானோர் அழுதழுது கவிதை படிக்கின்றார்கள்.

“சிந்திய குருதியால்
சிவந்த தமிழ் மண்ணில்
சந்ததி ஒன்று
சரித்திரம் படைக்க...
முந்திடும் என்பதால்...
முளையிலே கிள்ளிட...
சிந்தனை செய்தவர்
சிறுநரிக் கூட்டமாய்...
“இந்தியப்படையெனும்”
பெயருடன் வந்தெம்
சந்திரன் போன்ற...
திலீபனின் உயிரைப்
பறித்திட எண்ணினால்...
பாரிலே புரட்சி...
வெடித்திடும் என்று...
வெறியுடன் அவர்களை...
எச்சரிக்கின்றேன் !”

மேடையிலே முழங்கிக் கொண்டிருந்த இந்தக் கவிதை என் மனத்திலே ஆழமாகப் பதிகிறது. இன்று திலீபனின் உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது என்பதை அவரின் வைத்தியக் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

இரத்த அழுத்தம் - 80/50
நாடித் துடிப்பு - 140
சுவாசம் - 24

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஒன்பதாம் நாள்

அதிகாலை 5 மணியிருக்கும். கிழக்குப் பக்கத்தே தேர்முட்டி வாசலில் நின்றிருந்த வேப்ப மரத்தினின்று குயில் ஒன்று கூவிக் கொண்டிருக்கிறது. “கூ... கூ...குக்...கூ...” அதன் குரலில் தொனித்த விரக்தியின் சாயலைக் கேட்ட நான், திலீபனை ஏக்கத்துடன் பார்க்கின்றேன். அந்தக் குயில் எதை இழந்து இப்படிக் கூவுகிறதோ தெரியவில்லை.



ஆனால் இந்தக் குயில்...?

எம்மை - எம் இனத்தைக் காக்க தன்னையே இழந்து கொண்டிருக்கிறதே... இந்த சிறு குயிலின் சோக கீதம் உலகத்தின் காதுகளில் இன்னுமா விழவில்லை...?

திலீபனை நன்றாக உற்றுப் பார்க்கிறேன். அவரின் உடலிலுள்ள சகல உறுப்புகளும் இன்று செயலற்றுக் கொண்டிருக்கின்றன. உதடுகள் அசைகின்றன. ஆனால் சத்தம் வெளிவரவில்லை. உதடுகள் பாளம், பாளமாக வெடித்து வெளிறிவிட்டிருந்தன. கண்கள் இருந்த இடங்களில் இரு பெரிய குழிகள் தெரிகின்றன.

இன்று காலை எட்டரை மணியில் இருந்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினேழு பாடசாலைகளிலிருந்து சுமார் 5000 மாணவ மாணவிகள் அணிவகுத்து வந்து திலீபனைப் பார்த்துக் கண்கலங்கியவாறு மைதானத்தை நிறைத்துக் கொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் ஏராளமாக வந்து பார்த்தனர். காலை ஒன்பது மணியளவில் யாழ். கோட்டை இந்திய இராணுவ முகாம் முன்பாக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் பிரதான வாசலில் அமர்ந்து, இந்தியப் படையினர் வெளியே வராதவாறு மறியல் செய்யத் தொடங்கினர்.

பொதுவாக திலீபனின் உடல் நிலை மோசமடைந்து வந்த அதே வேளை பொது மக்களின் குமுறலும் அதிகரிப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. திலீபன் தங்கள் குடும்பத்தில் ஒருவன் என்ற எண்ணமே ஒவ்வொருவர் மனதிலும் நிறைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இன்று காலையில் இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் அவர்கள் ஹெலிகொப்டர் மூலம் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். பின்னர் இருவரும் தனித் தனியான வாகனங்களில் புறப்பட்டு யாழ் கோட்டை இராணுவ முகாமுக்குள் சென்றனர். ஒரு மணி நேரத்துக்கு மேலாக இருவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்... ஆனால் கிடைத்தது ஏமாற்றம்தான் !

கோட்டை வாசலில் மறியல் செய்த ஆயிரக் கணக்கான பொது மக்களின் எழுச்சியைக் கண்ட பின்னர் தான் தளபதியவர்கள் தலைவர் பிரபாகரனைக் காணப்பறந்து வந்திருக்க வேண்டும்.

இன்று காலை 10 மணியளவில் திலீபனின் மேடைக்கு அருகேயுள்ள மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

இந்திய வம்சாவழியினர் சார்பில் பேசிய திரு. கணேசராசா என்பவர் “பாரத அரசு விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கையை ஏற்று திலீபனின் உண்ணா நோன்பை முடித்து வைக்க வேண்டுமென்றும் இல்லையேல் இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு இந்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்” என்றும் பேசினார்.

திலீபனை பார்வையிட வருவோர் தங்கள் கருத்துக்களை சில நாட்களாக எழுத்து மூலம் வழங்கி வருகின்றனர். இதற்காக நான்கு போராளிகள் கை ஓயாமல் ஓர் மூலையில் அமர்ந்திருந்து எழுதிக் கொண்டிருக்கின்றனர். இதுவரை 1500 இற்கும் மேற்பட்டோர் தமது கருத்துக்களை மிக உருக்கமாக எழுதியிருந்தனர்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச அலுவலகங்களிலும் வேலைகள் நடைபெறாத வண்ணம் பொதுமக்கள் மறியல் செய்து வருகின்றனர்.

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவிலும் புங்குடுதீவு அரசாங்க அதிபர் பிரிவிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திலீபனுக்கு ஆதரவாக ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பையும் மறியலும் இருந்தனர். இதைப் போல் பல கிராமங்களில் சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து மக்கள் உண்ணா நோன்பு கடைப்பிடித்தனர்.

எங்கும் - எதிலும் திலீபன் என்ற கோபுரம் மக்கள் சக்தியினால் உயர்ந்து விட்டதைக் காண முடிந்தது. ஆம் ! மக்கள் புரட்சி வெடிக்கத் தொடங்கிவிட்டது.

திலீபனின் ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு பல தொண்டர் நிலையங்கள், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு மகஜர்களை இன்று அனுப்பி வைத்திருப்பதாகச் சில தமிழ்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக் கின்றன.

1. யாழ் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு. (இந்தியத் தூதுவர் ஊடாக அனுப்பப்பட்டது)
2. வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம். (பிரதி தமிழக முதல்வருக்கும் அனுப்பப்பட்டது)
3. வட மாகாணம் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்
4. தொண்டைமானாறு கிராம மட்ட கடற்தொழில் சமூக அபிவிருத்திச் சங்கம்
5. வட பிராந்திய போக்குவரத்து ஊழியர் சங்கம் என்பன அவற்றில் சிலவாகும்.

இன்று மன்னாரிலுள்ள இந்திய அமைதிப் படை முகாமுக்கு முன், திலீபனுக்கு ஆதரவாக மகஜர் ஒன்றைக் கொடுப்பதற்காக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் திரண்டு சென்ற போது ஆத்திரமடைந்த இந்திய அமைதிகாக்கும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது ஒருவர் அதில் இறந்து விட்டதாகவும், 18 பேர் படுகாயமடைந்ததாகவும் எமது தகவல் தொடர்புச் சாதனச் செய்திகள் கூறுகின்றன.

இன்று மாலை என் காதில் ஓர் இனிய செய்தி வந்து விழுந்தது. இந்தியத் தூதுவர் டிக்ஷித்- தலைவர் பிரபாவைச் சந்திப்பதற்கு வந்திருக்கிறார் என்பது தான் அது! ஆம் பிற்பகல் 1-30 மணியிலிருந்து பிற்பகல் 6-30 மணிவரை, இரு குழுக்களும் அமைதியாகப் பேச்சுவார்த்தை நடத்தின. இந்தியத் தரப்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள்:- தூதுவர் திரு. ஜெ. என். டிக்ஷித், இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி, லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங், அமைதி காக்கும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீத் சிங், பிரிகேடியர் பெர்னான்டஸ், இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி, கப்டன் குப்தா ஆகியோர்

விடுதலைப் புலிகளின் தரப்பில்:- தலைவர். திரு. வே. பிரபாகரன், திரு. அன்ரன் பாலசிங்கம் (அரசியல் ஆலோசகர்), திரு. செ. கோடீஸ்வரன் (வழக்கறிஞர்), திரு. சிவானந்த சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்ததும், என்னை அறியாமலே என் மனம் துள்ளிக் குதித்தது. ஒன்பதாம் நாளான இன்று ஒரு நல்ல முடிவு எப்படியும் ஏற்படும்... அந்த நல்ல முடிவு ஏற்பட்டதும் உடனடியாக திலீபனை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதித்து அவசர சிகிச்சைப் பிரிவில் விசேட சிகிச்சைகள் அளித்தால் 24 மணித்தியாலங்களில் அவர் ஓரளவு பழைய நிலைக்குத் திரும்பிவிடுவார்...

எமக்காக இத்தனை நாட்களாகத் துன்பப்பட்டு அணு, அணுவாகத் தன்னை வருத்தி

கொண்டிருக்கும் அந்த நல்ல இதயம், நிச்சயம் பூத்துக் குலுங்கத்தான் போகிறது... என்ற கற்பனைக் கடலில் இரவு 7-30 மணிவரை நானும், என் நண்பர்களும், மிதந்து கொண்டிருந்தோம்.

இரவு 7-30 மணிக்கு அந்தச் செய்தி என் காதில் விழுந்தபோது இந்த உலகமே தலைகீழாக சுற்றத் தொடங்கியது... அந்தக் கற்பனைக் கோட்டை ஒரே நொடியில் தகர்த்து தவிடு பொடியாகியது.

ஆம் ! பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தூதுவரால் வெறும் உறுதி மொழிகளைத் தான் தர முடிந்தது... திலீபனின் உண்ணா நோன்புப் போராட்டம் ஒரு தொடர் கதையாகவே ஆகிவிட்டது. எழுத்தில் எந்தவித ஊறுதி மொழிகளையும் தர இந்தியத் தரப்பு விரும்பவில்லை என்பதை அவர்களின் நடத்தை உறுதி செய்தது. திலீபனின் சாவுப் பயணம் இறுதியானது என்பதையும் அது உணர்த்தியது.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பத்தாம் நாள்

பெற்றோர், பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர் இவர்களின் யாராவது நம் கண் முன்னாலே இறக்க நேரிடும்போது மனம் துன்பத்தில் மூழ்கிவிடுறது. கண்கள் கண்ணீரைச் சொரிகின்றது. ஆனால், இவர்களின் ஒருவர் அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருபதைப் பார்க்கும் போது... துயரத்தின் எல்லைக்கே நாம் போய்விடுகின் றோம். உலகமே சில வினாடிக்குள் வெறுத்துப் போய் விடும். கண்களில் அழுவதற்குக் கண்ணீர் கூட எஞ்சியிருக்காது.

ஆனால், இவர்களில் ஒருவர் ஒருசொட்டு நீர் கூட அருந்தாமல் 10 நாட்களாக எம் கண் முன்னால் அணு அணுவாகச் சாவின் விளிம்பில் நின்று தத்தளிப்பதைப் பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் போது ஏற்படும் மன வேதனை இருக்கிறதே - அப்பப்பா! அதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. ஆத்துனை கொடுமை அது. அனுபவித்தவர்களுக்கு மட்டும் புரியும்.

அதை நான் என் வாழ்நாளில் முதல்முறையாக அனுபவிக்கிறேன். இதையெல்லாம் என் கண்களால் பார்க்கவேண்டும். என்று முன்பே தெரிந்திருருமால், நான் திலீபன் இருந்த பக்கமே தலைவைத்துப் படுத்திருக்கமாட்டேன்.

நான் முற்றுமுழுதாக நினைத்திருந்த தெல்லாம் இதுதான். இந்தியா ஒரு பழம்பெருமை மிக்க ஜனநாயக நாடு. காந்தி பிறந்த பொன்னான பூமி. அகிம்சையைப் பற்றியும் - உண்ணாநோன்பைப் பற்றியும் உலகில் பெருமைப்படக்கூடிய அளவுக்கு காந்தியடிகள் மூலம் புகழ்பெற்ற நாடு. அப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் நீதிகேட்டு அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த திலீபன், உண்மையிலேயே பாக்கியசாலி தான்.

ஏனெனில், மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த நாடு நிச்சயமாக திலீபனுக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டத்தான் செய்யும்... ஆதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஓரளவாது இந்திய அரசு நிறைவேற்றத் தான் போகிறது... என்ற எண்ணத்தில்தான் மூடிக்கொண்டு... இந்தத் தியாக வேள்வியில் என்னால் முடிந்த பங்கைச் செலுத்துவதற்குத் தயாரானேன். நான் நினைத்ததெல்லாம்... இவ்வளவு விரைவில் மாயமான் ஆகிவிடும் என்று நான் கனவு கூடக்கண்டிருக்க வில்லை... எத்தனை பெரிய ஏமாற்றம் எத்தனை பெரிய தவிப்பு?

இன்றைய நிலையில் திலீபன் இருந்த நிலையைப் பார்த்தபோது. நம்பிக்கையே அற்றுவிட்டது. இனி ஒரு நல்ல திர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் பிறகு திலீபனை ஆஸ்பத்திரிக்கு அனுமதித்தாலும் காப்பாற்ற முடியுமா என்பது என்னைப் பொறுத்த அளவில் கேள்விக்குறிதான்.

அப்படியிருக்க... கடவுளே! மனித தர்மத்துக்கு கிடைக்கப் போகும் பரிசு இதுதானா?

திலீபனைக் கொல்வதற்கு அவர்கள் திடமனம் பூண்டுவிட்டனர். என்பது புரிந்துவிட்டது.

அதோ வானத்தில் ஓர் வயோதிப உருவம் முகில்களைக் கிழித்துக்கொண்டு என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது. அவ்வுருவத்தின் தலையிலே மயிரைலே... கண்களிலே வெள்ளை கண்ணாடி... அந்தக் கண்களில் அருவியாக வழிந்து கொண்டிருக்கிறது...அது என்ன? இரத்தமா? அந்த “மனிதன்” இரத்தக் கண்ணீர் சொரிகிறாரே... ஏன்? ஏன்? ஏன்? அடுத்து வேறு ஒரு உருவம்!

அதன் தலையிலும் மயிரைக் காணவில்லை ... வர்னத்தின் நடுவலே வெள்ளரசு மரத்தின் அடியிலே அமர்ந்திருக்கும் அந்த உருவம் எம்மை, இல்லை திலீபனையே பார்த்துக் கொண்டிருக்கிறது. பௌர்ணமி நிலவில் அந்தக் கருணை முகத்திலே... கருணை யைத் தேடுகின்றேன்... ஆனால் காணமுடியவில்லை... ஏன்... ? ஏன்...?

இந்திய மண்ணில் என்றோ தோன்றி மறைந்துவிட்ட அந்த இரு சோதிகளும் அல்ல, உருவங்களும் வெகுநேரம் திலீபனைப் பார்க்க முடியாமல் வெட்கித் தலை குனிந்த வாறு சிறிது சிறிதாக என் கண்களை விட்டு மறைந்து கொண்டிருக்கின்றன...

நேற்று சிறிதளவாவது அசைந்து கொண்டிருந்த திலீபனின் கை, கால்கள் இன்று அசைவற்று சோர்ந்து விட்டன. உள்மூச்சு மட்டும் பலமாக இழுத்துக்கொண்டிருக்கின்றது. கண்கள் உச்சியிலே குத்திவிட்டு நிற்கின்றன. உடலின் நிறம் சிறிது நீலமாக மாறத்தொடங்கி விட்டது.

நாடித்துடிப்பைப் பரிசோதிக்கின்றேன் 52.
இரத்த அழுத்தம் -80/50.

சராசரி மனிதனின் அளவுகளைவிட எல்லாமே மிகவும் குறைந்துள்ளன. இனித் திலீபனுக்கு எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம். ஐயோ அதைநினைத்துப் பார்க்கவே நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கின்றது. நெஞ்சே இந்தக் கணமே நீ வெடித்து விடக்கூடாதா?



அன்று திலீபன் கிட்டுஅண்ணாவைப் பார்க்க வேண்டும் என்றாரே? இதற்காகத்தானா? இந்திய அரசு தன் கோரிக்கைகளை நிறைவேற்றாது என்பதை அவர் உள்ளுர அறிந்தவர் போல் அன்று உண்ணாவிரத மேடையிலிருந்து எவ்வளவு தீர்க்கதரிசியாக இதைக் கூறினார்.

“நான் இறப்பது நிச்சயம்... ஆப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து... தமிழீழம் மலர்வதைப்பார்ப்பேன்...”

இந்த வார்த்தைகளை இன்று ஆயிரக்கணக்கான மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

திலீபன், கிட்டு அண்ணா மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தானோ அதைப் போல் அவரும் திலீபன் மீது உயிரையே வைத்திருப்பது எனகத் தெரியும்.

கிட்டு அண்ணா யாழ் மாவட்ட தளபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணக் குடா நாட்டை



புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரும் பாடுபட்டு உழைத்தவர். திட்மிடும் சாதுர்யம் அதை நிறைவேற்றுவதில் மிகச் சாதுர்யம்... எதிரியைப் பந்தாடுவதில் ராஜதந்திரம். இவற்றுடன் குறிதவறாமல் சுடுவதிலும் தன்னிகரற்றவரான தளபதி கிட்டுவும், யாழ் மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவன் திலீபனும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிசம் என்று தான் கூறவேண்டும். இவர்களை உறுப்பினர்களாகப் பெற்ற உறுதி மிக்க தலைவனை நாம் பெற்றுள்ளோம்.

கிட்டு அண்ணாவைப் பார்க்கவேண்டும் என்று திலீபன் அன்று மேடையிலிருந்து கூறிய போது அதை நான் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் இன்று...? இந்த நிலையில் அவரது அந்த ஆசை நிறை வேறாமலேயே என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

இதை என்றோ ஒரு நாள் கிட்டு அண்ணாவிடம் கூறும் போது அவர் மனம் எவ்வளவு வேதனையடையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க எனக்கு இந்த உலகத்தின் மீது வெறுப்பு வருகின்றது. இந்த மண்ணிற்காக நாம் எத்தனை அரும்பெரும் உயிர்களையெல்லாம் இழந்திருக்கின்றோம்.

நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. தமது துப்பாக்கிகளைச் சிங்கள இராணுவத் திடமிருந்து காப்பாற்று வதற்காக காயப்பட்டு நடக்க முடியாத நிலையில் தம்மைச் சுட்டு விட்டு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தப்பி ஓடும் படி கட்டளையிட்ட சீலன், ஆனந்தன்...

இயக்க இரகசியங்கள் அடங்கிய முக்கிய விடையங்களையும் கோப்புக்கனையும் காப்பாற்றுவதற்காக கடைசிவரையும் தாக்குப் பிடித்து அவகளை மற்றவர்களிடம் எடுத்து அனுப்பிவிட்டு தன் உயிரைத் தியாகம் செய்த “பண்டிதர்”.

இயக்கப் போராளிகள் குடியிருந்த இடமொன்றில் வெடிகுண்டின் கிளிப் எதிர்பாராமல் விலகிவிட மற்றவர்களை அந்த அழியிலிருந்து காப்பாற்றுவதற்காக வெடிகுண்டை தன் வயிற்றுக்குள் அமுக்கிக் கொண்டு குப்புறப்படுத்து தன் உடலையே சிதறப்பண்ணி மற்றவர் களை அழிவினின்றும் காப்பாற்றிய தியாக வீரன் “அன்பு”.

இவர்களைவிட அவ்வப்போது சிங்கள இராணுவத்திடம் பிடிபடும் நிலையில் இயக்க ரகசியங்களை காப்பாற்றுவதற்காக சயனைட்டைத் தின்று ஈகைச் சாவடை ந்தவர்கள் உலக வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத்தான் ஏராளம் ஏராளம்.

இந்த வழிகளையெல்லாம் விட தன் வழி மிகவும் வேறுபட்டதாக இருக்கட்டும் என்பதற்காக திலீபன் இந்த முடிவிற்கு வந்தார்?

இன்று மாலை வசாவிளான் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு ஆதரவாளர் அங்கிருந்து உண்ணாநோன்பு மேடை வரை தூக்குக் காவடியுடன் அழுதழுது வந்தது எல்லோரையும் கவர்ந்த ஒன்றாகும்.

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி, அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக, மற்றும் சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களிலெல்லாம் அடையாள உண்ணாநோன்பும் மறியல் போராட்டமும் பரந்தளவில் நடைபெற்றது.

பளையிலிருந்து நாவற்குழி வரையுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 6000 மாணவ மாணவிகள் அழுத கண்களும் சிந்திய மூக்குமாக ஊர்வலமாக வந்து நல்லூர் மைதானத்தை நிறைத்தனர். அவர்களின் ஊர்வலத்தில் பார்க்குமிடமெல்லாம் புலிக் கொடிதான் பறந்துகொண்டிருந்தன.

நாவந்துறையைச் சேர்ந்த மக்களின் உணர்ச்சி வெள்ளத்தை இன்று வந்த அவர்களின் ஊர்வலத்தின் மூலம் தான் அறிய முடிந்தது.

முல்லைத்தீவு மாவட்டமெங்கும் எங்கும் உண்ணாநோன்பும் மறியலும் நடக்காத இடமே இல்லை என்று கூறிவிடலாம்.

“திலீபன்” என்ற இந்தச் சிறிய கூட்டிற்குள்

இருக்கும் இதயத்தை எத்தனை இலட்சம் மக்கள் தான் நேசிக்கிறார்கள்." மன்னிக்கவும் இலட்சமல்ல கோடி! தமிழ் நாட்டிலும் ஏன்? ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ள தமிழர்கள் எல்லோருமே திலீபனுக் காக கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின் றார்கள்.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பதினோராம் நாள்

இன்று திலீபனின் உடல் நிலையைப் பற்றி எழுத முடியாதவாறு என் கை நடுங்குகிறது. அவரது உடலின் சகல உறுப்புகளும் உணர்ச் சியின்றிக் காணப்பட்டன. கை, கால்கள் சில சமயம் தானாகவே அசைகின்றது. அவர் இன் னும் உயிரோடு இருக்கிறார் என்பதை இதன் மூலம்தான் அறிய முடிகிறது.

"கோமா" வுக்கு முந்திய நிலையில் (Semi Coma) ஒரு நோயாளி எவ்வளவு கஷ்டப் படுவாரோ அதைப்போல், அவர் உடல் தன்னை அறியாமலே அங்குமிங்கும் புரளத் தொடங்கியது. அவர் படுத்திருந்தது சிறிய கட்டில்... ஆகையால், தேவரிடம் சொல்லி, பெரிய கட்டிலொன்று கொண்டுவரச் செய்து, அதில் திலீபனைப் படுக்க வைத்தோம்.

அப்போதுதான் அவர் கட்டிலில் ஏற்கனவே சிறுநீர் கழித்திருந்ததைக் காண முடிந்தது. மாறன், நவீனன், தேவர் ஆகியோர் மிகக் கஷ்டப்பட்டு அவரது ஆடைகளை மாற்றி, புத்தாடை அணிவித்தனர். அவர் சுயநினை வோடு இருக்கும்போது புது ஆடைகளை அணியும்படி பலமுறை நான் கேட்டபோது, பிடிவாதமாக மறுத்து விட்டார்.

"சாகப் போகிறவனுக்கு எதுக்கு வாஞ்சி அண் ணை புது உடுப்பு?" என்று, தனக் கேயுரிய சிரிப்புடன் கேட்டார்... அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்...

பிற்பகல் 4 மணியளவில் திலீபனின் உடல் நிலை மிகவும் மோசமான நிலைக்கு வந்தது. ஆம் அவர் முழுமையான கோமாநிலைக்கு வந்துவிட்டார்...

மைதானத்தில் கூடியிருந்த சனக் கூட்டத்தினர் திலீபனின் நிலைகண்டு மிகவும் வருந் தினர்... ஒவ்வொருவர் முகத்திலும் சோகத் திரை படர்ந்திருந்தது.

இன்று காலையிலிருந்து, இலட்சக்கணக்கான மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து குவிந்து கொண்டிருந்தனர். லொறிகள், பஸ்கள், வான்கள், கார்கள், ஏன்? மாட்டு வண்டிகளிற் கூட அவர்கள் சாரி, சாரியாக



வந்து நிறையத் தொடங்கினர். யாழ்ப்பாணத் திலோ, அல்லது இலங்கையின் எந்தப் பகுதியி லோ இதுவரை எந்த நிகழ்ச்சிக்கும் இப்படி மக்கள் வெள்ளம்போல் நிறைந்ததாகச் சரித் திரமே இல்லை.

வட்டுக்கோட்டையில் இருந்து மட்டும் 50 மாட்டு வண்டிகள் புலிக்கொடிகளை ஏந்திய வாறு, மக்களை நிறைத்துக் கொண்டு வரிசை யாக வந்து சேர்ந்தன.

இன்று பிற்பகல் 1.30 மணியுடன் முல்லைத் தீவில் உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்த திருச்செல்வம் என்ற விடுதலைப் புலி உறுப்பினர், 60 மணித்தியாலங்களை வெற்றிகரமாகத் தாண்டிவிட்டார்.

மட்டுநகரில் மதன் என்ற விடுதலைப் புலி இன்று காலை 10.40 மணிக்கு, சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் திலீ பனுக்கு ஆதரவாக ஆரம்பித்தார்.

அதேபோல் திருக்கோணமலையிலும் "கிருபா" என்ற போராளி இன்று மாலை ஆரம் பித்துவிட்டார். திருக்கோணமலை. முல்லைத் தீவு, மட்டுநகர் ஆகிய மாவட்டங்களில்தான் கடந்த 10 ஆண்டுகளாக, சிறீலங்கா அரசு திட்டமிட்டவாறு சிங்கள மக்களைக் குடியேற்றி வருகின்றது.

1983 ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையிலே படுகொலை செய்யப்பட்ட தமிழர்களில் தங்கத்துரை, குட்டிமணி போன் றோர் மிக முக்கியமானவர்கள். ஜெயிலி லிருந்த சிங்களக் கைதிகளைத் தூண்டிவிட்டு 52 பேர்களைக் கொல்வதற்குத் திட்டம் வகுத் துக் கொடுத்தது வேறு யாருமல்ல, கனம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான்.

52 பேர்களைத் திட்டமிட்டபடி கொலைசெய்த நூற்றுக்கணக்கான சிங்கள ஆயுள் தண் டனைக் கைதிகளும் என்ன பரிசு அளிப் பதென்று ஜே. ஆர். ஒரு வருடமாக மண்டை யைப் போட்டு உடைத்தார். கடைசியில் அனை வரையும் அவர்களின் குடும்பங்களுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள "டொலர் பாம்", "கென்ற் பாம்" ஆகிய இடங்களில் நவீன வீடுகளைக் கட்டிக்கொடுத்து, குடி அமர்த் தினார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5000 ரூபா பணமும், 2 ஏக்கர் நிலமும், குடியிருக்க வீடும் வழங்கப்பட்டன. இது மட்டுமா? கொலைகாரர் களின் பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலை களும் ஏற்படுத்தப்பட்டன. இது வெறும் பொய் யல்ல நடந்த உண்மை. என்ன ஆச்சரியம்? உலக வரலாற்றில் எந்த நாட்டிலாவது இப்படி நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அப்படிப்பட்ட ஜே. ஆர். என்ன சொல்கிறார் தெரியுமா? தான் உண்மையான "காந்திய வாதி" என்று கூறுகிறார். என்ன கேலிக்கூத்து இது! காந்தீயம் அத்தனை மலிவானதா?

இத்தனை இனத்துவேசியான ஜே. ஆருடன் "தமிழர் நலம் காப்பது" என்ற பெயரில் ஓர் ஒப்பந்தம் செய்வதென்றால், அது நடைபெறக் கூடிய காரியமா? அல்லது நடக்கத்தான் விடுவாரா அந்தக் குள்ளநரி?

ஒப்பந்தம் சரிவர அமுலாக வேண்டும் என்பற் காகத்தான். அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட்டு - திலீபன் சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவர் "தமிழீழத்தைப் பிரித்துத் தா" என்று கேட்டு உண்ணாவிரதமிருந்தால் அதை எதிர்ப்பதில் நியாயம் உண்டு: இதை ஏன் எதிர்க் கிறார்கள்? புரியவேயில்லை!

நீங்கள் இருவரும் கையெழுத்துப் போட்ட



ஒப்பந்தத்தை ஒரு திலீபன் சரிவர நிறைவேற்றும் படி கேட்கிறான். இது நியாயமான கோரிக்கையா இல்லையா...? இதைத் தமிழ் மக்களே முடிவு செய்யட்டும்.

இன்று (25.09.87) இலங்கைக் கொம்னிஸ்ட் கட்சியின் வடபிராந்தியக் குழு "இந்திய இராணுவத்தின் அத்துமீறலைக் கண்டிக்கிறோம்." என்ற தலைப்பில் ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருந்தது. வடக்கும் - கிழக்கும் இணைந்த பிரதேச சுயாட்சியையும், நியாயமான சகல உரிமைகளையும் வழங்க முன்வர வேண்டுமென்று அது தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இன்று திருகோணமலையில் விறகு ஏற்றிச் சென்ற எட்டு அப்பாவித் தமிழர்கள் சிங்களக் குடியேற்றவாசிகளால் வெட்டிக் கொல்லப்பட்டதாக, பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

நாளைமுதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச அலுவலகங்களும், தனியார் நிறுவனங்களும், போக்குவரத்துச் சேவை ஊழியர்களும் திலீபனுக்கு ஆதரவாக உண்ணாநோன்பும் மறியலும் செய்து, தமது வேலைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் "நிதர்சனம்" தொலைக்காட்சிச் சேவை கடந்த 10 நாட்களாக தினமும் இரவு 7 மணிமுதல் விசேட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றது.

இன்றிரவு திலீபனின் உடல்நிலை மேலும் மோசமடையத் தொடங்கியது. அவர் சுவாசிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

திலீபன் சுயநினைவுடன் இருந்தபோது அவரால் விரும்பிக் கேட்கப்படும் பாடல் ஒன்றை, இன்றிரவு மேடையில் ஒலிபரப்பினார்கள்.

அந்தப் பாடல் எனக்கு மட்டுமன்றி, திலீபன் இருந்த அந்த நிலையில் அனைவரினது கண்களில் இருந்தும் கண்ணீரை வர வழைத்து விட்டது.

ஓ! மரணித்த வீரனே!
உன்ஆயுதங்களை எனக்குத் தா
உன்சீருடைகளை எனக்குத் தா
உன்பாதணிகளை எனக்குத் தா
(ஓ! மரணித்த)

கூட்டத்திலே சில பெண்கள் இந்தப் பாடலைக் கேட்டதும் விம்மி விம்மி அழத் தொடங்கினர்.

அந்த வேதனைமிக்க இரவு சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருக்கிறது. இரவே! நீ ஏன் இரக்கமில்லாமல் எமைவிட்டு மறைந்து கொண்டிருக்கிறாய்?

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பன்னிரண்டாம் நாள்

1987ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் மகத்தான சரித்திரம் படைத்த நாள்.

இன்று அதிகாலை 5 மணிக்கு ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்து விட்டது! திடீரென்று மின்சாரம் தடைப்பட்டு விட்டது. எங்கும் ஒரே இருள் மயம். காற்றும் பலமாக வீசத் தொடங்கியது.

பல நாட்களாக திலீபனுடன் சேர்ந்து நானும் எனது நண்பர்களும், முழுமையான தூக்கமில்லாமல் இருந்ததால் இன்று மிகுந்த சோர்வுடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தோம். மாறன், ராஜன், தேவர், இரு நவீனங்கள், திலீபனின் அண்ணன் இளங்கோ, எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு தூங்கினோம். பன்னிரண்டு நாட்கள் உடல்களைச் சாறாகப் பிழிந்தெடுத்த அசதித் தூக்கமின்றி, அது வேறொன்றுமில்லை. மேடைக்கு முன்னே அமர்ந்திருந்த ஒருவர் என்னை வந்து தட்டி எழும்பியதும் நான்தான் முதலில் திடுக்கிட்டு எழும்பினேன். கும்மிருட்டில் என்ன செய்வதென்று தெரியாமல். "நவீனன்..." என்று அழைத்தபடி திலீபனின் கட்டிலில் கையை வைத்தேன். அவர் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார். அதனால் மனம் அமைதியடைந்தது. அவரின் உடல் "ஜில்" லென்று பனிக்கட்டியைத் தொடுவது போல் குளிர்ந்து காணப்பட்டது.

மனம் "பட பட" வென்று அடிக்கத் தொடங்கியது... மீண்டும் "நவீனன்" என்று அழைத்தேன். நவீனன் எழும்பி விட்டான். ஐந்து நிமிடங்களில் மேடையில் ஒரு பெரிய மெழுகுவர்த்தி எரியத் தொடங்கியது... மெழுகுவர்த்தியின் ஒளியிலே திலீபனின் முகம் நன்றாகத் தெரிந்தது... ஒரே வினாடி தான்! அதற்குள் அந்த மெழுகுவர்த்தி காற்றின் வேகத்தினால் அணைந்துவிட்டது. பலத்து வீசிய காற்று அதை மீண்டும் எரிய விடுமா? என்பது சந்தேகமாகத்தான் இருந்தது... ஆனால், ஐந்து நிமிடங்களில் மின்சாரம் வந்துவிட்டது... திலீபனின் நிலை எல்லையைக் கடந்து விட்டது என்பது எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. அதனால், என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது... நாடித்துடிப்பைப் பரிசோதிக்கிறேன். கணிக்க முடிய வில்லை... மிகவும் மெல்லியதாக அடிக்கிறது... உடனே இரத்த அமுக்கத்தைக் கணிக்கின்றேன்... அது மிகவும் குறைவாக இருக்கிறது... 50/? என்ற நிலையில் ஒரு நோயாளியால் இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உயிர் வாழ முடியும் என்பது எனக்குத் தெரியும். உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் இருந்தது.

திலீபன் அடிக்கடி கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. "வாஞ்சி அண்ணை! எனக்கு என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பலவந்தமாகவோ, சுய நினைவற்ற நிலையிலோ தர முயற்சிக்கக்கூடாது... அப்பிடி என் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் நான் இறக்குமட்டும் எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது... சுயநினைவோடு என்றாலும் சரி... சுய நினைவில்லை என்றாலும் சரி... இதுக்குச் சம்மதிக்கிறனெண்டு சத்தியம் செய்து தாருங்கோ..." என்று விடாப்பிடியாக நின்று என்னிடம் சத்தியம் வாங்கிய பிறகுதான் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தார் அவர். அப்படியிருக்க, அவர் விருப்பத்துக்கு மாறாக எப்படி அவருக்குச் சிகிச்சையளிப்பேன்? எப்படி அவருக்கு நீர் ஊட்டுவேன்? மனிதநேயத்தையும் - அதன் தார்ப்பரியங்களையும் மதிக்கும் ஓர் வைத்திய சேவையாளன் என்ற நிலையைத் திலீபன் விஷயத்தில் நிறை வேற்ற விடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது?... எது? ஆம்ஆ "சத்தியம்!" என்ற இந்த ஐந்து எழுத்துக்களுக்காகத் தானே திலீபன், "அகிம்சை" என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங்களினால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், "கட்டுப்பாடு" என்ற நல்வழியிலே கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் திலீபனை என் கண்ணெதிரிலேயே "பலி" கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை. என் கடமையைச் செய்வதற்காக மேடையின் பின் பக்கம் இறங்கிச் செல்கிறேன். அங்கே பிரதித் தலைவர் நிற்கிறார். அவரிடம் திலீ பனின் உடல் நிலையின் அபாயகரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறேன். திலீபனின் உடல் நிலை மோசமாகிவிட்ட விடயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பொதுமக்களும் மேடையைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். திலீபனுக்கு கடைசி நிமிடம் வரையும் ஒருவித சிகிச்சையும் அளிக்க முடியாமல் எமது கைகள் கட்டப்பட்டிருந்ததற்கு வேறு முக்கிய காரணமும் ஒன்று இருந்தது. எமது காதில் விழக்கூடியதாகவே பல எதிரணி உறுப்பினர்களும், எமது இயக்கத்துக்கு எதிரானவர்களும் பேசியதைக் காதால் கேட்டவர்களில் நானும் ஒருவன்.

"புலிகள் தந்திரமாக மக்கள் மனத்தை மாற்றுவதற்காக உண்ணாநோன்பு என்ற பெயரிலே தண்ணியைக் குடிச்சுக்கொண்டு இருப்பார்கள்... ஆர் இதைக் காணப்போகினம்? கடைசியில் 5 தீர்மானங்களும் நிறைவேறுமட்டும் வைத்தியம் செய்து ஆளைச் சாக விடமாட்டினம்... இதுதான் இந்த சாகும் வரை நீர் அருந்தாமல் உண்ணாநோன்பு இருப்பதன் உண்மை..." இப்படியான பேச்சுக்களுக்கு உண்மை வடிவம் கொடுத்து, "புலிகள் பொய்யர்கள்" என்ற கெட்ட பெயரை வர விடாமல் காப்பாற்றுவதற்காகவும் எம் கைகள் கட்டப்பட்டிருந்தனவே தவிர, வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

எம் கைகள் மட்டும் கட்டப்படாமல் இருந்திருந்தால், எமது உயிரினும் மேலான, ஈகைச்சுடர் திலீபனை எமது உயிர்களைக் கொடுத்தாவது காப்பாற்றியிருப்போம்... ஆனால்... முடியவில்லையே? விதி! தன் வலிய கரங்களை மிக





நன்றாகவே திலீபனின் கழுத்தில் இறுக்கி விட்டான். உயிருடன் அந்த மனித தெய்வம் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருப்பதை என் கண்களால் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டமைக்காக, நான் வெட்கப்பட்டேன். வேதனைப்பட்டேன். ஆனால், என்ன செய்ய முடியும்? 265 மணித்தியாலங்கள் தனது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றி கரமாக நடாத்தி முடித்த அந்த ஈகையர் திலீபன், இன்று காலை (26.09. 1987) 10.48 மணியளவில், எம்மையெல்லாம் இந்தப் பாழும் உலகில் பரி தவிக்க விட்டு விட்டுத் தான் மட்டும் போய் விட்டான்.

ஆம்! தமிழர்தம் விளக்கு அணைந்து விட்டது! அணைந் தேவிட்டது! வைத்தியர் சிவகுமார் அவர்கள், திலீபன் இறந்த பின் அவரைப் பரிசோதனை செய்து தனது இறுதியான முடிவைச் சொல்லிவிட்டு, திலீபனின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்த போது, மக்கள் கதறி அழத் தொடங்கினர்... எங்கும் அழுகைச் சத்தம்... விம்மல் ஒலி... சோக இசை... வானமே இடிந்து விட்டதைப் போன்ற வேதனை எல்லோரையும் ஆக்கிரமித்திருந்தது. வானத்து நிலவு கீழே விழுந்து விட்டது போன்ற உணர்வு! காலை 11 மணிக்கு "என்பார்ம்" செய்வதற்காக, அவரது உடலை யாழ். வைத்தியக் கல்லூரிக்கு எடுத்துச் சென்றோம். பிற்பகல் 4.15 மணியளவில் திரும்பவும் அதே மேடைக்கு முன்பாக அவரின் புகழுடம்பு பொதுமக்களின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் புள்ளி போட்ட, பச்சையும் - கறுப்பும் கலந்த இராணுவ உடையும், தொப்பியும் திலீபனுக்கு அணியப்பட்டு, "லெப்டினன்ட் கேணல்" என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் செய்த தியாகத்துக்கு அவருக்கு எந்தப்பட்டமும் தகுதியில்லை, அல்லது ஈடாகாது என்பது எமக்குத் தெரி யும்...

ஆனால், என்ன செய்ய முடியும்? அவரைப் படுக்க வைத்திருந்த பேழையை, விடுதலைப் புலிகளின் சிவப்பு நிறத்திலான கொடி அலங்கரித்திருந்தது. தந்தை, சகோதரங்கள், உறவினர்கள் ஆகியோர் உடலை வந்து தரிசித்துச் சென்றனர். பெட்டியைத் திறந்ததுமே அவரது அன்புத் தந்தையும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான, திரு. இராசையா அவர்கள் "ஓ..." என்று அலறியவாறு அவர் உடல்மீது விழுந்து புரண்டு அழத் தொடங்கிவிட்டார். அவரின் அழுகையைத் தொடர்ந்து பொது மக்களும், சிறு பிள்ளைகளைப் போல் குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி நெஞ்சை உருக்கியது. பொது மக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து, நீண்ட வரிசையிலே வந்து தமது இறுதி வணக்கத்தை மண்ணின் மைந்தனுக்குச் செலுத்தினர். ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. பாலகுமார், தமிழகத்திலிருந்து வருகைதந்து தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங்கி அழுதவாறு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

தலைவர் பிரபாகரன், சொர்ணம், குமரப்பா, புலேந்திரன், சந்தோசம், ஜொனி, பிரபா, இம்ரான், அன்ரன் மாஸ்ரர், சங்கர் அண்ணா, நடேசன் மற்றும் ஏனைய இயக்க உறுப்பினர்களும் தத்தம் இறுதி வணக்கத்தை தமது தோழனுக்குச் செலுத்தினர்.

சாஜகான், நரேன், அருணா, சிறி, ராஜன், தினேஸ் போன்றோர் தம்மைச் சமாளிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதனர்.

திலீபனின் ஈகைப் பயணத்தில் 12 நாட்கள் அவரின் கூட இருந்து, அவரின் போராட்டத்தில் பங்குபற்றி, வேதனையின் எல்லைக்கே சென்று வந்த எனக்கு, இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு இன்னும் எத்தனை நாட்கள் தேவையோ நானறியேன்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்! திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை அதற்குப் பதிலாக அவர் ஒரு படிப்பினையை எமக்குக் கற்பித்து விட்டுப் போயுள்ளார்... அகிம்சைப் போராட்டம் என்பது மனித நேயமும், உயர் பண்பும் மிக்கவர்களிடம்தான் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்... ஆயுதங்கள் தான் எமது தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்தவரை சரியான பதில் தரமுடியும் என்பதையும், திலீபன் மறைமுகமாக உணர்த்திவிட்டுப் போயிருக்கிறார் என்பதே எமது கணிப்பு... அந்தத் ஈகைச்சுடரின் இலட்சியங்கள் நிறைவேற, எம்மை நாம் அர்ப்பணிப் போமாக!

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"


மாவீரன் திலீபன்
நினைவுக்கல்வெட்டு
லெப். கேணல் திலீபன்
(இராசையா பார்த்தீபன்)












## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வ

# திருமலைப் படுகொலைகள் யூன், ஓகஸ்ட், செப்டம்பர் – 1985

இம்மாதங்களில் திருமலை மாவட்டத்தில் பல படுகொலைகள் நடந்தேறின. பிரசைகள் குழுக்களின் இணைப்பு அமைப்பின் அறிக்கைகளின் படி முன்னூற்று பதினொரு தமிழர்கள் யூன் 1985 இல் திருமலையில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. சற்றடே ரீவ்யூ நாளேடு 21.12.1985 இன்று வெளியிட்ட செய்தியில் இத்தொகை முன்னூற்று எண்பத்துமூன்று எனக் கூறியுது. ஜெரமி கிளிங் என்கிற செய்தியாளர் சாம்பல் தீவில் பலர் காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென டெல்லி நீயூசில் தகவல் வெளியிட்டிருந்தார்.

1985 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதிக்கும் ஒன்பதாம் திகதிக்குமிடையில் திட்டமிடப்பட்ட முறையில் மகிப் பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை நகரின் வடபகுதியிலிருந்து தமிழர்களைத் துரத்தும் நடவடிக்கையாக இவ்விராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆகாய வழியாக உலங்கவானூர்தியும் கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. சென்ரல் வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, மூன்றாம் கட்டை, நாவலர் றோட், உப்புவெளிச் சந்தி ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஊர்காவற்படையினரும் இங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு குழுக்களும் சேர்ந்து தமிழாகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்து ஐநூறு வீடுகளும் கடைகளும் கட்டடங்களும் அழிக்கப்பட்டதுடன் தமிழர்களுக்குச் சொன்தமான வள்ளங்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது இருநூறு சிறுவர்கள் தங்கியிருந்த சிவானந்த தபோவனத்தின் கட்டடமும் தகர்த்து அழிக்கப்பட்டது. இந்தக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இருபத்தைந்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அழிப்பதற்கு தமிழரார்களுக்கு எந்தச் சொத்தும் இல்லை என்றவுடன், இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை வெளியிற் தெரியாமல் இருக்க நாளேட்டு நிருபர்களோ, வெளி நாட்டு நிருபர்களோ இப்பகுதிக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டனர்.

# பருத்தித்துறை திக்கம் படுகொலை – 16.09.1984

16.09.1984 அன்று நாலு சிறீலங்கா படையினர் ஒரு கண்ணணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தில் சிறீலங்கா பொலிசார் 16 பொதுமக்களை தாக்கிக்கொன்றனர். அதோடு பருத்தித்துறையில் அமைந்துள்ள ஹாட்லிக்கல்லூரி நூல் நிலையமும் அதன் விஞ்ஞான பரிசோதனை அறைகளும் பொலிசாரால் தீமூட்டி எரிக்கப்பட்டது.



# நிலாவெளி படுகொலை – 16.09.1985

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நிலாவெளிப் பிரதேசமானது. திருகோணமலை நகரிலிருந்து பத்த கி. மீ. தூரத்திலுள்ளது. 1983 ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நிலாவெளி அகதி முகாம் மக்களால் நிறைந்து காணப்பட்டது.

16.09.1985 அன்று நிலாவெளியில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவமும் ஊர்காவற்படை யினரும் சேர்ந்து அகதிமுகாமைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைதுசெய்து. அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துச் சுட்டத்தில் அனைவருமே உயிரிழந்தனர்.

**16.09.1985 நிலாவெளிப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. முருகேசு தங்கராசா (46)
2. கச்சுமுகைதீன் முகம்மது காலித் (33)
3. வேலு சிவசுந்தரம் (24)
4. வேலு சிதம்பரநாதன் (25)
5. செல்லத்தம்பி நிர்மலானந்தன் (26)
6. சோசுந்தரலிங்கம் அருட்குமரன் (20)
7. அந்தோனிப்பிள்ளை கபிரியேல் (-)
8. இராஜேந்திரன் (29)
9. செய்யதுபுகாரி அப்துரசாக் (32)
10. கந்தையா கந்தசாமி (28)
11. கணபதிப்பிள்ளை சௌந்தரராஜன் (28)
12. செல்லத்தம்பி ரட்ணராஜா (41)
13. நேசதுரை றெறன்ஸ் (19)
14. கதிர்காமத்தம்பி கனகசபை (39)
15. முகமட் காசிம் முகமட் ராசிக் (31)
16. தாமோதரம் பிள்ளை நேமிநாதன் (19)
17. வல்லிபுரம் தருமலிங்கம் (18)
18. தர்மதாஸ் உதயநேசன் (19)
19. சுப்பிரமணியம் காளிராஜா (20)
20. செல்வவினாயகம் ஜெயகோபன் (26)
21. இராசையா துரைநாயகம் (36)
22. தாமோதரம்பிள்ளை சண்முகதாசன் (24)
23. மாமாங்கம் ரஞ்சநேசன் (21)
24. அபுசாலிபு அப்துல்நாயீர் (21)
25. சித்திரவேல் மாரிமுத்து (53)
26. சிங்கராயர் கிலீற்றஸ் பிரேமதாஸ் (20)
27. சிவபாலன் கெங்காதரன் (34)
28. பொன்னுத்துரை பார்த்தீபன் (34)
29. யோகராசா (27)
30. இரத்தினசாமி பார்வதி (23)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மண்டைதீவில் கைது செய்து காணாமற் போனவர்கள் 25.08.1990 – 23.09.1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசெயலகப் பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந் துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற் துறையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக் கையின் போது மக்களைப் பாதுகாப் புக் கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர் தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப் பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதி களாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர் களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்ப திரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப் பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர் களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக்களும் (ஈ.பி.டி.பி) சேர்நது மண்கும்பான் அ.த.க பாட சாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைதுசெய்யப் பட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாக வில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரோ குடும்பத்தைச் சேர்ந்த விஜய ரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட் ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:

"கைது செய்யப்பட்ட என் பிள்ளை களின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சிறிதர் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி. செயலகத்திற்குச் சென்று திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட் டோம். ஜி அப்போது அவர் "அநேக மாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அநுராதபுரம் போய்வந்து சொல்கி றேன். ஜி என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங் களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படி கேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம்.

அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதி யாக இருந்த திரு. டென்சில் கொப் பேகடுவ அவர்களிடம் மனு செய் தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடு தொடர்பு கொண்டார்களா" என்று தான் கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப் பகுதி பிரதி அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந் திரன் அவர்களும் திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்ட போது, அவர் நான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன் பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் திரு. டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப் பகுதிக்குப் போய் வந்து சொல்லுவ தாகக் கூறினார்.

14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக் குழு விசாரணை செய்யப்போவதாக வும், அதற்கு எங்களை விண்ணப் பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசா ரணைக்கு விண்ணப்பித்தோம்.

12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக் கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளை திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்பிறகு தாங் கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறி னார்கள். ஆனால் இதுவரை எவ் வித பதிலும் எனக்குக் கிடைக்க வில்லை" எனத் தெரிவித்தார்.

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக்குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர் களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித் தனர். இவர்களிற் சிலரின் எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற்போய் உயிரிழந்தவர் களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட்டுள்ளது.

**25.08.1990 – 23.09.1990 வரை மண்டைதீவில் கைது செய்து காணமற்போனவர்கள் விபரம்**

1. சூசைப்பிள்ளை செல்வ நாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்திய பாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20)
23. ரி. சிமோன் (20)
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கிய ராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங் கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்ன தாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

**வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்**

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) - 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) - 25.05.1993
3. தாவீது பெஞ்ஜமீன் (25) - 1992 ஒகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) - 1986
5. வி. பாலரஞ்சன் (39) - 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.



# மாத்தளன் படுகொலை 18.09.1993

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற் பரப்பினை ஒரு பக்க எல்லையாகக் கொண்டமைந்த கிராமங்களில் மாத்தளன் கிராமமும் ஒன்று. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கடற் தொழிலையே நம்பியிருந்தனர். அத் தோடு தமது பொழுதுபோக்கு மையங்களாக இந்தக் கடற்கரை களையே பயன்படுத்தி வரலாயினர். இவர்கள் தமது நாளாந்த தேவை களை ஈடுசெய்ய வேண்டுமாயின் நான்கு கி.மீ. இற்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதிக்கே செல்லவேண்டிய நிலையும் இரந் தது. தமது கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்களைக்கூட இவர்கள் நீண்ட தூரம் சென்றே மக்களுக்கு விற் பனை செய்ய வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச் சனை தொடங்கிய காலத்திலிருந்து கடற்படையினர் கடலில் மீன்பிடிப் பதற்குத் தடைவிதித்ததுடன். மீன வர்களைக் கடலில் தாக்கியும் வந்ததர்கள். ஆனாலும் மீனவர்கள் தொடர்ந்தும் கடற்தொழிலைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செய்து வந்தனர்.

18.09.1993 அன்று மாலை 3:45 மணியளவில் மாத்தளன் சந்தியில் கட்டப்பட்ட பொது மண்டபத்தின் திறப்புவிழாவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்த மக்களும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களும் அங்கு கூடினர். நிகழ்வுகள் நடை பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் மாலை நான்கு மணியளவில் விமானப் படையின் "உலங்கு வானூர்தி" அப்பகுதியால் சென்றது. நேரம் மாலை 5:30 மணிக்கு மாத்தளன் வான்பரப்பிற்குள் பிர வேசித்த சிறீலங்காவின் விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள் பத்திற்கும் அதிக மான றொக்கட் குண்டுகளை மண்டபத்தினை நோக்கி வீசியதில் மூன்று குண்டுகள் மண்டபத் தின் மீது விழுந்தன. ஏனைய குண்டுகள் மண்டபத்தின் முன் புள்ள சிறிய வயற்பகுதிகளில் விழுந்து வெடித் தன. எங்கும் "ஐயோ" என்ற அவலக் குரலுடன் மக்கள் திக்குத்திசை யறியாது சிதறி யோடினர். மண்டபம் புகைமண்டலமாக மாறியது. இவ் விமானத் தாக்குதலில் இருபது பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானார்கள்.

நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட பொதுமண்டபமும் முற்றாகச் சேதத் திற்குள்ளானது. தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின்பின் காயம டைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக் குக் கொண்டு செல்லப்பட்டனர்.

**18.09.1993 மாத்தளன் படு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இன்ரிகிறேஸ் ஜோசப் (31)
2. இம்மானுவேல் ஆனந்த ராஜா (19)
3. பிரான்சிஸ் அருள் தாஸ்(23)
4. பிலிப்புதவராசா சுஜாத்தா (10)
5. பரமானந்தம் (40)
6. தம்பிராசா குணசிங்கம் (18)
7. தியாகராஜா கண்ணன் (16)
8. மரியதாஸ் அன்ரன் ஜெய பாலன் (32)
9. மரியதாஸ் அன்ரன் யேசு தாஸ் (30)
10. முத்தையா துரைசிங்கம் (45)
11. மரியதாஸ் இன்மானு வேல் ஆனந்தராசா (19)
12. டானியல்பிள்ளை பிலிப்பு தவராசா (39)
13. அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி (18)
14. யோசப் வினிற்றா கிறேஸ் பிரைட்றிக் (31)
15. யேசுமார்க் அன்ரனிதாஸ் (29)
16. செல்லையா செல்வம் (கண்ணன்) (16)
17. சியாத்தா திலீப்மேரி (09)
18. சின்னப்பு அல்போன்ஸ் (22)
19. சங்கரசிவம் புலேந்திரன் (15)
20. சங்கரசிவம் சுரேந்திரன் (18

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. கந்தையா குமாரசாமி (45)
2. அன்னலிங்கம் சொர்ண லிங்கம் (37)

குறிப்பு: - இச்சம்பவத்திற் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.



# சாவகச்சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு 28.09.1993

யாழ் நகரிலிருந்து கிழக்குப்புறமாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி நகர் அமைந்துள்ளது. சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து ஐநூறு யார் தொலைவில் கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக சங்கத்தானைக் கிராமம் அமைந்துள்ளது.

1990 இன் பின்னர் போர் தீவிர மடைந்தது. இதன்போது விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்களென எங்கும் தமது தாக்குதலை நடத்தின.

அத்துடன், சிங்கள இராணுவத்தினர் நீண்டதூர எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இதன்விளைவாகப் பொதுமக்கள் தம்மை விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காப்பகழிகளை அமைத்து வந்தனர்.

இக்கிராமத்தில் “உதயன் மரக் காலையில்” அமைந்திருந்த பதுங்குகுழி அயலில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பரனாக இருந்தது. 28.09.1993 அன்று மாலை 5 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் இரைச்சலுடன் வந்த ஆஜன்ரினா நாட்டுத் தயாரிப்பான இரண்டு “புக்காரா” விமானங்கள் இரு தடவைகள் வானில் வட்டமிட்டன. பீதியுற்ற மக்களில் முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்க உதயன் மரக் காலையில் அமைக்கப்பட்ட காப்பகழிக்குள் சென்றனர். இவ் விமானங்கள் வீசிய முதலாவது குண்டு காப்பகழி மீது வீழந்து வெடித்ததால், காப்பகழிக்குள்ளிருந்த குழந்தைகள் உட்பட முப்பது பேர்வரை சம்பவ இடத்தில் மண்ணுக்குள் புதைந்த நிலையில் உயிரிழந்தார்கள். காப்பகழியில் தஞ்சமடைந்த மக்களில் ஐந்துபேர் மட்டும் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் நினைவாக சாவகச்சேரி சங்கத்தானை “உதயன் மரக்காலையில்” நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.

**28.09.1993 அன்று சாவகச்சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டடோர் விபரம்**

1. இரத்தினகோபால் சுதர்சன் (11)
2. நாகேஸ்வரி குருநாதன் (56)
3. கந்தையா செல்வராசா (40)
4. கணேசன் கௌசிகா (12)
5. பாலசுந்தரம் சந்திரசேகரம் (09)
6. பாலசுந்தரம் சுரேஸ் (12)
7. பாலசுந்தரம் ரதி (03)
8. தஸ்யனி பாலசுந்தரம் (02)
9. தங்கம்மா கணபதிப்பிள்ளை (56)
10. தங்கராசா சுசீலா (21)
11. மகேஸ்வரி செல்லையா (52)
12. அமுதலிங்கம் லச்சம்மா (53)
13. ஜெகதீஸ்வரன் ஜனனி (07)
14. ஜெகதீஸ்வரன் தினேஸ் (08)
15. ஜெகதீஸ்வரன் தசாஜினி (11)
16. ஜெகதீஸ்வரன் சாந்தினி (31)
17. கோபாலபிள்ளை சுதர்சன் (09)
18. கோபாலரத்தினம் சுபாஜினி (15)
19. பொன்னுத்துரை ஞானேஸ்வரி (60)
20. தெய்வேந்திரன் நாகேந்திரன் (19)
21. செல்வராசா யசோதா (18)
22. செல்வராசா சுஜாதா (16)
23. சுரேக்கா கோபாலரட்ணம் (09)
24. சின்னராசா நிறஞ்சினி (13)
25. சின்னராசா பிரபா (10)
26. சின்னராசா பிரபாலினி (10)
27. சின்னராசா பவானி (21)
28. ரட்ணகோபால் துஸ்யேந்திரன் (09)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் 29.09.1993

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேசத்தில் கொக்குவில் கிராமம் அமைந்துள்ளது. சைவசமய வளர்ச்சிக்கும், சைவ அபிவிருத்திக்கும் முன்னோடியாக இக்கிராமத்தில் நந்தாவில் எனும் ஊரில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு இருநூற்றைமபது வருடம் பழமை வாய்ந்ததாகவும், பல வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினராலும், 1993 ஆம் ஆண்டு சிறீலங்கா விமானப்படையாலும் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை 8:00 மணியளவில் ஆலயப் பகுதியாற் சென்ற இந்திய இராணுவத்தினர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டு நின்றவர்களைச் சுட்டதில் எஸ். சண்முகம் (நல்லூர் ப.நோ.கூ.ச. ஊழியர்), கண்ணன் (ஆலய பூசகர்), குலேந்திரன் (A.G.A கோப்பாய்) ஆகியோர் உயிரிழந்தார்கள். மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

29.09.1993 காலை 10:00 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் “புக்காரா” விமானம் ஆலயம் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆலய வழிபாட்டில் நின்றவர்களில் மூன்று பெண்கள் உயிரிழந்தனர். ஐந்து பேர் படுகாய மடைந்தனர்.



# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22









# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22





யாழ் மாவட்டத்தில் வடமராட்சியில் நாகர்கோயிற் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் ஆகும். கிராமத்தில் 15.02.1956 இல் திரு. வி. நாகநாதன் அவர்களின் முயற்சியினால் நாகர்கோயில் வடக்கில் யாழ். நாகர்கோயில் நாகேசுவரர் வித்தியாலயம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. பின்னர் 1967 இல் யாழ். நாகர்கோயில் மகாவித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சிங்கள இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஆறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன. நாறூறு மாணவர்களைக்கொண்டிருந்த பாடசாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற்றிலைக்ணேி, ஆழியாவளை, கட்டைக்காடு போன்ற கிராமமக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்சமடைந்தனர். 1993 ஆம் ஆண்டுக்குப் பின்பு மாணவர்களின் எண்ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித்துக் காணப்பட்டது.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் அருபத்தோராம் திகதி வடமராட்சியின் பல பாகங்களுக்கும் பலாலியிலிருந்து சிங்கள இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். மறநாள் இருபத்திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறீலங்கா விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (08), மனோகரதாஸ் மரியஜித் (10), ஜோன்பொஸ்கோ கார்மிளா (05) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன், பலர் படுகாய மடைந்தனர்.

அன்றைய நாள் (22.09.1995) வடமாரட்சி கிழக்கில் காலை பதற்றமாக இருந்தபோதும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர். அன்றையநாள் எண்ணூற்றுமுப்பது மாணவரில் எண்ணூற்றுபத்து மாணவர்கள் வந்திருந்தனர். வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது. இறைவழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந்தனையினை ஏழாம் ஆண்டில் கல்விகற்கும் "நவரத்தினசாமி உமா தேவி" எல்லோரையும் கவரக் கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "புக்காரா" விமானங்களிலிருந்து மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலையையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகை மண்டலமானது.

இத்தாக்குதலில் காலைப் பிரார்த்தனையில் உல்லோராலும் பாராட்டப்பட்ட "நவரத்தினசாமி உமா தேவி" உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார்கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்திய சாலையிலும் இறந்தனர். மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்தனர். அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோயில் கிராமத்தைச் சேர்நத இருபத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந்ததுடன், எண்பதைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள். அன்றைதாக் குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந்தனர்.

**இச்சம்பவத்தில் வலது காலை இழந்த ச. சிறிவித்தியா கூறுகையில...**

"அன்று புக்காரா விமானம் பாடசாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரிதாகக் கேட்ட போது நான் பாடசாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்து விட்டேன். குண்டு பாடசாலை வளாகத்திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண்டலமாக இருந்தது. எங்கும் ஒரே அழு குரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந்தது. எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன அப்போது நான் அத்திமரத்தை பிட்டு எனக் கருகிலிருந்து எனது ஒன்றுவிட்ட சகோதரியையும் கூட்டிக்கொண்டு ஓடும் நோக்குடன் எழும்பமுயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது. அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் துக்கிக்கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டுமென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சை பெற்றுகுணமடைந்தேன்."

**22.09.1995 அன்று யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராமநாதன் மேதினி (13)
2. இராமச்சந்திரன் சங்கீதா (14)
3. இராசரத்தினம் உமா காந்தன் (16)
4. இராசரத்தினம் கவிதா (10)
5. இரவீந்திரராசா அமிர்தா (10)
6. உ.தர்சினி (12)
7. நாகமுத்து செல்தில்வேல் (15)
8. நவமணி மிதுரா (14)
9. நவரத்தினசாமி உமா தேவி (12)
10. குகசரவணைமலை தர்சினி (13)
11. கிருஸ்ணகோபால் தவசீலன் (13)
12. பூலோகராசா துஸ்யந்தி (13)
13. பாலச்சந்திரன் றெஜிதா (10)
14. த.சமித்தா (10)
15. தர்மலிங்கம் உசா நந்தினி (14)
16. தாமோதரம்பிள்ளை சகுந்தா (12)
17. தம்பிப்பிள்ளை கோபி தரன் (-)
18. மயில்வாகனம் கண நாதன் (13)
19. மகாலிங்கம் சண்முக வடிவேல் (16)
20. மார்க்கண்டு நாக லோசனி (10)
21. அன்ரன் மரிய மனோகர தாஸ் மரியறஜித் (09)
22. அன்ரனி மரியறோஸ் அன்ரனிதாஸ் (08)
23. அல்போன்ஸ் அமலவிஜி (14)
24. யோன் பொஸ்கோ கார்மிலரா (04)
25. செல்வகுலசிங்கம் செல் வதி (17)
26. செல்வம் (16)
27. சிதம்பரப்பிள்ளை சசிரூபி (11)
28. ராகவன் (16)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. தங்கவேலாயுதம் றேணு காயினி (12)
2. அ.றோமியா (10)
3. அக்கினேஸ்திரேசா கலி மண்ட் (12)
4. அக்கினேஸ் திரேசா அகிலதாஸ் (06)
5. அருமைலிங்கம் தாட் சாயணி (13)
6. சி. நரோசினி (09)
7. சி. சாரதா (45)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை.



# கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் 27.09.1996

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ள கிராமங்களில் ஒன்று கோணாவிலாகும். அத்துடன் இது ஒரு விவசாயக்கிராமமாகும், இங்கு பலர் கூலித்தொழிலிகளாவர். இந்தக் கிராமத்து மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து பற்பல இன்னல்களையும் அனுபவித்தவர்களாவார்கள்.

1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தேழாம் திகதி காலை 11:30 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் இரண்டு "கிபிர்" விமானங்கள் கோணாவில் காந்தி கிராமச்சந்தியில் குண்டுகளை வீசியது. இவ்விமானக்குண்டு வீச்சில் காந்தி கிராமச்சந்தியில் நின்ற மூன்று பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானதுடன், பலர் படுகயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் இருவர் அக்கராயன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பின் சிகிச்சை பலனழிக்காமல் உயிரிழந்தனர்.

**இச்சமவத்தில் தகப்பனையிழந்த விமலேஸ்வரி சம்பவம் பற்றி கூறுகையில்**

"1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து போய் இராஜன் குடியிருப்பிலே இருந்தோம். அன்றை தினம் அம்மா மதிய உணவைச் சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா மரக்கறி வாங்குவதற்காக காந்தி கிராமம் சந்திக்குச் சென்ற போது தான் கிபீர் விமானம் குண்டு போட்டது. அப்பா நெஞ்சுப்பகுதி முழுவதும் சிதைந்து போய் அவ்விடத்திலேயே இறந்து விட்டார். இதை அறியாத நானும் அம்மாவும் காந்தி கிராமத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அப்பாவைக் காணவில்லை. சிலவேளை வீட்டிற்கு வந்தீருப்பார் என்று நினைத்து திரும்பவும் வீடு போய்ப் பார்த்த போது அங்கேயும் இல்லை. அப்பா இறந்தது தெரியாது நாங்கள் தேடித்திரிந்த போது தெரிந்த ஒரு அண்ணா வந்து சொன்னார், உங்களுடைய அப்பா காலில் காயம்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் இருக்கிறார் என்று. உடனே நாங்கள் அவருக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே எனது அப்பா வின் உடலையும் தாத்தாவின் உடலையும் அத்தையும் சில உறவினர்களும் எடுத்து வைத்திருந்ததை கண்ட போது தான் இருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்தது. பின்னர் இரு வரது உடல்களையும் அக்கராயன் முதலாம் இலக்க அரிசி அலை வளவில் வைத்து இறுதிக்கிரியைகளைச் செய்தோம். அப்பா இல்லாததுடன் வீடு வாசல்கள் இல்லாமல் மரங்களுக்கு கீழே இருந்து சரியாகக் கஸ்ரப்பட்டோம். மில்லுக்கப் போய் உமியைப்பிடைத்து அதில் வரும் அரிசியை எடுத்துச் சாப்பிட்டோம். அது இல்லாத வேளை வேறு ஆட்களின் காணியிற் போய் தேங்காயை எடுத்து வந்து அதை உரித்துச் சாப்பிட்டு வந்தோம். பின்னர் கஸ்ரம் தாங்கமுடியாமல் திரும்ப சித்தியினுடைய வீட்டிற்கு வந்து அதிலிருந்து எங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்திருத்தோம். சரியான கஸ்ரத்தின் மத்தியில் நெல்லுப் பிடைச்சுத் தான் சாப்பிடுகின்றோம். நான் படிப்பை விட்டு விட்டேன். எனது அண்ணாவும் அப்படித்தான் படிப்பை விட்டு விட்டார். தற்போது நானும் ஒரு அண்ணாவும் தங்கையும் அம்மாவும் மட்டுந்தான் இருக்கின்றோம். அம்மா புல்லுப் பிடுங்கப் போனாற்தான் நாங்கள் சாப்பிடுவது. இல்லாது விட்டால் நான் தான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். நாங்கள் எந்த விதக் குறையும் இல்லாது வாழ்ந்த வேளை எங்களுடைய அப்பாவை சிறீலங்கா விமானப்படை கொடூரமாகக் கொன்றதாற் தான் நாங்கள் இப்படிக் கஸ்ரப்படவேண்டி வந்திருக்கிறது. அப்பா அருந்திருந்தால் எங்களை நல்லபடியாகப் பார்த்து படிக்க வைத்திருப்பார். இப்போது எதிர்காலம் தொடர்பான கேள்விக் குறியுடன் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே எமது நாட்கள் செல்லுகின்றது."

**இச்சம்பவத்தின் கணவனை இழந்த வைகுந்தவாசன் பரிமளா என்பவர் கூறிகையில்...**

"எனது கணவர் ஒரு ஓவியர், விளம்பரம் பலகைகள் வரைவது அவரது தொழில், கிளிநொச்சி மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்கராயன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். கணவர் சந்தைக்குப் போய்விட்டு வருவதாகச் கூறிச் சென்ற சில நேரத்தின் பின் கிபீர் விமானங்கள் சுற்றி குண்டு போட்டவுடனேயே நான் சந்தித்குப் போனேன். அங்கு அவரில்லை. அங்கு நிற்பவர்கள் சொன்னார்கள் அவர் காயப்பட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று விட்டார்கள் என்று. பின்னர் நானும் மூத்த மகனுமாக வைத்திய சாலைக்குச் செனன்றபோது அவர் உயிரிழந்துவிட்டார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தான் அவரின் உடலை வீட்டிற்குக் கொண்ட வந்து தந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்தோம். அவர் இறந்த பிறகு பிள்ளைகளும் பெரிதாகப் படிக்க வில்லை. அக்கராயனுக்கு இடம் பெயர்ந்தும் பெரிய கஸ்ரத்தை நான் அனுபவித்தேன். அரிசி இடித்துக் கொடுப்பது புல்லுப் பிடுங்குவது போன்ற கூலித் தொழிலைச் செய்து தான் இன்றும் சீவியம் நடத்துகின் றேன் என்றார்."

**27.09.1996 அன்று கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசதுரை திருக்குமார் (20)
2. கந்தையா விஜயகுமாரி (31)
3. முத்துசாமி வைகுந்த வாசன் (39)
4. பெரியசாமி வேலு (61)
5. சிவனாண்டி ஜெனகாந் (15)

**காயமடைந்தவர்கள் விபரம்**

1. பொன்னையா ஜெயநாதன் (16)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்

# அமுக்கவெடியில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் பலி – 24.09.2001







யாழ். இருபாலை கட்டப்பிராயில் குமுகண்டிப் பகுதியில் 24.09.2001 அன்று சிங்களப் படையினர் புதைத்து வைத்திருந்த அமுக்கவெடியில் சிக்கி, ஒரு வயதுக்குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பொதுமக்கள் அவ்விடத்திலேயெ மரணமடைந்துள்ளனர். அவர்களை ஏற்றிச்சென்ற முச்சக்கர இயந்திர வண்டியின் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 28.09.2001 அன்று மரணமடைந்தார். மேற்படி குடும்பத்தினர் கனடாவிற்குப் பயணமாகவதற்காக, கொழும்பு செல்லும் பயண அனுமதியைப் பெறுவதற்காக சிறீலங்கா இராணுவத்தினரின் சிவில் அலுவலகத்திற்குச் சென்ற போதே இக்கோரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

# அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை – 17.09.2006

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11 கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன் குளம் உள்ளது. இந்த அணைக்கட்ட அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குப்பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லபுகல கிராமசேவகர் பரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர்சிலை ஒன்றினை நிவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் சிங்களவர்களக்கும். தமிழ் முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து தமிழ் முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெனகல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேச செயலகல் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கு மிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்து வண்ணமே இருந்தன. இதனால் இரு இனத் தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப் பெற்றது.

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற்காக 2006 செப்ரெம்பர் 17 ஆம் நாள் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து தமிழ் முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப் பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள தமிழ் முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற் கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிகள், சிங்களவர்களுக்கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வாறு தமிழ் முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வரவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொட்ந்தும் தமிழ் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடக்கும் நோக்கிலேயே சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப் பட்டதாக கருதப்படுகின்றது.

**இச்சம்பத்தின் போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்**

1. எம் அனுர்தீன் (15)
2. எம். நபார் (15)
3. எம். சமுதீன் (18)
4. எ.எம். பைசல் (19)
5. எல். அனிஸ் (19)
6. எம். ஜப்பர் (20)
7. எஸ்.எல். றிசாட் (-)
8. ஏ.எம். அஜ்மீர் (18)
9. எம். பைரூப் (19)
10. எம். ஐ. சியம் (-)

**காயமடைந்தவர்**

1. எம். மீரமுகைதீன் (55)

# சிறீலங்கா விமானப்படையின் தாக்குதல் 27.09.2008

கிளிநொச்சி நகரின் புறநகர்ப் பகுதியான இரத்தினபுரத்தில், 27.09.2008 சனிக்கிழமை மதியம் சுமார் 12:15 மணியளவில் சிறீலங்கா விமானப்படை நடத்திய தாக்குதலில் ஒரு பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும், நான்கு குழந்தைகள் உட்பட எட்டு பேர் காயமடைந்ததனர். சமீபத்தில் இரணயமாடு சந்திப்பிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ICRC அலுவலகம், குண்டு வீசப்பட்ட பகுதியிலிருந்து சுமார் 150 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இதற்கிடையில், விடுதலைப் புலிகளின் இலக்குக்கு எதிரான "துல்லியமான வான்வழித் தாக்குதல்" இது என சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது. காயமடைந்தவர்களில் 8 மாதக் குழந்தை, 9 மாதக் குழந்தை மற்றும் இரண்டு 2 வயதுக் குழந்தைகள் அடங்குவதாக கிளிநொச்சி மருத்துவமனை மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.






கொல்லப்பட்ட பொதுமக்களில் ஒருவர் 26 வயதான இரங்கநாதன் சதீஸ் ஆவார். அவர் தனது மனைவி, 27 வயதான எஸ். அருட்செல்வி மற்றும் இரண்டு குழந்தைகளான, 2 வயதான எஸ். தனுசிகன், 9 மாதங்களான எஸ். தனுசிகா ஆகியோருடன் கிளிநொச்சியில் உள்ள இரத்தினபுரத்தில் தனது உறவினர்களுக்கு உதவ வந்திருந்தார். இதில் குழந்தைகள் காயங்களுடன் தப்பினர்.

காயமடைந்த மற்ற பொதுமக்கள்: 25 வயதான ரேகா ஞானம், அவரது 2 வயது மகன், 8 மாத ஆண் குழந்தை கந்தராச துவரகன், 62 வயதான மங்கலேஸ்வரி மணிக்கம்பிள்ளை மற்றும் 42 வயதான டெய்சி யோகநாதன்.













**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# 39ஆம் ஆண்டு வீரவணக்கம்

## 39th Year Veeravanakkam



25ஆம் ஆண்டு
வீரவணக்கம்
**கேணல் சங்கர்**
**வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்**
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
18.09.1949 - 26.09.2001



SEPT 26

### "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"



ஈகைச்சுடர்
**லெப். கேணல் திலீபன்**
Thileepan

**இராசையா பார்த்தீபன்**

ஊரெழு, யாழ்ப்பாணம்

27.11.1963-26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்

### ஐந்து அம்ச கோரிக்கைகள்:-

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.

### Demand as follows:-

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.
2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.
3. All such rehabilitation should be stopped until an interim government is formed
4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.
5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

## The thirst of Tigers is the Homeland of Tamileelam

சங்கத்தமிழ்




# இலங்கையின் மகாவம்ச வரலாற்றைப் புரட்டிப்போட்ட கந்தரோடைத் தொல்லியலும் ஆதி இரும்புக்கால அறிவியல் ஆய்வுகளும்

## பகுதி – 5

### பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரீகம்

**முடிவுரை**

நவீனகால கதிரியக்கக் காலக் கணிப்புகளின்படி (Radiometric Dating Methods) இற்றைக்கு 4,000-3,800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே (கி.மு. 2033-கி.மு. 1895) கர்நாடக மாநிலத்தின் மாஸ்கி, தமிழகத்தின் பையம்பள்ளி ஆகிய மையங்களிலும், கி.மு. 1600 ஆண்டுகளுக்கு முன்னரிருந்து கர்நாடகத்தின் ஹல்லூர், தடகனஹள்ளி, குமரனஹள்ளி ஆகிய மையங்களிலும் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடு ஆரம்பமாகி, அங்கிருந்து தமிழ்நாடு வழியாக கி.மு. 1200 ஆண்டளவில் இலங்கையை வந்தடைந்திருக்கிறது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் கதிரியக்கக் காலக் கணிப்பு ஆய்வுகள் இன்னும் முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை. எனினும், இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டிற்குரிய கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டு, காலக்கணிப்புச் செய்யப்பட்ட முக்கிய மையங்களின் தரவுகள் பின்வருமாறு அமைகின்றன: கந்தரோடை (கி.மு. 1300), ஆனைக்கோட்டை (கி.மு. 915), பொம்பரிப்பு (கி.மு. 900), அநுராதபுரம் (கி.மு. 840) மற்றும் இப்பன்கட்டுவ (கி.மு. 700). இந்தப் பண்பாடு தமிழகத்திலிருந்து இலங்கையை வந்தடைந்ததை மேலே கூறப்பட்ட கலாநிதிகள் விமலா பெக்லி, சி.க. சிற்றம்பலம், பொன்னம்பலம் இரகுபதி, சுதர்ஷன் செனெவிரத்ன போன்ற ஆய்வாளர்களின் ஆய்வுகளிலிருந்து அறிந்திருப்பீர்கள்.

இப்பண்பாடு கடல் மார்க்கமாக இலங்கையை அடைந்தபடியினால் கடற்கரையை அண்டிய மையங்களிலேயே பெருங்கற் பண்பாட்டின் ஆதி ஆரம்பத் திகதிகள் கிடைக்க முடியும். இதன்படி கந்தரோடை கி.மு. 1300 ஆண்டையும், ஆனைக்கோட்டை கி.மு. 915 ஆண்டையும், பொம்பரிப்பு கி.மு. 900 ஆண்டையும் காட்டுகின்றன. இவற்றை ‘மாதிரி’யாக எடுத்துக் கொண்டால் கி.மு. 1200 - கி.மு. 1000 ஆண்டுக் காலத்தில் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடு இலங்கையை வந்தடைந்திருக்கிறது எனக் கொள்ளலாம்.

இலங்கையில் பெருங்கற்கால யுகத்திற்குரிய (கி.மு. 1200 - கி.மு. 1000) கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் அச்சுற்றாடலின் தன்மையைப் பொறுத்து தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டமையைக் காண முடிகிறது. கடல் வளங்களில் ஆர்வம், வேட்டையாடல், மிருக வளர்ப்பு, விவசாயம் போன்ற துறைகளை அடிப்படையாகக் கொண்ட படிநிலை வளர்ச்சி இலங்கையில் இரும்பு யுகத்தின் ஆரம்பத்திலிருந்து ஏற்பட்டிருக்கிறது. இலங்கையில் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்ட பிரதேசங்கள் முக்கியமாக வறண்ட வெப்ப வலயப் பிரதேசங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இரும்புத் தொழில்நுட்பத்தில் நாட்டம் கொண்ட மனிதனின் அறிவு விவசாயத் துறையுடன் இணைந்தபடியினால் விவசாயத் துறை வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக அவசியமான பொருளாதாரத்தை அமைக்கும் நோக்கத்துடன் தொழில்நுட்ப உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன. குடியிருப்புகளை அமைப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் நீர் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இரும்பு உபகரணங்களின் உதவியோடு குளங்களை நிர்மாணிப்பதிலும், கால்வாய்களை அமைப்பதிலும் மக்கள் ஊக்கம் கொண்டனர். சிறிய குளங்களை நிர்மாணித்து, உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் நவீன தொழில்நுட்ப முறைகளும் கையாளப்பட்டன. இப்பெருங்கற்காலம் உணவு உற்பத்தியின் ஒரு புரட்சிகரமான காலகட்டம் எனலாம்.

இக் காலகட்டத்திற்குரிய பொருளாதார மற்றும் உற்பத்தித் துறைகளை நோக்குமிடத்து சமூக வளர்ச்சி பல படிமுறைகளைக் கொண்டிருந்தது. விசேடமாக இரும்பு உற்பத்தி, விவசாயம், மட்பாண்டக் கைத்தொழில் ஆகிய துறைகள் பொருளாதார ரீதியான சலுகைகளுக்கு உரித்தான உயர்மட்டத்தைச் சார்ந்தவர்களுடைய கைத்தொழில்களாக அமைந்திருந்தன. சில சந்தர்ப்பங்களில் சாதாரண மட்டத்தில் உள்ளவர்களும் மேற்கூறிய உற்பத்திகளில் ஈடுபட்டிருந்திருக்கலாம். இக் கருத்தை ஏற்றுக்கொள்வதாயின் ஈமப்பூமியில் காணப்படும் அடக்கங்கள் பெரும்பாலும் உயர்மட்டத்தைச் சார்ந்தவர்களுடைய அடக்கங்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

கி.மு. 1200 ஆண்டு முதலான காலகட்டத்தில் மனித சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் வேட்டையாடித் தனது உணவைத் தேடிக்கொள்வதில் ஈடுபட்ட மனிதன் படிப்படியாக முன்னேற்றமடைந்து உணவைத் தயாரிப்பதற்கான வழிவகைகளை அமைத்துக் கொண்டான். விவசாயத்தை மேற்கொண்டு, அதற்கான



Gregory Possehl



Praveena Gullapalli

University of Pennsylvania, Philadelphia.

இந்திய தீபகற்பத்தின் கதிரியக்கத் திகதிகளை வெளியிட்ட ஆய்வாளர்கள்

குளங்களை நிர்மாணிப்பதிலும், நீர்ப்பாசனத்தை வழங்குவதிலும், தமக்கென நிரந்தரமான வதிவிடங்களை நிர்மாணிப்பதிலும் மனிதன் ஈடுபட்டான்.

இக்காலத்தில் மக்கள் சிறு சிறு கிராமங்களிலே செறிந்து வாழ்ந்தனர். இக்கிராமங்களிலே பல்வேறு தொழில்புரியும் குழக்களும் வாழ்ந்தன. ஆரம்பகாலத்தில் கிராம மக்களிடையே நெருங்கிய ஒற்றுமையும் கூட்டுறவும் இருந்தன. ஈமச்சின்னங்களையும் குளங்களையும் உற்று நோக்கும்போது இவை பல நாட்களாகப் பலரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாலேயே ஆக்கப்பட்டமை தெரிகிறது.

இலங்கையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஈமச்சின்ன மையங்கள் காணப்படும் இடங்களில் மக்கள் குடியிருந்த பகுதிகள் பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. கல்லறைகளையும் தாழிகளையும் அமைப்பதில் கவனம் செலுத்திய மக்கள் ஏன் தமக்கென வசதியான இல்லங்களை அமைக்கவில்லை என்பது புரியவில்லை. ஈமச்சின்னங்களை அமைப்பதில் கைதேர்ந்த இவர்களிடம் அழியாத பொருட்களைக் கொண்டு வதிவிட மனைகளை அமைக்கும் திறன் இருக்கவில்லை என்ற வாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது. அநுராதபுர அகழ்வுகளில் வீடுகளைக் கட்டுவதற்கு மரத்தூண்கள் நாட்டப் பயன்படுத்தப்பட்ட குழிகள் மண்ணிலே துளைகளாகக் காணப்படுவதை நோக்குமிடத்து, அக்கால மக்களின் இருப்பிடங்கள் பெரும்பாலும் அழியும் பொருட்களான மரம், மண் போன்றவற்றால் ஆக்கப்பட்டன என அறிய முடிகிறது.

இரும்புக்காலப் பெருங்கற் கலாசாரத்தில் ஏற்பட்ட துரித வளர்ச்சி வெகு சீக்கிரத்தில் மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்த கட்டமாகிய வரலாற்றுக் காலத்திற்கு இலங்கையை இட்டுச் சென்றது. இக்காலத்தில் ஏற்பட்ட விவசாயம், வணிகம் ஆகியவற்றின் பெருவளர்ச்சியையும், நகரங்கள், துறைமுகப் பட்டினங்கள் ஆகியவற்றின் எழுச்சியையும் தொல்லியல் ஆய்வுகளின் மூலம் அறிய முடிகிறது. கி.மு. 800ஆம் ஆண்டளவில் அநுராதபுரம் மக்கள் செறிவாக வாழ்ந்த ஒரு ஆரம்பகால நகரமாகி விட்டிருப்பதை ஏற்கனவே கலாநிதி கொனிங்ஹாமின் அகழ்வு அறிக்கையில் பார்த்தோம். கி.மு. 500ஆம் ஆண்டளவில் கந்தரோடையும், சமகாலத்தில் மகாகமையும் நகரங்களாகிவிட்டன. கி.மு. 700ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்துறை (Davis, C. et al. 2018) ஒரு துறைமுகமாக ஆகிவிட்டிருந்தது. அக்காலப்பகுதியில் சம்புகோளமும் துறைமுகமாகியிருக்கலாம். கி.மு. 700 ஆம் ஆண்டு காலத்திலிருந்தே அநுராதபுரத்தில் பிராமி எழுத்துப் பதிவுகள் இருந்ததை கதிரியக்கத் தேதிக்கணிப்பு ஆய்வுகள் காட்டுகின்றன. இவை அனைத்தையும் ஆதாரமாகக் கொண்டு கி.மு. 700ஆம் ஆண்டளவில் இலங்கையில் மையப்படுத்தப்பட்ட அரசாங்கக் கட்டமைப்பு உருவாக்கம் (State Formation) இடம் பெற்றதாகக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளும் அவற்றின் கண்டுபிடிப்புகளும், கி.மு. ஆயிரத்தாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தே பெருங்கற் பண்பாடும் அதன் முக்கிய அங்கங்களான கறுப்பு-சிவப்பு மட்பாண்டப் பயன்பாடு, இரும்பின் பயன்பாடு, நீர்ப்பாசன விவசாயம், நெல் வளர்ப்பு என்பனவும் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்து இலங்கைத் தீவு முழுவதிலும் பரவலாகப் பயன்பாட்டிலிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. தொல்லியல் அகழ்வாய்வுகள் காட்டும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டமும், அதில் காணப்படும் ஆரம்பகால எழுத்துப் பதிவுகளையும் கொண்ட பெருங்கற் பண்பாட்டின் வருகைக் காலம், இலங்கையின் நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப காலமாகக் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையின் சில மூத்த ஆய்வாளர்கள் ‘பெருங்கற் கலாசாரம்’ என்று ஒரு பண்பாடு கிடையாது, தென்னாசியாவில் இந்தியாவின் கங்கைச் சமவெளியிலிருந்து இலங்கையின் ஹம்பாந்தோட்டை வரை பரவியிருப்பது ‘இரும்புக்காலக் கலாசாரம்தான்’ என்ற கருத்தை முன்வைத்திருக்கிறார்கள். ‘இரும்புக்காலம்’ அல்லது ‘இரும்பு யுகம்’ என்பது மனித வரலாற்றின் நாகரிக வளர்ச்சியில் – ‘கற்காலம்’, ‘வெண்கலக்காலம்’, ‘இரும்புக்காலம்’ என – ஒரு காலகட்டத்தைக் குறிக்கும் பதம். அக்காலகட்டங்களில் வெவ்வேறு நாடுகளின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு வகையான கலாசாரங்களை மக்கள் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, தென்னாசிய இரும்புக்காலக் கலாசாரத்தின் ஓர் அம்சத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் – ஆதி இரும்புக்கால வடஇந்திய மக்கள் இரும்பின் அறிமுகத்தோடு முதலில் வண்ணப் பூச்சுடைய சாம்பல் மட்பாண்டங்களையும் (Painted Grey Ware), சுமாராக கி.மு. 550ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து வடக்கின் மெருகூட்டப்பட்ட கறுப்பு மட்பாண்டங்களையும் (Northern Black Polished Ware) பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அதே காலகட்டத்தில், ஆதி இரும்புக்காலத்தில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த மக்கள் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எனவே, வட இந்திய, தென்னிந்திய, இலங்கையின் ஆதி இரும்புக்காலக் கலாசாரங்கள் ஒன்றானவை அல்ல.

இரும்புக்காலத்தை ஒரு காலப்பகுதியாகவும், அக்காலத்தில் நிகழ்ந்த ஒரு தனிப்பட்ட கலாசாரப் பண்பாட்டை வலியுறுத்தும் முகமாகவும், விமலா பெக்லி போன்ற ஆய்வாளர்கள் ‘இரும்புக்காலப் பெருங்கற் கலாசாரம்’ என்ற வார்த்தையைப் பிரயோகித்தனர். வங்காளப் பேராசிரியர் சுனித்தி குமார் சாட்டர்ஜீ அக்காலத்தைய மற்றொரு கலாசாரத்தை விளக்கும் முகமாக ‘இரும்புக்காலத் தகனக் கிரியை’ என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்.

எனவே, ‘இரும்புக்காலக் கலாசாரம்’ என்ற பதம் ஒரு பொதுப்படையான தலைப்பே தவிர, ஒரு குறிப்பிட்ட மக்களின் தனித்துவமான கலாசாரப் பண்பாட்டைக் குறிப்பிடும் பதம் எனக் கூற முடியாது.

தென்னாசிய வரலாற்றில் இந்தியப் பெருநிலத்திற்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு இலங்கைக்கு உள்ளது. தெளிவாக எழுதப்பட்ட

ஒரு குலவரலாற்று நூல் இங்கைக்கு உள்ளது. இந்திய வரலாற்றை எழுதும்போது பல தருணங்களில் காலநிர்ணயம் மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதே சமயம், மகாவம்சம் ஒரு மத-குலவரலாறு மட்டுமே. ஒரு குலம் தனது மதத்தை முன்வைத்து தனக்காக எழுதிக்கொண்ட வரலாறு அது. அதன் பின்னணியில் பௌத்த மதப் பெருமிதங்கள் பேசப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

இலங்கையின் புத்த குருமாரினால் எழுதப்பட்ட மகாவம்ச வரலாற்றில் வலுவான மதச்சார்பும், அற்புதங்களும், உண்மைக்குப் புறம்பான கண்டுபிடிப்புகளும் உட்பொதிந்துள்ளன.

உதாரணமாக :

புத்தபிரான் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்தமை. கி.மு. 500ஆம் ஆண்டில் விஜயன் தனது 700 சகாக்களுடன் ஒரே பாய்க்கப்பலில் வந்து சேர்ந்தது (அக்காலத்தில் அத்தகைய பெரிய பாய்க்கப்பல் உலகில் எங்குமே இருக்கவில்லை).

விஜயன் புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்த அதே நாளில் (பொதுவாக கி.மு. 483ஆம் ஆண்டு எனக் கணிக்கப்பட்டிருக்கிறது) இலங்கையை வந்தடைந்தது.

கிழக்கு இந்தியாவிலிருந்த லாலாவிலிருந்து (வங்காளம்) இலங்கை நோக்கிப் புறப்பட்ட விஜயனின் கப்பல், வழியில் மேற்கு இந்தியக் கரையிலிருந்த துறைமுகமான 'சுப்பாரகா' துறைமுகத்தில் தங்கி, பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இலங்கை வந்தடைந்தது.

விஜயனும் அவனது 700 சகாக்களும் இலங்கையை வந்தடைந்த போது இலங்கையில் மனித இனங்கள் இருக்கவில்லை. இங்கிருந்த இயக்கர் இராட்சத இனத்தவர். நாகர்கள் அமானுஷ்யர்கள். இலங்கையில் காலடி வைத்த முதல் மனித இனத்தவர் விஜயனும் அவனது தோழர்களும் ஆவர். இவர்களின் வம்சாவளியினரே சிங்கள மக்களாவர்.

மேற்கூறிய சம்பவங்களை ஏற்றுக்கொள்ளாத இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் பலர், இச்சம்பவங்கள் வடஇந்தியாவிலிருந்து பெருந்திரளாக இங்கே வருகை தந்து குடியேறிய மக்களைக் (Exodus of North-Indian Settlers) குறிப்பிடுவதாக எடுத்துக்கொண்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரித்தானிய வரலாற்றாசிரியர்களும், அவர்களைத் தொடர்ந்த இருபதாம் நூற்றாண்டின் இலங்கை ஆசிரியர்களும் இக்கருத்தை அடிநாதமாகக் கொண்டே இலங்கையின் வரலாற்றை அமைத்தார்கள்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் குடியேற்றங்கள் ஆரம்பமாகிவிட்டமை, 34,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நுண்கற்களைப் பயன்படுத்தும் மக்கள் வாழ்ந்தமை, 1200 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதி இரும்புக்கால மையங்கள் இலங்கை முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டமை ஆகிய உண்மைகளை அறிந்திருந்தும், 2005 ஆம் ஆண்டில் பென்குயின் நிறுவனம் வெளியிட்ட பிரபலமான பேராசிரியர் கே.எம். டி சில்வாவின் 'இலங்கையின் வரலாறு' (A History of Sri Lanka) என்ற நூலின் முதலாவது அத்தியாயம் 'காலனித்துவவாதிகளும் குடியேறியவர்களும்' (Colonists and Settlers) என்ற தலைப்பில், இந்தோ-ஆரிய மக்களின் குடியேற்றத்துடன் இலங்கை வரலாறு ஆரம்பிப்பதாகக் கூறுகின்றது.

இலங்கையில் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து பெருவாரியான மக்கள் இங்கே வந்து குடியேறியதற்கான ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. அவர்கள் அவ்வாறு வந்து குடியேறியிருந்தால் அக்காலத்தில் அவர்கள் பயன்படுத்திய 'வண்ணப் பூச்சுக்கொண்ட சாம்பல் மட்பாண்டமோ' அல்லது 'வடஇந்திய மெருகூட்டப்பட்ட கறுப்பு மட்பாண்டமோ' பரவலாக நாடெங்கும் கிடைத்திருக்கும். இலங்கையின் அகழ்வுகளில் 'வண்ணப் பூச்சுக்கொண்ட சாம்பல் மட்பாண்டங்கள்' காணப்படவில்லை. 'வட இந்திய மெருகூட்டப்பட்ட கறுப்பு மட்பாண்டட்' ஓடுகள் சில யாழ்ப்பாணக் கோட்டை அகழ்விலும், அநுராதபுரம் ASW2 அகழ்விலும், மகாகமையிலும், மாந்தை அகழ்விலும் (ஒரேயொரு கலவோடு) கிடைத்திருக்கின்றன. இவை வர்த்தகம் வழியாக வந்த மட்பாண்டங்களாகும். இதைத் தவிர இம்மட்பாண்டம் இலங்கையில் வேறு எங்குமே காணப்படவில்லை. இதனோடு ஒப்பிடும்போது, கி.மு. 1200 ஆண்டுக் காலம் முதலாக பெருங்கற் பண்பாட்டுக் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் இலங்கையெங்கும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

| TABLE1 [ Possehl, Gregory L. and Gullapalli, Praveena, 1999 ] RADIOMETRIC DATES FOR MEGALITHIC IRON IN PENNINSULAR INDIA | | |
|---|---|---|
| SITE AND PERIOD | LAB NO. | CALIBRATED DATE BC/AD (1δ CAL) (CALIB-3 PROGRAM) |
| RADIOCARBON DATES | | |
| Hallur, Period IB, Late Neolithic | TF-586<br>TF-576 | 1415 (1310) 1134 BC<br>1679 (1522) 1426 BC |
| Hallur, Period II, Neolithic/Iron Age Overlap | TF-575<br>TF-573<br>TF-570 | 1255 (1039) 918 BC<br>1116 (976, 965, 935) 837 BC<br>1378 (1196, 1181, 1165, 1141, 1139) 1007 BC |
| Kakoria, Megalithic | TF-179<br>TF-183 | AD 1646 (1673, 1779, 1797, 1945, 1953) 1954<br>AD 1643 (1672, 1781, 1795, 1946, 1953) 1954 |
| Korkai, Megalithic | TF-987 | 906 (818) 795 BC |
| Naikund, Megalithic | BS-94<br>BS-92 | 797 (759, 676, 658, 641, 550) 405 BC<br>782 (522) 398 BC |
| Paiyampalli, Megalithic | TF-828<br>TF-824<br>TF-823<br>TF-825 | 333 (102) BC AD 9<br>AD 1183 (1271) 1294<br>800 (764, 614, 606) 410 BC<br>AD 1262 (1294) 1396 |
| **Paiyampalli, Neolithic/Megalithic Transition** | **TF-827** | **2033 (1892) 1747 BC** |
| Paiyampalli, Late Southern Neolithic | TF-833<br>TF-829<br>TF-832<br>TF-829 (BS) | 1735 (1499, 1481, 1456) 1223 BC<br>AD 978 (1027) 1176<br>AD 1193 (1278) 1300<br>AD 787 (897, 910, 958) 1015 |
| Palavoy, Neolithic/Megalithic Transition | TF-700 | 1855 (1680) 1526 BC |
| Satanikota, Megalithic | BS-202<br>BS-201<br>BS-204<br>BS-203 | AD 544 (635) 672<br>AD 340 (427) 554<br>8081 (8018) 7927 BC<br>6458 (6372) 6182 BC |
| Takalghat, Pre-Iron Megalithic | TF-783<br>TF-784<br>TF-784 (BS) | 796 (759, 676, 658, 641, 550) 406 BC<br>768 (487, 442, 424) 395 BC<br>758 (401) 264 BC |
| THERMOLUMINESCENCE DATES | | |
| Kumaranhalli | PRL-TL-47<br>PRL-TL-50 | 1290±90 BC<br>1270±170 BC |
| **Gufkral** ( RADIOCARBON DATES, PERIOD II , MEGALITHIC IRON AGE ) | BS 434<br>BS 431<br>BS 433<br>BS 371 | 2195 ( 2035 ) 1900<br>1885 ( 1747 ) 1677<br>2131 ( 1945 ) 1779<br>1888 ( 1747 ) 1674 CALIBRATED DATE BC |

**இந்திய தீபகற்பத்தில் பெருங்கற்பண்பாட்டுப் புதையல்களின் கதிரியக்கத் திகதிகள்**

கி.மு. 1200 ஆண்டுக் காலத்திலிருந்தே பெருங்கற் பண்பாட்டின் வருகையோடு இரும்பின் பயன்பாடு, நீர்ப்பாசன விவசாயம், நெற்பயிரீடு, கறுப்பு-சிவப்பு மட்பாண்டப் பயன்பாடு ஆகிய அம்சங்களுடன் இலங்கை மக்களின் நாகரிக வளர்ச்சி ஆரம்பமாகியுள்ளது. கி.மு. 800ஆம் ஆண்டுக் காலத்திலேயே - விஜயன் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படும் கி.மு. 500ஆம் ஆண்டு காலத்திற்கு 300 ஆண்டுகள் முன்னதாகவே - அநுராதபுரம் மையப்படுத்தப்பட்ட அரச கட்டமைப்பைக் கொண்ட ஓர் ஆதிகால நகரமாகிவிட்டதை அகழ்வாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே வடஇந்திய வர்த்தகர்கள் இலங்கைக்கு வருகை தந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கந்தரோடையிலும் மாந்தையிலும் காணப்படுகின்றன. அவர்களின் வருகையோடு பிராகிருத மொழியும் இலங்கையை வந்தடைந்திருக்கும். அநுராதபுர அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளின் பின்னணியை ஆராயும்போது, இவ்வெழுத்து முறை தமிழகத்திலிருந்தே இலங்கைக்குப் பரவியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

ஒன்று, மட்பாண்டத்தில் எழுத்துகளைப் பதிக்கும் வழக்கம் தமிழகத்திலும் இலங்கையிலும் மட்டுமே காணப்படுகிறது. வட இந்தியாவில் இப்படி ஒரு வழக்கம் இருந்ததாகத் தொல்லியல் சான்றுகள் கிடையாது.

இரண்டாவது, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் வட இந்தியாவில் பிராமி எழுத்துப் பதிவுகள் இருப்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

மேலும், இலங்கையின் ஆரம்பகாலப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து வடிவங்கள் தமிழகப் பிராமிக் கல்வெட்டு வடிவங்களை ஒத்திருப்பதை சத்தமங்கல கருணாரத்ன போன்ற ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள் (Karunaratne, S. 1984).

கி.மு. 250ஆம் ஆண்டளவில் இலங்கையை வந்தடைந்த பௌத்த மதத்துடனேயே பாளி மொழி இலங்கையை வந்தடைந்தது. சிங்கள மொழியின் உருவாக்கத்தில் ஹெளு, தமிழ், பிராகிருதம், பாளி ஆகிய மொழிகள் இடம்பெற்ற போதிலும், பெரும்பாலான சொற்பதங்கள் பாளி மொழியிலிருந்தே பெறப்பட்டுள்ளன. 'சொற்பதங்களை அடிப்படையாகக் கொண்டு அதை ஓர் இந்தோ-ஆரிய மொழி என வகைப்படுத்திய போதிலும், அதன் அடிப்படை இலக்கணமும் கட்டமைப்பு அடித்தளமும் திராவிட மொழிகளினுடையதாகும்' என்கிறார் பன்மொழி வல்லுநரான ஆய்வாளர் முதலியார் குணவர்த்தன.

நன்றி: சிவ. தியாகராஜா - எழுநா முகநூல்

**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.com**

# பிரித்தானியாவுக்கு ரஷ்ய அச்சுறுத்தல்: போர்க்கால அவசர நிலையின் அவசியம்!

**– ஐங்கரன் விக்கினேஸ்வரா –**

08.09.2026

பிரித்தானிய மக்கள் வீடுகளில் குடிநீர், டின் உணவுகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் அறிவுறுத்தல், நாட்டின் பாதுகாப்பு நிலை குறித்த முக்கியமான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறிவுறுத்தல் வெறுமனே வெள்ளம், புயல் அல்லது காட்டுத்தீ போன்ற இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மட்டுமல்லாமல், ரஷ்யா உள்ளிட்ட பகை நாடுகளால் உருவாகக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் கருத்தில் கொண்ட ஒரு பரந்த தேசிய மீள்திறன் திட்டத்தின் பகுதியாக பார்க்கப்படுகிறது.



ஆயினும் பிரித்தானிய அரசாங்கம் இதனை போர் வரப் போகிறது என்ற எச்சரிக்கையாக முன்வைக்கவில்லை. மாறாக, எதிர்பாராத ஒரு தேசிய நெருக்கடி ஏற்பட்டால், மக்கள் சில காலத்துக்கு தங்களது அடிப்படைத் தேவைகளைத் தாங்களே சமாளிக்கும் வகையில் தயாராக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம் என விளக்கப்படுகிறது. இருப்பினும், இந்த அறிவுறுத்தல் வெளியாகும் காலகட்டம் முக்கியமானது. உக்ரைன் போர் நீடித்து வரும் நிலையில், ஐரோப்பாவின் பாதுகாப்புச் சூழல் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இல்லாத அளவுக்கு பதற்றமடைந்துள்ளது.

## ரஷ்யா – பிரித்தானிய முறுகல்

2022ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் மீது முழுமையான இராணுவப் படையெடுப்பை ஆரம்பித்த பின்னர், ஐரோப்பிய பாதுகாப்பு அமைப்பு அடிப்படையில் மாறியுள்ளது. நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள், நிதி மற்றும் உளவுத் தகவல் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன. அவற்றில் பிரித்தானியாவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் காரணமாக ரஷ்யாவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான உறவு கடுமையாக மோசமடைந்துள்ளது. ரஷ்யா தனது எதிரிகளுக்கு எதிராக பாரம்பரிய இராணுவ சக்தியை மட்டுமல்லாமல், இணையத் தாக்குதல்கள், உளவு நடவடிக்கைகள், தவறான தகவல் பரப்புதல் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகளை குறிவைக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றையும் பயன்படுத்துவதாக மேற்கத்திய அரசுகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றன.

**நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள், நிதி மற்றும் உளவுத் தகவல் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன. அவற்றில் பிரித்தானியாவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் காரணமாக ரஷ்யாவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான உறவு கடுமையாக மோசமடைந்துள்ளது. பிரித்தானிய மக்கள் வீடுகளில் குடிநீர், டின் உணவுகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் அறிவுறுத்தல் பொது மக்களுக்கான பாதுகாப்பு எச்சரிக்கை மட்டுமன்றி, போருக்கான தயாரிப்பா அல்லது தேசிய பாதுகாப்பின் அடிப்படை நோக்கமா என்பதை வரையறுக்க முடியாது உள்ளது.**

இதனால் பிரித்தானியாவின் பாதுகாப்புத் திட்டமிடலில் ரஷ்யாவுடன் நேரடி போர் என்ற சாத்தியம் மட்டுமல்லாமல், ரஷ்யாவால் தூண்டப்படக்கூடிய பல்வேறு மறைமுக அச்சுறுத்தல்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இன்றைய உலகில் ஒரு நாட்டைத் தாக்குவதற்கு முதலில் ஏவுகணைகளை அனுப்ப வேண்டிய அவசியமில்லை. ஒரு நாட்டின் மின்சார வலையமைப்பு, வங்கிகள், தொலைத்தொடர்பு, விமான நிலையங்கள், ரயில் சேவைகள் அல்லது மருத்துவமனைகளின் கணினி அமைப்புகளை முடக்குவதன் மூலமே பெரும் குழப்பத்தை ஏற்படுத்த முடியும். இதுவே பிரித்தானியாவின் தற்போதைய பாதுகாப்பு கவலைகளில் ஒன்றாகும்.

ரஷ்யாவுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சைபர் குழுக்கள் மேற்கத்திய நாடுகளின் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகளை குறிவைத்த சம்பவங்கள் ஏற்கனவே பதிவாகியுள்ளன. எதிர்காலத்தில் ஒரு பெரிய அளவிலான சைபர் தாக்குதல் இடம்பெற்றால், அதன் தாக்கம் இணைய உலகத்தைத் தாண்டி பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையிலும் நேரடியாகத் தெரியும்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டால் குளிர்சாதனப் பெட்டிகள், மின்சார அடுப்புகள் மற்றும் பல்வேறு வீட்டு உபகரணங்கள் செயலிழக்கலாம். வங்கிச் சேவைகள் பாதிக்கப்பட்டால் மக்கள் பணத்தைப் பெறுவதிலும் பொருட்களை வாங்குவதிலும் சிக்கல் ஏற்படலாம். நீர் விநியோக அமைப்புகள் பாதிக்கப்பட்டால் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

இதனால்தான் வீட்டில் தண்ணீர் மற்றும் நீண்டகாலம் கெடாத உணவுகளை வைத்திருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்துவது முக்கியத்துவம் பெறுகிறது.

## ‘War Book’ மீண்டும் பேசப்படுகிறது?

பிரித்தானிய அரசாங்கத்தின் அவசரநிலைத் திட்டங்களில் “War Book” எனப்படும் முக்கிய ஆவணமும் குறிப்பிடத்தக்கது. ஒரு பெரிய தேசிய நெருக்கடி அல்லது வெளிநாட்டு இராணுவ மோதல் ஏற்பட்டால் அரசாங்கம் மற்றும் முக்கியமான நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான திட்டமிடல் இதில் இடம்பெறும்.

இந்தத் திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட நிலையில், தற்போதைய உலகளாவிய பாதுகாப்புச் சூழலுக்கு ஏற்ப அது மீளாய்வு செய்யப்படுவது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பனிப்போர் முடிவடைந்த பின்னர், ஐரோப்பாவில் பெரிய அளவிலான போர் ஏற்படும் சாத்தியம் குறைந்துவிட்டதாக பல நாடுகள் கருதியிருந்தன. ஆனால் உக்ரைன்




போர் அந்தக் கணக்கை மாற்றிவிட்டது.

## ரஷ்யா நேட்டோவைத் தாக்குமா?

இது தொடர்பாக மேற்கத்திய பாதுகாப்பு அமைப்புகளில் நீண்டகாலமாக விவாதம் நடைபெற்று வருகிறது. ரஷ்யா எதிர்காலத்தில் நேட்டோ நாடொன்றைத் தாக்கக்கூடும் என்ற எச்சரிக்கைகள் சில மேற்கத்திய அரசியல் மற்றும் இராணுவ வட்டாரங்களிலிருந்து வெளியாகியுள்ளன. ஆனால் இதை உடனடி போர் ஏற்படப்போகிறது என்பதற்கான உறுதியான அறிகுறியாகக் கருத முடியாது.

நேட்டோவின் கூட்டு பாதுகாப்பு விதிமுறை காரணமாக, ஒரு நேட்டோ நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல், முழு கூட்டணியையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையை ரஷ்யாவுக்கு உருவாக்கும். எனவே ரஷ்யா மற்றும் நேட்டோ இடையே நேரடி போர் ஏற்படுவது இரு தரப்புக்கும் மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது. இருப்பினும், நேரடி போர் இல்லாவிட்டாலும், சைபர் தாக்குதல், உளவு நடவடிக்கை, தகவல் போர் மற்றும் பொருளாதார அழுத்தம் போன்ற “grey-zone” நடவடிக்கைகள் தொடரக்கூடும்.

## இலண்டன் மக்கள் அச்சத்தில்

தண்ணீர் மற்றும் டின் உணவுகளைச் சேமிக்குமாறு கூறப்படுவது சிலரிடம் பிரித்தானியா போருக்குத் தயாராகிறதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. ஆனால் பொதுமக்கள் பெருமளவில் உணவைப் பதுக்கி வைத்து பீதியை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. சில நாட்களுக்கு தேவையான அடிப்படைப் பொருட்களை வைத்திருப்பது ஒரு சாதாரண அவசர நிலைத் தயார்நிலையாகவே பார்க்கப்பட வேண்டும். இதன் பின்னணியில் ரஷ்ய அச்சுறுத்தல் மட்டுமல்ல. காலநிலை மாற்றம், கடுமையான வெப்பநிலை, வெள்ளம், காட்டுத்தீ, மின் தடை, தொற்றுநோய் அல்லது விநியோகச் சங்கிலி பாதிப்பு போன்ற பல்வேறு நெருக்கடிகளும் உள்ளன.

பிரித்தானியாவில் உருவாகும் புதிய அணுகுமுறையின் முக்கியத்துவம் இதில்தான் உள்ளது. தேசிய பாதுகாப்பு என்பது இனி இராணுவம், விமானப்படை அல்லது கடற்படையின் பொறுப்பு மட்டுமல்ல. ஒரு நாட்டின் மின்சாரம், இணையம், வங்கி, உணவு, நீர் மற்றும் தொலைத்தொடர்பு அமைப்புகளும் பாதுகாப்பின் முக்கிய பகுதிகளாகிவிட்டன. எனவே, பொது மக்கள் சில அடிப்படைப் பொருட்களுடன் தயாராக இருப்பது அரசாங்கத்தின் மீது இருக்கும் அவசரநிலைச் சுமையை குறைக்கவும், பேரிடர் ஏற்பட்டபோது சமூகத்தின் மீள்திறனை அதிகரிக்கவும் உதவும்.

## புதிய தேசிய பாதுகாப்புக் கலாசாரம்

பிரித்தானிய மக்களுக்கு தண்ணீர் மற்றும் டின் உணவுகளைச் சேமிக்குமாறு வழங்கப்படும் அறிவுறுத்தல், ஒரு சாதாரண உணவுப் பாதுகாப்பு அறிவுரையை விட ஆழமான பொருளைக் கொண்டுள்ளது. ரஷ்யா-உக்ரைன் போர், ரஷ்யா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையிலான அதிகரித்துவரும் பதற்றம், சைபர் தாக்குதல்கள் மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவை பிரித்தானியாவின் புதிய தேசிய பாதுகாப்புச் சிந்தனையை வடிவமைத்து வருகின்றன.

ஆனால் இதனை போர் நிச்சயம் வருகிறது என்ற செய்தியாகப் புரிந்துகொள்வது சரியானதல்ல. மாறாக, உலகம் எதிர்பாராத நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலையில், பயம் வேண்டாம் ஆனால் தயாராக இருங்கள் என்பதே பிரித்தானிய அரசாங்கத்தின் புதிய செய்தியாகத் தெரிகிறது. ரஷ்ய அச்சுறுத்தல் உண்மையான பாதுகாப்புச் சவாலாக இருந்தாலும், அதற்கான பதில் பீதியல்ல. வலுவான இராணுவத் தயார்நிலை, பாதுகாப்பான உட்கட்டமைப்பு, சைபர் பாதுகாப்பு, நம்பகமான தகவல் அமைப்பு மற்றும் அவசரநிலைகளை எதிர்கொள்ளத் தயாரான பொதுமக்கள் ஆகிய அனைத்தும் இணைந்தால்தான் ஒரு நாட்டின் உண்மையான தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

# பிரான்சில் மரின் லு பென் வென்றால் உக்ரைன் போருக்கான உதவி நிறுத்தப்படும்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

09.09.2026

பிரான்ஸ் உக்ரைன் போரில் தொடர்ந்து ஆயுதங்களையும் நிதியுதவியையும் வழங்குவதற்குப் பதிலாக, இராஜதந்திரப் பேச்சுவார்த்தை மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இதுதான் மரின் லு பென் முன்வைக்கும் அரசியல் நிலைப்பாடாகும். 2026 செப்டெம்பர் 5ஆம் திகதியைச் சுற்றியுள்ள அவரது தேசிய பேரணி (Rassemblement National - RN) கட்சியின் கருத்துக்கள், பிரான்சின் எதிர்கால வெளிநாட்டுக் கொள்கை குறித்த முக்கியமான முடிவுகளை உருவாக்கியுள்ளன.




லு பென் நீண்டகாலமாக உக்ரைன் போருக்கு இராணுவத் தீர்வை விட பேச்சுவார்த்தைத் தீர்வே அவசியம் என்று வலியுறுத்தி வருகிறார். ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து, பிரான்ஸ் ஒரு பெரிய சர்வதேச சமாதான மாநாட்டை ஏற்பாடு செய்து, போரில் ஈடுபட்ட தரப்புகளையும் முக்கிய உலக சக்திகளையும் ஒரே மேசைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே அவரது வாதமாகும். சமீபத்திய கருத்துக்களிலும் அவர், பாரிய சமாதான மாநாடு மூலம் இராஜதந்திரத் தீர்வை உருவாக்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## கட்சியின் புதிய அணுகுமுறை

இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் அவரது கட்சிக்குள் தற்போது வெளிப்படும் நுணுக்கமான வேறுபாடாகும். செப்டெம்பர் 4ஆம் தேதி கட்சியின் துணைத் தலைவர் லூயி அலியோ, லு பென் தலைமையிலான அரசு வெளிப்படையாகக் கூறினார். இது பிரான்சின் அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. எதிர்க்கட்சிகள், குறிப்பாக இடதுசாரி மற்றும் மத்தியவாத அரசியல்வாதிகள், கட்சியின் இந்த நிலைப்பாடு ரஷ்யாவுக்கு சாதகமானதாக அமையும் என்று கடுமையாக விமர்சித்தனர்.

ஆனால் கட்சித் தலைவர் ஜோர்டான் பார்டெல்லா பின்னர் இந்த நிலைப்பாட்டை ஓரளவு மிதப்படுத்தினார். பிரான்ஸ் தனது சர்வதேச உறுதிப்பாடுகளை மதிக்கும் என்றும், உக்ரைனுக்கு வழங்கப்படும் தற்காப்பு இராணுவ உதவியும் மனிதாபிமான உதவியும் தொடரலாம் என்றும் அவர் தெரிவித்தார். அதே வேளை, பிரான்சின் சொந்த ஆயுதக் கையிருப்பு மற்றும் பாதுகாப்புத் திறனை பாதிக்கும் அளவுக்கு உதவி வழங்க முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதனால், தேசிய பேரணி ஆட்சிக்கு வந்தால் உக்ரைனைக் கைவிடும் என்று நேரடியாகக் கூறுவது சாத்தியமில்லை. அதற்கு பதிலாக, உக்ரைனுக்கான பிரான்சின் உதவியை கணிசமாகக் குறைத்து, அதனை பிரான்சின் நிதிநிலை, இராணுவத் தேவைகள் மற்றும் எதிர்கால பாதுகாப்பு நலன்களுடன் இணைக்க வேண்டும் என்பதே தற்போது தென்படும் தேசிய பேரணி அணுகுமுறை ஆகும்.

## இந்த மாற்றத்தின் காரணங்கள்

பிரான்சின் பொருளாதார நிலை. தேசிய பேரணி தலைவர்கள், பிரான்ஸ் ஏற்கனவே கடுமையான நிதிச்சுமையை எதிர்கொள்கிறது என்றும், உள்நாட்டில் ஓய்வூதியம், சுகாதாரம், சமூக நலன் போன்ற துறைகளில் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில், வெளிநாட்டு போருக்கான முடிவில்லாத நிதியுதவியைத் தொடர முடியாது என்றும் வாதிடுகின்றனர். தேசிய பேரணி நாடாளுமன்ற உறுப்பினர் லோரான் ஜகொபெல்லி, உக்ரைனுக்கான உதவி பிரான்சின் நிதி எதிர்காலத்தை ஆபத்துக்குள்ளாக்கக் கூடாது என்று கூறியுள்ளார்.

போரின் நீடிப்பு. 2022ஆம் ஆண்டு ரஷ்யா முழுமையான அளவில் உக்ரைனை ஆக்கிரமித்ததிலிருந்து பல ஆண்டுகள் கடந்துள்ளன. போருக்கு முடிவு காணப்படாத நிலையில், ஐரோப்பிய நாடுகள் எவ்வளவு காலம் தொடர்ந்து இராணுவ மற்றும் நிதி உதவி வழங்க முடியும் என்ற கேள்வி அதிகரித்துள்ளது. சமீபத்திய ஐரோப்பிய பாதுகாப்பு விவாதங்களிலும் நீண்டகால ரஷ்யாவுடனான மோதலைத் தாங்குவதற்கான ஐரோப்பாவின் இராணுவ மற்றும் அரசியல் திறன் குறித்து கவலைகள் வெளிப்



பிரான்சில் எதிர் வரும் தேர்தலில் மரின் லு பென் [Marine Le Pen] வென்றால் உக்ரைன் போருக்கான உதவி நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவரின் கட்சி ஆட்சி அமைத்தால் பல கொள்கைகள் மாற்றம் பெற வாய்ப்பு உள்ளது என்றும் கூறப்படுகிறது.

பட்டுள்ளன.

அத்துடன் 2027 பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தலில் மரின் லு பென்னின் தேசிய பேரணி பிரான்சின் அரசியல் களத்தில் முக்கிய சக்தியாகத் தொடர்கின்றன. எனவே, உக்ரைன் போர் என்பது வெளிநாட்டுக் கொள்கை பிரச்சினை மட்டுமல்ல; அது பிரெஞ்சு வாக்காளர்களிடம் பிரான்சின் பணம் எங்கு செல்கிறது, பிரான்சின் பாதுகாப்புக்கு முன்னுரிமை என்ன என்ற கேள்விகளையும் எழுப்பும் உள்நாட்டு அரசியல் பிரச்சினையாக மாறியுள்ளது.

## ரஷ்ய உறவின் சர்ச்சை

லு பென்னின் உக்ரைன் கொள்கையை விமர்சிப்பவர்கள், அவரது கடந்தகால ரஷ்ய அணுகுமுறையை நினைவுபடுத்துகின்றனர். குறிப்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதினுடனான அவரது முந்தைய அரசியல் தொடர்புகள் மற்றும் தேசிய பேரணி ரஷ்யா தொடர்பான பழைய நிலைப்பாடுகள் காரணமாக, எதிர்க்கட்சிகள் அவரை ரஷ்யாவுக்கு சாதகமானவர் என சித்தரிக்க முயல்கின்றன. தேசிய பேரணி தலைவர்களின் சமீபத்திய உக்ரைன் தொடர்பான கருத்துக்கள் மீதும் இதே விமர்சனம் மீண்டும் எழுந்துள்ளது. ஆனால் தேசிய பேரணி இதனை மறுக்கிறது. தாங்கள் ரஷ்யாவை ஆதரிப்பதற்காக அல்ல, பிரான்சின் தேசிய நலன்களை முன்னிறுத்துவதற்காகவே உக்ரைன் கொள்கையை மறுபரிசீலனை செய்கிறோம் என்று கட்சி வாதிடுகிறது.

## ஐரோப்பிய பாதுகாப்பில் தாக்கம்

லு பென் எதிர்காலத்தில் பிரான்சில் ஆட்சிக்கு வந்தால், அதன் தாக்கம் பிரான்ஸ்-உக்ரைன் உறவுகளைத் தாண்டி செல்லக் கூடும். பிரான்ஸ் ஐரோப்பாவின் மிக முக்கியமான இராணுவ சக்திகளில் ஒன்றாகும். அணு ஆயுதத் திறன் கொண்ட ஐரொப்பிய ஒன்றியத்தின் முக்கிய நாடாகவும், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினராகவும் அது உள்ளது. எனவே பிரான்சின் உக்ரைன் கொள்கையில் ஏற்படும் மாற்றம் ஐரோப்பிய பாதுகாப்பு கட்டமைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பிரான்ஸ் உக்ரைனுக்கான இராணுவ உதவியை கணிசமாகக் குறைத்தால், ஜெர்மனி, பிரிட்டன், போலந்து மற்றும் பிற ஐரொப்பிய நாடுகளின் மீதும் கூடுதல் அழுத்தம் ஏற்படலாம். அதே வேளை, அமெரிக்கா தனது ஐரோப்பிய பாதுகாப்புப் பொறுப்பை மறுசீரமைக்கும் சூழ்நிலையில், பிரான்ஸ் போன்ற முக்கிய நாடுகளின் பங்கு மேலும் முக்கியமாகிறது. ஐரோப்பா ரஷ்யாவை எதிர்கொள்ளும் விதம், நேட்டோவின் எதிர்காலம், ஐரோப்பிய பாதுகாப்புக்கான செலவு மற்றும் அமெரிக்கா-ஐரோப்பா உறவு ஆகிய அனைத்துடனும் அது தொடர்புடையது.

லு பென் முன்வைக்கும் சர்வதேச சமாதான மாநாடு நடைமுறையில் வெற்றி பெறுமா என்பது மிகப்பெரிய கேள்வியாகும். ரஷ்யாவும் உக்ரைனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமரசத்தை உருவாக்குவது மிகவும் கடினம். உக்ரைன் தனது பிராந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறது. ரஷ்யா தனது பாதுகாப்பு கோரிக்கைகளையும் ஆக்கிரமித்த பகுதிகள் தொடர்பான நிலைப்பாட்டையும் முன்வைக்கிறது. இந்நிலையில் பிரான்ஸ் தனியாக ஒரு தீர்வை உருவாக்க முடியாது. அமெரிக்கா, ஐரொப்பிய ஒன்றியம், பிரிட்டன், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய முக்கிய தரப்புகளின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இதேவேளை, 2026 செப்டெம்பர் தொடக்கத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் தூதர்கள் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் மாஸ்கோவில் விளாடிமிர் புட்டினை சந்தித்து சமாதான முன்மொழிவு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இது சர்வதேச அளவில் மீண்டும் பேச்சுவார்த்தை முயற்சிகள் தீவிரமடையும் சூழலைக் காட்டுகிறது.

மரின் லு பென்னின் சமீபத்திய உக்ரைன் நிலைப்பாடு, பிரான்சின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு சாத்தியமான மாற்றத்திற்கான அறிகுறியாகக் கருதப்படலாம். எனினும் ஒரு விஷயம் தெளிவாகிறது. பிரான்ஸ் உக்ரைன் போரில் தனது தற்போதைய அணுகுமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற அரசியல் அழுத்தம் அதிகரித்து வருகிறது.

2027 பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், உக்ரைன் போர், ரஷ்யாவுடனான உறவு, நேட்டோ, ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் பிரான்சின் பாதுகாப்புச் செலவுகள் ஆகியவை தேர்தலின் முக்கிய வெளிநாட்டுக் கொள்கை விவாதங்களாக மாறக்கூடும். லு பென் முன்வைக்கும் போருக்குப் பதிலாக பேச்சுவார்த்தை வெற்றி என்ற கருத்து ஐரோப்பிய மக்களிடையே போர்ச் சோர்வு அதிகரிக்கும் நிலையில் ஆதரவைப் பெறக் கூடும். ஆனால் அந்தக் கொள்கை நடைமுறைக்கு வந்தால், அது உக்ரைனின் பாதுகாப்பை மட்டுமல்லாது, முழு ஐரோப்பிய பாதுகாப்பு சமநிலையையும் மாற்றக்கூடிய ஒரு முக்கியமான திருப்பமாக அமையலாம்.

# ஆத்மாக்கள்

அன்று அதிகாலையிலேயெ வீட்டைவிட்டுக் கிளம்பியவன், உள்ளமும் உடலும் வாடிச் சோர்ந்த நிலையில் வீடு திரும் புகிறேன். பல நாட்களுக்குப் பின் நீண்ட தூரத்துகு சைக்கிளில் பயணம் செய்ததலை; பயணத்தின் நோக்கம் நிறைவு பெறாத அயர்வு; நான் முற்றாகத் தளர்ந்து போகிறேன்.

அவள் எங்கோ ஆறுதல் தேடிப் போயிருக்க வேண்டும். வீடு அரவ மற்று அமைதியாக இருக்கிறது.

நான் வெளியே போய் வருகிறபோது அவள் எதிரில் நின்று வருவேற்கும் சம்பிரதாய வழக்கம் படிப்படியாக மறைந்து வரு வதாகத் தோன்றுகிறது. ஏதோ சகிக்க முடியாத இழப்பு ஒன்றைச் சந்தித்த அவஸ்தையால் வீட்டில் எல்லோரது மனங்களும் விகாரப்பட்டுப் போய் இருண்டு கிடக்கின்றன.

அவனை அந்த இரக்கமற்றவர்கள் இழுத்து சென்றதிலிருந்து எங்களை அவநம்பிக்கை சூழ்ந்து கொண்டுள்ளது.

அவன் இப்போது எங்கு எப்படி இருக்கிறானோ...!

நினைக்க மனதில், தவிப்பாக இருந்தது.

செஞ்சிலுவைச் சங்கத்துகு கொடுத்த மனு வெற்றியளிக்குமா...? சந்தேகம் என்னுள் கிளர்ந்தெழுகிறது. அடிக்கடி முகம் காட்டும் அவனின் நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக் கிறேன். மனச்சஞ்சலமும், பசியும் உடல் மனச்சஞ்சலமும், பசியும் உடல் அசதியைத் தருகிறது. பானையிலிருந்து நீரைப் பருகிவிட்டு விறாந்தை ஓரத்தில் கிடந்த படுக்கை மேல் சாய் கிறேன்.

அப்போதுதான் வீட்டுக்கு வந்தவள், என்னருகில் வந்து ஆவல் மிக்கவளாகக் கேட்கிறாள்.

“போன அலுவல் என்னப்பா...! செஞ்சிலுவைச் சங்கத்திலை விசாரிச்சீங்களோ...! நேற்றைக்கும் சிலரை விட்டதாம்...!

வழமைபோல இன்றும் நான் நம்பிக்கையிழந்து வெறுங்கை யுடன் வந்திருக்கிறேன். இது மன்னிக்க முடியாத குற்றம் ஒன்றை இழைத்து கொண்டிருப்பதாக அவளுக்குப்பட்டிருக்க வேண்டும்.

“என்ரை ராசா என்னட்டை வரவேணுமெண்டு எத்தினை கோயிலுக்கு நேத்தி வைச்சிருக்கிறன். அந்தக் கடவுளுகளும் இரங்காயினமோ...? என்ரை பிள்ளை எங்கை என்ன பாடு படுகிதோ...?”

வழக்கமாகிப் போய்விட்ட நச்சரிப்பைக் கேட்க இன்று அவள் மேல் அநுதாபம் மேலிடுகிறது.

“நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை.... இரண்டொரு நாளிலை அவன்ரை முடிவு தெரியும். அந்த அரசடியான் எங்களைக் கைவிட மாட்டார்...!

எனது இயலாமையை கடவுளிடம் பாரப்படுத்திவிட்டு அமைதி யாகிறேன். எனது வார்த்தைகள் அவளுக்கு நிச்சயமாக ஆறுதலை அளித்திருக்குமென நினைக்கவில்லை.

இராணுவம் மகனைக் கொண்டு சென்றதிலிருந்து வேளைக்கு உணவை மறந்தவளாய் தினமும் அழுது தீர்த்தபடி, பழிகிடந்து தன் உடலை உருக்கி அவன் நினைவில் ஆறுதல் தேடிக் கொண்டிருக்கிறாள். அவள் மேல் இரக்கமுற்றுப் பார்க்கிறேன்.

கண்கள் நன்றாகச் சிவந்து வீக்கம் கண்டிருந்தன. உடல் மெலிந்து நாடி நரம்புகள் புடைத்தபடி வெளித்தெரிய, அவளது கழுத்து சிறுத்து விலா எலும்புகள் துருத்திக் கொண்டிருப்பது பரிதாபமாக இருக்கிறது.

அவன் காணாமல் போனதிலிருந்து நானும் உள்ளூர் துயரத் தால் அலைக்கழிக்கப்பட்டு கொண்டிருக்கிறேன். எனது உறுதிப் பாட்டை அடிக்கடி இழக்க நேருகின்ற போதம் அதை அவளுக்கு வெளிக்காட்டிக் கொள்ள மனம் ஒப்பவில்லை.

எனது அற்ப சம்பளத்தை ஆதாரமாகக் கொண்டு எப்படியோ குடும்ப நிர்வாகத்தை சமாளித்து வருகிறாள். எனக்கு வாழ்க் கைப்பட்டதிலிருந்து, லௌகீகத்தில் அனுபவிக்க வேண்டி யவைகளையெல்லாம் தத்தம் செய்துவிட்டு எனக்காவும், பிள்ளைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்திருக்கிறாள். ஒரு வகையில் இவளெனக்குத் தியாகத்தை வாழ்நாள் முழுவதும் அருகிருந்து உணர்த்துபவளாக நிலைத்து விட்டாள்.

எங்களின் முப்பத்தைந்து வருடகால தாம்பத்திய வாழ்வின் பேறான சொத்து ஆணும், பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். பிள்ளைகளின் எதிர்காலத்தில்தான் எவ்வளவு நம்பிக்கை எதிர் பார்ப்புக்கள். இந்த போர்க்கால நெருக்கடியில் அவை நேரெதிரி டையாகப் போய்விடுமோ என்ற ஆதங்கம் எல்லாம் எங்களைக் கவலை கொள்ள வைக்கின்றன.



அவைபற்றியெல்லாம் என்னிடம் அடிக்கடி பேசியுமிருக்கிறாள். இந்த நெருக்கடி வாழ்விலும் அவளுக்கு ஓர் ரம்மியமான எதிர் பார்க்கை உண்டென்றால் அது பிள்ளைகளின் எதிர் கால சுபீட்ச மாகத்தான் இருக்கும். அந்த ஆத்மார்த்தமான நினைவுகளின் முன், வாழ்வின் அவலங்களெல்லாம் அடிபட்டுப்போய் விடுகின் றன.

நேற்றைய பத்திரிகையில் படித்த செய்தியை எப்படி அவ ளிடம்...? மனம் குறுகுறுக்கின்றது. அதை அவள் உள்வாங்கும் பக்குவத்தில் இல்லை என்பதால், எனது பேச்சை மாற்ற முற் படுகிறேன்.

“எனக்குப் பசிக்கிறது காலேலை சாப்பிட்டதற்கு இன்னுமொண்டு மில்லை...” அவளிடம் ஆதரவாகக் கேட்கிறேன்.

என் நோக்கம் அவளுக்குப் புரிகிறது. நம்பிக்கை இழந்தவளாய் என்னைப் பார்க்கிறாள்.

அந்தப் பார்வை...

நான் தப்பித்துக் கொள்ளும் முயற்சி நிரூபணமாகி, என்மேல குற்றம் காணுவதாக எனக்குள் குறுகுறுக்கின்றது.

சேலைத் தலைப்பால் கண்களை ஒற்றியபடி சமயலறைக்குள் செல்கிறாள். கையை அலம்பிவிட்டு நானும் போய் உட்கார்ந்து கொள்கிறேன்.

ஆக்கி வைத்ததை கோப்பையில் போட்டுக் கொண்டே, “இஞ்சா ருங்கோ...நேற்றேய்ப் பேப்பரிலை கிடந்ததாம், கிணறொண் டுக்கை எலும்புக் கூடுகள் இருந்த ... படிச்சனீங்களே...? ஆமி பிடிச்ச பிள்ளையளின்ரையெண்டு கதைக்கினம்”.

அவளது பரிதவிப்பு என்னையும் ஆட் கொள்ள, “என்னது...?” - அவளை ஏறிட்டுப் பார்க்கிறேன்.

“நீங்கள் அதைப்பற்றி ஒண்டும் சொல்லேல்லை...!” மீண்டும் கேட்கிறாள்.

“எதைப்பற்றி...”

“அந்தக் கிணத்துக்கை கிடந்த...”

“இப்ப அதுக்கென்ன...? உப்பிடி எத்தினை செய்திகள் வரும். பேப்ப ரிலை, வாறதெல்லாம் உண்மையே...?”

அவளிருக்கும் நிலைமையில் இப்படியான செய்திகள் மோச மான பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அந்தச் செய்தியின் காத்திரத் தன்மையை அலட்சியம் செய்வது போலக் கூறிவைக் கிறேன்.

நீண்ட பெருமூச்சின் பின்-

“என்ரை பிள்ளைக்கு என்ரை கையாலை செய்த சாப்பாடு தானை பிடிக்கும். நான் ஆக்கினதெண்டால் அவனுக்கு உயிர். எவ்வளவு ஆசையா கேப்பான்.... இப்ப. .?”

அவளது நீர் முட்டிய கண்களைப் பார்க்கும் துணிவின்றி தலையைத் தூக்காமல் அரையும் குறையுமாக வாயில் போட் டுக் கொண்டு எழுந்து போகிறேன்.

சமையலறையிலிருந்த அவள், முற்றத்தில் ஏதோ யோசனையி

சிறுகதை

**- சந்திரபோஸ் சுதாகர்**
**களத்தில் 05.09.1995 -**

லிருந்த மகளைப் பார்த்து;

“இருட்டிலை என்ன செய்யிறாய் பிள்ளை...? விளக்கைக் கொளுத்திவை...” என்றாள்.

அப்பொழுதுதான் காவேரி சுயநினைவுக்கு வருகிறாள். எழுந்து போய் விளக்கை ஏற்றி சமயலறைக்கும், விறாந்தைக்கு மிடை யில் வைத்து விட்டுச் செல்கிறாள்.

உடல் அசதியால், படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் இடம் கொடுக்கவில்லை. உலகின் இயக்கத்தை மறந்திருக்க வேண் டும் போலத் தோன்றுகிறது. படுக்கையில் கிடந்தபடியே திரும் பிப் பார்க்கிறேன்.

பக்கத்து அறையில் காவேரி படித்துக் கொண்டிருப்பது தெரி கிறது. அவளது மேசையில் புத்தகங்கள் அங்குமிங்குமாகப் பரவிக்கிடந்தன. அவள். எப்போதும் ஒரு நேர்த்தியை, ஒழுங் கைக் கடைப்பிடிப்பவள் சமீப காலமாக அவளது நடத்தை கள் என்னுள் சந்தேகத்தைத் தூண்டுகின்றன.

அவள் எதையோ வெறிக்க வெறிக்கப் பார்ப்பதும், மனதுக்குள் கறுவிக்கொள்வதுமாக... முற்றாக மாறி இருக்கிறாள். இப்போ தெல்லாம் கருத்தரங்குகள், முதலுதவிப் பயிற்சி, மாணவர் அமைப்பு வேலைகள் என்று சதா அலைந்து கொண்டிருக் கிறாள். வரவிருக்கும் பரீட்சையில்கூட கவனத்தைக் கலைத்து விட்டு, இப்படியாகி விட்டாள். எங்களைப் போல அவளுக்கும் தான் எவ்வளவு துயரம்? தன் அண்ணாவைப் பறி கொடுத் ததிலிருந்து. அவன் மேல் எவ்வளவு பாசம் அவளுக்கு...!

இந்த சிறிய குடும்பத்தின் சௌந்தரயமும், ஆனந்தமும் அவ னுடன் கூடவே போய்விட்டதாய்... ஒவ்வொருவரும் வேறு வேறு போக்கில....

அந்தக் கொடியவர்களுக்குத்தான் எவ்வளவு மனத்துணிவு… ? சிறிதும் இரக்கமில்லாமல் பெற்றவர்கள் முன்னால் அடித்து… இழுத்துச் செல்ல… எப்படி…?

அன்று நடந்த அனர்த்தங்கள் ஏதோ நேற்று நடந்து முடிந்தவை போல என் நினைவில் விகாரமாய் நின்று நெருடிக் கொண் டிருந்தன.

ஊரையே குலுக்கி எடுத்தபடியிருந்த வேட்டுக்கள்…!

வானத்தில் வட்டமிட்ட விமானங்களின் பேரிரைச்சல்…!

கடலிருந்து வந்த எறிகணைகளின் அதிர்வுச் சிதறல்கள்…!

இன்னும், அதிரவைத்த குண்டுகள்…! இரைச்சல்கள்…! மரண ஓலங்கள்…!

தொடர்ந்து, இராணுவம் வந்துவிட் டதாகக் காற்றுவாக்கில் வந்த செய்தி…!

மக்களுடன் மக்களாக கோயிலில் தஞ்சம்…!

இறுதியில், அவனையும், அவனை யொத்தவர்களையும் இழுத்துச் சென்றது…

அந்தக் கொடூர நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து நிற்க, இயலாமை மெல்ல மெல்ல உருவெடுத்து பிணமாய் அழுத்துகிறது. மனதில் ஆர்ப்பரித்த நினைவுகள் அடங்காமை யினால், எழுந்து காவேரியின் அறையை நோக்கி நடக்கிறேன். அவள் எதையோ ஆழ்ந்து படித்துக் கொண்டிருப்பது தெரி கின்றது.

எனது வருகையை சற்றும் எதிர் பார்த்திராதவள் போல எழுந்து நின்றாள்.

“சுதந்திரப் பறவை“ என்ற புத்தகத்தின் மேல் தன் பார்வையை பதித்தவளாக,

“என்ன அப்பா…?” என்றாள்.

“வாற மாதம் சோதினையெல்லே வருகுது. நீ படிக்கிறதாகவும் தெரி யேல்லை…”

அசிரத்தையாக முகத்தைத் திருப்பினாள்.

“கொண்ணன்ரை நிலைமைதான் அப்பிடிப் போச்சுது. நீ எண் டாலும் எங்களுக்கு…”

“கொம்மாவும் நோயாளியாப்போனா. அவவுக்கு ஆறுதலாய் நீ…”

“அப்பா, இப்ப ஆருக்கு ஆர் ஆறுதல் சொல்லுறது. அண் அவங்கள் கொண்டு போனதாலை தான் அம்மா இப்படி… அண்ணாவின்ரை கவலை எனக்கில்லையோ?”

“இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவு காணவேணும். இப்பதான் எனக்கும் உண்மைகள் தெரியுது”.

”என்ன…?”

“இந்த அவலங்களெல்லாம் எங்களுக்கு மட்டுமே அப்பா…? ஆமி வந்து போனதாலை ஒவ்வொரு குடும்பத்திலையும் தானை இழப்பு…! இண்டைக்கு இந்த மண்ணிலை வாழு றவை எதையாவது பறிகொடுத்து விட்டுத்தான் வாழுகினம். குறைஞ்சது நிம்மதியைத் தன்னும் இழக்காமலில்லை…”

அவளது பதில் மின்வெட்டாக வந்து பல உண்மைகளை எனக்கு உணர்த்துகிறது.

“அப்ப…இதுகளுக்கெல்லாம் முடிவு என்ன…? நீ உன்மை பிடி வாதத்தை விடமாட்டாய்.. அப்படித்தானை…?”

அவள் போக்கில் உடன்படாத தந்தையாய் மீண்டும் கேட்கி றேன்.

“நாங்கள் எக்கேடு கெட்டாலும் உனக்குக் கவலையில்லை யெண்டு சொல்லு…”

“அண்ணாவை நாங்கள் பறி கொடுத்ததுக்கு நீங்களும் தான் காரணம்”.

அவள் குரல் உணர்ச்சி வேகத்தில் விசும்பலாக வெளி வந்தது. நான் அதிர்ந்து போகிறேன்.

“அவர் இயக்கத்துக்குப் போக ஒரு முறைக்கு இரண்டு முறை யெல்லே நீங்கள் போய்க் கூட்டி வந்தனீங்கள்… அப்பிடிப போயி ருந்தால்… வீணாக அவங்கட கையிலை அகப்பட வேண்டி வந்திராது…!”

அவளது வார்த்தைகள் வன்மமாக வெளிப்பட்டன.

நீண்ட மௌனத்தின் பின் எதுவும் பேச இயலாதவனாய் எனது படுக்கைக்குச் செல்கிறேன்.

பக்கத்தில் மனைவியும் படுக்கையைவிட்டு எழுந்திருந்தபடி தனது வழமையான பல்லவியை ஆரம்பிக்கிறாள்.

மகன் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பான் என்ற தவிப்பு அவளுக்கு நித்தியமாய்ப் போய்விட்டது.

“இப்பவெல்லாம் எவ்வளவு குளிர் …என்ரை பிள்ளைக்கு போர்வை இருக்குதோ…? நித்திரை வருகிதோ…?” என்ற விசாரணையில் தொடங்கி…

“அவனுக்கு மாத்திக்கட்ட உடுப்புகள் இருக்குதோ…?” என்றெல் லாம் என்னிடம் ஆதங்கப்பட்டுக் கொள்கிறாள்.

முன்பு அவன் உறக்கத்திலிருந்த வேளைகளில் எத்தனை தட வைகள் எழுந்து போய் போர் வையைச் சரி செய்திருக்கிறாள்.

இப்போதெல்லாம் மகனை அடிக்கடி கனவில் காண்கிறதாய் கூறிக்கொள்கிறாள். இடையே இரத்தமும், ரணமும்… என்று பயங்கரக் கனவுகண்டு ஓவென்று கதறியழுவதும் வழக்கமாகி விட்டது.

இன்றும் அப்படித்தான் ஏதோ நிகழ்ந்திருக்க வேண்டும். எழுந் திருந்து…

“என்ரை பிள்ளை அம்மாவெண்டு கதறக் கதற.. அவங்கள் அடிச்ச அடி… என்ரை கண்ணுக்கு முன்னாலையே அந்த அடி அடிச்சவங்கள் … இப்ப எப்பிடி…?”

என்று அவள், தரையில் தலையை மோதியபடி தேம்பித் தேம்பி அழுகிறாள்.

அறையில் படுத்திருந்த காவேரிக்கும் மனம் பொறுக்க வில்லை. அண்ணன் மேலுள்ள பிரியத்தால் தாய்படும் அவஸ்தை அவள் நெஞ்சத்தையும் உலுக்கியிருக்க வேண்டும். தாயின் அழுகை யைக் கேட்டு வெளியே வந்தாள். அவள் கண்களும் பனித் திருந்தன.

அவளை வருத்தும் ஈடுசெய்ய முடியாத பிரிவுத்துயர் என் நெஞ் சையும் அலைக்கழிக்கிறது. வேதனையைப் போக்க என்ன செய்வதென்று தெரியாமல் அங்கலாய்ப்புறுகிறேன். மகனை எப்படியும் அவர்களிடமிருந்து மீட்க வேண்டுமென்ற உறுதி என்னுள் இறுகிக் கொண்டிருந்தது.

விளக்கின் மங்கல் ஒளியில் அவள் முகம் வாடிக்கிடப்பது தெரிகின்றது. அவளது விசும்பல் ஒலியும் படிப்படியாக அமைதி கண்டது.

அவள் தூங்கிப் போய்விடவே, காலையில் எழுந்ததும் அவ ளுக்கு மீண்டும் நம்பிக்கையளிப்பதான தேறுதலை அளிக்க வேண்டும். அது எவ்வாறென மனம் பலவிதமாய் அலை பாய்ந்த வண்ணம் இருந்தது.

அதிகாலையில் எங்கிருந்தோ வந்து விழுந்த “செல்“லின் பயங் கர ஒலியினால் அதிர்ந்து எழுகின்றேன். அவளும் திடீரென விழித்துக்கொண்டு…

“ஐயோ…! என்ரை பிள்ளையைக் கொல்லுகிறாங்கள்… கொல் லுகிறாங்கள்.. என்ரை பிள்ளையை. என்ரை பிள்ளையை…” எனப் பெருங் குரலெடுத்து அலறுகிறாள்.

பதட்டப்பட்டவளாய்,

கலைந்த சேலையை அள்ளிப் பிடித்த வண்ணம் வெளியே ஓடுவதற்கு முற்படுகின்றாள்.

மகள் படுக்கையைவிட்டு எழுந்து, பதறித் துடித்தபடி வந்து தாயை அணைக்கின்றாள். அவள் எழுப்பிய ஓலம் என் னையும் திடுக்கிட வைக்கின்றது. அப்போது அவளது முகத்தை உற்றுப் பார்க்கின்றேன்.

முகத்தில் ஆவேசம் கிளர்ந்து கொண்டிருந்தது. விழிகள் இர ண்டும் பீதியால் வெளியே பிதுங்கிக் கிடக்கின்றன. வார்த் தைகள் வழமைக்கு மாறாக சுயத்தை இழந்து வெளிப் படுகின்றன.

அவளில் பிள்ளையைத் தேடும் உறுதிப்பாடு தெரிகின்ற து.






# மேற்குக் கரையை ஆக்கிரமித்த இஸ்ரேலிய உற்பத்திகளுக்கு பிரிட்டன், பிரான்ஸ், கனடா தடை!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

14.09.2026



**பிரான்ஸ், கனடாவும் இணைந்து எடுத்த அதிரடி முடிவுக்கு இஸ்ரேல் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன் வர்த்தக ரீதியான பதிலடியை இஸ்ரேல் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் பாலஸ்தீனப் பிரச்சினையில் மேலை நாடுகளின் பொறுமை குறைந்து வருவதையும், இரு-அரசுத் தீர்வை பாதுகாக்க பொருளாதார மற்றும் தூதரக அழுத்தங்களை பயன்படுத்தத் தொடங்கியுள்ளதையும் இந்த முடிவு வெளிப்படுத்துகிறது.**

பாலஸ்தீனத்தின் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் (West Bank) அமைக்கப்பட்டுள்ள இஸ்ரேலியக் குடியேற்றங்கள் தொடர்பாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகள் எடுத்துள்ள புதிய நடவடிக்கை, இஸ்ரேல்-மேற்கு நாடுகளுக்கு இடையிலான உறவில் முக்கியமான திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது. சட்டவிரோதமான இஸ்ரேலியக் குடியேற்றங்களில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வர்த்தகத் தடையை விதிக்க இந்த மூன்று நாடுகளும் முடிவு செய்துள்ளன.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் எட் மிலிபான்ட் செப்டெம்பர் 8ஆம் தேதி நாடாளுமன்றத்தில் இந்த புதிய கொள்கையை அறிவித்தார். குடியேற்ற விரிவாக்கம், பாலஸ்தீன மக்களுக்கு எதிரான குடியேற்றவாசிகளின் வன்முறை மற்றும் எதிர்கால இரு-அரசுத் தீர்வை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை காரணங்களாகக் குறிப்பிட்ட அவர், பிரிட்டன் இனி மேலும் வெறுமனே கண்டனம் தெரிவிப்பதுடன் நிற்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

## என்ன தடை விதிக்கப்படுகிறது?

பிரிட்டன் அறிவித்திருப்பது இஸ்ரேலின் ஒட்டுமொத்தப் பொருட்களுக்கான இறக்குமதித் தடை அல்ல. மாறாக, சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானதாகக் கருதப்படும் மேற்கு கரை இஸ்ரேலியக் குடியேற்றங்களில் இருந்து வரும் பொருட்கள் மீது இலக்கு வைக்கப்பட்ட தடையாகும். குடியேற்றங்களின் விரிவாக்கத்துக்கு கட்டுமானம், உள்கட்டமைப்பு, நிதியுதவி, நில விற்பனை மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற வழிகளில் உதவி செய்யும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கும் தடைகள் விதிக்கப்படும் என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

மேலும், குடியேற்றப் பகுதிகளில் நிலங்களை விளம்பரப்படுத்தும் நடவடிக்கைகளையும் பிரிட்டன் கட்டுப்படுத்தவுள்ளது. ஆயுத ஏற்றுமதி தொடர்பாகவும் புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பை நேரடியாக ஆதரிக்கும் வகையில் இருக்கும் ஆயுதங்கள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு அனுமதி வழங்கப்படாது என மிலிபான்ட் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த வர்த்தகத் தடை அறிவிக்கப்பட்டவுடன் உடனடியாக நடைமுறைக்கு வருவதில்லை. புதிய சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மூலம் சுமார் ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்குள் அமல்படுத்தப்படலாம் என பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

## தொடரும் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு

1967ஆம் ஆண்டு ஆறு நாள் போருக்குப் பின்னர் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் வந்த மேற்குக்கரை, எதிர்கால சுயாதீன பாலஸ்தீன அரசின் முக்கியமான பகுதியாக சர்வதேச அளவில் கருதப்படுகிறது. அங்கே பல தசாப்தங்களாக இஸ்ரேலியக் குடியேற்றங்கள் விரிவடைந்து வருகின்றன. இக்குடியேற்றங்களின் விரிவாக்கம் பாலஸ்தீனர்களின் நிலப்பரப்பை துண்டிப்பதாகவும், தொடர்ச்சியான பாலஸ்தீன அரசை உருவாக்குவதற்கான வாய்ப்பை குறைப்பதாகவும் பல நாடுகள் விமர்சித்து வருகின்றன.



2024ஆம் ஆண்டு சர்வதேச நீதிமன்றம் (ICJ) வெளியிட்ட ஆலோசனைத் தீர்ப்பும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் சட்டபூர்வ நிலை குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியது. பிரிட்டிஷ் அரசாங்கமும் தற்போது மேற்குக்கரையின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதமானது என்ற நிலைப்பாட்டை வெளிப்படையாக எடுத்துள்ளது.

## E1 குடியேற்றத் திட்ட சர்ச்சை

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் கனடாவின் புதிய நடவடிக்கைக்கு உடனடி பின்னணியாக இருப்பது மேற்கு கரையில் உள்ள E1 பகுதி தொடர்பான இஸ்ரேலிய குடியேற்றத் திட்டமாகும்.

ஜெருசலேமுக்கு அருகில் அமைந்துள்ள E1 பகுதி, மேற்குக் கரையின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளுக்கு இடையிலான நிலத் தொடர்பை பாதிக்கக்கூடியதாக பாலஸ்தீனர்கள் மற்றும் பல சர்வதேச நாடுகள் கருதுகின்றன.

அங்கு பெரிய அளவில் குடியேற்ற விரிவாக்கம் நடைபெற்றால், எதிர்கால பாலஸ்தீன அரசின் நிலத் தொடர்ச்சி மேலும் சீர்குலையும் என்ற அச்சம் உள்ளது. இதனால், E1 திட்டத்தை முன்னெடுப்பது இரு-அரசுத் தீர்வுக்கு நேரடி அச்சுறுத்தலாக இருப்பதாக பிரிட்டன், பிரான்ஸ், கனடா உள்ளிட்ட நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

## பிரான்ஸ், கனடாவும் இணைவு

பிரிட்டனின் அறிவிப்புடன் ஒரே நாளில் பிரான்ஸ் மற்றும் கனடாவும் சட்டவிரோத இஸ்ரேலியக் குடியேற்றங்களில் இருந்து வரும் பொருட்களுக்கு இறக்குமதித் தடையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அறிவித்தன. பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகிய மூன்று நாடுகளும் வெளியிட்ட கூட்டு அறிக்கையில், குடியேற்ற விரிவாக்கம் மற்றும் குடியேற்றவாசிகளின் வன்முறை ஆகியவை இரு-அரசுத் தீர்வின் வாய்ப்பை நேரடியாக அச்சுறுத்துகின்றன என்று தெரிவித்துள்ளன. அதேவேளை, இஸ்ரேலின் பாதுகாப்பு உரிமையையும் இஸ்ரேல் மக்களுடனான உறவையும் தாங்கள் தொடர்ந்து ஆதரிப்பதாகவும் தெளிவுபடுத்தியுள்ளன.

இதன் மூலம் இந்த நடவடிக்கை இஸ்ரேலுக்கு எதிரான முழுமையான பொருளாதாரப் புறக்கணிப்பு அல்ல. மாறாக, குறிப்பிட்ட குடியேற்ற நடவடிக்கைகளை இலக்காகக் கொண்ட நடவடிக்கை என்பதை அந்த நாடுகள் வலியுறுத்துகின்றன. மேலும் பல நாடுகள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்துள்ளன.

பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகியவற்றுடன் சேர்ந்து டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, அயர்லாந்து, நோர்வே, போலந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளும் குடியேற்றங்களுக்கு எதிரான வர்த்தகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவோ அல்லது ஐரோப்பிய அளவிலான நடவடிக்கைகளை ஆதரிக்கவோ தயாராக இருப்பதாக கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

அதேவேளை, அயர்லாந்து, ஸ்பெயின், நெதர்லாந்து, நோர்வே மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஏற்கனவே குடியேற்றப் பொருட்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. எனவே, அனைத்து நாடுகளும் ஒரே அளவில் ஏற்கனவே முழுமையான இறக்குமதித் தடையை அமல்படுத்தியுள்ளன.

## இஸ்ரேலின் பொருளாதார தாக்கம்



இந்தத் தடையின் நேரடி பொருளாதார தாக்கம் இஸ்ரேலின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் மிகப்பெரியதாக இருக்காது என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மேற்குக்கரை குடியேற்றங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் அளவு, இஸ்ரேலின் மொத்த ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் சிறிய தாகும். குறிப்பாக பேரீச்சம்பழம், சிட்ரஸ் பழங்கள், மூலிகைகள், மது உள்ளிட்ட வேளாண் பொருட்கள் முக்கியமானவை. எனவே, இந்தத் தடையின் பொருளாதார தாக்கத்தைவிட அதன் அரசியல் மற்றும் தூதரக முக்கியத்துவமே அதிகம்.

மேற்கு நாடுகளின் இந்த நடவடிக்கையை இஸ்ரேல் கடுமையாக நிராகரித்துள்ளது. இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் கிடியோன் சார், பிரிட்டிஷ் அரசின் குற்றச்சாட்டுகளை அதிர்ச்சியூட்டும் பொய்கள் என விமர்சித்ததுடன், இஸ்ரேலின் உள்நாட்டு விவகாரங்களில் பிரிட்டன் தலையிடுவதாகக் குற்றம்சாட்டினார்.

இதற்குப் பதிலடியாக, கிழக்கு ஜெருசலேமில் உள்ள பிரிட்டிஷ் துணைத் தூதரகத்தை 30 நாட்களுக்குள் மூடுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது. மேலும் சில பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு இஸ்ரேலுக்குள் நுழைவுத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. காசா தொடர்பான அமெரிக்கா தலைமையிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் பிரிட்டனின் பங்களிப்பையும் இஸ்ரேல் கட்டுப்படுத்தியுள்ளது.

## அமெரிக்கா வேறுபட்ட நிலைப்பாடு

இந்நிலையில் அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளின் பாதையைப் பின்பற்றவில்லை. மேற்குக்கரை குடியேற்றங்களிலிருந்து வரும் பொருட்களுக்கு இதேபோன்ற தடையை விதிக்க அமெரிக்கா மறுத்துள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, இத்தகைய நடவடிக்கைகள் நிலைமையை மேலும் சீர்குலைக்கக் கூடும் என்ற கவலையை வெளிப்படுத்தியுள்ளார். இதனால், பாரம்பரியமாக இஸ்ரேலுக்கு நெருக்கமான மேற்கத்திய நாடுகளுக்கிடையேயும் அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு உருவாகியுள்ளது.

## இரு அரசுத் தீர்வு முயற்சி

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகள் இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம் இஸ்ரேலை தனிமைப்படுத்துவது அல்ல. மாறாக, இஸ்ரேலும் பாலஸ்தீனமும் பாதுகாப்புடனும் அமைதியுடனும் தனித்தனி அரசுகளாக வாழக்கூடிய இரு-அரசுத் தீர்வுக்கான வாய்ப்பை பாதுகாப்பதே எனக் கூறுகின்றன.



ஆனால் இஸ்ரேல் இதனை தனது இறையாண்மை மற்றும் உள்நாட்டு அரசியலில் வெளிநாட்டு தலையீடாகப் பார்க்கிறது. இதனால் வர்த்தகத் தடையைத் தாண்டி, தூதரக உறவுகள், பாதுகாப்பு ஒத்துழைப்பு, ஆயுத ஏற்றுமதி மற்றும் சர்வதேச அரங்கில் இரு தரப்பினரின் அணுகுமுறை ஆகியவற்றிலும் தாக்கம் ஏற்படக்கூடும்.

மொத்தத்தில், மேற்குக்கரை இஸ்ரேலியக் குடியேற்றப் பொருட்களுக்கு எதிரான இந்த நடவடிக்கை பொருளாதார அளவில் குறுகிய தாக்கத்தை ஏற்படுத்தினாலும், அரசியல் ரீதியாக மிகவும் முக்கியமானது. இஸ்ரேலின் நீண்டகால கூட்டாளிகளாக இருந்த பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் கனடா போன்ற நாடுகள் குடியேற்றக் கொள்கைக்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக் கையை எடுத்திருப்பது, இஸ்ரேல்-மேற்கு உறவுகளில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை வெளிப்படுத்துகிறது.

இந்நடவடிக்கை உண்மையில் மேற்குக்கரை குடியேற்ற விரிவாக்கத்தைத் தடுக்குமா, அல்லது பெரும்பாலும் அடையாள அர சியல் நடவடிக்கையாகவே முடிவடையுமா என்பது எதிர்காலத் தில் தெரியவரும். ஆனால் ஒரு விடயம் தெளிவாகியுள்ளது. பாலஸ்தீனப் பிரச்சினையில் மேலை நாடுகளின் பொறுமை குறைந்து வருவதையும், இரு-அரசுத் தீர்வை பாதுகாக்க பொருளாதார மற்றும் தூதரக அழுத்தங்களை பயன்படுத்தத் தொடங்கியுள்ளதையும் இந்த முடிவு வெளிப்படுத்துகிறது.

**Office of the Prime Minister**
**Transnational Government of Tamil Eelam**
**பிரதமர் பணிமனை**
**நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்**

875 Avenue of the Americas, Suite 2309
New York, NY 10001, USA
www.tgte.org
pmo@tgte.org

September 8th, 2026

**Application for the Post Doctoral Fellow - The Possibility of a Sovereign Tamil Eelam in a Changing World Order**

Attached here is the link of the description and the application process for the Post Doctoral Fellow on "the Possibility of a Sovereign Tamil Eelam in a Changing World Order"

Please share it with any and all interested candidates.

https://www.jobs.ac.uk/job/DSP267/postdoctoral-fellow-in-law

Tamils' Destiny Is in Tamils' Hands.
The Thirst of Tamils Is Tamil Eelam.

Prime Minister Office
Transnational Government of Tamil Eelam
pmo@tgte.org

**Office of the Prime Minister**
**Transnational Government of Tamil Eelam**
**பிரதமர் பணிமனை**
**நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்**

875 Avenue of the Americas, Suite 2309
New York, NY 10001, USA
www.tgte.org
pmo@tgte.org

செப்டம்பர் 8, 2026

**முதுநிலை முனைவர் பட்ட ஆய்வாளருக்கான (Post-Doctoral Fellow) விண்ணப்பம் - "மாறிவரும் உலக ஒழுங்கில் இறையாண்மை கொண்ட தமிழீழம் அமைவதற்கான சாத்தியக்கூறு"**

"மாறிவரும் உலக ஒழுங்கில் ஒரு இறையாண்மை கொண்ட தமிழீழத்திற்கான சாத்தியக்கூறுகள்" குறித்த முதுநிலை முனைவர் பட்ட ஆய்வாளருக்கான (Post Doctoral Fellow) விவரங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் முறை அடங்கிய இணைப்பு இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுடனும் இதைப் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

https://www.jobs.ac.uk/job/DSP267/postdoctoral-fellow-in-law

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

பிரதமர் பணிமனை
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
pmo@tgte.org

# நவம்பர் 27
# தமிழினத்தின் புனிதமான நினைவேந்தல் நாள்!

**சு. லோஜிதன்**

12.09.2026



## முன்னுரை

ஒரு இனத்தின் வரலாறு என்பது அது சந்தித்த வெற்றிகளால் மட்டுமல்ல, அது சிந்திய குருதியினாலும், மண்ணுக்காகச் செய்த மாபெரும் தியாகங்களினாலும் எழுதப்படுகின்றது. உலக வரலாற்றில் தன் தாய்நிலத்தின் விடுதலைக்காகவும், மக்களின் உரிமைக்காகவும் தங்களின் இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களை நெஞ்சில் ஏந்தி நினைவுகூரும் நாட்கள் ஒவ்வோர் இனத்திற்கும் புனிதமானவை. அவ்வகையில், ஈழத் தமிழினத்தின் வாழ்வில் நவம்பர் 27 என்பது வெறுமனே ஒரு திகதி அல்ல; அது கண்ணீரும் செந்நீரும் கலந்து, தமிழினத்தின் கூட்டு ஆன்மாவை உலுக்கும் புனிதமான நினைவேந்தல் நாளாகும்.

தாயக விடுதலையைத் தாரக மந்திரமாகக் கொண்டு, கரும் புலிகளாய், களப்படை வீரர்களாய், எல்லைக் காவலர்களாய் நின்று தங்களின் ஆருயிர் நீத்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களுக்கு முழுத் தமிழினமும் ஒன்றாகத் தலைவணங்கும் திருநாளே இந்நாளாகும்.

## வரலாற்றுப் பின்னணி

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான வீரர்கள் களமாடியிருந்தாலும், அந்தத் தியாகப் பயணத்தின் முதல் விதையாக விழுந்தவர் லெப்டினன்ட் சங்கர் (சுரேஷ்) அவர்கள் ஆவார். 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு லெப்டினன்ட் சங்கர் வீரச்சாவடைந்தார். தமிழ் மண்ணின் விடுதலைக்காகத் தன் உயிரைத் தானமாகக் கொடுத்த முதல் போராளியின் வீரச்சாவையே ஈழ விடுதலையின் திருப்புமுனையாகத் தமிழினம் கருதியது.

இதனைத் தொடர்ந்து, 1989 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டின் நவம்பர் 27 ஆம் திகதியும் “மாவீரர் நாள்” ஆக அதிகாரப்பூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, உணர்வெழுச்சியோடு நினைவுகூரப்பட்டு வருகின்றது. முதல் மாவீரனின் உயிர் பிரிந்த அந்நேரமே, மாவீரர் சுடர் ஏற்றப்படும் புனித நிமிடமாக வரலாற்றில் நிலைபெற்றது.

## கார்த்திகைப்பூவும் துயிலும் இல்லங்களும்

மாவீரர் நினைவேந்தலின் அடையாளமாகத் திகழ்வது “காந்தள்” எனப்படும் கார்த்திகைப்பூ ஆகும். தமிழர்களின் பண்டைய சங்க இலக்கியங்களில் போருக்குச் செல்லும் வீரர்களுடனும், மாண்புடனும் தொடர்புபடுத்தப்பட்ட இக்கார்த்திகைப்பூ, ஈழப் போராட்ட வரலாற்றிலும் தேசிய மலராக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கார்த்திகை மாதத்தின் குளிர்ச்சியில் பூத்துக் குலுங்கும் இந்நறுமலர், மாவீரர்களின் தூய்மையான தியாகத்தின் குறியீடாகப் பார்க்கப்படுகின்றது.

மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட இடங்கள் “துயிலும் இல்லங்கள்” என்று அழைக்கப்படுகின்றன. உலகெங்கும் இறந்தவர்களைப் புதைக்கும் அல்லது எரிக்கும் இடங்களை மயானங்கள் என்று அழைக்கும் சூழலில், தாய்நிலத்தின் விடுதலைக்காக வித்தாக விழுந்தவர்களைச் “சடலங்கள்” எனக் கருதாமல், அவர்கள் தாய்மண்ணின் மடியில் துயில்கிறார்கள் என்ற உயரிய பண்பாட்டு நம்பிக்கையில் “துயிலும் இல்லங்கள்” எனத் தமிழர்கள் அழைத்தனர்.

ஒவ்வொரு துயிலும் இல்லமும் தூய்மையாக்கப்பட்டு, வரிசையாக நட்டப்பட்ட நடுகற்களின் மேல் கார்த்திகை மலர்கள் தூவப்பட்டு, ஈழ தேசத்தின் கோயில்களாகவே உருப்பெற்றன.

## நினைவேந்தல் நிகழ்வின் புனிதமும் ஒழுக்கமும்

நவம்பர் 27 அன்று நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வு என்பது உலகமே வியந்து பார்க்கும் அளவிலான ஒழுக்கத்தையும், பேரமைதியையும், உணர்வுச் செறிவையும் கொண்டது. அந்நாளில் மாலை 6.00 மணிக்குத் துயிலும் இல்லங்களில் மணி ஒலிக்கப்படும். அதைத் தொடர்ந்து பேரமைதி நிலவும்.

சரியாக 6.05 மணிக்கு, முதல் மாவீரன் வீழ்ந்த நேரத்தில்:

- முதன்மைச்சுடர் ஏற்றப்படும்.
- அதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் தத்தமது மாவீரர்களின் நடுகற்களுக்கு முன் சுடரேற்றி வணக்கம் செலுத்துவர்.
- “பகைவர் பணிந்தேகும் நமிழினத்தின் தாகம்...” மற்றும் “தாயகக் கனவுடன் சாகின்றோம்...” போன்ற உணர்ச்சிமிகு மாவீரர் நாள் பாடல்கள் ஒலிக்கும்போது, அங்கே பொங்கும் உணர்வலைகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

தங்கள் வயிற்றிலுதித்த பிள்ளைகளை, கூடப்பிறந்த உடன்பிறப்புகளை மண்ணுக்குக் கொடுத்த தாய்மாரும் குடும்பத்தினரும், கண்ணீரைச் சோகத்தின் அடையாளமாக அன்றி, பெருமிதத்தின் குறியீடாகச் சிந்தி வணக்கம் செலுத்தும் காட்சி தமிழினத்தின் ஈகை வரலாற்றைச் சாட்சியப்படுத்தும்.

## ஈகையின் பரிமாணங்கள்

ஈழப் போராட்டத்தில் மாவீரர்களின் பங்களிப்பு என்பது உலக இராணுவ வரலாற்றிலேயே தனித்துவமானது. தங்களின் இலட்சியத்திற்காக உடலையே வெடிமருந்தாக மாற்றித் தற்கொடை தாக்குதல்களை நடத்திய கரும்புலிகள், கடலிலும் ஆகாயத்திலும் தாயகத்தைக் காத்த கடற்புலிகள் மற்றும் வான் புலிகள், களமுனையில் நிமிர்ந்து நின்ற காலாட்படை வீரர்கள் என அனைவரும் சுயநலமற்ற ஈகையின் உச்சங்களாகத் திகழ்ந்தனர்.

அவர்கள் சொத்துக்களையோ, சுகபோகங்களையோ, புகழையோ விரும்பிப் போர்க்களம் செல்லவில்லை. வரவிருக்கும் இளம்தலைமுறை தன் சொந்த மண்ணில் அடிமைத்தனமின்றி, நிமிர்வோடு வாழ வேண்டும் என்ற ஒரே உயரிய கனவுக்காகவே தங்களின் இளமையையும் உயிரையும் ஈகம் செய்தனர்.

## புலம்பெயர் தமிழர்களும் உலகளாவிய நினைவேந்தலும்

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்குப் பிறகு, தாயகத்தில் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டு, நினைவேந்தல்களுக்குப் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டபோதிலும், மாவீரர்களின் நினைவைத் தமிழினத்தின் நெஞ்சத்திலிருந்து அழிக்க முடியாமல் போயிற்று.

இன்று லண்டன், பாரிஸ், டொராண்டோ, சிட்னி, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து என உலகெங்கும் பரந்து வாழும் கோடிக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள், நவம்பர் 27 அன்று ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடி மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்து வருகின்றனர். தாயகத்தில் தடைகளையும் மீறி, மக்கள் தங்களின் வீடுகளிலும் ரகசிய இடங்களிலும் சுடரேற்றி வணக்கம் செலுத்துவது, இந்த நினைவேந்தல் நாள் தமிழர் களின் இரத்தத்தோடு கலந்துவிட்ட ஒன்று என்பதை உணர்த் துகிறது.

## மாவீரர் நாளின் செய்தியும் தமிழினத்தின் கடமையும்

மாவீரர் நாள் என்பது வெறுமனே அழுது புலம்பும் துக்க நாள் அல்ல; அது மாவீரர்களின் கனவை நினைவுகூர்ந்து, அக்கனவை நோக்கிச் செல்வதற்கான உறுதியை ஏற்கும் “உறுதிமொழி நாள்” ஆகம்.

**1. வரலாற்றைக் கடத்துதல்:** மாவீரர்கள் சிந்திய குருதியும், அவர்கள் செய்த ஈகமும் வீண் போகாமல், அடுத்த தலைமுறைக்கு ஈழப் போராட்டத்தின் உண்மையையும் நேர்மையையும் கடத்த வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

**2. மாவீரர் குடும்பங்களைப் பேணுதல்:** தங்களின் பிள்ளைகளை தேசத்திற்குக் கொடையளித்துவிட்டு, இன்று வறுமையிலும் சோகத்திலும் வாழும் மாவீரர்களின் குடும்பங்களுக்கும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் கரம்கொடுத்து உதவுவது தலையாயக் கடமையாகும்.

**3. அறவழிப் போராட்டம்:** போர்க்களங்கள் மௌனிக்கப்பட்டிருக்கலாம் ஆனால், மாவீரர்கள் சுமந்து சென்ற சுயநிர்ணய உரிமை மற்றும் இறையாண்மைக்கான கோரிக்கைகள் உலக அரங்கில் நீதிக்கான அறவழிப் போராட்டமாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

## முடிவுரை

”விதையாக வீழ்ந்தவர்கள் மரமாக முளைப்பார்கள்” என்பார்கள். மாவீரர்கள் இறப்பதில்லை; அவர்கள் தமிழ் மக்களின் இதயங்களில் விதைகளாக விதைக்கப்பட்டு, ஒவ்வொரு தமிழனின் உணர்விலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

காலங்கள் உருண்டோடலாம், அரசியல் சூழல்கள் மாறலாம் ஆனால், ஈழத் தாயகத்தின் விடியலுக்காகத் தம் இன்னுயிரை ஈகம் செய்த அந்த மாவீரர்களின் சுவடுகளும், அவர்களின் நினைவுகளும் தமிழினம் உள்ளவரை அழியாது. நவம்பர் 27 என்பது தமிழினத்தின் வீரத்தையும், ஈகத்தையும், உரிமைத் தாகத்தையும் உலகிற்குப் பறைசாற்றும் என்றும் புனிதமான நினைவேந்தல் நாளாக நிலைத்து நிற்கும்.

**“சாவால் நாம் வீழ்ந்தோம் என்று எவரும் நினைக்க வேண்டாம் நாம் சாகவில்லை, விடுதலையின் விதைகளாக மண்ணிற்குள் உறங்குகிறோம்!”**

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# யேமன் யுத்தத்தில் ஹவுதி முன்னேற்றம்!
# சவுதி ஆதரவு அரசு பாரிய பின்னடைவு

12.09.2026





ஐங்கரன் விக்கினேஸ்வரா

யேமனில் பல ஆண்டுகளாக நீடித்து வந்த மோதல் மீண்டும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. குறிப்பாக 2026 செப்டெம்பர் 8ஆம் தேதி ஹவுதி இயக்கம் சவுதி அரேபியாவின் தென்பகுதியில் மேற்கொண்ட ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள், யேமன் போர் மீண்டும் முழுமையான பிராந்தியப் போராக மாறக்கூடும் என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளன. சவுதி அதிகாரிகளின் தகவலின்படி, அப்ஹா, கமிஸ் முஷைத், ஜிசான் மற்றும் நஜ்ரான் பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புகள் தாக்கப்பட்டதில் பலர் காயமடைந்துள்ளனர். பெண்களும் குழந்தைகளும் காயமடைந்தவர்களில் அடங்குகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில் சவுதி அரசின் எண்ணெய் நிறுவனமான அராம்கோவுடன் தொடர்புடைய வசதிகளும், விமானத் தளங்களும், அப்ஹா சர்வதேச விமான நிலையமும் இலக்குகளாக இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பல இடங்களில் தீ விபத்துகள் ஏற்பட்டதுடன், சில எரிசக்தி நிலையங்களின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக சவுதி எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## யேமன் மோதல் மீண்டும் வெடித்தது

யேமனில் ஹவுதி இயக்கம் 2014ஆம் ஆண்டு தலைநகர் சனாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் தீவிரமடைந்தது. 2015ஆம் ஆண்டு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி, சர்வதேச அங்கீகாரம் பெற்ற யேமன் அரசுக்கு ஆதரவாக இராணுவ நடவடிக்கையில் இறங்கியது. இதன் மூலம் யேமன் மோதல் உள்நாட்டுப் போரைத் தாண்டி, சவுதி அரேபியா மற்றும் ஈரான் இடையிலான பிராந்திய போட்டியின் முக்கியக் களமாகவும் மாறியது.

2022ஆம் ஆண்டு ஐ.நா. ஆதரவுடன் ஏற்பட்ட போர் நிறுத்தம், பல ஆண்டுகளாக நீடித்த கடுமையான மோதல்களை கணிசமாகக் குறைத்தது. ஆனால் அந்த அமைதி நிரந்தர அரசியல் தீர்வாக மாறவில்லை. சமீப மாதங்களில் மீண்டும் மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், யேமன் அரசுப் படைகள் ஹவுதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்கும் முயற்சியை முன்னெடுத்துள்ளன. அதற்கு பதிலடியாக ஹவுதிகளும் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

**யேமனில் ஹவுதி இயக்கம் 2014ஆம் ஆண்டு தலைநகர் சனாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் தீவிரமடைந்தது. 2015ஆம் ஆண்டு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி, சர்வதேச அங்கீகாரம் பெற்ற யேமன் அரசுக்கு ஆதரவாக இராணுவ நடவடிக்கையில் இறங்கியது. இதன் மூலம் யேமன் மோதல் உள்நாட்டுப் போரைத் தாண்டி, சவுதி அரேபியா மற்றும் ஈரான் இடையிலான பிராந்திய போட்டியின் முக்கியக் களமாகவும் மாறியது. தற்போதய சூழலில் இந்த மோதல் பிராந்தியத்துக்கும் உலக வர்த்தகத்துக்கும் புதிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.**

செப்டெம்பர் 8 தாக்குதல் ஒரு சாதாரண எல்லைத் தாக்குதல் அல்ல. ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் ஒரே நேரத்தில் பல நகரங்களையும் எரிசக்தி கட்டமைப்புகளையும் இலக்காகக் கொண்டுள்ளன. அராம்கோவின் வசதிகள் தாக்கப்பட்டிருப்பது சவுதி பொருளாதாரத்தின் இதயப்பகுதியை நேரடியாக அச்சுறுத்தும் நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

ஜிசானில் நாளொன்றுக்கு சுமார் 400,000 பீப்பாய்கள் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையமும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் பிராந்திய எரிசக்தி விநியோகம் மட்டுமல்லாமல் சர்வதேச எண்ணெய் சந்தையும் பதற்றமடைந்துள்ளது. தாக்குதல்களின் பின்னணியில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை ஒரு கட்டத்தில் 100 அமெரிக்க டொலர் அருகில் சென்றது.

## பாப் அல்-மண்டப் முக்கியத்துவம்

யேமன் மோதலின் மிகப் பெரிய புவிசார் அரசியல் முக்கியத்துவம் பாப் அல்-மண்டப் நீரிணையுடன் தொடர்புடையது. யேமனுக்கும் ஆப்பிரிக்கக் கொம்புப் பகுதியிலுள்ள ஜிபூட்டி மற்றும் எரித்திரியாவுக்கும் இடையில் அமைந்துள்ள இந்த நீரிணை, செங்கடலை ஏடன் வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கிறது. இதன் வழியாக செல்லும் கப்பல்கள் செங்கடல்-சூயஸ் கால்வாய் பாதையைப் பயன்படுத்தி ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவை இணைக்கின்றன. 2023 ஆம் ஆண்டில் உலக கடல் வர்த்தகத்தின் சுமார் 8.7 சதவீத அளவு பாப் அல்-மண்டப் வழியாகச் சென்றது.

மேலும், அமெரிக்க எரிசக்தி தகவல் நிர்வாகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, 2025ஆம் ஆண்டின் முதல் பாதியில் நாளொன்றுக்கு சுமார் 4.2 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் இந்த நீரிணை வழியாகச் சென்றுள்ளன. எனவே, இந்த நீர்வழியில் போக்குவரத்து தடைப்பட்டால் அதன் தாக்கம் யேமன் அல்லது சவுதி அரேபியாவுடன் மட்டும் நின்றுவிடாது. ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து பாதிக்கப்படும் கப்பல்கள் ஆப்பிரிக்காவின் தென்முனையான கேப் ஆஃப் குட் ஹோப் வழியாக நீண்ட பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பயண நேரமும் கப்பல் செலவும் காப்புறுதி செலவும் அதிகரிக்கக்கூடும்.




## ஈரானின் நிழல் வகிபாகம்

ஹவுதி இயக்கம் ஈரானுடன் நெருங்கிய உறவு கொண்டிருப்பது இந்த மோதலுக்கு மேலும் ஒரு பரிமாணத்தை வழங்குகிறது. ஈரான் ஹவுதிகளுக்கு அரசியல் மற்றும் இராணுவ ஆதரவு வழங்குவதாக சவுதி அரேபியாவும் அதன் கூட்டாளிகளும் நீண்டகாலமாக குற்றம்சாட்டி வருகின்றன. அதேவேளை, ஹவுதிகள் தங்களது நடவடிக்கைகள் யேமன் மீதான சவுதி இராணுவ நடவடிக்கைகளுக்கான பதிலடி என்றும் கூறுகின்றனர். சமீபத்திய தாக்குதல்களும் சவுதி தாக்குதல்களுக்கு பதிலடியாக நடத்தப்பட்டதாக ஹவுதி இராணுவப் பேச்சாளர் யஹ்யா சரீ கூறியுள்ளார்.



இதனால் யேமன் போர், யேமன் அரசுப் படைகள் மற்றும் ஹவுதிகளுக்கு இடையிலான உள்நாட்டுப் போர் மட்டுமல்லாமல், சவுதி அரேபியா-ஈரான் போட்டியின் ஒரு பகுதியாகவும் பார்க்கப்படுகிறது. இதனால் மனிதாபிமானப் பேரழிவு மீண்டும் தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தப் போரின் மிகப் பெரிய பாதிப்பை சந்திப்பவர்கள் யேமன் மக்கள். பல ஆண்டு கால போர் ஏற்கனவே நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்துள்ளது. உணவு, சுகாதாரம், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான அணுகலும் பல பகுதிகளில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டில் யேமனில் சுமார் 2.23 கோடி மக்கள் மனிதாபிமான உதவி தேவைப்படும் நிலையில் இருப்பதாக ஐ.நா. அகதிகள் அமைப்பு தெரிவிக்கிறது. அதேவேளை, சுமார் 52 இலட்சம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். சமீபத்திய மோதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் மீண்டும் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர். ஆகவே, இராணுவ மோதல் நீடித்தால், ஏற்கனவே மோசமான நிலையில் உள்ள யேமனின் மனிதாபிமான நெருக்கடி மேலும் மோசமடையும் அபாயம் உள்ளது.

## பிராந்திய யுத்த எச்சரிக்கை

செப்டெம்பர் 8 தாக்குதலுக்குப் பின்னரும் செப்டெம்பர் 9ஆம் தேதி ஹவுதிகள் அப்ஹா, கமிஸ் முஷைத், ஜிசான் உள்ளிட்ட சவுதியின் தென்பகுதி நகரங்களை மீண்டும் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களால் தாக்கியதாக சவுதி தலைமையிலான கூட்டணி தெரிவித்துள்ளது. இதனால் நிலைமை ஒரே நாளில் முடிவடையும் மோதல் அல்ல என்பது தெளிவாகிறது.

சவுதி அரேபியா பதிலடி நடவடிக்கைகளை மேற்கொண்டால், யேமனில் தரை மற்றும் வான் வழித் தாக்குதல்கள் மேலும் தீவிர மடையலாம். மறுபுறம், ஹவுதிகள் பாப் அல்-மண்டப் மற்றும் செங்கடல் கப்பல் போக்குவரத்தை மேலும் இலக்காகக் கொண்டால், பிரச்சினை சர்வதேச கடல் பாதுகாப்பு நெருக்கடி யாக மாறக்கூடும்.

எனவே, யேமனில் மீண்டும் தீவிரமடைந்துள்ள போர் ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையாக மட்டும் பார்க்க முடியாத நிலையை எட்டியுள்ளது. சவுதி அரேபியாவின் எண்ணெய் உற்பத்தி, செங்கடல் கப்பல் போக்குவரத்து, பாப் அல்-மண்டப் நீரிணை, சர்வதேச எண்ணெய் விலை மற்றும் உலக வர்த்தகம் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. அதனால் யேமனில் போர் மேலும் விரிவடைவதைத் தடுப்பதும், உடனடி மனிதாபிமான பாதுகாப்பை உறுதி செய்வதும், நீண்ட கால அரசியல் தீர்வை நோக்கி நகர்வதும் சர்வதேச சமூகத்தின் அவசரப் பொறுப்பாகியுள்ளது.

# ஜேர்மனி வலதுசாரிக் கட்சியின் பெரு வெற்றி!

## டிக்டொக் புகழ் உல்ரிச் சீக்மண்ட் AfD எழுச்சி

ஜங்கரன் விக்கினேஸ்வரா

10.09.2026

ஜேர்மனியின் சாக்ஸனி-அன்ஹால்ட் மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல், அந்நாட்டின் போருக்குப் பிந்தைய அரசியல் வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தீவிர வலதுசாரிக் கட்சியாகக் கருதப்படும் Alternative für Deutschland (AfD) 43.8 சதவீத வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது.

இது AfD-க்கு அந்த மாநிலத்தில் மட்டுமல்லாமல், ஜேர்மனியின் போருக்குப் பிந்தைய அரசியல் வரலாற்றிலேயே மிகப்பெரிய தேர்தல் வெற்றியாகும். 83 உறுப்பினர்களைக் கொண்ட மாநில நாடாளுமன்றத்தில் AfD 39 இடங்களை வென்றுள்ளது. எனினும், தனிப்பெரும்பான்மைக்குத் தேவையான 42 இடங்களைப் பெற முடியாததால், அந்தக் கட்சி தனியாக ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வெற்றியின் மையத்தில் 35 வயதான உல்ரிச் சீக்மண்ட் (Ulrich Siegmund) உள்ளார். சமூக ஊடகங்கள் மூலம் மக்களிடம் பிரபலமடைந்த அவர், இப்போது AfD-யின் மாநில அரசியல் முகமாக மட்டுமல்லாமல், 2029ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜேர்மன் நாடாளுமன்றத் தேர்தலை நோக்கிய கட்சியின் மிக முக்கியமான தலைவர்களில் ஒருவராக உருவெடுத்துள்ளார்.

### சமூக ஊடகத்திலிருந்து தேர்தல் அரசியலுக்கு

சீக்மண்டின் அரசியல் வளர்ச்சி வழக்கமான ஜேர்மன் அரசியல்வாதிகளின் பாதையிலிருந்து மாறுபட்டது. கோவிட் 19 காலகட்டத்தில் அரசின் கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகளை சமூக ஊடகங்களில் கடுமையாக விமர்சித்ததன் மூலம் அவர் பரவலாக அறிமுகமானார். பின்னர் அந்த சமூக ஊடகப் பிரபலத்தன்மையை தேர்தல் அரசியலுக்கான ஆதரவாக மாற்றினார். கிழக்கு ஜேர்மனியின் வரலாற்று நினைவுகள், குடியேற்ற எதிர்ப்பு உணர்வு, பாதுகாப்பு, தேசிய அடையாளம் போன்ற கேள்விகளை தனது பிரசாரத்தின் முக்கிய அம்சங்களாக மாற்றினார்.

அவரது பிரசாரத்தில் பழைய கிழக்கு ஜேர்மனிய காலத்தை நினைவூட்டும் சிம்சன் மோட்டார் சைக்கிள் போன்ற அடையாளங்களும் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் கிழக்கு ஜேர்மனிய மக்களின் ஒரு பகுதியிடம் காணப்படும் பழைய கால நினைவுகளையும் தற்போதைய அரசியல் அதிருப்தியையும் இணைக்க அவர் முயன்றார்.

### மெர்ஸூக்கு விழுந்த அடி

இந்தத் தேர்தல் வெற்றி AfD-க்கு கிடைத்த வெற்றியாக மட்டுமல்ல; ஜேர்மனியின் தற்போதைய சான்சலர் ஃப்ரெட்ரிக் மெர்ஸின் CDU கட்சிக்கு ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வியாகவும் பார்க்கப்படுகிறது. AfD 43.8 சதவீத வாக்குகளைப் பெற்ற நிலையில், CDU சுமார் 17.2 சதவீதத்துடன் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. CDU-வின் வாக்கு பல ஆண்டுகளாக அந்த மாநிலத்தில் இருந்த ஆதரவுடன் ஒப்பிடும்போது கடுமையாகக் குறைந்துள்ளது.

இதன் மூலம் மெர்ஸின் மத்திய அரசுக்கு எதிரான மக்களின் அதிருப்தி மாநிலத் தேர்தலில் வெளிப்பட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பொருளாதார வளர்ச்சியின் மந்த நிலை, குடியேற்றம், பாதுகாப்பு, எரிசக்தி விலை, உக்ரைன் போர் மற்றும் மத்திய அரசின் கொள்கைகள் போன்ற பல்வேறு விடயங்களில் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை AfD தனது தேர்தல் பிரசாரத்தில் திறம்பட பயன்படுத்தியுள்ளது.

இந்த வெற்றி உடனடியாக ஜேர்மன் பொருளாதாரத்தை அல்லது அரசாங்கத்தை கவிழ்க்கும் நிலையை ஏற்படுத்தாது என்றாலும், நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் இது நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது.

### AfDயின் கொள்கைகள்

AfD-யின் அரசியல் திட்டம் பாரம்பரிய ஜேர்மன் பிரதானக் கட்சிகளிலிருந்து கணிசமாக வேறுபடுகிறது. குடியேற்றத்தை கடுமையாகக் கட்டுப்படுத்துதல், சட்டவிரோத குடியேற்றத்துக்கு எதிரான நடவடிக்கைகள், நாடுகடத்தல் நடவடிக்கைகளை அதிகரித்தல் ஆகியவை அதன் முக்கியக் கொள்கைகளில் அடங்குகின்றன.

சீக்மண்ட் தலைமையிலான சாக்ஸனி-அன்ஹால்ட் AfD, புதிய காற்றாலைப் பண்ணைகளின் விரிவாக்கத்தை நிறுத்துவது, பள்ளிகளில் தேசிய அடையாளத்தை வலுப்படுத்துவது, வானவில் கொடிகளைத் தடை செய்வது போன்ற கலாசார மற்றும்




**35 வயதில் ஜேர்மனியை உலுக்கிய டிக்டொக் பிரபலமான அரசியல் தலைவராக AfD தீவிர வலதுசாரி கட்சியின் உல்ரிச் சீக்மண்ட் வரலாற்று வெற்றி அமைந்துள்ளது. சாக்ஸனி-அன்ஹால்ட் தேர்தலில் யுகனு கட்சியின் வரலாற்று வெற்றியானது சான்சிலர் மெர்ஸூக்கு பலத்த அரசியல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சாக்ஸனி-அன்ஹால்ட் (Saxony-Anhalt) என்பது ஜெர்மனியின் 16 கூட்டாட்சி மாநிலங்களில் (Bundesländer) ஒன்றாகும். யுகனு கட்சி உல்ரிச் சீக்மண்ட் வரலாற்று வெற்றியின் விளைவாக, எதிர்காலத்தில் யூரோவிலிருந்து ஜேர்மனி வெளியேறுமா என்ற ஊகமும் எழுந்துள்ளது.**

சமூகக் கொள்கைகளையும் முன்வைத்துள்ளது. அத்துடன் வெளியுறவுக் கொள்கையிலும் AfD பிரதான அரசியல் கட்சிகளிலிருந்து மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. உக்ரைனுக்கான ஜேர்மனியின் இராணுவ உதவியை நிறுத்த வேண்டும் என்றும், ரஷ்யாவுடனான உறவுகளை மீண்டும் சீரமைக்க வேண்டும் என்றும் கட்சி வலியுறுத்துகிறது.

### யூரோவிலிருந்து ஜேர்மனி வெளியேறுமா?

AfD-யின் நீண்டகால அரசியல் நிலைப்பாடுகளில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யூரோ நாணய அமைப்பு தொடர்பான கடுமையான விமர்சனமும் இடம்பெறுகிறது.

எனினும், சாக்ஸனி-அன்ஹால்ட் மாநிலத் தேர்தலில் AfD வெற்றி பெற்றதன் காரணமாக ஜேர்மனி உடனடியாக யூரோ நாணயத்திலிருந்து வெளியேறும் நிலை உருவாகவில்லை என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

யூரோ என்பது மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு விடயம் அல்ல. ஜேர்மனி யூரோ மண்டலத்திலிருந்து வெளியேறுவது போன்ற மிகப்பெரிய மாற்றம் மத்திய அரசியல் மற்றும் ஐரோப்பிய அளவில் சட்டரீதியான, அரசியல் மற்றும் பொருளாதார செயல்முறைகளைத் தேவைப்படுத்தும். எனவே, இந்த மாநிலத் தேர்தல் முடிவை ஜேர்மனி யூரோவிலிருந்து வெளியேறப் போகிறது என்று நேரடியாக விளக்குவது மிகைப்படுத்தலாகும்.

ஆனால் 43.8 சதவீத வாக்குகளைப் பெற்ற AfD ஆட்சியை அமைக்க முடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதற்கான பதில் இன்னும் தெளிவாக இல்லை.

ஜேர்மனியின் பிரதான அரசியல் கட்சிகள் AfD உடன் கூட்டணி அமைப்பதை மறுக்கும் கொள்கையை பல ஆண்டுகளாகப் பின்பற்றி வருகின்றன. இதுவே ஜேர்மன் அரசியலில் "Brandmauer" - அரசியல் தடுப்புச்சுவர் என்று அழைக்கப்படுகிறது.

CDU உட்பட பிரதான கட்சிகள் AfD உடன் கூட்டணி அமைக்க மறுத்துள்ளன. இதனால் மிகப்பெரிய கட்சியாக வெற்றி பெற்றிருந்தாலும், AfD தனியாக ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய இறுதி முடிவின்படி AfD-க்கு 39 இடங்களும், தனிப்பெரும்பான்மைக்கு 42 இடங்களும் தேவை. இதனால் அடுத்த கட்ட அரசியல் பேச்சுவார்த்தைகள் மிகவும் முக்கிய



மானதாகின்றன.

### 2029 தேர்தலை நோக்கி AfD

சாக்ஸனி-அன்ஹால்ட் வெற்றி AfD-க்கு ஒரு மாநில வெற்றியை விட மிகப்பெரிய அரசியல் செய்தியை வழங்கியுள்ளது. AfD இனி எதிர்க்கட்சியாக மட்டும் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற மனநிலையை அதன் ஆதரவாளர்களிடையே உருவாக்கியுள்ளது.

AfD தலைமையும் இந்தத் தேர்தலை 2029ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கூட்டாட்சி தேர்தலுக்கான முக்கியமான படியாகக் கருதுகிறது. ஜேர்மனியின் அடுத்த கூட்டாட்சி தேர்தலில் AfD தேசிய அளவில் மிகப்பெரிய அரசியல் சக்தியாக உருவெடுக்குமா என்பது இப்போது ஐரோப்பிய அரசியலில் கவனிக்கப்படும் முக்கியக் கேள்வியாகியுள்ளது. ஜேர்மனியின் அரசியலில் புதிய சகாப்தம் தொடங்கி விட்டது என்றும் நம்பிக்கை உள்ளது. இத் தேர்தலின் மிகப்பெரிய செய்தி AfD-யின் 43.8 சதவீத வாக்கு மட்டுமல்ல. அந்த வாக்குகளுக்குப் பின்னால் இருக்கும் சமூக மற்றும் அரசியல் மனநிலையே முக்கியமானது.

குடியேற்றம் குறித்த அச்சம், பொருளாதார எதிர்பார்ப்புகள் நிறைவேறாத நிலை, அரசியல் பிரதானக் கட்சிகள் மீதான நம்பிக்கையின்மை, ரஷ்யா-உக்ரைன் போர் குறித்த கருத்து வேறுபாடுகள், கிழக்கு ஜேர்மனியின் வரலாற்று அடையாள உணர்வு மற்றும் சமூக ஊடகங்களின் தாக்கம் ஆகியவை அனைத்தும் ஒன்றிணைந்து AfD-யின் எழுச்சிக்கு வழிவகுத்துள்ளன. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நாசிசத்தின் அழிவை அனுபவித்த ஜேர்மனியில், தீவிர வலதுசாரி அரசியல் ஒரு மாநிலத்தில் இவ்வளவு வலுவான தேர்தல் ஆதரவைப் பெறுவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் இது AfD உடனடியாக ஜேர்மனியை ஆளத் தொடங்கிவிட்டது என்பதல்ல. அடுத்ததாக அது பெர்லினில் எவ்வளவு பலமாக ஒலிக்கும் என்பதுதான் ஜேர்மனியின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கப் போகிறது.

# மீண்டும் ஒரு ஐ.நா. கூட்டத் தொடர்!

09.09.2026



ஐநாவின் 63ஆவது கூட்டத் தொடர் கடந்த 7 ஆம் தேதி தொடங்கியது. தொடரை முன்னிட்டு கடந்த மூன்றாம் திகதி வெளியிடப்பட்ட மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.. “அனைத்துத் தரப்பினராலும் இழைக்கப்பட்ட சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள், பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கடுமையாக மீறப்பட்டமை ஆகியன எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை அவற்றுக்கு பொறுப்பு கூறப்படவும்” இல்லை.

மேற்கண்ட அறிக்கை வெளியிடப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, உலகப் பொது நிறுவனங்களில் ஒன்றாகிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின்(Human Rights watch) அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது. அரசாங்கம் “நீதியின் விடயத்தில் நேர்மையாக இல்லை” என்று. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நாட்டின் மிக மோசமான பல வழக்குகளை மீண்டும் திறந்துள்ளது. எனினும் அந்த வழக்குகளை இன்றுவரை முடிக்கவில்லை” என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிக்கைகள் நமக்கு எதனை உணர்த்துகின்றன? கடந்த 17 ஆண்டுகளாக இலங்கைத் தீவு இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூறவில்லை என்பதைத்தான். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், 2009 மே 18க்குப் பின், அப்போது இருந்த ஐநா பொதுச் செயலாளர் கொழும்புக்கு வருகை தந்தபோது, அப்போது இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவருக்கு கொடுத்த வாக்குறுதிகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவில்லை என்பதைத்தான். கடந்த 17 ஆண்டுகளிலும் ராஜபக்சக்கள் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, அனுர குமார… யாருமே பொறுப்புக்கூறவில்லை என்பதுதான் உண்மை.

குறிப்பாக 2015இல் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவோடு நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பின்,அதே ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் இன்றுவரை பொறுப்பு கூறவில்லை. இதை இன்னும் விரிவாகச் சொன்னால் அந்த தீர்மானமானது பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலை மாறு கால நீதிக்கானது.அந்தத் தீர்மானத்தை அப்போது இருந்த மைத்திரி-ரணில் அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்டது. தான் இணை அனுசரணை வழங்கிய ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த சுமார் 11 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் கடந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் பொறுப்புக் கூறவில்லை. இதை இன்னும் ஆழமான கோட்பாட்டு வார்த்தைகளில் சொன்னால், கடந்த 11 ஆண்டுகளில் அனைத்துலக சமூகத்துடன் தான் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தொடர்ச்சியாக வந்த எந்த ஓர் இலங்கை அரசாங்கமும் பொறுப்புக் கூறவில்லை.

இது ஒரு ராஜபக்ச குடும்பத்தின் அல்லது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அல்லது அனுர குமாரவின் தனிப்பட்ட பொறுப்புக் கூறாமை அல்ல. இது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் பொறுப்புக் கூறாமை. அவ்வாறு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பைப் பொறுப்புக் கூற வைப்பதில் ஐநா கடந்த 17 ஆண்டுகளாக அதிலும் குறிப்பாக, 2015 நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் பின்னரான 11 ஆண்டுகளில் பின்னடைவைக் கண்டுள்ளது என்பதுதான் உண்மை.

நிலைமாறு கால நீதியின் தமிழ்ப்பங்காளியாகிய சுமந்திரன் கடந்த 2021ஆம் ஆண்டு, வவுனியாவில் நடந்த ஒரு கூட்டத்தில் கூறியதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக் கூட்டம் அப்பொழுது நடக்கவிருந்த ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டுக் கடிதம் ஒன்றைத் தயாரிக்கும் நோக்கத்தோடு கூட்டப்பட்ட இரண்டாவது கூட்டம் ஆகும். அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் கூறினார் “6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனை செய்தோம், அதில் தோல்வி அடைந்து விட்டோம்” என்று. அந்த பரிசோதனைதான் நிலைமாறு கால நீதியாகும். அதாவது நிலைமாறு கால நீதியின் தமிழ்ப் பங்காளியாகிய சுமந்திரன் அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று கூறினார்.

நிலை மாறுகால நீதி இலங்கைத் தீவில் தோல்வியுற்ற ஒரு பரிசோதனை என்பதற்கு அதைவிட வேறு கூர்மையான உதாரணங்களைக் கூறலாம். முதலாவது உதாரணம், நிலைமாறு கால நீதியின் பெற்றோறில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேன 3ஆண்டுகளில் தன் குழந்தையைக் காட்டிக் கொடுத்தார். அவர் ராஜபக்ஷங்களோடு இணைந்து ஒரு யாப்புச் சதி முயற்சியில் ஈடுபட்டார். அதாவது இலங்கைத் தீவை பொறுப்புக்கூற வைப்பதற்கான செயற்பாடுகளின் பிரதான பங்காளியாகிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்தச் செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கினார். அனைத்துலக சமூகம் ஒன்றுக்கு தான் வழங்கிய வாக்குறுதிகளை தானே விழுங்கி நிலைமாறு கால நீதியைக் காட்டிக் கொடுத்தார். இது முதலாவது உதாரணம்.

அடுத்த உதாரணம் ஈஸ்டர் குண்டு வெடிப்பு. ஈஸ்டர் குண்டு வெடிப்பானது நிலைமாறு கால நீதியின் தோல்வியின் விளைவு எனலாம். நிலை மாறுகால நீதி செய்முறைகள் நாட்டில் அமுலில் இருந்த ஒரு காலகட்டத்தில் தான் ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. எனவே நிலைமாறு கால நீதியின் இயலாமையை தோல்வியை அந்த குண்டு வெடிப்புகள் ரத்தம் சிந்தி நிரூபித்தன.

நான்காவது உதாரணம், மிகவும் பிந்தியது; இப்பொழுது நடந்து கொண்டிருப்பது. இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தைச் புதுப்பிக்க முயற்சிக்கின்றது. அந்த அடிப்படையில் “பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைக் காப்பாற்றும்” சட்ட மூலம் கடந்த மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து விடுவித்து விட்டதாகக் கூறும் அரசாங்கங்கள் எதற்காக தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும்? நிலைமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றால் பிறகு எதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம்? நிலைமாறு கால நீதியின் ஆகப் பிந்திய தோல்வி அது.

மேற்கண்ட நான்கு உதாரணங்களும் ஐநாவின் இலங்கையைப் பொறுப்புக் கூற வைப்பதற்கான திட்டம் தோல்வி அடைந்ததைக் காட்டுகின்றன. அதற்குப் பொறுப்பு, இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு மட்டுமல்ல. அதைவிட முக்கியமாக ஐநாவும்தான். ஏனென்றால் நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிக்க முயன்றமைதான் அந்தத் தவறுக்கு அடிப்படைக் காரணம்.

தென்னாபிரிக்காவில் நிலைமாற்றம் ஏற்பட்டிருந்தது. அங்கே பெரும்பான்மை கருப்பின மக்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தது. அந்த நிலை மாற்றத்தின் பின்னணியில் அங்கே நல்லிணக்கப் பொறிமுறைகள் ஒப்பிட்டுளவில் வெற்றி பெற்றன. ஆனால் இலங்கைத் தீவிலோ போரில் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதை வைத்துக்கொண்டு அதனை ஒரு நிலை மாற்றமாக எடுத்துக்கொண்டு, ஐநா நிலைமாறு கால நீதியை இலங்கைக்கு பரிந்துரைத்தது. ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்ததை நிலைமாற்றம் என்று ஐநா ஏற்று கொண்டதா?

ஆயுதப் போராட்டம் எனப்படுவது ஒரு மூல காரணம் அல்ல. அது விளைவு. இன ஒடுக்கு முறையின் விளைவுதான். 2009 இல் தோற்கடிக்கப்பட்டது விளைவுதான். மூல காரணம் அல்ல. மூல காரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால்தான், மைத்திரிபால சிறிசேன அதற்குப் பயந்து அப்பத்தைச் சாப்பிட்டுவிட்டு நிலைமாறு கால நீதியைக் காட்டிக் கொடுத்தார்.

மூல காரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால்தான், ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. அந்தக் குண்டு வெடிப்பின் பின்னரான உணர்ச்சிகரமான அரசியல் சூழலில், ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வர முடிந்தது.

மூல காரணம் அப்படியே உள்ளபடியால்தான், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டிய தேவை வந்தது. புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்க வேண்டி வந்தது. மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியாலும் அந்த மூல காரணத்தை மாற்ற முடியவில்லை என்பதை அது காட்டுகிறது.

இவ்வாறு மூல காரணம் அப்படியே இருக்கத்தக்கதாக, விளைவின் தோல்வியை வைத்துக்கொண்டு, நாட்டில் நிலை மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கணித்தமை ஐநாவின் தவறு. இது ஐநா அதாவது அனைத்துலக சமூகம் தெரியாமல் செய்த தவறு அல்ல. தெரிந்து செய்த தவறு. தமிழ் மக்களுக்கு அவர்கள் தரக்கூடிய நீதியின் வரையறையை உணர்த்துவது அது.

எனவே இப்பொழுது ஐநா மனித உரிமைச் செயலாளருடைய அறிக்கைகளும் சரி, ஏனைய அனைத்துலக நிறுவனங்களின் அறிக்கைகளும் சரி, சுட்டிக்காட்டுகின்ற போதாமைகள், தவறுகள், பின்னடைவுகள் போன்றவற்றுக்கு ஐநாவும் உட்பட உலக சமூகமும் பொறுப்பு.

இந்தப் பொறுப்பின்மைக்கு பலியாடுகள் ஆக்கப்படுவது தமிழ் மக்கள்தான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த சுமார் இரண்டு ஆண்டு கால பகுதிக்குள் ஊழல் முறைகேடு போன்ற குற்றச் செயல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை ஐநா, மனித உரிமைகள் காப்பகம் போன்றன ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டில் யார் யாருக்கு எதிராக, என்னென்ன குற்றங்களுக்கு எதிராக, வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற தொகுத்துப் பார்த்தால், அவற்றில் பெரும்பாலானவை இன முரண்பாடு சம்பந்தப்படாத வழக்குகள்தான். அதாவது இன முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் கை வைக்கவில்லை. இந்த விடயத்தில் அவர்களிடம் ஓர் அரசியல் தெரிவு உண்டு. அந்தத் தெரிவுதான் இனவாதம். ஆனால் அண்மையில் பேருவளையில் மக்களை சந்தித்தபோது ஜனாதிபதி என்ன கூறினார் தெரியுமா? இலங்கைத் தீவின் நவீன வரலாற்றிலேயே இனவாதம் இல்லாத காலம் கடந்த இரண்டு ஆண்டுகள்தான் என்று.

எனவே இதில் ஐநாவும் கூட்டுப் பொறுப்பாளி. நிலைமாறு கால நீதி இலங்கைத் தீவில் தோல்வியடைந்து விட்டது என்பதனை அதன் தமிழ் பங்காளியே கூறிவிட்டார். எனவே இனியும் ஐநா நிலை மாறுகால நீதிச் செய்முறைகளைத் தொடர முடியாது. மாறாக இலங்கை அரசாங்கங்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான புதிய ஏற்பாடுகளையும் பொறிமுறைகளையும் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. உதாரணமாக இப்போது ஆட்சியில் இருக்கும் என்.பி.பி அரசாங்கம் உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் போன்றவற்றின் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் நிதி உதவிகளையும் பொறுப்புக்கூறலையும் பிரிக்கப்படவியலாதபடி இணைப்பதற்கு உலக சமூகத்தால் முடியும். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. செய்ய முடியவில்லையா? செய்ய விரும்பவில்லையா?

நன்றி: நிலாந்தன்

**எமது போராட்டத்தில் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**




# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

# 2001 ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்காவின் போர்களும் அதன் உலகளாவிய மனிதச் செலவும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

04.09.2026

2001 செப்டம்பர் 11 தாக்குதல்களுக்குப் பின்னர் அமெரிக்கா தொடங்கிய பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர் (Global War on Terror) இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக உலக அரசியலை ஆழமாக மாற்றியமைத்துள்ளது. ஆப்கானிஸ்தான், ஈராக், பாகிஸ்தான், சிரியா, யேமன், சோமாலியா, லிபியா, ஈரான் உள்ளிட்ட பல நாடுகளில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள் நேரடியாகவோ அல்லது கூட்டணி நாடுகள் மற்றும் உள்ளூர் ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவாகவோ நடைபெற்றுள்ளன.

இந்தப் போர்களின் உண்மையான செலவை கணக்கிடுவது எளிதானதல்ல. அண்மைய ஆய்வுத் திட்டத்தின் சமீபத்திய மதிப்பீடுகள், 2001ஆம் ஆண்டுக்குப் பின்னரான அமெரிக்கப் போர்களுக்கான மொத்தச் செலவு சுமார் 8 டிரில்லியன் அமெரிக்க டாலர் எனக் குறிப்பிடுகின்றன. அதே ஆய்வுகள், நேரடி மற்றும் மறைமுக விளைவுகளைச் சேர்த்து குறைந்தது 4.5-4.7 மில்லியன் மக்கள் உயிரிழந்திருக்கலாம் என மதிப்பிடுகின்றன. இவை துல்லியமான எண்ணிக்கைகள் அல்ல. போர் பகுதிகளில் மரணங்களை முழுமையாகப் பதிவு செய்வது மிகவும் கடினம் என்பதால், உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கக்கூடும்.

## செப் 11 பின் தொடங்கிய போர்

2001 செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்கா முதலில் ஆப்கானிஸ்தானில் தலையிட்டது. அல்-காயிதா மற்றும் அதனை பாதுகாத்த தாலிபான் ஆட்சியை அகற்றுவது அதன் முக்கிய நோக்கமாக இருந்தது. ஆனால் இந்தப் போர் சில ஆண்டுகளில் முடிவடையாமல் இருபது ஆண்டுகளுக்கு நீண்டது.



2003ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பு நடைபெற்றது. பின்னர் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான அமெரிக்காவின் முக்கிய வாதங்கள் பெரும் சர்ச்சைக்குள்ளானது. ஈராக் போர் நாட்டின் அரசியல் அமைப்பை மட்டுமல்லாமல், அதன் சமூக மற்றும் மத அடிப்படையிலான அதிகாரச் சமநிலையையும் கடுமையாக பாதித்தது.

அதன் பின்னர் சிரியா, யேமன், சோமாலியா, லிபியா போன்ற நாடுகளிலும் அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்கள், ட்ரோன் நடவடிக்கைகள், சிறப்புப் படை நடவடிக்கைகள் மற்றும் உள்ளூர் கூட்டணிகளுக்கான ஆதரவு போன்றவை விரிவடைந்தன. பிறவுண் பல்கலைக் கழக (Brown University) ஆய்வுகளின்படி, 2021-2023 காலகட்டத்திலேயே அமெரிக்க அரசு 78 நாடுகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

போரின் பொருளாதாரச் செலவு வெறும் குண்டுகள், விமானங்கள், டாங்கிகள் மற்றும் இராணுவ வீரர்களின் சம்பளம் ஆகியவற்றுடன் முடிவடைவதில்லை. இந்த பல்கலைக் கழக மதிப்பீட்டின்படி, 2001 முதல் 2022 வரையிலான காலத்தில் Post-9/11 போர்களுக்காக அமெரிக்கா சுமார் 8 டிரில்லியன் டாலர் செலவிட்டுள்ளது. இதில் நேரடி இராணுவச் செலவுகள் மட்டுமல்லாமல், உள்நாட்டு பாதுகாப்பு, போர் கடன்களுக்கான வட்டி மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கான நீண்டகால மருத்துவ மற்றும் பிற நலச் செலவுகளும் அடங்குகின்றன.

இந்த அளவிலான பணத்தை மாற்றுப் பயன்பாட்டில் செலவிட்டிருந்தால், அமெரிக்காவின் சுகாதாரம், கல்வி, வீடமைப்பு, போக்குவரத்து, பாலங்கள், நீர்வழங்கல் மற்றும் பிற உள்கட்டமைப்புகளில் மிகப்பெரிய முதலீடுகளைச் செய்ய முடிந்திருக்கும் என்ற கேள்வி எழுகிறது. அதாவது, போரின் பொருளாதாரச் செலவு வெளிநாடுகளில் மட்டுமல்ல; அமெரிக்க சமூகத்திற்குள்ளும் அதன் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## அமெரிக்க வீரர்களின் மனிதச் செலவு

போரின் இன்னொரு முகம் அமெரிக்க இராணுவ வீரர்களின் வாழ்க்கையில் காணப்படுகிறது. ஆயிரக்கணக்கான அமெரிக்க இராணுவத்தினர் போரில் உயிரிழந்துள்ளனர். அதைவிடப் பலர் உடல் காயங்கள், மூளை அதிர்ச்சி, மன அழுத்தம், (PTSD) நீண்டகால பிரச்சினைகளுடன் நாடு திரும்பியுள்ளனர்.









**2001 ஆண்டுக்குப் பின்னரான அமெரிக்கப் போர்களுக்கான மொத்தச் செலவு சுமார் 8 டிரில்லியன் அமெரிக்க டாலர் எனக் குறிப்பிடுகின்றன. அதே ஆய்வுகள், நேரடி மற்றும் மறைமுக விளைவுகளைச் சேர்த்து குறைந்தது 4.5–4.7 மில்லியன் மக்கள் உயிரிழந்திருக்கலாம் என மதிப்பிடுகின்றன. இவை துல்லியமான எண்ணிக்கைகள் அல்ல. போர் பகுதிகளில் மரணங்களை முழுமையாகப் பதிவு செய்வது மிகவும் கடினம் என்பதால், உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கக்கூடும்.**

அத்துடன் 9/11 போர்களில் பணியாற்றிய முன்னாள் இராணுவத்தினரிடையே தற்கொலை மரணங்கள் மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பதை சுட்டிக்காட்டுகின்றன. அந்தத் திட்டத்தின் மதிப்பீட்டின்படி, போரில் உயிரிழந்தவர்களை விட குறைந்தது நான்கு மடங்கு பேர் தற்கொலையால் உயிரிழந்துள்ளனர். மேலும், இந்தப் போர்களின் முன்னாள் வீரர்களுக்கான எதிர்கால பராமரிப்புச் செலவு 2050ஆம் ஆண்டுக்குள் 2.2-2.5 டிரில்லியன் டாலர் வரை செல்லலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் போர் முடிந்துவிட்டது என்பது உண்மையில் முழுமையான கூற்று அல்ல. வீரர் வீட்டிற்குத் திரும்பிய பின்னரும் போரின் தாக்கம் தொடர்கிறது. அத்துடன் 4.5 மில்லியனுக்கும் அதிகமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

போரின் மிகக் கொடூரமான விளைவு உயிரிழப்புகளாகும். தற்போதைய ஆய்வுத் தரவின்படி, 2001-2023 காலகட்டத்தில் ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா, யேமன் மற்றும் பாகிஸ்தான் போன்ற முக்கிய போர்களில் 940,000க்கும் மேற்பட்டோர் நேரடி போர்வன்முறையால் உயிரிழந்துள்ளனர். இதில் 432,000க்கும் அதிகமானோர் பொதுமக்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவை குண்டுவீச்சு, துப்பாக்கிச் சூடு, விமானத் தாக்குதல் போன்ற நேரடி காரணங்களால் ஏற்பட்ட மரணங்கள் மட்டுமே.

போர் அழித்த மருத்துவமனைகள், குடிநீர் அமைப்புகள், கழிவுநீர் கட்டமைப்புகள், உணவு விநியோகம் மற்றும் வேலை வாய்ப்புகள் காரணமாக ஏற்படும் நோய், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் சிகிச்சையின்மை ஆகியவற்றின் விளைவாக மேலும் 3.6-3.8 மில்லியன் மறைமுக மரணங்கள் ஏற்பட்டிருக்கலாம் என ஆய்வுகள் மதிப்பிடுகின்றன. இதனால் மொத்த மரண எண்ணிக்கை குறைந்தது 4.5-4.7 மில்லியன் என மதிப்பிடப்படுகிறது.

இங்கு மிக முக்கியமான உண்மை என்னவென்றால், போரில் குண்டு தாக்கி இறப்பவர்கள் மட்டுமே போரின் பலிகள் அல்ல. ஒரு குழந்தை மருத்துவமனை இல்லாததால் சிகிச்சையின்றி இறந்தாலும், குடிநீர் மாசுபாட்டால் நோயுற்று இறந்தாலும், போர் அந்த மரணத்தின் பின்னணியில் ஒரு முக்கிய காரணியாக இருக்கலாம்.

## 38 மில்லியன் மக்கள் வீட்டை இழந்தனர்

போர் என்பது உயிரிழப்பை மட்டும் ஏற்படுத்துவதில்லை. மக்களை அவர்களின் சொந்த மண்ணிலிருந்து வெளியேறுகிறது. 2001 ஆண்டுக்குப் பின்னரான அமெரிக்கப் போர்களுடன் தொடர்புடைய மோதல்களால் ஆப்கானிஸ்தான், ஈராக், பாகிஸ்தான், சிரியா, யேமன், சோமாலியா, லிபியா மற்றும் பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளில் 38 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் அல்ல. பலர் தங்கள் சொந்த நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். வீடு, வேலை, கல்வி, குடும்ப உறவுகள் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய அனைத்தும் சிதைந்த நிலையில் அவர்கள் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

போர் மருத்துவமனைகளை அழிக்கிறது; மருத்துவர்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்கிறது மருந்து விநியோகத்தைத் தடை செய்கிறது குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை சேதப்படுத்துகிறது.

இதனால் போர் முடிந்த பிறகும் தொற்றுநோய்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் குழந்தை மரணங்கள் அதிகரிக்கக்கூடும். போர் அழித்த பொருளாதாரம், பொதுச் சேவைகள், சுகாதார அமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் தாக்கம் குண்டுவீச்சு முடிந்த பின்னரும் நீண்ட காலம் தொடர்கிறது என்று வலியுறுத்துகின்றன.

## மக்கள் சுதந்திரத்தின் மீதான தாக்கம்

9/11க்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் வெளிநாடுகளுக்குள் மட்டுமல்ல; அமெரிக்காவிற்குள்ளும் நிகழ்ந்தன. தேசப்பற்று (Patriot Act) போன்ற சட்டங்கள் அரசின் கண்காணிப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரங்களை விரிவுபடுத்தின. தேசிய பாதுகாப்புக்கும் தனிநபர் தனியுரிமைக்கும் இடையிலான சமநிலை குறித்து அமெரிக்காவில் நீண்டகால விவாதம் உருவானது.

போர்களுடன் குடிமக்கள் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் மீதான அரிப்பு தொடர்புடையதாகக் குறிப்பிடுகிறது.

போர் முடிந்த பின்னரும் அதன் சுற்றுச்சூழல் தடங்கள் தொடர்கின்றன. வெடிகுண்டுகள், ஏவுகணைகள், கனரக உலோகங்கள், எரிபொருள் எரிப்பு மற்றும் இராணுவக் கழிவுகள் மண், நீர் மற்றும் காற்றை பாதிக்கலாம். சில பகுதிகளில் குண்டுவீச்சுக்குப் பின்னர் மக்கள் தங்கள் பழைய வீடுகளுக்குத் திரும்பும்போது கனரக உலோகங்களின் வெளிப்பாட்டால் உடல்நல அபாயங்கள் ஏற்படக்கூடும் என ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.



# இடம்பெயர்வின் சுவடுகள்

கால்முளைத்த கடலலைகளாய்
கரையை இழந்து ஓடிய பெருவழியில்,
கையசைத்து விடைபெற்றது
எங்கள் முற்றம் பூத்த முல்லைக்கொடி!
எரிந்த புத்தகங்களின் சாம்பல் காற்றில்,
பிறந்த மண்ணின் முகவரி தொலைந்தது.
சுமந்து சென்ற மூட்டைகளுக்குள்
ஆடைகளா இருந்தன?
இல்லை...
அடிவயிற்றின் அலறலும்
உயிர்தப்பிய பேரமைதியும் தான்!
வங்கக் கடலின் உப்புக்காற்றில்
இன்னமும் மிதக்கிறது
தோணியில் சிந்திய சிறுவனின் கண்ணீர்!

அகதி முகாமின் தார்ப்பாய் கூரையில்
மழை பெய்யும்போதெல்லாம்...
சொந்த ஊர் மண்ணின் வாசமே
நெஞ்சைக் கிழிக்கிறது!
வட்டமிடும் பறைவைகளுக்காவது
திரும்பிச் செல்ல தேசம் உண்டு!
திசையெங்கும் சிதறிய எம் சொந்தங்களுக்கு...
நினைவுகள் மட்டுமே
வாழ்ந்துகொண்டிருக்கும் ஒற்றை முகவரி!
இடப்பெயர்வு என்பது
எங்களுக்கு வெறும் பயணமல்ல
சொந்த நிலத்தின் சடலத்தின் மீது
சுமந்து செல்லும் வாழ்நாள் அஞ்சலி!

சு.லோஜிதன்



# புள்ளி விபரங்கள் இரத்தம் சிந்துவதில்லை

06.09.2026

“அமைதியான காலத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரை அடக்கம் செய்கிறார்கள் ஆனால் போர்க் காலத்தில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அடக்கம் செய்கிறார்கள்” இது கிரேக்க வரலாற்று அறிஞர் ஹெரோடோடஸ் கூறியது. ஈழத் தமிழர்களுக்கும் இது பொருந்தும்.




வயதாகி முதுமை கண்டு இறந்து போகும் தமது பெற்றோருக்கு பிள்ளைகள் இறுதிக் கிரியைகளை செய்வது சுமுகமான ஒரு காலம். போருக்குப் போன அல்லது போரில் சிக்கி உயிரிழந்த பிள்ளைகளுக்கு பெற்றோர் இறுதிக் கிரியைகளைச் செய்வது போர்க்காலம். ஆயின் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படத்தை ஏந்தியபடி அம்மாக்கள் தெருக்களில் நிற்பது எந்த காலம்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறுவதுபோல, இது இனவாதம் இல்லாத காலமா? தமிழ் மக்கள் அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பிப் பின் தொடரும் ஒரு காலமா?

அண்மையில் ஒரு சிங்களப் பெண் மருத்துவர் சொன்ன கதை வருமாறு... யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய ஆஸ்பத்திரி ஒன்றில் ஒரு முதியவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் பெரும்பாலும் தப்ப மாட்டார் என்று மருத்துவர்கள் முடிவு செய்தார்கள். இது அவருக்குத் துணையாக நின்ற அவருடைய முதிய மனைவிக்கும் கூறப்பட்டது. அந்த முதிய தாய் இந்த மருத்துவரிடம் கேட்டார், “இவரை நோயாளர் காவு வண்டிமூலம் எனது மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிக்கு மாற்றுவீர்களா? ஏனென்றால் இங்கிருந்து இவருடைய உடலை எனது கிராமத்துக்கு காவிச்செல்ல பெருந்தொகை செலவாகும். என்னுடைய மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரியிலிருந்து எனது கிராமத்துக்குக் கொண்டுபோக குறைந்த காசுதான் தேவைப்படும். அதனால் தான் அப்படி கேட்கின்றேன்” என்று. அப்பொழுது அந்த மருத்துவர் அந்த முதிய தாயின் குடும்ப விவரங்களைக் கேட்டிருக்கிறார். அவர்களுக்கு ஒரே ஒரு மகன். அவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு விட்டார். இப்பொழுது அவர்கள் இருவரும் துணைக்கு இரண்டு நாய்களை வளர்க்கிறார்கள். தனது கணவர் ஒரு படுக்கை நோயாளி என்ற போதிலும் அவர் உயி ரோடு இருக்கும்வரை தான் தனிமையை உணர்வதில்லை என்றும், அவர் இறந்து போனால் தானும் இரண்டு நாய்களும் மட்டுந்தான் என்றும் அந்த அம்மா கூறியிருக்கிறார்.

இது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஒரு பிள்ளையின் தாயு டைய கதை. இப்பொழுது தமது பிள்ளைகளின் ஒளிப்படங்களை ஏந்தியபடி நீதி கேட்கும் அம்மாக்களிடம் கேட்டால் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கதை சொல்வார்கள். “புள்ளிவிவரங்கள் இரத்தம் சிந்துவதில்லை; விவரங்களே முக்கியம்” என்று ஆர்தர் கோஸ்ற்லர் கூறுவார். ஏனென்றால் புள்ளி விபரங்களில் காணப்படுவது எண்ணிக்கையைக் காட்டும் தானங்கள் மட்டு மல்ல, அவை ரத்தம் வடியும் கதைகள். அவற்றைத் தானங்க ளாக அனைத்துலக சமூகத்திடம் கொடுப்பதை விடவும் அந்த ஒவ்வொரு தானத்துக்குள்ளும் இருக்கும் கதைகளை கலைப் படைப்புக்களாக வெளியே கொண்டுவந்தால் அது உணர்வு பூர்வமாக உரையாடும்உலக சமூகத்தின் மனசாட்சியை உலுப்பும்.

தமக்கு நடந்தது இன அழிப்பு என்று கூறும் ஈழத் தமிழர்கள் அந்த இன அழிப்பை நிரூபிக்கும் உலகத்த தரத்திலான எத்தனை திரைப்படங்களை இதுவரை தயாரித்திருக்கிறார்கள்? அந்தக் கதைகளை திரைப்படமாக்கலாம்; கதையாக்கலாம்; கவிதையாக்கலாம்; ஓவியம் ஆக்கலாம்; நாடகமாக்கலாம். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள காணொளிப் பிரபல்யங்கள் குறைந்தபட்சம் வாரம் ஒரு கதையையாவது வெளியே கொண்டு வரலாம். அந்தக் கதைகளுக்கு அரசியல் பெறுமதியும் உண்; சமகாலப் பெறுமதியும் உண்டு; சந்தைப் பெறுமதியும் உண்டு. ஆனால் எத்தனை யுரியூப்பர்கள் அவற்றைக் கதையாக்குகிறார்கள்?

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் “ஹெரிடேஜ் ஹோட்டலுக்கு” அருகே ஓர் ஆவணக் காப்பகம் உண்டு”. சிறீலங்காவின் சமகால கலை, கட்டிடக்கலை, வடிவமைப்பு என்பவற்றுக்கான காப்பகம்” என்று அழைக்கப்படுகின்ற அந்த கட்டிடத்தில், நிரந்தரமாக ஓர் ஓவியக் காட்சியகம் கடந்த பல மாதங்களாக இயங்கிவருகிறது. கிட்டத்தட்ட 30 ஆண்டு காலப் பகுதிக்குள் வெவ்வேறு தலைமுறைகளை சேர்ந்த தமிழ் ஓவியர்கள் வரைந்த ஓவியங்கள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் ஒரே ஒரு நிரந்தர ஓவியக் காட்சியகம் அது. குடா நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்கள்



குறிப்பாக ராஜதந்திரிகள் அந்த காட்சியகத்துக்கு வருகிறார்கள்.

அண்மையில் பிரிட்டிஷ் தூதுவர் அங்கே போயிருந்தார். அங்குள்ள மூன்று தலைமுறை ஓவியங்களில் பெரும்பாலானவை இன முரண்பாடுகளோடு தொடர்புடையவை. புள்ளி விபரங்களை விட அந்த ஓவியங்கள் உணர்வு பூர்வமாக உரையாடுகின்றன. இதுபோல வெளிநாட்டவருக்கு தமது கண்ணீர்க் கதைகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும் எத்தனை ஏற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு?

அண்மையில் தென்னிலங்கையில் உள்ள பிரபல்யமான அதே சமயம் தமிழ் மக்களுக்கு நெருக்கமான திரைப்பட நெறியாளர் பிரசன்ன விதானகே யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். செம்மணி தொடர்பாக அவர் ஒரு திரைப்படத்தைத் தயாரிக்க இருப்பதாக தகவல். அதற்கு நிதி உதவி செய்வது யார் தெரியுமா? ஒரு சிங்களப் பெண்மணியாம். செம்மணியில் அகழ்ந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகளின் ஒளிப்படங்கள் காணொளிகளைக் கண்டு அந்தப் பெண்மணி, அது தொடர்பான ஒரு திரைப் படத்தை தயாரிக்குமாறு பிரசன்ன விதானகேயை கேட்டதாக ஒரு தகவல்.

புதைகுழிகள் தொடர்பாக படங்களைத் தயாரிக்குமாறு பிரசன்ன விதானகே போன்ற சிங்கள நண்பர்களையும் தமிழ்த் திரைக் கலைஞர்களையும், முதலீட்டாளர்களையும் ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்ச் சமூகத்துக்கு உண்டு. கோடம்பாக்கத்தின் வணிக சினிமா தொழில்துறைக்குள் கோடிக்கணக்கில் முதலீடு செய்யும் தமிழ் முதலாளிகள் இந்த விடயத்தில் தமது காசில் ஒரு கொஞ்சத்தையாவது நீதிக்கான போராட்டத்தின் பக்கம் ஏன் திருப்பக்கூடாது? சோமிதரனின் “நீளிரா” படத்துக்கு இந்தியரான கார்த்திக் சுப்புராஜ் முதலீடு செய்திருக்கிறார்.

ஒரு சிங்களப் பெண் ஒரு பிரபல இயக்குனரை அணுகி செம்மணி தொடர்பாக ஒரு படத்தைத் தயாரிக்குமாறு கேட்கிறார். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதையை கலையாக்க வேண்டிய பொறுப்பு யாருடையது? அதற்கு நிதி உதவி செய்ய வேண்டியது யார்?

நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் பொருத்தமான விதங் களில் முன்னேறியது போதாது என்பதற்கு இது ஒரு சான்று. தமது துயரக் கதைகளை இப்பொழுதும் புள்ளி விபரங்களாக முன்வைக்கும் தமிழ் மக்கள் அதையே கலையாக்கம் செய்தால் அது உலக சமூகத்தின் அபிப்பிராயத்தை நொதிக்கச் செய்யும்.

நீதிக்கான போராட்டத்தில் இதுவரையிலும் 200க்கும் குறையாத தாய்மார்கள் தந்தைமார்கள் முதுமையினாலும், நோய்களினாலும், நீதி கிடைக்காது என்ற விரக்தியாலும், ஏக்கத்தினாலும் இறந்து போய்விட்டார்கள். அவர்கள் மட்டும் இறக்கவில்லை. அவர்களோடு சேர்ந்து பல கதைகளும் இறந்து போய்விட்டன.

தனது பிள்ளையின் படத்தை ஏந்திக் கொண்டு கண்ணீரோடு நிற்கும் கடைசித் தாயும் இறந்து போய்விட்டால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் படிப்படியாகக் கூர்மையிழந்து விடும் என்று அரசாங்கம் நம்பக்கூடும். அதே சமயம் தன் பிள்ளையின் ஒளிப் படத்தை ஏந்தி கொண்டு ஒரு தாயாவது தெருவில் நிற்கும்வரை, இலங்கைதீவில் சமாதானம் ஏற்பட்டுவிட்டது; நல்லிணக்கம் பிறந்து விட்டது; இனவாதம் இறந்துவிட்டது என்று யாரும் வகுப்பெடுக்க முடியாது.

நன்றி: நிலாந்தன்

**விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும், உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# ஐஸ்லாந்து மக்களின் உறுதியான தீர்ப்பு!

# ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய மறுப்பு

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

02.09.2026







ஐரோப்பிய அரசியலில் கடந்த சில நாட்களில் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ள நிகழ்வு, வட அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ள சிறிய நாடான ஐஸ்லாந்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய (EU) தொடர்பான மக்கள் வாக்கெடுப்பு ஆகும். 2026 ஆகஸ்ட் 29 அன்று நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில், ஐரொப்பிய ஒன்றியத்தில் சேர்வதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஐஸ்லாந்து மக்கள் குறுகிய பெரும்பான்மையுடன் இல்லை எனத் தீர்ப்பளித்துள்ளனர். இறுதி முடிவில் 52.8% பேர் எதிராகவும், 47.2% பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர். வாக்குப்பதிவு வீதமும் 82.5% என்ற அளவுக்கு உயர்ந்திருந்தது.

இந்த வாக்கெடுப்பு ஐஸ்லாந்து உடனடியாக ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர வேண்டுமா, வேண்டாமா என்பதற்கான இறுதி வாக்கெடுப்பு அல்ல. மாறாக, ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமா என்பதுதான் கேள்வியாக இருந்தது. ஆம் என்ற முடிவு கிடைத்திருந்தால் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக் கப்பட்டிருக்கும். பின்னர் உருவாகும் உறுப்பினர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்காக இன்னொரு வாக்கெடுப்பு தேவைப்பட்டிருக்கும்.

## வாக்கெடுப்பின் முடிவு

ஐஸ்லாந்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய மக்கள் வாக்கெடுப்பில் மொத்தமாக சுமார் 225,000 வாக்குகள் பதிவாகின. அவற்றில் 118,040 பேர் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டாம் எனவும், 105,399 பேர் ஆரம்பிக்க வேண்டும் எனவும் வாக்களித்துள்ளனர். வாக்குப்பதிவு வீதம் 82.5% ஆகும்.

இது மிகவும் குறுகிய வித்தியாசத்தில் கிடைத்த வெற்றியாகும். இல்லை தரப்பு வெறும் 5.6 சதவீதப் புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. எனவே, ஐஸ்லாந்து மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு முற்றிலும் எதிரானவர்கள் என்று இந்த முடிவை எளிமையாகப் புரிந்துகொள்வது தவறாகும். உண்மையில், நாட்டின் தலைநகர் ரெய்க்யாவிக் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆம் வாக்குகளுக்கு வலுவான ஆதரவு காணப்பட்டது. ஆனால் நாட்டின் பல கிராமப்புற மற்றும் கடலோரப் பகுதிகளில் இல்லை வாக்குகள் அதிகமாகப் பதிவாகின. குறிப்பாக மீன்பிடித் தொழிலுடன் நெருக்கமாகத் தொடர்புடைய பிராந்தியங்களில் ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை குறித்த அச்சம் அதிகமாக இருந்தது.

**தேசிய இறையாண்மை, கடல் மீன்பிடி உரிமை மற்றும் ஐரோப்பிய எதிர்காலம் குறித்த முக்கியமான வாக்கெடுப்பில் ஐஸ்லாந்து மக்கள் இல்லை எனத் தீர்ப்பளித்துள்ளனர். கடல் வளங்கள் மீதான இறுதி அதிகாரம் ஐஸ்லாந்து மக்களிடமே இருக்க வேண்டும் என்ற தேசியவாத உணர்வு இந்த வாக்கெடுப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.**

ஐஸ்லாந்து ஒரு சிறிய நாடாக இருந்தாலும், அதன் பொருளாதாரத்திலும் தேசிய அடையாளத்திலும் மீன்பிடித் தொழில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தால், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான மீன்பிடிக் கொள்கை (Common Fisheries Policy) தொடர்பான விதிமுறைகளுக்கு ஐஸ்லாந்து உட்பட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் தங்களது கடல் வளங்கள் மற்றும் மீன்பிடி ஒதுக்கீடுகள் மீது வெளிப்புற அதிகாரம் அதிகரிக்கக்கூடும் என்று இல்லை தரப்பு அச்சம் தெரிவித்தது.

ஐஸ்லாந்தின் வரலாற்றைப் பார்க்கும்போது இந்த அச்சம் புரிந்து கொள்ளத்தக்கது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடல் வளங்களும் மீன்பிடித் தொழிலும் முக்கிய பங்கு வகித்துள்ளன. எனவே, எங்கள் கடல் வளங்கள் மீதான இறுதி அதிகாரம் ஐஸ்லாந்து மக்களிடமே இருக்க வேண்டும் என்ற தேசியவாத உணர்வு இந்த வாக்கெடுப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் ஐஸ்லாந்து ஐரோப்பாவிலிருந்து விலகிய நாடல்ல எனபது குறிப்பிடத்தக்கது.

## ஐஸ்லாந்தின் முக்கியத்துவம்

ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் அல்ல. ஆனால் அது European Economic Area (EEA) அமைப்பின் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றைச் சந்தையுடன் மிக நெருக்கமாக இணைந்துள்ளது. மேலும், அது செங்கன் (Schengen Area) உறுப்பினராக உள்ளது.

இதன் காரணமாக, ஐஸ்லாந்து ஏற்கனவே ஐரோப்பிய பொருளாதாரத்துடன் ஆழமான தொடர்பைக் கொண்டுள்ளது. பொருட்கள், சேவைகள், முதலீடு மற்றும் மக்களின் நகர்வு போன்ற துறைகளில் ஐரோப்பிய சந்தையுடன் நெருங்கிய உறவு உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் சேரவில்லை என்பதன் பொருள் ஐரோப்பாவிலிருந்து விலகுகிறது என்பதல்ல. மாறாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் முழுமையான அரசியல் உறுப்பினராகாமல், பொருளாதார ரீதியாக நெருக்கமான உறவைத் தொடர்வது என்ற தற்போதைய மாதிரியை ஐஸ்லாந்து மக்கள் விரும்பியுள்ளனர்.

2009 முதல் நீடிக்கும் ஐரோப்பிய ஒன்றிய விவகாரம் தொடர்பாக பல கருத்துகள் நிலவுகின்றன. அதேவேளை ஐஸ்லாந்தின் EU விவகாரம் புதியதல்ல. 2008ஆம் ஆண்டின் உலகளாவிய நிதி நெருக்கடியைத் தொடர்ந்து ஐஸ்லாந்தின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன் பின்னணியில் 2009ஆம் ஆண்டு அந்நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக விண்ணப்பித்தது. 2010ஆம் ஆண்டு இணைவு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் உறுப்புரிமையைச் சுற்றிய அரசியல் எதிர்ப்புகள் அதிகரித்தன. குறிப்பாக மீன்பிடி உரிமைகள், தேசிய இறையாண்மை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான கொள்கைகளுக்கு உட்பட வேண்டிய நிலை ஆகியவை பெரும் விவாதங்களாக அமைந்தன. பின்னர் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டன.

இப்போது 13 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பின்னர் அந்தப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு மக்களிடம் வைக்கப்பட்டது. ஆனால் மக்கள் அதை நிராகரித்துள்ளனர்.




## பொருளாதார – பாதுகாப்பு புவிசார் அரசியல்

அதேவேளை ஆம் தரப்பினர் முற்றிலும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு சார்ந்த காரணங்களை முன்வைத்தனர். ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை கிடைத்தால், ஐஸ்லாந்துக்கு ஐரோப்பிய முடிவெடுக்கும் அமைப்புகளில் நேரடி அரசியல் பிரதிநிதித்துவம் கிடைக்கும். தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றைச் சந்தையில் பங்கேற்கும் அளவுக்கு நெருக்கமான உறவு இருந்தாலும், அந்தச் சந்தையின் முக்கிய அரசியல் முடிவுகளை எடுக்கும் மேசையில் ஐஸ்லாந்துக்கு முழுமையான உறுப்பினர் உரிமை இல்லை.

மேலும், உலகளாவிய பொருளாதார நிலையற்ற தன்மை, பணவீக்கம், வாழ்க்கைச் செலவு, உக்ரைன் போர் மற்றும் வட அட்லாண்டிக் பிராந்தியத்தில் அதிகரிக்கும் புவிசார் அரசியல் பதற்றம் ஆகியவை ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் இன்னும் நெருக்கமாக இணைவதற்கான காரணங்களாக ஆம் தரப்பினரால் முன்வைக்கப்பட்டன.

தற்போது இந்த வாக்கெடுப்பு பொருளாதார விவகாரம் மட்டுமல்ல. பாதுகாப்பு மற்றும் புவிசார் அரசியலும் இதில் முக்கிய பங்கு வகித்தன. ஐஸ்லாந்து NATO உறுப்பினராக உள்ளது. அந்நாட்டுக்கு நிரந்தரமான சொந்த இராணுவம் இல்லை. அமெரிக்காவுடன் 1951ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்பு ஒப்பந்தமும் உள்ளது. வட அட்லாண்டிக் கடலில் ஐஸ்லாந்தின் புவியியல் அமைவு காரணமாக, ஐரோப்பா-வட அமெரிக்கா பாதுகாப்பு கட்டமைப்பில் அந்நாடு முக்கிய இடத்தை வகிக்கிறது.

குறிப்பாக கிரீன்லாந்து தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்வைத்த கருத்துகள் மற்றும் ஆர்க்டிக் பிராந்தியத்தில் அதிகரிக்கும் அமெரிக்கா-ரஷ்யா-ஐரோப்பா போட்டி ஆகியவை ஐஸ்லாந்தின் பாதுகாப்பு விவாதத்தையும் பாதித்தன. ஐரோப்பிய ஒன்றியத்துடன் இன்னும் நெருக்கமாக இணைவது பாதுகாப்புக்கு உதவும் என்று ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இல்லை தரப்பு, NATO மற்றும் அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட தற்போதைய பாதுகாப்பு அமைப்புகள் போதுமானவை என்றும், EU உறுப்புரிமை அவசியமில்லை என்றும் வாதிட்டது.

## ஐஸ்லாந்து பிரதமர் நிலைப்பாடு

பிரதமர் Kristrún Frostadóttir தலைமையிலான அரசாங்கம் இந்த முடிவை மதிப்பதாக அறிவித்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலம் முடியும் 2028 வரை EU இணைவு பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுக்கப் போவதில்லை என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை விவகாரம் குறைந்தபட்சம் 2028 வரை ஐஸ்லாந்திய அரசியலின் முன்னுரிமைப் பட்டியலில் இருந்து விலகுகிறது. ஐஸ்லாந்தின் முடிவு ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஒரு அரசியல் செய்தியாகும்.

Brexitக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் தனது விரிவாக்கத்தைத் தொடர விரும்புகிறது. ஐஸ்லாந்து போன்ற வளமான, ஜனநாயகமான, ஏற்கனவே ஐரோப்பிய பொருளாதார அமைப்புடன் நெருக்கமாக இணைந்துள்ள ஒரு நாட்டின் உறுப்புரிமை EUக்கு ஒப்பீட்டளவில் எளிதான விரிவாக்க வெற்றியாகக் கருதப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த வாக்கெடுப்பு, பொருளாதார நன்மைகள் மட்டுமே ஒரு நாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைக்க போதுமானதாக இருக்காது என்பதை மீண்டும் காட்டியுள்ளது.



தேசிய இறையாண்மை, இயற்கை வளங்கள், மீன்பிடி உரிமைகள், தேசிய அடையாளம் மற்றும் வெளிநாட்டு கொள்கை ஆகியவை மக்களின் முடிவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஐஸ்லாந்தின் 52.8% இல்லை வாக்கு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிரான முழுமையான தீர்ப்பாகப் பார்க்கப்படக்கூடாது. ஐரோப்பாவுடன் நெருக்கமாக இருப்போம் ஆனால் முழுமையான அரசியல் உறுப்புரிமைக்காக எங்களது இறையாண்மை மற்றும் முக்கிய இயற்கை வளங்களின் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க வேண்டாம் என்ற மனநிலையின் வெளிப்பாடாக இதைப் பார்க்கலாம்.

குறிப்பாக மீன்பிடி உரிமைகள், தேசிய இறையாண்மை மற்றும் தற்போதைய EEA உறவு ஆகியவை இல்லை தரப்பின் வெற்றிக்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. அதே நேரத்தில் 47.2% பேர் ஆம் என வாக்களித்திருப்பது, ஐஸ்லாந்து சமூகத்தில் EU உறுப்புரிமை குறித்த ஆதரவு இன்னும் கணிசமாக இருப்பதையும் காட்டுகிறது. எனவே, இந்த வாக்கெடுப்பை ஐஸ்லாந்து ஐரோப்பாவை நிராகரித்தது என்று கூறுவது சரியான விளக்கம் அல்ல. மாறாக, ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான பேச்சுவார்த்தையை இப்போது மீண்டும் தொடங்க வேண்டாம் என்று தீர்மானித்துள்ளது என்பதே துல்லியமான விளக்கம்.

2028க்குப் பின்னர் அரசியல் சூழல் மாறினால் இந்த விவகாரம் மீண்டும் எழலாம். ஆனால் தற்போதைய தீர்ப்பு ஒன்று தெளிவாகக் கூறுகிறது: ஐரோப்பிய ஒத்துழைப்பை ஏற்றுக்கொண்டாலும், தேசிய இறையாண்மை மற்றும் கடல் வளங்களின் மீதான கட்டுப்பாட்டை விட்டுக்கொடுப்பதில் ஐஸ்லாந்து மக்கள் இன்னும் மிகவும் எச்சரிக்கையாக உள்ளனர்.


தமிழீழ சுயநிர்ணய அமைப்பு
MOVEMENT FOR SELF-DETERMINATION OF TAMIL EELAM
Ground Floor Right, 164 Pinner Road, Harrow, HA1 4JJ
www.msdte.org
admin@msdte.org


தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் ஊடக அறிக்கை - 01/09/2026

**"சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் நாள் கண்டனப் போராட்டம் (UK) - 30/08/2026"**

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நாள் நிகழ்வின் ஓர் அங்கமாகவும், எம் பூர்வீக தாயக நிலப்பரப்பில் எம் மக்களின் பேரெழுச்சியுடன் கூடியதாக 'வடக்குக் கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கம்' முன்னெடுக்கும் மிகப் பேரெழுச்சியான போராட்டத்திற்குப் பலம் சேர்க்கும் வகையிலும், பிரித்தானியாவைத் தளமாகக்கொண்டு செயற்படும் தமிழீழ சுயநிர்ணய அமைப்பு லண்டனில் மிகப்பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை 30.08.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணியிலிருந்து மதியம் 03:00 மணிவரை முன்னெடுத்தது.

பிரித்தானியா (UK) - லண்டனிலுள்ள ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகரத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஆரம்பித்து அதனை தொடர்ந்து பிரித்தானியப் பிரதமர் பணிமனை வரை பேரணியாகச் சென்று பிரதமர் பணிமனையின் முன்பாகவும் தொடர்ச்சியாகப் போராட்டம் நடைபெற்றது.

ஸ்ரீலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இரும்புக்கரங்களான முப்படைகளாலும், அரசின் கைக்கூலிகளான ஒட்டுக்குழுக்களாலும் நிகழ்த்தப்பட்ட மனிதப் பேரவலத்தின் குறியீடாக, பிரித்தானியாவிற்கான ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகராலயத்தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்டன ஆர்ப்பாட்டமானது, "சர்வதேச நீதி விசாரணையே எமது ஒரே கோரிக்கை" என்பதனை அடையாளப்படுத்தும் வகையில் பிரித்தானிய நாடாளுமன்ற சுற்றுவட்டம் வரை பேரணியாகச் சென்று, பிரித்தானியப் பிரதமர் பணிமனையின் முன்பாகவும் தொடர்ச்சியாகப் போராட்டம் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா அரசின் உள்ளகப் பொறிமுறை விசாரணையை மறுத்தும், எமக்கான நீதியானது சர்வதேச தலையீட்டுடன் கூடிய நீதி விசாரணைப் பொறிமுறைக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதுடன், குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனையை வழங்குவதனூடாக எம் மக்களுக்கெதிரான இவ்வாறான குற்றங்கள் மீள்நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே எம் மக்களினுடைய ஒரே கோரிக்கையாக உள்ள நிலையில் அதனையே இந்த ஆர்ப்பாட்டப் பேரணியினூடாக சர்வதேசத்திடம் 'தமிழீழ சுயநிர்ணய அமைப்பு' வலியுறுத்தியுள்ளது.

Organisation Reg No. 15780578


தமிழீழ சுயநிர்ணய அமைப்பு
MOVEMENT FOR SELF-DETERMINATION OF TAMIL EELAM
Ground Floor Right, 164 Pinner Road, Harrow, HA1 4JJ
www.msdte.org
admin@msdte.org


தமிழீழ சுயநிர்ணய அமைப்பு இந்தப் பேரணியை ஒருங்கிணைத்திருந்த நிலையில், பிரித்தானியாவில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகள், புலம்பெயர் தமிழ்த் தேசிய அமைப்புகள் மற்றும் பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்புகளின் பங்கேற்புடன் இந்தப் போராட்டமானது மக்கள் பேரெழுச்சியாக நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்ற எமது அமைப்பின் செயற்பாட்டாளர்கள் சிலர், எமது மக்கள் சிங்கள ராணுவத்தினரால் எவ்வாறு கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பதை காட்சியாக வெளிப்படுத்தும் வகையில் வேடமிட்டு மத்திய லண்டனின் பெருந்தெருக்களில் ஊர்வலமாகச் சென்றதுடன், பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகளினதும் பிரித்தானிய மக்களினதும் கவனத்தை எமது ஆர்ப்பாட்டப் பேரணிமீது உற்றுநோக்க வைத்தது. அதுமட்டுமல்லாமல் ஸ்ரீலங்கா அரச படைகளால் எம் தமிழ் மக்கள்மீது நிகழ்த்தப்பட்ட கொடூரங்களை அவர்கள் அந்தவேளையில் எம்மிடம் கேட்டறிந்துக்கொள்ளவும் இந்த நாடக ஆற்றுகை மிகச் சிறப்பாகக் கைகொடுத்திருந்தமை இதில் குறிப்பிட்டுக்கூறக்கூடிய விடயமாக உள்ளது.

அத்துடன், எம் தானைத்தலைவர் 'மேதகு' அவர்களின் வழிகாட்டலில் தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டு "தனித்தமிழீழம்" என்ற ஒரேயொரு உயர்ந்த இலட்சியக் கனவுடன் தமிழீழ சுயநிர்ணய அமைப்பு தனது செயற்படுகளை எப்போதும் முன்கொண்டு செல்லும் என்றும் இவ்வேளையில் உறுதிமொழிகின்றது.

| | | |
|---|---|---|
| Hon. Dr. S. Yogalingam | Hon. Dr. A. Rajalingam | Mr. G. Ragavan |
| Director | Secretary | Media Secretary |

admin@msdte.org www.msdte.org

"தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்"

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

Organisation Reg No. 15780578


**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளரர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**
**437.345.4203**




# அம்மாக்களும் கட்சிகளும்

06.09.2026

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நாள் கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணம், தந்தை செல்வா கலையரங்கில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அந்நாள் இம்முறை ஒரு சர்வதேச மாநாடாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவரக்ள் கலந்து கொண்டார்கள். வெளி மாவட்டங்களில் இருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், அரசியல் செயற்பாட்டாளர்களும், சிவில் சமூகத்தவர்களும் வந்திருந்தார்கள். அனைத்துலக சமூகத்தின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். ஐநாவின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அல்லது தன்னிச்சையான கடத்தல்கள் தொடர்பான சிறப்புப் பணிக்குழுவின் (UN WGEID) ஐந்து சுயாதீன நிபுணர்களில் ஒருவரான மெக்சிகோவைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணியான எம்எஸ். அனா லோரெனா டெல்காடிலோ பெரெஸ் (Ms. Ana Lorena Delgadillo Pérez) வந்திருந்தார். சர்வதேச மன்னிப்பு சபையின் தென்னாசிய பிராந்தியப் பொறுப்பாளரான ஸ்மிருதி சிங் வந்திருந்தார். அமெரிக்க ஓஸ்ரேலிய, சுவிட்சர்லாந்து தூதரகங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள், சிவில் சமூகத்தவர்கள், கருத்துருவாக்கிகள் வந்திருந்தார்கள்.

மாநாடு தொடங்க முன்பு, தமிழாராட்சிப் படுகொலை நினைவுச் சின்னத்திலிருந்து தீப்பந்தம் ஏந்திய மக்களோடு ஒரு வாகன ஊர்தி புறப்பட்டு யாழ் நகரப் பகுதியூடாக நகர்ந்து தந்தை செல்வா கலையரங்கை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் ஒரு பாரம் தூக்கி வாகனத்தில் ஒரு வெள்ளை வான் வைக்கப்பட்டிருந்தது. அந்த வெள்ளை வானின் உடல் முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அது ஓர் அருமையான கற்பனை. அது போலவே மாநாட்டு மண்டபத்தின் அரங்கில் இரண்டு ரத்தம் வடியும் பாதங்கள் வைக்கப்பட்டிருந்தன. பின்னணியில் தமது பிள்ளைகளுக்காகப் போராடி இதுவரை உயிர் நீத்த 200க்கும் குறையாத அம்மாக்கள் அப்பாக்களுடைய ஒளிப்படங்கள் அடங்கிய இரண்டு தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

மேடை ஒழுங்கமைப்பும், நிமிர்ந்திருக்கும் இரண்டு பாதங்களும், வெள்ளை வானும் கலைத்துவமாக உருவாக்கப்பட்டிருந்தன. தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் எதிர்ப்பை நீதிக்கான கோரிக்கையை கலாபூர்வமாக வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அவை காட்டின. அதேபோல மாநாட்டில் பேசிய பாதிக்கப்பட்ட அம்மாக்களின் அறிக்கைகளும் நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டவைகளாக காணப்பட்டன. அங்கேயும் வார்த்தைகள் கலாபூர்வமாக கையாளப்பட்டிருந்தன.

வெளிநாட்டு பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். உள்நாட்டு மக்கள் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். அரசியல் ஆய்வாளர் ஒருவரும் உரையாற்றினார். அம்மாக்கள் மத்தியில் இருந்தும் பிரதிநிதிகள் உரையாற்றினார்கள். தமிழ் மக்கள் சார்பில் உரையாற்றிய அனைவருமே அனைத்துலக விசாரணையை கேட்டார்கள். யாருமே உள்நாட்டு விசாரணை பொறிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

அனைத்துலக பிரதிநிதிகளில் குறிப்பாக ஐநாவின் ராஜதந்திரி ஆகிய அனா லொரீனா உரையாற்றும்போது, விடுதலைப் புலிகள் இயக்கத்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார். சர்வதேசத் தரநிலைகளுக்கு ஏற்ப அவை முறையாக விசாரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

வெளிநாட்டு பிரதிநிதிகளின் உரைகளுக்கு மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டது. இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. மாநாடு முடிந்த பின் மண்டபத்தின் ஒரு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய நினைவு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

அனைத்துலக நாள் ஒன்றை அனைத்துலக மாநாடாக ஒழுங்குபடுத்தியமை என்பது முக்கியமானது. அதுவும் பெருமளவுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் பங்கு பற்றிய ஒரு மாநாட்டில் அனைத்துலகப் பிரதிநிதிகளைப் பேச வைத்தமை முக்கியமானது. அந்த அனைத்துலகப் பிரதிநிதிகளின் முன்னிலையில் தமிழ் மக்கள் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையைத்தான் கேட்கின்றார்கள் என்பது உரத்துச் சொல்லப்பட்டதும் முக்கியமானது.

அந்த மாநாட்டுக்கு பெரும்பாலான கட்சிப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிறீதரனும் இரண்டு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தார்கள். தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் பதில் செயலாளரும் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். அம்மாக்கள் கூறுகிறார்கள், தாங்கள் கட்சியின் பதில் தலைவருக்கு அழைப்பைக் கொடுத்ததாக.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு ஓர் அனைத்துலக மாநாடு நடைபெற்ற அதே காலப்பகுதியில், கிளிநொச்சியில் மற்றொரு நிகழ்வு நடந்தது. அது சிறிய அளவில் நடந்தது. அதுவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் நிகழ்வுதான். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீததரன் அங்கேயும் காணப்பட்டார். அனைத்துலக மன்னிப்புச் சபையின் தென்னாசியப் பிராந்தியப் பொறுப்பாளரும் அங்கே காணப்பட்டார். கொழும்பில் உள்ள சுவிற்ஸலாந்து தூதரகத்தின் பிரதிநிதி ஒருவரும் அங்கே காணப்பட்டார். சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோவும் காணப்பட்டார். இவர்கள் அனைவரும் சில அம்மாக்களும் அந்த நிகழ்வு முடிந்தபின் அங்கிருந்து வந்து யாழ்ப்பாணத்து மாநாட்டிலும் கலந்து கொண்டார்கள்.

கிளிநொச்சி மாநாட்டில் ஒருவர் அந்த மாநாட்டைக் குழப்பும் விதமாக கெட்ட வார்த்தைகளை உரத்துப்பேசியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. அவ்வாறு பேசியவர் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் சங்கங்களை சேர்ந்த ஒரு பெண்ணுடைய கணவர் என்றும் கூறப்படுகிறது. அவர் அந்த நிகழ்வின் அமைதியைக் குழப்பம் விதத்திலும் அந்த நிகழ்வின் மாண்பைக் குழப்பும் விதத்திலும் நடந்து கொண்டதாகவும் குற்றச்சாட்டு உண்டு. அம்மாக்களின் சங்கங்களுக்கு இடையில் காணப்படும் பிளவையும் முரண்பாடுகளையும் அது பிரதிபலித்தது. அங்கெ நடந்தவற்றை அனைத்துலக மணிப்புச் சபையின் பிரதிநியும், சுவிற்ஸலாந்து தூதரகத்தைச் சேர்ந்த ஒருவரும் சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த இரண்டு கூட்டங்களுக்கும் ஐந்து நாட்கள் முன்னதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அம்மாக்களின் மீது போலீசார் பலப் பிரயோகத்தை மேற்கொண்டார்கள். அந்தக் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியது அரசாங்கத்தின் ஓஎம்பி என்று அழைக்கப்படுகின்ற காணாமல் போனோருக்கான அலுவலகம் ஆகம். அந்த அலுவலகத்தை அம்மாக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அலுவலகத்தின் நிகழ்வைப் புறக்கணித்து அவர்கள் மாவட்டச் செயலகத்தின் வாசலில் எதிர்ப்புக் காட்டினார்கள். அதே சமயம் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 362 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஓஎம்பியும் அரசாங்கத்தின் அமைச்சர்களும் நிவாரணம் வழங்கினார்கள். நிதி உதவிகளைச் செய்தார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் ஓஎம்பியினால் கையாளப்படுகிறார்கள் என்பதனை அது காட்டியது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்பான விடயங்களைக் கையாளும் அமைச்சு மற்றும் ஓஎம்பிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதை அது காட்டியது.

எனவே கடந்த வாரம் நடந்த மூன்று நிகழ்ச்சிகளையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரிவது என்னவென்றால், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக போராடும் அமைப்புகள் மத்தியில் முரண்பாடுகள் உண்டு; அந்த முரண்பாடுகளை வெளிச் சக்திகள் ஊக்குவிக்கின்றன்கையாளமுற்படுகின்றன. அதுமட்டுமில்லை, அம்மூன்று நிகழ்வுகளும் தமிழ்த் தேசிய அரசியலில் கட்சிகளுக்கு உள்ளேயும் கட்சிகளுக்கு வெளியேயும் காணப்படும் முரண்பாடுகளையும் பிரதிபலித்தன. இந்த விடயத்தில் சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையேயும் ஒருங்கிணைந்த முடிவுகள் இல்லைத்தான். ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம் என்ற அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது எல்லாருக்குமான பொதுக் கொள்கை என்று அடிப்படையில் சிவில் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் முரண்பாடுகளைக் கடந்து அங்கே குழுமியிருந்தார்கள். எனினும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் உட்போட்டியை அந்த நிகழ்வுகள் பிரதிபலித்தன.

கடந்த 17ஆண்டுகால தமிழ் அரசியலில் உணர்ச்சிகரமான முன்னணிப் போராளிகளாக மேற்படி அம்மாக்கள்தான் காணப்படுகிறார்கள். அம்மாக்களை தமிழ்த் தேசியக் கட்சிகளோ அல்லது தமிழ் சிவில் சமூகங்களோ ஒருங்கிணைக்கவில்லை. மாறாக புலம்பெயர்ந்த தரப்புகளின் உதவிகளோடு அம்மாக்கள் போராடி வருகிறார்கள். கொழும்பில் உள்ள சில தூதரகங்களும் அம்மாக்களுக்கு ஆதரவாகக் காணப்படுகின்றன. கடந்த 30 ஆம் திகதி நடந்த நிகழ்வுகள் அம்மாக்களின் போராட்டதுக்குள்ள அனைத்துலகப் பரிமாணத்தைப் பிரதிபலித்தன. அதே சமயம், அம்மாக்களுக்கிடையிலான முரண்பாடுகளையும், கட்சிகளுக் கிடையிலான முரண்பாடுகளையும், கட்சிகளுக்குள் காணப்படும் முரண்பாடுகளையும் பிதிபலித்தன.

நன்றி: நிலாந்தன்



# குர்திஷ் பெண் விடுதலைப் போராளிகள் சிரிய அரச இராணுவத்தில் இணைவு!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.09.2026

சிரியாவில் கடந்த ஒன்றரை தசாப்தமாக நீடித்த உள்நாட்டுப் போர், வெறும் ஆட்சிக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையிலான மோதலாக மட்டும் இருக்கவில்லை. அது குர்திஷ் மக்களின் அரசியல் எதிர்காலம், பிராந்திய தன்னாட்சி, அமெரிக்கா – துருக்கி போட்டி, ஐ.எஸ்.ஐ.எஸ். எதிர்ப்பு மற்றும் பெண்களின் ஆயுதப் பங்கேற்பு போன்ற பல்வேறு கேள்விகளையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைத்தது.

இந்த நீண்டகாலப் போராட்டத்தில் மிகவும் தனித்துவமான இடத்தைப் பெற்ற அமைப்புகளில் ஒன்று குர்திஷ் பெண்கள் பாதுகாப்புப் பிரிவு – YPJ (Women's Protection Units) ஆகும். தற்போது, சிரியாவின் புதிய அரச கட்டமைப்புக்குள் இந்தப் பெண் போராளிகளை இணைப்பது தொடர்பாக அந்நாட்டு உள்துறை அமைச்சகத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது ஒரு சாதாரண இராணுவ மறுசீரமைப்பு அல்ல. சிரியாவின் எதிர்கால அரசியல் மற்றும் பாதுகாப்பு அமைப்பில் குர்திஷ் மக்களின் இடத்தை தீர்மானிக்கக்கூடிய முக்கியமான திருப்பமாகும்.

## YPJ – குர்திஷ் பெண்கள் படை:

2011ஆம் ஆண்டு சிரியாவில் உள்நாட்டுப் போர் வெடித்தபோது, வடக்கு மற்றும் வடகிழக்கு சிரியாவில் குர்திஷ் மக்கள் தங்களுக்கான தன்னாட்சி நிர்வாக அமைப்பை உருவாக்கத் தொடங்கினர். அதனுடன் இணைந்து பாதுகாப்பு மற்றும் இராணுவ அமைப்புகளும் உருவாக்கப்பட்டன. அவற்றில் பெண்களுக்கென உருவாக்கப்பட்ட தனிப்படைதான் YPJ. இவர்கள் பின்னர் சிரிய ஜனநாயகப் படைகள் (SDF) அமைப்பின் முக்கியமான அங்கமாக மாறினர்.

குறிப்பாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் YPJ பெண் போராளிகள் சர்வதேச அளவில் கவனம் பெற்றனர். 2016 ஆம் ஆண்டு ரக்கா நகரை ஐ.எஸ்.ஐ.எஸ். கட்டுப்பாட்டிலிருந்து மீட்க நடத்தப்பட்ட போரிலும் அவர்கள் முக்கிய பங்காற்றினர். அவர்களின் பங்கு போர்க்களத்தோடு முடிவடையவில்லை. வடகிழக்கு சிரியாவில் உள்ள அல்-ஹோல் மற்றும் ரோஜ் தடுப்பு முகாம்களில் பாதுகாப்பு மற்றும் நிர்வாகப் பணிகளையும் அவர்கள் மேற்கொண்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்களும் அந்த முகாம்களில் இருந்ததால், இந்தப் பொறுப்பு மிகவும் சிக்கலானதாக இருந்தது.

YPJ தொடர்பான தற்போதைய பேச்சுவார்த்தையைப் புரிந்துகொள்ள SDF-ன் நிலையைப் புரிந்துகொள்வது அவசியம். மஷ்லூம் அப்டி (Mazloum Abdi) தலைமையிலான SDF, அமெரிக்கா தலைமையிலான கூட்டணியின் ஆதரவுடன் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக போரிட்டது. சிரியாவின் வட கிழக்கு பகுதியில் குர்திஷ் தலைமையிலான தன்னாட்சி நிர்வாகத்திற்கு SDF ஒரு வகையில் நிழல் இராணுவமாக செயல்பட்டது. ஆனால் தற்போது நிலைமை அடிப்படையாக மாறியுள்ளது.

குர்திஷ் தரப்புக்கும் டமாஸ்கஸ் அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் SDF-ஐ தனித்துவமான சுயாதீன இராணுவ அமைப்பாக கலைத்து, அதன் போராளிகளை சிரிய அரசின் இராணுவ அமைப்புக்குள் இணைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. ஆகஸ்ட் 25ஆம் தேதி SDF-ன் சுயாதீன இராணுவப் பணியின் முடிவை அறிவித்தார்.

இதனால் குர்திஷ் ஆயுதப்படைகளின் வரலாற்றில் ஒரு முக்கியமான அத்தியாயம் முடிவுக்கு வருகிறது. இங்குதான் YPJ விவகாரம் முக்கியத்துவம் பெறுகிறது.

சிரிய இராணுவத்தில் தற்போது பெண்கள் சேர்க்கப்படுவதில்லை. எனவே, ஆண் குர்திஷ் போராளிகளை சிரிய இராணுவத்தில் இணைப்பது ஒப்பீட்டளவில் எளிதானதாக இருந்தாலும், YPJ பெண்களை எந்த அமைப்புக்குள் கொண்டு செல்வது என்பது தனிப்பட்ட பிரச்சினையாக உருவாகியுள்ளது. இதற்கான தீர்வாக YPJ-ஐ சிரிய உள்துறை அமைச்சகத்தின் கீழ் ஒரு சிறப்பு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட படை என்ற வடிவில் இணைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.






ஆகஸ்ட் 26ஆம் தேதி YPJ தலைமைக்கும் சிரிய உள்துறை அமைச்சகப் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில் இந்த வாய்ப்பு உறுதி செய்யப்பட்டதாக YPJ தெரிவித்துள்ளது. மேலும், இணைப்பு நடைமுறையை இறுதிப்படுத்துவதற்காக பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றும் கூறப்பட்டுள்ளது. சுமார் 1,500 YPJ பெண் போராளிகள் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு படைப்பிரிவில் இணைக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

பல ஆண்டுகளாக தனித்துவமான குர்திஷ் இராணுவ அமைப்பில் செயல்பட்ட பெண்கள் இப்போது அதிகாரப்பூர்வ அரச பாதுகாப்பு அமைப்புக்குள் இடம் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. மறுபுறம், அவர்கள் தங்களது தனித்துவமான அமைப்பு, கட்டளைத் தலைமுறை மற்றும் அரசியல் அடையாளத்தின் ஒரு பகுதியை இழக்கும் அபாயமும் உள்ளது. YPJ என்பது வெறும் இராணுவ அமைப்பு மட்டுமல்ல. குர்திஷ் பெண்களின் அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்தின் அடையாளமாகவும் அது பார்க்

**குர்திஷ் பெண்களுக்கு இது மிகப்பெரிய வரலாற்றுத் திருப்பமாகும். ஐ.எஸ்.ஐ.எஸ்.க்கு எதிராக ஆயுதம் ஏந்திய குர்திஷ் பெண்கள், இனி அதே நாட்டின் அதிகாரப்பூர்வ பாதுகாப்பு அமைப்பின் ஒரு பகுதியாக மாறப்போகிறார்கள். இந்த மாற்றம் அவர்களின் போராட்டத்தின் முடிவா அல்லது தேசிய நீரோட்டத்தில் இணைகிறார்களா என்பது குறித்த விவாதம் உள்ளது. போரில் பெண்கள் ஆண்களுக்கு இணையாக ஆயுதம் ஏந்த முடியும் என்பதற்கான சர்வதேசச் சின்னமாகவும் ஷீது உருவெடுத்தது. எனவே, அவர்களை அரச அமைப்புக்குள் இணைப்பது என்பது ஒரு நிர்வாக நடவடிக்கையை விடப் பெரிய அரசியல் மாற்றமாகும்.**





கப்பட்டது. போரில் பெண்கள் ஆண்களுக்கு இணையாக ஆயுதம் ஏந்த முடியும் என்பதற்கான சர்வதேசச் சின்னமாகவும் YPJ உருவெடுத்தது. எனவே, அவர்களை அரச அமைப்புக்குள் இணைப்பது என்பது ஒரு நிர்வாக நடவடிக்கையை விடப் பெரிய அரசியல் மாற்றமாகும்.

## குர்திஷ் தன்னாட்சியின் எதிர்காலம்:

சிரியாவின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் குர்திஷ் தலைமையிலான நிர்வாகம் பல ஆண்டுகளாக நடைமுறையில் தனித்துவமான அதிகார அமைப்பை வைத்திருந்தது. அதன் பாதுகாப்பு அமைப்பின் முதுகெலும்பாக SDF இருந்தது. தற்போது SDF சிரிய அரச அமைப்புக்குள் இணைக்கப்படுவதால், டமாஸ்கஸ் தனது நாட்டின் முழுப் பிரதேசத்தின் மீதும் மீண்டும் மத்திய அரசின் கட்டுப்பாட்டை விரிவுபடுத்த முயற்சிக்கிறது. இதுவே புதிய சிரிய அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக உள்ளது.

குர்திய ஆயுதப்படைகள் அரசுடன் இணைந்தாலும், நிர்வாக அதிகாரம், மொழி உரிமைகள், உள்ளூர் ஆட்சி, அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் பாதுகாப்புத் தீர்மானங்களில் குர்திஷ் பங்கேற்பு போன்ற கேள்விகள் இன்னும் முக்கியமாகவே இருக்கும்.

## துருக்கியின் பார்வை:

துருக்கி, சிரிய குர்திஷ் ஆயுத அமைப்புகளை தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நீண்டகாலமாகக் கருதுகிறது. குறிப்பாக YPG/SDF அமைப்புகளுக்கும் துருக்கி தடை செய்துள்ள PKK-க்கும் இடையிலான தொடர்புகளை அங்காரா கடுமையாக எதிர்க்கிறது. எனவே, குர்திஷ் ஆயுதப்படைகள் சிரிய அரசின் அதிகாரப்பூர்வ கட்டமைப்புக்குள் இணைக்கப்படுவது துரக்கிக்கு ஒரு வகையில் சாதகமானதாக இருக்கலாம். தனித்துவமான குர்திஷ் ஆயுதப்படை அமைப்பு இல்லாத நிலை துருக்கியின் பாதுகாப்புக் கவலைகளை குறைக்கக்கூடும்.

ஆனால், குர்திஷ் போராளிகள் அரசின் கீழ் புதிய பெயரில், புதிய கட்டமைப்பில் ஆயுதம் தாங்கும் நிலை தொடர்ந்தால், அங்காரா அதை எவ்வாறு மதிப்பிடும் என்பது எதிர்காலத்தின் முக்கிய கேள்வியாகும். SDF-க்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவு, ஐ.எஸ். ஐ.எஸ். எதிர்ப்பு போரின் போது மிகவும் முக்கியமானதாக இருந்தது.

ஆனால் சிரியாவில் புதிய அரசியல் சூழல் உருவான நிலையில், வாஷிங்டன் டமாஸ்கஸின் புதிய அதிகாரிகளுடன் நெருக்கமாக செயல்படத் தொடங்கியுள்ளது. இதனால் குர்திஷ் தரப்பின் மீது அமெரிக்காவின் முந்தைய அளவிலான பாதுகாப்பு உத்தரவாதம் தொடருமா என்ற கேள்வி எழுகிறது.

இதன் விளைவாக குர்திஷ் தலைமையகம், தனித்துவமான ஆயுத சக்தியைத் தொடர்ந்து வைத்திருப்பதைவிட, சிரிய அரசின் கட்டமைப்புக்குள் ஒரு பாதுகாப்பான இடத்தைப் பெறுவது நடைமுறைக்கு ஏற்றதாக கருதியிருக்கலாம்.

## குர்திஷ் பெண்களின் எதிர்காலம்:

குர்திஷ் பெண்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். எதிர்ப்பு போரில் முன்னணியில் இருந்தனர். போரின் உச்சகட்டத்தில் குர்திஷ் படைகளில் பெண்கள் சுமார் மூன்றில் ஒரு பங்காக இருந்ததாக குர்திஷ் அதிகாரிகள் கூறியுள்ளனர். சிரிய குர்திஷ் போராளிகளின் மொத்த எண்ணிக்கை 20,000 முதல் 30,000 வரை இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எனவே, 1,500 பெண்களை மட்டும் ஒரு புதிய உள்துறை பாதுகாப்புப் படையில் இணைப்பது வெறும் பணியாளர் மாற்றமாக பார்க்க முடியாது. அது சிரியாவின் புதிய அரச பாதுகாப்பு அமைப்பில் பெண்களின் இடத்தை உருவாக்கும் ஒரு பரிசோதனையாகவும் அமையும்.

சிரிய குர்திஷ் YPJ பெண்கள் போராளிகளை உள்துறை அமைச்சகத்துடன் இணைப்பது, ஒரு நீண்ட போரின் முடிவில் உருவாகும் புதிய அரசியல் சமரசத்தின் முக்கியமான பகுதியாகும். ஒரு காலத்தில் சிரிய அரசின் கட்டுப்பாட்டுக்கு வெளியே தனித்துவமான பாதுகாப்பு அமைப்பை உருவாக்கிய குர்திஷ் போராளிகள், இன்று அதே சிரிய அரசின் அதிகாரப்பூர்வ நிறுவனங்களுக்குள் இணைக்கப்படுகின்றனர். இது குர்திஷ் ஆயுதப் போராட்டத்தின் ஒரு அத்தியாயத்தின் முடிவையும், புதிய அரசியல் கட்டமைப்புக்குள் தங்களது இடத்தைத் தேடும் புதிய அத்தியாயத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது.

ஆனால் இந்த இணைப்பு உண்மையான அரசியல் சமரசமாக மாறுமா அல்லது குர்திஷ் தன்னாட்சி அமைப்பை மத்திய அரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையாக மட்டுமே அமையுமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

குறிப்பாக YPJ பெண்களுக்கு இது மிகப்பெரிய வரலாற்றுத் திருப்பமாகும். ஐ.எஸ்.ஐ.எஸ்.க்கு எதிராக ஆயுதம் ஏந்திய பெண்கள், இனி அதே நாட்டின் அதிகாரப்பூர்வ பாதுகாப்பு அமைப்பின் ஒரு பகுதியாக மாறப்போகிறார்கள். அந்த மாற்றம் அவர்களின் போராட்டத்தின் முடிவா, அல்லது குர்திஷ் பெண்களின் அரசியல் மற்றும் பாதுகாப்புப் பங்கேற்புக்கான புதிய தொடக்கமா? என்பதற்கான பதில், சிரியாவின் அடுத்த அரசியல் அத்தியாயத்தில் தான் வெளிப்படும்.




www.sangathamil.com

# தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெயர் 1976 மே 05 இல் தான் சூட்டப்பட்டது

பா. அரியநேத்திரன்

02.09.2026

'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற இயக்கம் 1972இன் நடுப் பகுதிகளில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களால் அவரின் 17வது வயதில் தொடக்கப்பட்டது. இவ் இயக்கம் மிகவும் கடுமையான சட்டதிட்டங்களைக் கொண்ட தாக ஆரம்பத்தில் உருவாக் கப்பட்டது.

## புதிய தமிழ்ப் புலிகளும் அவர்களின் செயற்பாடுகளும்

'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமாக தலைவர் வே. பிரபாகரன் அவர்களே இருந்தார். இவ் இரகசிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே உறுதியும், துணிவும் தியாக சிந்தையும் கொண்ட புரட்சிகர இளைஞர்களை இவ்வமைப்பில், தலைவர் பிரபாகரன் அவர்கள், தானே தெரிவு செய்து சேர்த்துக் கொண்டதோடு, அவர்களுக்குரிய போர்ப் பயிற்சியையும் முன்னின்று தானே கொடுத்து வந்தார்.

(1) புதிய தமிழ்ப் புலிகளின் முதலாவது இராணுவ நடவடிக் கையாக, 1975 ஆடி 27 அன்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கருகில் வைத்து அப்போதைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளரும், யாழ்ப்பாண மேயருமான அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்த புதிய தமிழ்ப்புலிகள் மேயரின் கார்ச் சாரதியை மடக்கி, அவரது காரிலேயே ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர்.

இவ்வெற்றிகரமான முதலாவது இராணுவ நடவடிக்கையைத் தானே வகுத்து அதற்குத் தலைமை தாங்கிச்சென்று செய்து முடித்த பெருமை தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும். தமிழீழ மக்களின் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்க முயலும் தமிழ்த் துரோகிகளுக்கு இச்சம்பவம் ஒரு எச்சரிக்கையாக அமைந்ததுடன் சுதந்திர தாகம் கொண்ட தமிழ் இளைஞரைப் பொறுத்தவரை இந்நடவடிக்கை தமிழீழ விடுதலையை நோக் கிய நீண்ட, கடினமான பயணத்தில் தலைவர் பிரபாகரனின் ஆளுமையிலும் தலைமைத்துவத்திலும் நம்பிக்கையை ஏற் படுத்தியதாகவும் அமைந்தது.

(2) 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கத்தின் தலைமறைவு வாழ்க் கைக்கும் அதனைக் கட்டியெழுப்புவதற்கும் நிதி பெருமளவில் தேவைப்பட்டது. இதற்கு அரசாங்கப் பணத்தைப் பறித்தெடுத் தாக வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது.

சிறீலங்கா அரசு எல்லா மக்களினதும் வரிப்பணத்திலிருந்தே தமது நிதியினைப் பெற்றுக் கொள்கிறதாயினும் தேசிய அபி விருத்தித் திட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டே வந்தன. எனவே அரசாங்கப் பணத்தை பறித்தெடுத்துத் தமிழ் மக்களின் விடுதலை இயக்கத்திற்கான நிதி ஆதாரத்தைப் பெற்றுக்கொள்வது நியாயமானது என உணர்ந்து கொண்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் 1976 மார்ச் 05இல் சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான புத்தூர் மக்கள் வங்கிக்குள் பட்டப் பகலில் தன் தோழர்களுடன் புகுந்து துப் பாக்கி முயைில் ரொக்கமாக 05 இலட்சம் ரூபாவையும் நகை யாக 02 இலட்சம் பெறுமதியான நகைகளையும் எடுத்துக் கொண்டு சென்றார்.

அல்பிரட் துரையப்பா கொல்லப்பட்டது, அதையடுத்து புத்தூர் வங்கிச் சம்பவம் ஆகியவற்றைத் தொடர்ந்து வடக்கில் ஒரு விசேட உளவுப் படையின் பிரிவு சிறீலங்கா அரசால் அமைக் கப்பட்டது. 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கத்தை அழித்தொழிப் பதையே முக்கிய நோக்காகக் கொண்டு கொழும்பிலிருந்த பொலிஸ் தலைமையகம் இப்பிரிவை உருவாக்கியது. இப்பிரிவு தகவல் கொடுப்போர், துரோகிகள் ஆகியோரைக் கொண்டதாக தமிழீழப் பகுதிகளில் செயற்படத் தொடங்கியது.

'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற இயக்கத்தை 1976 மே 05இல் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற புதிய பெயரை சூட்டிக் கொண்டது.

இதன் அரசியல் தலைவராகவும், இராணுவத் தளபதியாகவும் தலைவர் பிரபாகரன் அவர்களே இருந்தார். 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கத்தில் இருந்த மிகக்கடுமையான சில கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டு, முழுத் தமிழீழ மக்களும் தமிழீழ விடு தலைப் போராட்டத்தில் பங்கேற்கக் கூடிய முறையில், சட்ட திட் டங்கள் மாற்றப்பட்டு தலைவர் பிரபாகரனால் தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்தில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன.

அத்துடன் தலைவர் பிரபாகரனால், இவ்வமைப்பு நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டுத் தேசிய விடுதலைக் கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சியத்துடன், தமிழீழ மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாக





விரிவடைந்தது. நிராயுதபாணிகளான, வலிமை குறைந்த தமிழீழ மக்கள் சிங்கள இனவாத அரசின் பாரிய இராணுவ வலிமைக்கு எதிராகப் போராடுவதற்கு நீண்ட கெரில்லா யுத்த பாதையே மிகவும் பொருத்தமானது என்பதைத் தனது தீர்க்க தரிசனமான கண்ணோட்டத்தில் உணர்ந்து கொண்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் பரந்துபட்ட மக்கள் பங்கு கொள் ளும் வெகுசனப் போராட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக கெரில்லாப் போர் முறைப்படுத்தினார்.

இதுபற்றித் தலைவர் பிரபாகரன் குறிப்பிடுகையில் "கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம்.

கெரில்லாப் போர்முறை மக்கள் போராட்டத்திற்கு முரண்பட்ட தல்ல. மக்கள் போராட்டத்தின் உன்னத வடிவமாகவே அத னைக் கொள்ளவேண்டும். மக்கள் மத்தியில் கருக்கொண்டு, மக்களது அபிலாசைகளின் வெளிப்பாடாக உருவகம் கொள் ளும் பொழுதே கெரில்லாப் போர் வெகுசனப் போராட்ட வடிவத் தைப் பெறுகிறது. கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைகொள்ளச் செய்து அப்போரில் மக்களை நேரடியாகப் பங்களிக்கச் செய்து இப்போர் முறையை பரந்துபட்ட போராக விரிவாக்குவதே எனது நோக்கமாகும்" என்று கூறினார்.

தலைவர் பிரபாகரன், தமிழீழ விடுதலைப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை முப்பெரும் பிரிவாக வகுத்ததார்.

(1) சிறீலங்கா பொலிசின் உளவுப் படையை, துரோகிகளாக அழித்தல்.

(2) தமிழீழத்தில் உள்ள சிறீலங்கா பொலிஸ் நிர்வாக அமைப்பை நிலைகுலையச் செய்தல்.

(3) இராணுவ அணிகள் முகாம்கள் மீது மறைந்திருந்தும் நேரிடையாகவும் தாக்கி அழித்து, அவ்விடங்களில் தமிழீழ மக்களுக்கு ஏற்ற சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்கி அதனூடு தமிழீழத்தில் சுயாட்சியை நிறுவுதல்.

தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெயர் சூட்டியபின்னர் ..

1976 யூலை 02இல் உரும்பிராயைச் சேர்ந்த நடராசா என்ற பெற் றோல் நிலைய முகாமையாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1977 பெப்ரவரி 14இல் காவற்துறை கான்ஸ்டபிள் கருணாநிதி மாவிட்டபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1977 மே 18இல் சண்முகநாதன் என்ற பெயரைக் கொண்ட இரண்டு காவற்துறையினர் இணுவிலில் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

1977 ஆகஷ்ட்டில் ஐ.தே.கட்சி அரசால் 'தமிழின அழிப்பு' ஒன்று இலங்கைத் தீவு முழுவதிலும் நடத்தி முடிக்கப்பட்டது.

1978 ஜனவரி 27இல் பொத்துவில் தொகுதியின் தமிழர் கூட் டணி வேட்பாளர் கனகரத்தினம் கொழும்பில் வைத்துச் சுடப் பட்டார்.

1978 ஏப்ரல் 07ஆம் நாள், கொழுப்பு 4ஆம் மாடி சித்திரவதை யில் பெயர் பெற்ற இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உட்பட 4 சிறீலங்கா உளவுப் படையைச் சேர்ந்த காவற்துறையினர் முருங்கன் மடு வீதிக்கு உட்புறமான காட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1978 ஏப்ரல் 25இல் முதன்முறையாக புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் வரை எல்லா மாகச் சேர்ந்து 11 இராணுவ நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடு தலைப் புலிகள் உரிமை கோரி துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டனர்.

அந்த துண்டுப்பிரசுர அறிக்கை A4, வெள்ளை பேப்பர் இரண் டாக மடித்து நான்கு பக்கங்களில் சிவப்பு, கறுப்பு மைகளால் தமிழீழப்படம் முதல் பக்கம், 2ஆம், 3ஆம் பக்கம் 11, தாக் குதல்களின் விபரம், 4ஆம் பக்கம் கவிஞர் காசி ஆனந்தனின் இந்த கவிதை பொறிக்கப்பட்டிருந்தது..

## 4 பக்கக் கவிதையில்...

பத்துத்தடவை பாடை வராது..
பதுங்கி கிடக்கும் புலியே தமிழா..
செத்து மடிதல் ஒரே ஒருமுறைதான்..
சிரித்துக்கொண்டே தெருக்களம் வாடா..

முத்தமிழோடு மோதினர் பகைவர்..
முடங்கிக்கிடப்பெதென்ன நீதி..
குத்துக்கணைகள் குண்டு வரட்டும்..
குருதி பெய்யடா கொட்டும் முரசே..

அடச்சீ என்னடா அடங்கி நின்றனை..
சோற்றுப்பானையும் நாமும் ஒன்றோ..
சும்மா வயிறு நிரப்பவா பிறந்தோம்..
மாற்றான் மருள தமிழன் மானப்போர் செய்யமாட்டானோ...

எட்டுத்திசையும் நடுங்க எழடா..
நடந்துபார் செங்குருதி நடுவே..

இதுதான் அந்த கவிதை..

இந்த துண்டுப்பிரசுரம் அப்போது 1978, ஏப்ரல் மாதம் அப்போது அமைச்சராக இருந்த சிறில் மத்தியூ அவருடைய றவ்வர் முத் திரை தயாரித்து அரசபணி (On H Ms) மூலம் இலங்கையில் முக் கிய இடங்களுக்கு அனுப்பபட்டது இதனால் அப்போது இலங்கை யில் பரபரப்பு செய்தியாக இருந்தது.

1972இல் தலைவர் 17, வயதில் 'புதிய தமிழ் புலிகள்' என்ற அமைப்பில் புரட்சிகர அமைப்பு ஆரம்பிக்கப்பட்டாலும் . இரா ணுவ நடவடிக்கை 1975 யூலை 27இல் யாழ் மேஜர் அல்பிரட் துரையாப்பாவை சுட்டுக்கொன்றது, 1976 மார்ச் 05இல் புத்தூர் மக்கள் வங்கி கொள்ளை இந்த இரண்டு சம்பவங்கள் மட்டுமே புதிய தமிழ் புலிகள் பெயருடன் செய்த இராணுவ நடவடிக்கை அதன் பின்னர் 1976 மே 05இல் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என உத்தியோக பூர்வமாக பெயரை தலைவர் மாற்றிய பின் னரே ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

எனவே 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்ற பெயர் சூட்டப்பட்ட தினத்தை (05.05.1976) விடுதலைப்புலிகளின் ஆரம்ப நாள் என கொள்ளப்படுவதில் எந்த தவறும் இல்லை .

இது போலவே 1972 மே 04இல், தமிழர் கூட்டணி ஆரம்பிக்கப் பட்டாலும் 1976 மே 14இல் தமிழர் விடுதலை கூட்டணி என பெயர் மாற்றப்பட்டு வட்டுக்கோட்டை தீர்மானம் எடுத்த நாளையே 'தமிழர் விடுதலை கூட்டணி' கட்சி ஆரம்ப நாள் என கூறப்படுவதை காணலாம்.

(தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்க ளுடைய 50ஆவது பிறந்தநாள் 2004 நவம்பர் 26இல் வெளியிட்ட பொன்விழா மலரிலும் விடுதலைப்புலிகள் 1976, மே 05இல் தான் ஆரம்பிக்கப்பட்டது என தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளது)

இன்னும் ஒரு உண்மையை சிலர் மறைப்பதையும் சுட்டிக் காட்டவேண்டும் தலைவரின் ஆரம்ப பாடசாலை மட்டக்களப்பு அரசடி வித்தியாலயம் அவர் 01ஆம் வகுப்பு தொடங்கம் 03ஆம் வகுப்பு வரை மட்டக்களப்பில் கல்வி கற்ற பின்னரே 04ஆம் வகுப்பு தொடக்கம் 10, வகுப்புவரை வல்வெட்டித்துறை ஊரிக் காடு எனும் இடத்திலுள்ள சிதம்பரா கல்லூரியில் கல்வி கற்றார்.

ஆனால் வரலாறு எழுதுபவர்கள் மட்டக்களப்பு அரசடி அ.த. கலவன் பாடசாலை (தற்போது மஹாஜன கல்லூரி) என்பதை திட்டமிட்டு மறைப்பதையும் காணலாம்.



# பொஸ்னியா இனப் படுகொலையில் ராட்கோ மிலாடிச்: இர்ததக் கறைமிக்க அத்தியாயம் முடிந்ததா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

101.09.2026

பொஸ்னியப் போரின் போது நடைபெற்ற இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு மற்றும் மனித குலத்திற்கு எதிரான கொடூரக் குற்றங்களுடன் தொடர்புடைய முன்னாள் பொஸ்னிய செர்பிய இராணுவத் தளபதி ராட்கோ மிலாடிச் (Ratko Mladić) நெதர் லாந்தின் த ஹேக் நகரில், ஐக்கிய நாடுகளின் தடுப்பு காவலில் மருத்துவமனையில் இருந்தபோது உயிரிழந்துள்ளார். ஐ.நா. வின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களுக்கான மீதமுள்ள பொறிமுறை (IRMCT) அவரது மரணத்தை உறுதிப்படுத்திய துடன், மரணத்தின் சூழ்நிலைகள் குறித்து முழுமையான விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது.

அவருக்கு 2017ஆம் ஆண்டு இனப்படுகொலை, மனித குலத் திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு மேல் முறையீட்டு நீதிமன்றமும் அந்தத் தீர்ப்பையும் ஆயுள் தண்ட னையையும் உறுதி செய்தது.

## பொஸ்னியப் போர் – பின்னணி

1990களின் தொடக்கத்தில் யுகோஸ்லாவியா சிதைவடைந்த போது, பல்வேறு தேசிய இனங்களுக்கும் அரசியல் குழுக்களுக் கும் இடையே கடுமையான மோதல்கள் உருவாகின. பொஸ் னியா மற்றும் ஹெர்சகோவினா சுதந்திரத்தை நோக்கிச் சென்ற போது, போஸ்னிய முஸ்லிம்கள் (Bosniaks), குரொஷியர்கள் மற்றும் செர்பியர்களுக்கு இடையே போர் வெடித்தது.

1992 முதல் 1995 வரை நடைபெற்ற இந்தப் போரில் ஒரு இலட் சத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். பல இலட்சக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண் டிய நிலை ஏற்பட்டது. குடிமக்கள் மீது நடத்தப்பட்ட கொலைகள், பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள், கட்டாய இடம்பெயர் வுகள் மற்றும் நகரங்கள் மீதான தாக்குதல்கள் இந்தப் போரின் முக்கியமான கொடூரங்களாக அமைந்தன. இந்தப் போரில் பொஸ்னிய செர்பியப் படைகளின் முக்கிய இராணுவத் தலைவ ராக இருந்தவர் ராட்கோ மிலாடிச்.

## பொஸ்னியாவின் கசாப்புக்காரர்

மிலாடிச் 1992 மே மாதம் பொஸ்னிய செர்பிய இராணுவத்தின் (VRS) தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். 1996 வரை அவர் அந்தப் பதவியில் தொடர்ந்தார். சர்வதேச விசாரணை-களின்படி, பொஸ்னிய முஸ்லிம்களையும் பொஸ்னிய குரொ ஷியர்களையும் பொஸ்னிய செர்பியர்கள் கட்டுப்பாட்டில் கொண் டுவர விரும்பிய பகுதிகளில் இருந்து நிரந்தரமாக அகற்றும் திட்டங்களில் அவர் முக்கிய பங்காற்றினார்.

சரயேவோ முற்றுகை அவரது இராணுவ வாழ்க்கையின் மிகக் கொடூரமான அத்தியாயங்களில் ஒன்றாகும். நகரத்தின் மீது பல ஆண்டுகள் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் ஸ்னைப்பர் தாக்குதல்கள் பொதுமக்களை இலக்காகக் கொண்டிருந்ததாக நீதிமன்றம் கண்டறிந்தது. ஐ.நா. நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, பொதுமக்களிடையே பயத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடத் தப்பட்ட தாக்குதல்களும் மிலாடிச்சின் குற்றச்சாட்டுகளில் இடம் பெற்றன.

இதன் விளைவாக செப்ரெனிட்சா உலகை அதிர்ச்சிக்குள்ளாக் கிய இனப்படுகொலையாக மாறியது.

ஆனால் மிலாடிச்சின் பெயருடன் நிரந்தரமாக இணைந்திருக் கும் சம்பவம் 1995ஆம் ஆண்டின் செப்ரெனிட்சா இனப் படுகொலை.

அந்த ஆண்டு ஜூலை மாதம், ஐ.நா. பாதுகாப்புப் பகுதியாக அறி விக்கப்பட்டிருந்த செப்ரெனிட்சா, பொஸ்னிய செர்பியப் படை களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதன் பின்னர் ஆயிரக்கணக் கான பொஸ்னிய முஸ்லிம் ஆண்களும் சிறுவர்களும் பிரிக் கப்பட்டு கொல்லப்பட்டனர்.

8,000-க்கும் மேற்பட்ட பொஸ்னிய முஸ்லிம் ஆண்கள் மற்றும் சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேச நீதிமன்றப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. இது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் நடைபெற்ற மிகக் கொடூரமான இனப் படுகொலைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்தப் படுகொலை தனிப்பட்ட இராணுவ நடவடிக்கை அல்ல என்றும், செப்ரெனிட்சாவில் உள்ள பொஸ்னிய முஸ்லிம் மக்களை அழிக்கும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்ட கூட்டுச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்றும் நீதிமன்றம் தீர்மானித்தது.

## 2017 வரலாற்று தீர்ப்பு

மிலாடிச்சுக்கு எதிரான வழக்கு நீண்ட காலம் நடைபெற்றது. அவர் 1995ஆம் ஆண்டிலேயே குற்றஞ் சாட்டப்பட்டிருந்தாலும், சுமார் 16 ஆண்டுகள் தலைமறைவாக இருந்தார். இறுதியாக 2011 மே 26 அன்று செர்பியாவில் கைது செய்யப்பட்டு, சில நாட் களுக்குப் பின்னர் ஹேக்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். 2012 ஆம் ஆண்டு அவரது விசாரணை தொடங்கியது. நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டன் நூற் றுக்கணக்கான சாட்சிகள் ஆஜர்படுத்தப்பட்டதுடன் ஆயிரக் கணக்கான ஆதார ஆவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டன.




**பொஸ்னியப் போரின் பாடமானது இனவாத அரசியல், வெறுப்பு, தேசியவாத தீவிரம் மற்றும் தண்டனையின்மை எவ்வாறு ஒரு சமூகத்தை இனப்படுகொலைக்குத்தள்ள முடியும் என்பதற்கான எச்சரிக்கை, இன்றும் உலக அரசியலுக்கு மிகவும் பொருத்த மானதாகவே உள்ளது.**

**மிலாடிச் தனது இறுதி ஆண்டுகளிலும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்கவில்லை. செர்பிய தேசியவாதிகளின் ஒரு பகுதி அவரை இன்னும் வீரர் எனக் கருதுவது, போஸ்னியப் போரின் நினைவுகள் இன்றும் பால்கன் சமூகங்களில் எவ்வளவு ஆழமான பிளவை ஏற்படுத்தியுள்ளன என்பதை காட்டுகிறது.**



2017 நவம்பர் 22 அன்று சர்வதேச முன்னாள் யுகொஸ் லாவியா குற்றவியல் தீர்ப்பாயம் அவரை இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்ச் சட்ட மீறல்கள் ஆகியவற்றில் குற்றவாளியாகத் தீர்ப்பளித்து ஆயுள் தண்டனை விதித்தது. அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் கொலை, அழித்தொழித்தல், துன்புறுத்தல், நாடுகடத்தல், கட் டாய இடம்பெயர்வு, பொதுமக்கள் மீது பயங்கரவாத நடவடிக் கைகள், சட்டவிரோத தாக்குதல்கள் மற்றும் ஐ.நா. பணியாளர்-களை பணயக் கைதிகளாகப் பிடித்தல் ஆகியவையும் அடங்கின.



## 2021 மேல்முறையீடு

மிலாடிச் தனது தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்தார். ஆனால் 2021 ஜூன் 8 அன்று மேல்முறையீட்டு அறை அவரது முக்கியமான முறையீடுகளை நிராகரித்து, இனப் படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கான தீர்ப்பையும் ஆயுள் தண்டனையை யும் உறுதி செய்தது. இதன் மூலம் சர்வதேச நீதிமன்றத்தின் பார்வையில் அவரது குற்றவியல் பொறுப்பு இறுதியாக உறுதி செய்யப்பட்டது.

மிலாடிச் தனது இறுதி ஆண்டுகளிலும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்கவில்லை. செர்பிய தேசியவாதிகளின் ஒரு பகுதி அவரை இன்னும் "வீரர்" எனக் கருதுவது, பொஸ் னியப் போரின் நினைவுகள் இன்றும் பால்கன் சமூகங்களில் எவ்வளவு ஆழமான பிளவை ஏற்படுத்தியுள்ளன என்பதை காட்டுகிறது. அதே நேரத்தில், செப்ரெனிட்சா உயிர் பிழைத் தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர் ஒரு போர்க்குற்றவாளியாகவே நினைவுகூரப்படுகிறார்.



மிலாடிச் இறந்ததால் செப்ரெனிட்சாவில் உயிரிழந்த ஆயிரக் கணக்கானோரின் வாழ்க்கை திரும்பி வராது. ஆனால் அவரது மரணம் ஒரு முக்கியமான சர்வதேச நீதிக் கருத்தை மீண்டும் நினைவுபடுத்துகிறது: போர் முடிந்துவிட்டாலும், போர்க்குற் றங்களுக்கான பொறுப்பு முடிவதில்லை. மிலாடிச் 16 ஆண்டுகள் தலைமறைவாக இருந்தாலும் இறுதியில் நீதிமன் றத்தின் முன் நிறுத்தப்பட்டார். அவருக்கு எதிரான தீர்ப்பு, இராணுவ அதிகாரம் அல்லது அரசியல் செல்வாக்கு எவ்வளவு பெரியதாக இருந்தாலும், பொதுமக்களை திட்டமிட்டு கொல்வது, இனப்படுகொலை செய்வது, கட்டாயமாக மக்களை வெளியேற் றுவது போன்ற குற்றங்களுக்கு சர்வதேச சட்டத்தின் கீழ் பொறுப்பு இருக்கிறது என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியது.

ராட்கோ மிலாடிச்சின் வாழ்க்கை முடிவடைந்திருக்கலாம்; ஆனால் செப்ரெனிட்சாவின் நினைவு முடிவடையாது. அவரது மரணம் ஒரு தனிநபரின் இறுதி அத்தியாயமாக இருக்கலாம். ஆனால் பொஸ்னியப் போரின் பாடமானது இனவாத அரசியல், வெறுப்பு, தேசியவாத தீவிரம் மற்றும் தண்டனையின்மை எவ் வாறு ஒரு சமூகத்தை இனப்படுகொலைக்குத் தள்ள முடியும் என்பதற்கான எச்சரிக்கை, இன்றும் உலக அரசியலுக்கு மிகவும் பொருத்தமானதாகவே இருக்கிறது.





விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளரர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# புலம்பெயர் நாடுகளில் தமிழ் நூல்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டியது அவசியம்!

## பாரிஸ் நூல் வெளியீட்டில் கே. பி. லோகதாஸ் உரை

07.09.2026

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதற்கு தமிழ் நூல்களை பிற மொழிகளில் மொழிபெயர்ப்பது அவசியம் என பாரிசில் இலக்கிய ஆர்வலரும் எழுத்தாளருமான கே. பி. லோகதாஸ் தெரிவித்தார்.














பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்களின் வெளியீட்டு விழா செப்டெம்பர் 5ஆம் தேதி சனிக்கிழமை பெருந்திரளான மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் வாசகர்கள் கலந்து கொண்டனர்.

நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய கே. பி. லோகதாஸ் தனது உரையில், தமிழில் வெளிவரும் சிறந்த இலக்கிய, வரலாற்று, அரசியல் மற்றும் ஆய்வு நூல்கள் தமிழர்களிடையே மட்டுமன்றி, புலம்பெயர் சமூகங்கள் வாழும் நாடுகளிலும் பரவலாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். தமிழ் நூல்களை ஆங்கிலம், பிரெஞ்சு உள்ளிட்ட உலக மொழிகளில் மொழிபெயர்ப்பதன் மூலம் தமிழ் மக்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியச் செழுமை மற்றும் சமூக அனுபவங்களை உலகளாவிய வாசகர்களிடம் கொண்டு செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, புலம்பெயர் நாடுகளில் வளர்ந்து வரும் தமிழ் இளைய தலைமுறையினர் தமது மொழி மற்றும் வரலாற்றுடன் தொடர்பைத் தொடர்ந்து பேணுவதற்கு மொழிபெயர்ப்பு முயற்சிகள் முக்கிய பங்காற்றும் எனவும் அவர் தெரிவித்தார். இதற்காக எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், கல்வியாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நூல் வெளியீட்டு விழாவின் ஒருங்கிணைப்பாளராக திருமதி நிசாந்தி அகில் செயற்பட்டார். திரு. அருள்மாறன் அறிமுக உரையை நிகழ்த்தினார். ஈழப் போரில் எழுத்தாயுதம் நூலாய்வை கவிஞர் ஈழபாரதியும், உக்ரேனிய போரும் ஊடகத் திரிபும் நூலாய்வை திரு. சிவா சின்னப்பொடியின் உரையை திரு. லிங்கமும், போர்க் களத்தின் பேனாக்கள் நூல் குறித்து திரு. விவேகானந்தனூர் சதீஸும், அரபு வசந்தம் நூல் குறித்து திரு. வாசுதேவனும் ஆய்வுரைகளை வழங்கினர்.

மேலும், இந்நிகழ்வில் திரு. முகுந்தன், திரு. எஸ். கே. ராஜன், திரு. துரைசிங்கம் மற்றும் ஆசிரியர் பிரியா லவன் ஆகியோர் சிறப்பு உரைகளை நிகழ்த்தினர். அத்துடன் நன்றியுரையை செல்வி. கல்கி தசரதன், செல்வி.கயல் நிரோஜன் வழங்கினர்.

இந்நிகழ்வின் நிறைவாக நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா ஏற்புரையாற்றினார். நான்கு நூல்களின் உருவாக்கப் பின்னணி, அவற்றை எழுதுவதற்கான காரணங்கள், ஆய்வுப் பரப்பு மற்றும் அவை முன்வைக்கும் சிந்தனைகள் குறித்து அவர் தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

தமிழ் இலக்கியப் பரப்பில் சமகால அரசியல், வரலாறு மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான பதிவுகள் அதிகரித்து வரும் நிலையில், இந்நான்கு நூல்களும் வெவ்வேறு களங்களை இணைக்கும் முயற்சியாக அமைந்துள்ளன. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் இலக்கியச் செயற்பாடுகள் விரிவடைந்து வரும் நிலையில், பாரிஸில் நடைபெற்ற இந்நான்கு நூல்களின் வெளியீட்டு விழா, தமிழ் இலக்கியத்தையும் சமகால அரசியல்-வரலாற்றுச் சிந்தனைகளையும் இணைக்கும் முக்கியமான இலக்கியச் சந்திப்பாக அமைந்தது.



# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளில் பிரித்தானியாவில் நீதிக்காக திரண்ட மக்கள்

01.09.2026

தாயகத்தில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை நினைவு கூர்ந்தும், அவர்களுக்கான உண்மை, நீதி மற்றும் பொறுப்புக் கூறலை வலியுறுத்தியும், பிரித்தானியாவில் நேற்று ஆகஸ்ட் 30ஆம் திகதி நினைவேந்தல் நடைபயணமும் அமைதிவழிப் போராட்டமும் இடம்பெற்றது.





நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில், லண்டன் Trafalgar Square மற்றும் லிவர்பூல் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில், பெருமளவான தமிழ் சமூகத்தினர், ஆதரவாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

லிவர்பூல் லைம் ஸ்ட்ரீட் ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமான அமைதி நடைபயணம், நகரின் முக்கிய பகுதிகளைக் கடந்து எவர்டன் பார்க் பகுதியைச் சென்றடைந்தது.

நடைபயணத்தில், தாயகத்தில் பல்வேறு காலகட்டங்களில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பான பதாகைகள் மற்றும் காலவரிசை விளக்கப் பலகைகளை பங்கேற்பாளர்கள் ஏந்திச் சென்றனர்.

எவர்டன் பார்க்கில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் பல தசாப்தங்களாக முன்னெடுத்து வரும் போராட்டம் குறித்தும், செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து வெளிவரும் சாட்சியங்கள் குறித்தும் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வெளியிட்ட “எலும்புகள் பேசத் தொடங்கியுள்ளன… எலும்புக் கூடுகள் சாட்சியம் அளிக்கத் தயாராக உள்ளன.” என்ற காத்திரமான செய்தியைக் கொண்ட காணொளியும் நிகழ்வில் ஒளிபரப்பப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்படும் மனித எச்சங்கள், கடந்தகாலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான முக்கிய தடயவியல் சாட்சியங்களாக அமையக்கூடும் என்பதுடன், அவை உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய லிபரல் கட்சியின் கவுன்சிலர் Steve Radford, உக்ரைன் மற்றும் தென் சூடானில் இடம்பெற்ற மோதல்களைச் சுட்டிக்காட்டியதுடன், இலங்கையில் இடம்பெற்ற கடத்தல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

உலகின் எந்தப் பகுதியில் மனிதகுலத்திற்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றாலும், சர்வதேச சமூகம் மௌனமாக இருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் தமிழர்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுவரும் அரசியல் பிரச்சினைகளுக்கு அமைதியான, ஜனநாயகபூர்வமான மற்றும் நிலையான அரசியல் தீர்வு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே, செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பான அகழ்வுகள் மற்றும் தடயவியல் விசாரணைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆனையகம் கையேற்க வேண்டும் எனவும் நிகழ்வில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மீட்கப்படும் மனித எச்சங்கள் அறிவியல் ரீதியாக அடையாளம் காணப்பட்டு, குடும்பங்களிடம் கண்ணியமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

அத்துடன், DNA உள்ளிட்ட தடயவியல் ஆதாரங்கள் பாதுகாக்கப்பட்டு சிறீலங்காவை பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்க வேண்டும். சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

பல தசாப்தங்களாக நீதிக்காகக் காத்திருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் குரலை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.










39ஆம் ஆண்டு
வீரவணக்கம்
39th Year
Veeravanakkam
SEPT
26
2026
இந்திய – சிறீலங்கா
சமாதான ஒப்பந்தக் காலப்பகுதியில் கடலில்
பயணம் செய்த தளபதிகளை சிறிலங்கா கடற்படை
கைது செய்து கொழும்பிற்கு கொண்டுசெல்ல
முற்பட்டவேளை 05.10.1987 அன்று சயனைட்
உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட
லெப். கேணல் குமரப்பா,
லெப். கேணல் புலேந்திரன்
உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும்
எமது 39ஆம் ஆண்டு வீரவணக்கம்
"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"
ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் Lt. Col. Thileepan
இராசையா பார்த்தீபன் ( ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963–26.09.1987)
இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய
உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை
உண்ணா நோன்பு (15.09.1987–26.09.1987) இருந்து ஈகைச் சாவடைந்தார்.
Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding
five demands from the Government of India to fulfill the promises
made to the Tamil people.
2ஆம் லெப்.
மாலதி
2ஆம் லெப்.
கஸ்தூரி
வீரவேங்கை
ரஞ்சினி
வீரவேங்கை
தயா
10.10.1987 அன்று கோப்பாய் பகுதியில் இந்தியப் படையுடன்
நடந்த மோதலில் முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப். மாலதி
உட்பட 2ஆம் லெப். கஸ்தூரி, வீரவேங்கை ரஞ்சினி, வீரவேங்கை தயா
ஆகிய மாவீரர்களுக்கும் எமது 39ஆம் ஆண்டு வீரவணக்கம்
தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 10 அக்டோபர்
கேணல் சங்கர்
வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை. யாழ்ப்பாணம்
26.09.2001 அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில்
சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையினரால் நடாத்தப்பட்ட
கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.
இம் மாவீரருக்கு எமது 25 ஆம் ஆண்டு வீரவணக்கம்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்